வரு.76 இல. 17 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2024 மே 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
May 05 Sunday, 2024
24 பக்கங்கள் 100/-
















## மகாவலி அதிகார சபையினால் 204,002 காணி உறுதிகள் தயாரிப்பு

# காணி உறுதி வழங்கலில் அரசு புரட்சிகர நடவடிக்கை

## மே மாத இறுதியில் 20,178 நிரந்தர காணி உறுதிகள்



நாட்டு மக்களுக்கு காணி உறுதிகளை வழங்க அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டம் புரட்சிகரமானதாகும் எனவும் இதுவரையில் உலகின் எந்தவொரு நாட்டிலும் இவ்வாறானதொரு திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



'உறுமய' காணி உறுதி வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி

பொலன்னறுவை மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று (04) நடைபெற்ற மகாவலி குடியிருப்பாளர்களுக்கு 'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். நாட்டில் கட்டியெழுப்பப்படும் பொருளாதாரத்தின் பலன்களை ஒரு பகுதியினர் மாத்திரம் அனுபவிக்காமல் ஏனைய தரப்பினருக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கிலேயே குறைந்த வருமானம் பெறும் மக்களுக்காக நிரந்த காணி உரிமைகளை வழங்குவதற்கான புரட்சிகர வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த காணி உறுதிகளுடன் அரசாங்கம் செயற்படுத்தும் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்துடன் இணைந்துகொண்டு பொருளாதாரத்தை பலப்படுத்த மக்கள் முன்வர வேண்டுமென கோரிக்கை விடுத்த ஜனாதிபதி, பொலன்னறுவையை நாட்டின் பிரதான ஏற்றுமதி மாவட்டமாக மாற்றியமைக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

அனைவராலும் வேண்டாமென வெறுத்து ஒதுக்கப்பட்ட அரசாங்கத்தை பொறுப்பேற்று குறுகிய காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த தன்னால் முடிந்ததென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அடுத்த இரண்டு, மூன்று வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தி இளைஞர்களுக்கு வலுவான எதிர்காலத்தை நிர்மாணிக்க 06

1,700 ரூபா சம்பள உயர்வு விவகாரம்

## முதலாளிமார் வழக்கு தொடர்ந்தால் தொழிலாளருக்கு ஒத்துழையுங்கள்

### ஜனாதிபதி ரணில் அறிவுறுத்தல்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு எதிராக முதலாளிமார் வழக்குத் தாக்கல் செய்வார்களாயின், தொழிலாளர்கள் சார்பாக வழக்குக்கு தேவையான சட்ட ரீதியான ஒத்துழைப்பு வழங்குமாறு சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

முதலாளிமார் தொடரவுள்ள வழக்குத் தொடர்பாக தொழிலாளர்கள் தரப்பில் உண்மைகளை முன்வைப்பதற்கு தேவையான சட்ட ஆலோசனைகள் மற்றும் 06

சப்ரகமுவ மாகாணத்தில் புதிதாக 38 சுற்றுலா வலயங்கள்

## 50,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அரசு திட்டம்



சப்ரகமுவ மாகாணத்தில் புதிதாக 38 சுற்றுலா வலயங்கள் நிறுவப்பட்டு அவற்றினூடாக 50,000 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தை மையமாகக் கொண்டு பின்னவல மற்றும் கித்துல்கல பிரதேசங்களை உள்ளடக்கியதாக 38 புதிய சுற்றுலா வலயங்கள் நிறுவப்படவுள்ளன. 06

## G.C.E. O/L பரீட்சை நாளை ஆரம்பம்
## 452,979 பேருக்கு 3,527 நிலையங்கள்



க.பொ.த. சாதாரணதர பரீட்சை நாளை (06) திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த ஆண்டு 452,979 விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். 387,648 பாடசாலை பரீட்சார்த்திகளும் 65,331 தனியார் பரீட்சார்த்திகளும் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

இம்முறை 3,527 பரீட்சை நிலையங்களிலும் 535 ஒருங்கிணைப்பு நிலையங்களிலும் பரீட்சை நடைபெறவுள்ளதுடன், இரத்மலானை பார்வையற்றோர் கல்லூரி, தங்காலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் விசேட பரீட்சை நிலையங்கள் இயங்கவுள்ளன. 06

### எங்கள் கருத்து...

## எதிர்கால நம்பிக்கையில் தோட்டத் தொழிலாளர்கள்!

மலையக தோட்டத் தொழிலாளர்கள் தற்போது நிம்மதி கலந்த மகிழ்ச்சியில் உள்ளனர். தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்கப்படுவதாக கடந்த மேதினத்தன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்ததையடுத்து தொழிலாளர்கள் தங்களது எதிர்காலம் குறித்த நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொண்டுள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆயிரம் ரூபா சம்பளம் கோரி மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. அதன் பின்னர் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ப ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் தோட்டத் தொழிலாளர்களால் முன்வைக்கப்பட்டன. எனினும் அக்கோரிக்கை நிறைவேறவில்லை.

ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் துன்பங்களையும், அவர்களது நியாயமான வேண்டுகோளையும் உரியபடி கவனத்திலெடுத்து, 1700 ரூபா நாளாந்த சம்பள அறிவிப்பை கொட்டகலை மேதினக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். 06



06 வீதி அனுமதிப்பத்திரங்கள் இல்லாத பஸ்களுக்கு ரூ. 05 இலட்சம் அபராதம் விரைவில் சட்டத்தில் திருத்தம்



06 சுற்றுலா பயணிகளுக்கு வீசா அமைச்சர் டிரான் திங்களன்று விளக்கமளிப்பதாக அறிவிப்பு



06 பேராசிரியர் நளின் டி சில்வா மறைவுக்கு பிரதமர் இரங்கல்

### முல்லையில் SLBFE இன் 'ஜயகமு ஸ்ரீலங்கா'

## இஸ்ரேலில் கட்டட நிர்மாணத்துறை வேலைவாய்ப்புக்கும் ஆட்கள் பதிவு



உள்நாட்டு, வெளிநாட்டு பணியாளர்களுக்கு பல நன்மைகளை வழங்கும் வகையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஜயகமு ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம் அமைச்சர் 06

Fox Hill பந்தய கார் விபத்து

## உயிரிழந்தோருக்கு 10 இலட்சம் ரூபா வரையில் இழப்பீடு

### காயமடைந்தோருக்கு ரூ. 250,000



தியத்தலாவையில் 'Fox Hill Super Cross 2024' பந்தயக் கார் போட்டியின் போது இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு விளையாட்டுத்துறை அமைச்சு இழப்பீடு வழங்கியுள்ளது. இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 06

## பிரிட்டனின் மேயர் தேர்தலில் தொழிற்கட்சி அபார வெற்றி



பிரிட்டனில் நடைபெற்ற மேயர் பதவிக்கான போட்டியில் ரிஷி சுனக்கின் York மற்றும் North Yorkshire ஆகிய இடங்களில் தொழிற்கட்சி வெற்றி பெற்றுள்ளது. ஏனெனில் பிரிட்டன் முழுவதுமுள்ள கவுன்சில் தேர்தல்களில் Tory territory பெரும் தோல்வியை சந்தித்தன.

Tory territory வேட்பாளரின் 27.3 சதவீத வாக்குகளுடன் ஒப்பிடுகையில் தொழிற்கட்சி மேயர் டேவிட் ஸ்கைத் 35.1 சதவீத வாக்குகளுடன் பிராந்தியத்தின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 06



## வாகன இலக்கத் தகடுகளில்

# மாகாண எழுத்துகள் அகற்றப்படுவது ஏன்?



உலகின் எந்த ஒரு நாட்டிலும் பயன்பாட்டிலுள்ள வாகனங்களை இனங்கண்டு கொள்ளும் இலக்கம் இருக்க வேண்டியது கட்டாயமாகும். ஒவ்வொரு நாடுகளும் அந்தந்த நாடுகளுக்குப் பொருந்தும் வகையில் அந்த இலக்கம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. சில நாடுகளில், அனைத்து வாகனங்களுக்கும் ஒரே மாதிரியான இலக்க கட்டமைப்புள்ளது. இன்னும் சில நாடுகளில், வாகனத்தின் வகைகளுக்கு அமைய இலக்கங்கள் வேறுபடும். இன்னும் சில நாடுகளில் மாநிலம் அல்லது மாகாணங்களுக்கு அமைய இலக்கங்கள் வழங்கப்படுகின்றன.

எமது நாட்டில் பிரித்தானிய ஆட்சிக் காலத்திலிருந்து ஒவ்வொரு வாகனத்துக்கும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாகக் குறிப்பிடும் போது கார்களுக்கு EN, மற்றும் கனரக வாகனங்களுக்கு IC போன்ற இரட்டை எழுத்துக்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் இந்த நடைமுறை மாற்றப்பட்டு கார்களுக்கு 1ஸ்ரீ, 2ஸ்ரீ போன்ற எழுத்துக்களும், கனரக வாகனங்களுக்கு 22ஸ்ரீ போன்ற எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டன.

இந்த நடைமுறையில் எழுத்துக்கு பதிலாக () என்ற எழுத்தைப் பயன்படுத்துவது எண்பதாம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் அனைத்து வாகனங்களுக்காகவும் குறித்த பதிவு இலக்கத்தை வழங்கியதன் பின்னர், அதற்குரிய இரண்டு இலக்கத்தகடுகள் வாகனத்தின் முன்பக்கத்திலும், பின்பக்கத்திலும் தெளிவாகத் தெரியும் வண்ணம் பொருத்தப்பட வேண்டும். இந்த இலக்கத்தகட்டை தமக்கு வசதியான நிறத்தில் அச்சிட்டுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும் தெளிவாகத் தெரியும் வகையில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். எனினும் பொலிஸாரினால் தொடர்ச்சியாக செய்யப்பட்ட முறைப்பாட்டால் இரவு நேரங்களில் சில வாகனங்களின் இலக்கங்களை தெளிவாக அடையாளம் கண்டு கொள்ள முடியாதுள்ளதாகக் குறிப்பிடப் பட்டிருந்துள்ளது. எனவே பின்னைய காலத்தில் மஞ்சள் நிற பலகையில் கறுப்பு நிறத்தில் இலக்கம் அச்சிடப்பட்ட இலக்கத் தகடு பின்புறத்தில் பொருத்தப்பட வேண்டும் என்றும், முன்பக்கத்தில் கறுப்பு பலகையில் வெள்ளை நிறத்தில் அச்சிடப்பட்ட இலக்கத் தகடு பொருத்தப் பட வேண்டும் என்றிம் உத்தரவு 35 வருடங்களுக்கு முன்னர் பிறப்பிக்கப்பட்டது. இலக்கத்தகடு இவ்வாறு பயன்படுத்தப்பட்ட போதிலும், போலி இலக்கத்தகட்டுப் பயன்பாட்டின் காரணமாக இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக தரமான இலக்கத்தகட்டின் தேவை ஏற்பட்டது. குறிப்பாக ஒரே இலக்கத்தில் இரண்டு அல்லது பல வாகனங்கள் இருக்கும் நிலை காணப்பட்டது.





எனவே இது தொடர்பில் கவனத்தைச் செலுத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களம் விசேட இலக்கத்தகட்டினை விநியோகிக்கும் நடைமுறையை 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02ஆம் திகதி ஆரம்பித்தது. அன்றிலிருந்து இன்று வரைக்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் இலக்கத் தகடு விநியோகிக்கப்பட்டதோடு, புதிய வாகனம் ஒன்றைப் பதிவு செய்து ஓரிரு தினங்களில் அந்த வாகனத்திற்கான இலக்கத்தகடு திணைக்களத்தினாலேயே வழங்கப்பட்டது. இதன்போது, ஒவ்வொரு வாகன வகையின் அளவைப் பொறுத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலக்கத் தகடு தயாரிக்கப்பட்டது. அந்த இலக்கத் தகட்டின் ஊடாக குறித்த வாகன உரிமையாளர் வசிக்கும் மாகாணம், வாகனத்தின் எரிபொருள் வகை, அது வெளிநாட்டு தூதரகம் அல்லது உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு சொந்தமான வாகனமா அல்லது ஐக்கிய நாடுகள் சபைக்கு சொந்தமான வாகனமா போன்ற தகவல்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

உதாரணமாக, மேல் மாகாணத்தைச் சேர்ந்த வாகனமாக இருந்தால் WP என்ற எழுத்துக்களும், தென் மாகாணத்தைச் சேர்ந்த வாகனமாக இருந்தால் SP என்ற எழுத்துக்களும், ஊவா மாகாணத்தைச் சேர்ந்த வாகனமாக இருந்தால் UP என்றவாறு ஒன்பது மாகாணங்களுக்கும் குறித்த ஆங்கில இரண்டு எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. வடமேற்கிற்கு NW என்றும், சப்ரகமுவிற்கு SG என்றும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. வெளிநாட்டுத் தூதரகம் அல்லது உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்குரிய வாகனங்களாக இருந்தால் DL என்ற எழுத்துக்களும், ஐக்கிய நாடுகள் அமைப்புக்குரிய வாகனங்களாக இருந்தால் UN என்றவாறும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.

இதனடிப்படையில் ஒரு மாகாணத்திற்குரிய வாகனத்தை வேறு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் விலைக்கு வாங்கும் போது, கண்டிப்பாக




அந்த வாகனத்தின் இலக்கத் தகட்டினையும் புதிய உரிமையாளரின் மாகாணத்திற்கு அமைய மாற்றிக் கொள்ள வேண்டும். இலக்கத் தகட்டினை மாற்றும் போது மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கு புதிய உரிமையாளரால் மீண்டும் மேலதிகமான கட்டணம் ஒன்றைச் செலுத்த வேண்டிய நிலை இருந்தது. இதற்காக தற்போதைய கட்டணங்களின் பிரகாரம் மோட்டார் வாகனங்களுக்கு 4500 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 3500 ரூபாயும் இலக்கத் தகட்டிற்காகச் செலுத்த வேண்டியிருந்தது. பணத்தைச் செலுத்துவதை விடவும் புதிய உரிமையாளருக்கு இலக்கத் தகட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு மீண்டும் ஒரு நாளில் மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கு அல்லது மாவட்டச் செயலகத்திற்குச் செல்ல வேண்டியேற்படும்.

இதனால் வாகனத்தை உரிமை மாற்றிக் கொண்ட புதிய உரிமையாளருக்கு புதிய இலக்கத் தகட்டினைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டன.

அதற்காகவே செய்ய வேண்டிய பணியாக இருந்ததால், தொலைதூரத்தில் உள்ள ஒருவர், மாவட்ட செயலக அலுவலகங்களுக்கோ, மோட்டார் போக்குவரத்து திணைக்கள மாவட்ட அலுவலகங்களுக்கோ சென்று அவற்றை பெறுவதில், நாளுக்கு நாள் தாமதம் ஏற்பட்டது. அதே போன்று, மாகாணம் மாறும் போது, புதியஇலக்கத் தகட்டைப் பொருத்தாமல் வாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றம் இல்லையென்பதிலால், அது புதிய உரிமையாளர்களுக்கு பிரச்சினையாகவும் இருக்காது. இந்த பிரச்சினை காரணமாக சிலர் பழைய இலக்கத் தகடுகளையே பயன்படுத்துகின்றனர் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார். இதன்போது ஒவ்வொரு மாகாண சபைக்கும் தனித்தனியாகச் சேர வேண்டிய வருமானம், முறையாகக் கிடைப்பதில்லை. அத்துடன் சில நேரங்களில் பழைய வாகன உரிமையாளரின் பெயரிலேயே வாகனங்களை வைத்திருப்பதும் வழக்கமாகியது. நாடளாவிய ரீதியில் இவ்வாறான பிரச்சினைகள் காணப்பட்டன.

“இந்த நிலையின் காரணமாக அனேகமானோர் கட்டணத்தைச் செலுத்தியிருந்த போதிலும் இலக்கத்தகட்டினைப் பெற்றுக் கொள்ளவில்லை. அந்த இலக்கத்தகடுகள் திணைக்களத்திலும், மாவட்டச் செயலகங்களிலும் தேங்கிக் கிடக்கின்றன. எண்ணிக்கையைக் கூறுவதாயின் சுமார் 50 ஆயிரத்திற்கும் அதிக இலக்கத்தகடுகள் குவிந்து கிடக்கின்றன. இதனால் கடமைகளுக்கும் தடங்கல்கள் ஏற்படுகின்றன. எனவேதான் இது தொடர்பில் நாம் விசேட கவனத்தைச் செலுத்தினோம்” என்றார்.

இந்த இலக்கத் தகடு இறக்குமதி செய்யப்படுவதாகவும், அதன் ஊடாக தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், இலக்கத்தை அச்சிடுவது மாத்திரமே திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதாகவும் உதவி மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் டி.எம்.சுஜீவ தென்னகோன் தெரிவித்தார்.

“மாகாணம் மாறும்போது திணைக்களத்திடமிருந்து புதிய இலக்கத் தகட்டைப் பெறுவது இலகுவான பணியாக இருந்தாலும், வாகனத்தின் உரிமை மாற்றப்பட்ட பின்னர், மீண்டும் ஒரு தினத்தில் திணைக்களத்திற்கோ அல்லது மாவட்ட அலுவலகங்களுக்கோ சென்று இலக்கத்தகட்டினைப் பெற்றுக் கொள்வது அனேகமானோருக்கு சிரமமாகவே உள்ளது. அத்தியவசியமான விடயங்களைச் செய்து கொண்டதன் பின்னர், இலக்கத்தகடு தொடர்பில் பெரும்பாலானோர் கவனம் செலுத்துவதில்லை. சில நேரங்களில் அந்த வாகனத்தை வாங்கியவர்களுக்கு நடைமுறைச் சிக்கல்கள் எழும் சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக, மேல் மாகாண இலக்கத்தைக் கொண்ட வாகனத்தை வாங்குபவர் தனது மாகாணத்திற்குரிய இலக்கத் தகட்டை மாற்றிக் கொள்வதற்கு வரும் போது, அந்த இலக்கத்தை அதிகாரிகள் பரிசீலனை செய்யும் போது, அதற்கு முன்னர் அந்த வாகனத்திற்கு தென் மாகாணத்திற்குரிய இலக்கத்தகடு வழங்கப்பட்டுள்ளமை கணனித் தரவுகள் மூலம் இனம்காணப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறித்த வாகன உரிமையாளருக்கு தென் மாகாண, மாவட்ட அலுவலகத்தில் இருக்கும் இலக்கத் தகட்டினை எடுத்துச் சென்று வழங்க வேண்டியேற்படும். வாகனங்களுக்காக இலக்கத் தகடுகளை வழங்கும் போது அறவிடப்படும் கட்டணங்களும் 2013ஆம் ஆண்டின் பின்னர் திருத்தங்களுக்கு உட்படுத்தப்படவில்லை. எனவே இந்தக் கட்டணங்களை மீண்டும் மீளாய்வு செய்து நிதி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட புதிய கட்டணங்களை அறிவிப்பதற்கான தேவை ஏற்பட்டது. அத்துடன் மோட்டார் வாகனங்களுக்கு இலக்கத்தகடு வழங்குவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கொள்முதல் நடவடிக்கைகளின் பின்னர், குறித்த நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் RFID தொழில்நுட்பத்துடன் கூடிய (ரேடியோ அலையை இனங்காணும் லேபள்) ஸ்டிக்கரை வழங்கும் பணிகள் 2019.12.02ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

இது உண்மையிலேயே தனியாக வழங்கப்படும் ஒரு ஸ்டிக்கர் அல்லாமல், இலக்கத் தகட்டிலேயே ரேடியோ அலையின் ஊடாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சிறிய சிப்புடனான ஸ்டிகராகும். இந்த RFID ஸ்டிக்கருக்கான செலவினை அறிவித்து கட்டணங்களை நிர்ணயிக்கும் தேவையும் ஏற்பட்டது. அத்துடன் 14.12.2020 திகதியிட்ட 20/1921/312/021ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத் தீர்மானத்திற்கு அமைவாக மாகாணங்களை இனங்கண்டு கொள்ளும் எழுத்துக்கள் இன்றி வாகன இலக்கத் தகடுகளை வழங்குவதற்குத் தேவையான விதிகளை உருவாக்குவதற்காகவும் மோட்டார் வாகனங்கள் (இதர) சட்டங்களில் திருத்தங்களைச் செய்வதற்கான தேவை ஏற்பட்டது. அதன்பிரகாரம் 2352/29ஆம் இலக்க 2023.10.05ஆம் திகதியன்றைய அரசாங்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட மோட்டார் வாகன (இதர) விதிகள் திருத்தப்பட்டன. திருத்தம் செய்யப்பட்ட அந்த உத்தரவுகளின் பிரகாரம், வழக்கமாக ஒவ்வொரு வாகன வகுப்பிற்கும் வழங்கப்படும் இலக்கத் தகடுகளில் மாகாணங்களைக் குறிக்கும் எழுத்துக்கள் அகற்றப்பட்டுள்ளதோடு, இலங்கையின் இராஜதந்திர பணிகளுக்குரிய வாகனங்களுக்கு DP என்ற எழுத்துக்களும், ஐக்கிய நாடுகள் சபைக்கு சொந்தமான வாகனங்களுக்கு UN என்ற எழுத்துகளுடனான இலக்கத் தகடுகளும் தொடர்ந்தும் வழங்கப்படும்.

அதன்பிரகாரம், 2023 ஜனவரி 1ஆம் திகதி முதல், வாகன இலக்கத்தகடுகளில் மாகாணத்தைக் குறிக்கும் எழுத்துக்கள் அகற்றப்படுவதோடு, கண்ணாடியில் ஒட்டப்படும் ஸ்டிக்கரும் அவசியமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடு, பொது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

தாரக விக்ரமசேகர
தமிழில் எம். எஸ். முஸப்பிர்




# 'சொரி' எனும் ஒற்றை வார்த்தை கறைகளைக் கழுவுமா?

1971ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு எதிராக ஆ யுதம் ஏந்துமாறும், புரட்சி செய்யு மாறும் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு அறிவுரை வழங்கியது ரோஹண விஜேவீரவாகும். அப்போது அவர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராக இருந்தார். அவர் இளைஞர்களை கிளர்ச்சிக்காகத் தூண்டியதோடு, கிளர்ச்சிக்கு தான் பொறுப்பல்ல என்றும் கிளர்ச்சி தோல்வியடைந்த பின்னர் கூறினார்.

ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன்னர் 1971 பெப்ரவரி 21ஆம் திகதி கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் மக்கள் விடுதலை முன்னணியின், இறுதிப் பிரசாரக் கூட்டம் இடம்பெற்றதோடு, அதில் உரையாற்றிய ரோஹண விஜேவீர, “பொலிஸ் அடக்குமுறை என்று ஆரம்பிக்கின்றதோ, இலங்கைப் புரட்சியும் அன்று ஆரம்பமாகும்” என வலியுறுத்தியுள்ளார். பேச்சின் ஒரு கட்டத்தில், "கஜபா கப்பலும் அவ்ரோரா ஆக மாறட்டும்" என அவர் கூறியதோடு, அதன் மூலம் ஆயுதப்படைகளின் ஆதரவு தனக்கு இருப்பதை மறைமுகமாக அவர் தனது உரையின் மூலம் உணர்த்தினார் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

கஜபா என்பது இலங்கை கடற்படையின் யுத்தக் கப்பல் என்பதோடு, 1917 ஒக்டோபர் புரட்சியின் போது சார் மன்னரின் ஆட்சிக்கு எதிரான முதலாவது துப்பாக்கி வேட்டு மேற்கொள்ளப்பட்டது “அவ்ரோரா” கப்பலிலிருந்தே யாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் ஆயுதப் போராட்டத்திற்கு சம்மதம் தெரிவித்த விஜேவீர, கிளர்ச்சி தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் தான் அதற்குப் பொறுப்பல்ல என்றார்.

இந்தக் கதை இன்றும் செல்லுபடியாகும்.

அன்று ரோஹன விஜேவீர 71ஆம் ஆண்டு கிளர்ச்சிலிருந்து தனது பொறுப்பை விலக்கிக் கொண்டதோடு, லொகு அத்துலவிடம் பழியைப் போட்டதைப் போன்றே இன்று உமா ஓயாவிலிருந்து அநுர திசாநாயக்க கையைக் கழுவிக் கொண்டு அதன் பொறுப்பை சமந்த வித்யாரத்னவிடம் ஒப்படைத்துள்ளார். உமா ஓயா தொடர்பில் முதலில் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தது அநுரகுமாரவாகும். 2005 ஜனவரி 26ஆம் திகதி, அப்போதைய விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த அநுரகுமார திசாநாயக்க அந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தார். இந்த அமைச்சு முற்றுமுழுதாக ஜே.வி.பியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததோடு, அதன் பிரதி அமைச்சராக இருந்தது ஜே.வி.பியின் பிமல் ரத்நாயக்காவாகும்.





2005 ஜனவரி 04ஆம் திகதி 05/0036/039/002ம் இலக்க ஜே.வி.பி அமைச்சரின் இந்த அமைச்சரவைப் பத்திரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“இலங்கையின் வறண்ட தென்கிழக்கு பிராந்தியத்தை (குறிப்பாக ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்கள்) அபிவிருத்தி செய்வதற்கு உமா ஓயாவிலிருந்து நீரை எடுப்பதைத் தவிர வேறு மாற்று வழியில்லை"

“ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்யும் மூலோபாயங்கள் அண்மைய காலங்களில் மாறியுள்ளது. உமா ஓயாவை, கிரிந்தி ஓயாவை நோக்கித் திருப்பும் திட்டம் தொடர்பில், தற்போது கவனம் செலுத்தப்படுவது அண்மைக் காலமாக பிரபல்யப்படுத்தப்பட்டுள்ள ருஹுணுபுர அபிவிருத்தி தொடர்பான எண்ணக்கருவின் அடிப்படையிலாகும். ருஹுணுபுர அபிவிருத்தி என்பது ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை இந்தப் பிராந்தியத்தில் நவீன துறைமுகமாக மாற்றுவது, மொனராகலை மாவட்டத்தில் சர்வதேச விமான நிலையம் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு திட்டமாகும். இந்தியப் பெருங்கடலில் பயணிக்கும் பெருமளவிலான கப்பல்கள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வரும் என்றும், அதனை அண்மித்த சுற்றுலா உள்ளிட்ட தொழிற்துறை நடவடிக்கைகள் பெருமளவில் இடம்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் புதிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2030ஆம் ஆண்டுக்குள் நீர்த் தேவை 100 மெட்ரிக் கனமீட்டராக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் நிலையான நீர் விநியோகம் இல்லாததால், உமா ஓயாவில் இருந்து தண்ணீரைப் பெறுவதே இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரே வழி என்று கருதப்படுகிறது. எனவே இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்”

இது அனுரகுமாரவின் அமைச்சரவைப் பத்திரமாகும். எனினும் அனுரகுமார குழுவினர், அரசாங்கத்திலிருந்து வெளியேறியதன் பின்னர் உமா ஓயா திட்டத்திற்கு ஜே.வி.பி எதிரானது. எதிரானது மாத்திரமின்றி, அதற்கு எதிராகப் போராட்டம் நடத்தும் பொறுப்பும் சமந்த வித்யாரத்னவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பிரகாரமே சமந்த வித்யாரத்ன உமா ஓயாவுக்கு திட்டத்திற்கு எதிரான போராட்டத்தை கையில் எடுத்தார். உண்ணாவிரதம், போராட்டம், ஹர்த்தால் போன்றவற்றை முன்னெடுத்து அவர் முழு ஊவாவையும் உமா ஓயா திட்டத்திற்கு எதிராகத் தூண்டினார்.

சமந்த வித்யாரத்ன சில வருடங்களுக்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணியின் பிரபலமான பாத்திரமாக முன்னேறி வந்ததோடு, அவரது உயர்ச்சி அனுர போன்றோருக்குச் சவாலாக இருந்தது. குறிப்பாக அவர் கிராமப்புற மக்கள் மற்றும் இளைய தலைமுறையினர் மத்தியில் மிகவும் வேகமாகப் பிரபலமடைந்தார். அவரது தொனி ரோஹண விஜேவீரவின் தொனிக்கு நெருக்கமாக இருந்தது. அதனை பொருட்படுத்தாதவர்கள் சமந்தவை உமா ஓயாவை அடிப்படையாகக் கொண்டு ஒதுக்கி வைத்தனர்.

லால் காந்தவுக்கு நடந்ததும் இதுதான்.

வீடுகள் மூழ்கும் முறைகள், வீடுகள் இடிக்கப் படும் முறைகள், பதுளையே மூழ்கும் முறை போன்றவற்றைக்கூறி சமந்த அச்சத்தை அன்றே விதைத்தார்.

பிதுருதலாகலவிலிருந்து ஆரம்பமாகும் உமாஓயா, நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவும், மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் பயிர்ச்செய்கை நிலத்தை வளமாக்குவதற்காகவும் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டமாகும். இரண்டு கட்டங்களில் 120 மெகா வோட் மின்சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைப்பதும், ஆயிரக்கணக்கான விவசாய நிலங்களுக்குத் தேவையான நீரை விநியோகிப்பதும், பண்டாரவளை உள்ளிட்ட நகர மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதும் இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

உமா ஓயா பல்நோக்கு திட்டத்தின் தனிச்சிறப்பு என்னவெனில், நிலத்தடி சுரங்கங்கள் வழியாக நீரை பாய்ச்சுவது மட்டுமின்றி, மின் சாரத்தை உற்பத்தி செய்யும் மின் உற்பத்தி நிலையமும் கூட சுரங்கம் எனப்படும் நிலத்தடியில் உருவாக்கப்பட்டிருப்பதாகும்.

காலி முகத்திடலில் ஓரத்தில் "போர்ட் சிட்டி"க்கு எதிர்ப்பு தெரிவித்த அவர்கள், நெடுஞ்சாலைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த அவர்கள், எதிர்க்காத திட்டங்களில்லை.

பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட மற்றும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன ஆகியோர் விஜேவீரவுக்கு மார்க்சியம் பற்றிய ஆழமான அறிவு இல்லை என்று கூறுகிறார்கள். அதே போன்று பகுத்தறிவுடனான கேள்விகளைக் கேட்பவர்கள் விஜேவீரவினால் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டதாக விராஜ் பெர்னாண்டோ மற்றும் அனகாரிக தர்மசேகர ஆகியோர் சுட்டிக்காட்டுகின்றனர். அவர் பகுத்தறிவு குறைந்த ஆவேசமானவர்களை இலக்கு வைத்திருந்ததாக விக்டர் ஐவன் குறிப்பிடுகின்றார். இந்த பகுத்தறிவு குறைவான ஆவேசம் மிக்கவர்கள் சில புத்தகங்களை வாசிப்பதும் தடை செய்யப்பட்டிருந்ததோடு, ஒரு புறத்தில் அவர் இந்த தரப்பினரிடையே அறியாமை தொடர்ந்தும் இருக்க வேண்டும் என விரும்பினார். அது அன்றிலிருந்தே ஜே.வி.பியின் தன்மையாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரங்கள் வேண்டாம் எனக் கூறிக் கொண்டு ஜே.வி.பி தமக்குக் கிடைத்த வாகன அனுமதிப்பத்திரங்களை இரகசியமாக விற்றுள்ளார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் ஓய்வூதியம் வேண்டாம் எனக் கூறும் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியத்தைப் பெறுகின்றார்கள். சமந்த வித்யாரத்ன, வசந்த சமரசிங்க போன்றோர் மாத்திரமின்றி, மக்கள் மனதை வென்ற லால் காந்த போன்றோரும் ஓய்வூதியத்தைப் பெறுகின்றனர்.

முறைகேடுகள் பற்றி கூச்சலிடும் ஜே.வி.பி லால் காந்த அவருக்குச் சொந்தமில்லாத பாராளுமன்ற உறுப்பினருக்கான வீட்டில் வசித்து வருகின்றார்.


அவர்களின் ஒழுக்கமும் அப்படித்தான்.

எண்பதாம் ஆண்டின் பிற்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் உள்ளிட்ட மோசமான செயற்பாடுகள் தொடர்பில் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாக கட்சியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கா முதலில் கூறியது 2014ஆம் ஆண்டிலாகும்.

அண்மையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணத்தில் ஒரு தரப்பினரைச் சந்தித்த சந்தர்ப்பத்தில், இந்தக்கொலைகள் தொடர்பில் மீண்டும் கேட்டபோது அவர், “சொரி” (மன்னிக்கவும்) என்றார். கோழைத்தனமாக ஆயிரக்கணக்கான உயிர்களைக் அநியாயமாகக் கொன்ற கொடுரமான குற்றத்திலிருந்து அவரால் “சொரி” எனக் கூறித் தப்பிக்க முடியும். அது அவர்களுக்கு மிகவும் எளிமையானது. இலகுவானது. இன்று உமா ஓயா திட்டத்தினால் நாட்டு மக்கள் நன்மையடைந்துள்ளனர்.

அன்று சமந்த வித்யாரத்னவை இதற்கு எதிராகத் தூண்டிவிட்ட அநுர அல்லது ஜே.வி.பியிடமிருந்து இன்று எந்த பதிலுமில்லை.

அனுராத சேனாரத்ன
தமிழில் எம். எஸ். முஸப்பிர்


பிறந்த மண்ணின்
உரிமை
உங்களுக்கே
20
இலட்சம்
குடும்பங்களுக்கு
முற்றிலும் சொந்தமான
காணி உறுதிகள்
காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்படி அனுமதிப்பத்திரம்/கொடுப்பனவுப் பத்திரமுள்ளவர்களுக்கு அக் காணியின் முழு உரிமையும் கிடைக்கக்கூடிய காணி உறுதிகள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும்.
உங்கள் விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலாளரிடம் ஒப்படையுங்கள்.
சனாதிபதி அலுவலகம்
presidentsoffice.gov.lk
சொந்த உரிமையின் அருமை

# தனியொருவரை நம்பி வந்த மக்கள் வெள்ளம்




இலங்கையில் அதிக மக்கள் கலந்து கொண்ட மே தின பேரணி என்பதை நிரூபிக்க ஒவ்வொரு கட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் மட்டும் நாட்டுக்காக வேலை செய்தார். வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக பாடுபட்ட தனி மனிதனின் அர்ப்பணிப்பிற்கு நன்றி தெரிவிக்கும் முகமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் திரண்டிருந்தனர். ஜனாதிபதி ரணில் மே தினத்தன்று கொட்டகலைக்குச் சென்று தோட்டத் தொழிலாளர்களுக்கு அன்பளிப்பொன்றை வழங்கினார். அது அவர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாயாக மாற்றப்பட்டதன் மூலம் வழங்கப்பட்ட அன்பளிப்பாகும். கொட்டகலையில் நடைபெற்ற தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில், கூடியிருந்த மக்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் இந்த செய்தியை வெளியிட்டார். மேலதிக விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் சந்தர்ப்பத்தை அமைச்சர் மனுஷவிடம் ஜனாதிபதி ரணில் ஒப்படைத்துவிட்டு மாலையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பு திரும்பினார். ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, மூன்று ரயில்களை முன்பதிவு செய்து கட்சி உறுப்பினர்களுக்கு மே தினப் பேரணியில் பங்கேற்பதற்கான வசதிகளை செய்து கொடுத்தமைக்காக ஜனாதிபதி ரணில் அவரைப் பாராட்டினார். பேரணியில் பல பேச்சாளர்கள் பங்கேற்பதில் தாமதம் ஏற்பட்டதால், பொதுச் செயலாளர் ரங்கே பண்டாரவின் பேரணியின் நிகழ்ச்சி நிரலை மாற்ற வேண்டியதாயிற்று. இதன்படி, ரவி கருணாநாயக்கவிற்கு பதிலாக பொதுச் செயலாளர். ரங்கே பண்டாரவே வரவேற்புரையை ஆற்ற நேரிட்டது. பேரணியின் நிகழ்ச்சி நிரலை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்தினம் இரவு பொதுச் செயலாளர் ரங்கே முன்வைத்து ஒப்புதல் பெற்றுள்ளார். எவ்வாறாயினும், நிகழ்ச்சி நிரலின்படி, ஜனாதிபதி ரணிலின் உரைக்கு இறுதியாகவே நேரம் ஒதுக்கப்பட்டிருந்து. பேரணி ஆரம்பித்து சுமார் அரை மணித்தியாலத்தின் பின்னர் ஜனாதிபதி ரணில் அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்னவிடமிருந்து தொலைபேசி அழைப்பு ஒன்றைப் பெற்றார். "முக்கிய பேரணிகளின் பேச்சாளர்கள் முன்னதாகவே பேச முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் முன்னதாகவே பேசினால், மாலை நேர சேனல்களில் செய்திகளில் உரையை வெளியிடலாம்." என இந்த விடயத்தை தினித் சிந்தக கூறியதையடுத்து, ஜனாதிபதி ரணில் கட்சியின் பொதுச் செயலாளர், பிரதித் தலைவர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்." சார், மக்கள் மாலையிலேயே கிளம்பலாம் என்பது என் கருத்து. ஏனென்றால் நாங்கள் பேரணியை அரை மணி நேரம் தாமதமாகத் தொடங்கினோம். வானிலை எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. அதனால் மாலை 4.20 அளவில் உரையாற்றுங்கள்" என பொதுச்செயலாளர் ரங்கேயும் கூறினார். அதன்படி ஜனாதிபதி ரணில் கடைசியாக உரையாற்றுவதற்குப் பதிலாக மனுஷ நாணயக்காரவுக்குப் பின்னர் பேச ஆரம்பித்தார். முன்னதாக பேசினாலும், பேரணி முடியும் வரை அங்கேயே இருந்தார். கூட்ட அரங்கில் இருந்து வெளியேறும் முன், மேடையின் அருகில் இருந்த கட்சி ஆதரவாளர்கள் மற்றும் உறுப்பினர்களிடம் சென்று உரையாடலில் ஈடுபட ஜனாதிபதி ரணில் மறக்கவில்லை. கூட்டத்தை முடித்துக் கொண்டு வெளியேறிய ஜனாதிபதி ரணில், செய்திப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக்கவிடம் மீண்டும் ஒருமுறை தொலைபேசியில் உரையாடி கொழும்பில் நடைபெற்ற ஏனைய மே தினக் கூட்டங்கள் தொடர்பிலான விபரங்களைக் கோரினார். அவரும் ஒரு மணித்தியாலத்திற்குள் அறிக்கையை வழங்கினார். எனவே மே தினக் கூட்டங்கள் தொடர்பில் தெளிவான புரிதலுக்கு வர ஜனாதிபதி ரணிலால் முடிந்தது.



தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கித்சிறி ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களுடன் சுதுவெல்லவில் இருந்து கூட்ட அரங்கிற்கு மக்களுடன் பேரணியாகச் சென்றார். இவ்வாறு பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, அகில உள்ளிட்டோரும் பல்வேறு வீதிகளில் மக்களுடன் நடைபவனியாக வந்தனர். பேரணியின் முடிவில், அவர்களுடன் வந்திருந்த ஒருவர் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதை சாகல அறிந்தார். அந்த கட்சிக்காரரின் உடல்நிலை குறித்து விசாரிக்க மாலையில் அவர் மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். பேரணியின் முடிவில், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பாடகர்கள் பங்கேற்ற இசைக் கச்சேரியும் நடைபெற்றது. அதில் பெருந்திரளான இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்டார்கள். இரவு 12.00 மணிக்கு முடிவடைய இருந்த நிலையில் இளைஞர்களின் வேண்டுகோளின் பேரில் நள்ளிரவு 1.00 மணி வரை இந்நிகழ்ச்சி நீண்டது. அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவும் இசை நிகழ்ச்சியில் பாடல்களைப் பாடினார். இளைஞரணி அமைச்சர்கள் மற்றும் அமைப்பாளர்கள் பலர் இசை நிகழ்ச்சியைக் காண வந்திருந்தனர்.

ஜனாதிபதி ரணில் அடுத்த நாள் காலை ஆளுநர்களின் பதவிப்பிரமாணம் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகளுக்கு கௌரவப் பட்டங்களை வழங்குவதற்காக அலுவலகத்திற்கு வந்தார். அதற்கு முன்னதாக ஜனாதிபதியை சந்தித்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழு, மே தின பேரணிகள் குறித்து பேச ஆரம்பித்தது. "ஐ.ம.ச மேடைக்கு முன்னால் முக்கிய தலைவர்கள் யாரும் தென்படவில்லை. தலதா, ராஜித, பதியுதீன், ஹக்கீம் போன்றவர்கள் வராததையும் அவதானிக்க முடிந்தது. ஐ.ம.ச தலைவர் வருவதற்கு முன்னரே தலைவர் பொன்சேகாவும் சென்றுவிட்டார். என பேராசிரியர் ஆசுமாரசிங்க உரையை ஆரம்பித்தார். "ஜே.வி.பி யும் தமது உச்ச அளவிலான ஆதரவாளர்களை கொழும்புக்கு கொண்டு வந்திருந்தனர். மாத்தறையிலும், அனுராதபுரத்திலும், யாழ்ப்பாணத்திலும் கூட இதே நிலைதான். எனினும், மாத்தறை பேரணியில் பண்டாரவளையைச் சேர்ந்த 75 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். அதிலிருந்து பண்டாரவளையில் உள்ளவர்களும் கூட்டத்தில் இருந்ததையே இது காட்டுகிறது" இவ்வாறு எம்.பி வஜிர தெரிவித்தார். "ஆனால் ஒட்டுமொத்தமாக ஐக்கியதேசியக் கட்சியின் பேரணியில் ஜனாதிபதி என்ற தனி நபரை நம்பி பேரணிக்கு வந்தவர்களே அதிகம். இந்த மக்கள் அனைவரும் ஜனாதிபதி என்ன செய்துள்ளார், என்ன செய்வார் என எதிர்பார்ப்புடன் நம்பி வந்தவர்கள். ஏனென்றால் பலரும் கட்சியை உடைத்து வெளியே சென்று, கட்சி பலம் குன்றியிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த மக்கள் வெள்ளம் வந்தது. என்று அமைச்சர் மனுஷ கூறினார். "பொதுவாக நான் கவனித்த ஒரு விஷயம் இருக்கிறது. இந்த மே தின பேரணிகளில் பெண்களின் பங்கேற்பு குறைந்துள்ளது. மறுபுறம், மே தின பேரணிகள் எதிலும் இளைஞர் பிரதிநிதித்துவம் முக்கியத்துவம் பெறவில்லை என்று ஜனாதிபதி ரணில் முகத்தை சுருக்கியவாறு கூறினார். ஜனாதிபதி கூறியதை ஆமோதித்து அமைச்சர் பிரசன்னவும் கலந்துரையாடலில் கலந்துகொண்டார். "இளைஞர்கள் மே தின பேரணிகளுக்கு வரவில்லை, ஆனால் மாலையில் இசைக் கச்சேரியைப் பார்க்க பல இளைஞர்கள் திரண்டிருந்தார்கள். அப்படிப் பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சியில்தான் இளைஞர்கள் இருந்தனர். அமைச்சர் மனுஷ சிரித்துக் கொண்டே கூறினார். "ஐ.ம.ச தமது உயர்ந்த பட்ச ஆதரவாளர்களை வெளிப்படுத்தியுள்ளார்கள், ஜே.வி.பி. யும் அவ்வாறே ஆனால் மொட்டுக்கட்சியும் ஐ.தே.கவும் இங்கு தமது உயர்ந்த பட்சத்தை வெளிப்படுத்தவில்லை. நம்மவர்கள் இப்போதுதான் வெளியே வர ஆரம்பித்திருக்கிறார்கள். மறுபுறம், மொட்டுக்கட்சி, ஐ.தே.க, தொண்டமானின் தொழிலாளர் காங்கிரஸின் மே தின பேரணிகளுக்கு வந்த அனைத்து மக்களையும் ஒன்று சேர்த்தால், அது கொழும்பில் உள்ள மற்ற இரண்டு கட்சிகளுக்கும் வந்த மக்களின் எண்ணிக்கையை விட அதிகமானது." என்று பாராளுமன்ற உறுப்பினர் மதுர சொன்னார். இந்த உரையாடலின் போது வடமேற்கு ஆளுநரின் பதவிப் பிரமாணம் குறித்த பேச்சும் எழுந்தது. இதேவேளை, வடமேல் மாகாணத்தில் முஸ்லிம் ஆளுநரை நியமிப்பதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாக கூறப்படுகிறது. புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம்கள் அதிகமாக இருப்பதால் இந்த நியமனத்தில் தவறில்லை என அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். அத்துடன், பௌத்தர்களாகவோ, கத்தோலிக்களாகவோ, முஸ்லிம்களாகவோ சிந்திக்காமல் இலங்கையர்களாக சிந்தித்தால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என ஜனாதிபதி முன்னிலையில் கூற ஆரம்பித்தனர்." முன்பு, ஒரு சிங்களவர் வடக்கிற்கு அனுப்பப்பட்டார், அதே சமயம் ஒரு தமிழ் அல்லது முஸ்லிம் மேல் மாகாணத்துக்கு அனுப்பப்பட்டார். ஆனால் நாங்கள் அதைச் செய்யவில்லை. வடக்கின் ஆளுனர் பதவியையும், மாவட்ட செயலாளர் பதவியையும் தமிழர் ஒருவருக்கு வழங்கியுள்ளோம். மேல் மாகாணம் சிங்களவருக்கு வழங்கப்பட்டது. மேலும், இந்த நியமனம் ஜனாதிபதியின் தனித்த முடிவல்ல. அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் செய்த காரியம்." பாராளுமன்ற உறுப்பினர் வஜிர நீண்ட விளக்கமளித்தார். இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு எதிராக தோட்ட முதலாளிகள் வழக்குத் தொடர்ந்துள்ளதாக ஊடகங்களில் வெளியான பல செய்திகள் குறித்து அமைச்சர் மனுஷ ஜனாதிபதியிடம் தெரிவித்தார்." அவர்கள் வழக்குத் தொடுக்கட்டும். நாங்கள் தொழிலாளர்களின் பக்கம் நின்று வழக்கை ஆதரிப்போம். அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" இவ்வாறு ஜனாதிபதி மனுஷவுக்கு அறிவுரை வழங்கினார்.



# திமிங்கிலங்களின் சொர்க்கபுரியாக மாறும் மிரிஸ்ஸ

பண்டையகாலத்திலிருந்தே, இலங்கை இந்தியப் பெருங்கடலின் முத்து என்று செல்லப்பெயரில் அழைக்கப்பட்டதுடன், பல சுற்றுலாப் பயணிகளையும் ஈர்த்திருந்தது. இலங்கை மிகவும் கவர்ச்சிகரமானதாக இருப்பதற்கு முக்கிய காரணம் நம் நாட்டைச் சுற்றியுள்ள அழகிய கடற்கரைகளாகும்.

இதன் காரணமாக, சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் கடலோரப் பகுதிகளில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

நமது அழகிய கடற்கரைகளில் இருந்து உருவாக்கப்படும் புதிய எண்ணக்கரு தொடர்பில் தற்போது நாட்டில் பேசப்படுகின்றது. அது எமக்கு பரிச்சயமற்ற நீலக் கொடி கடற்கரை Blue Flag Beach திட்டமாகும். இன்னும் சில நாட்களில், சுற்றுலாத்துறைக்கு புதிய முகத்தை இந்தக் கடற்கரைகள் கொண்டு வரும்.

அன்றும், இன்றும் நீலத் திமிங்கலங்களின் சொர்க்க பூமியாக உள்ள மிரிஸ்ஸ கடற்கரை, எதிர்காலத்தில் திமிங்கலங்களுக்கு மட்டுமின்றி



கடல் வாழ் உயிரினங்களின் இராஜ்ஜியமாக மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை. திமிங்கலங்களைப் பற்றி குறிப்பிடும் போது, மிரிஸ்ஸ என்பது திமிங்கலங்களுக்கான ஒரு வர்த்தக நாமம் ஆகும். தற்போது மிரிஸ்ஸ கடற்கரையில் 8 வகையான திமி ங்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். அவற்றில், மிரிஸ்ஸா வின் நீல திமிங்கலம் உள்ளிட்ட Killer whale, Sperm whale மற்றும் Brydes whale ஆகியவற்றை மிரிஸ்ஸவில் சுற்றுலாப் பயணிகளால் எளிதாகக் காணக் கூடியதாக இருப்பதோடு, உலகின் மிகவும் பிரபலமான 8 திமிங்கல வகைகளையும் மிரிஸ்ஸவில் காணலாம். அவை Blue whale (நீலதிமிங்கிலம்), Killer whale, Sperm whale, Omura's whale, False killer whale, Brydes whale, Cuvier beaked whale, Deraniyagala beaked whale என்பனவாகும்.

இதேவேளை, நீலக்கொடி கடற்கரை (Blue Flag Beach) வலயத்தை நாட்டினுள் அபிவிருத்தி செய்வதன் ஊடாக வருடாந்தம் அதிக அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய சாத்தியம் இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது. கடற் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை மட்டுமன்றி சுற்றுலா அமைச்சும் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களமும் இந்த பங்களிப்பை முன்னெடுத்துள்ளன.

"நீலக்கொடி கடற்கரை (Blue Flag Beach) எண்ணக்கரு என்பது உலகில் முன்னேற்றமடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் ஒரு விடயமாகும். டென்மார்க் நாட்டின் அரசசார்பற்ற நிறுவனமான FEE (The Foundation for Environmental Education) என்ற நிறுவனத்தின் ஊடாகவே இந்த சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் இதில் எதிர்பார்ப்பது உலக கடற்கரைகளை பல்வேறு அளவுகோள்களுக்கு அமைய அபிவிருத்தி செய்வதாகும். அந்த அளவுகோள்களை நிறைவு செய்ததன் பின்னரே இந்தச்சான்றிதழ் அந்தக் கடற்கரைக்கு கிடைக்கும். இலங்கையில் தற்போது Blue Flag Beach காணக் கிடைப்பதில்லை. எனினும் வருங்காலங்களில் காணமுடியும். எமக்கு அண்மையில் உள்ள இந்தியாவில் தற்போது இவ்வாறான 10 கடற்கரைகள் உள்ளன. இந்த எண்ணக் கருவினை பூர்த்திசெய்வதற்கு 33 அளவுகோள்கள் உள்ளன. அவை நான்கு பிரதான பிரிவுகளின்கீழ், அதாவது பாதுகாப்பு மற்றும் சேவையை வழங்குதல், சுற்றுச்சூழல் கல்வியை வழங்குதல், நீர் தரப் பரிசோதனை மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் என்பனவற்றில் அடங்குகின்றன. தற்போது, கடற் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் சுற்றுலா அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பாசிக்குடா மற்றும் அறுகம்பே ஆகிய இரண்டு நீலக் கொடி கடற்கரைகள் உருவாக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், பெந்தர மற்றும் உனவடுனவை விசேட வலயங்களாகத் தெரிவு செய்துள்ள அதிகாரசபையானது தனியார் துறையினரின் அனுசரணையில் இந்த அளவுகோல்களைப் பூர்த்தி செய்வதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. சில அளவுகோள்கள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த இடங்கள் அனைத்திலும் கடலோர முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் தலைவர் மாவட்டச் செயலாளர் ஆவார். பிரதேச செயலாளர் இதன் தலைவராக இருப்பார்" என்றார் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கான தேசிய அமைப்பாளர் சந்துன் விக்கிரமசிங்க.

ஒரு சாதாரண கடற்கரையானது நீலக் கொடி கடற்கரையிலிருந்து அளவுகோல்களின் அடிப்படையில் வேறுபடுகிறது. பாதுகாப்பு மற்றும் சேவையை வழங்குதல், சுற்றுச்சூழல் கல்வியை வழங்குதல், நீர் தரப் பரிசோதனை மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் 33 அளவுகோல்களைப் பூர்த்திசெய்வதன் மூலம் இந்தக் கடற்கரை வேறுபடுகிறது.

மக்கள் குளிப்பதற்கு ஏற்ற சிறந்த நீர் காணப்படுதல், சிறந்த சுகாதாரநிலை காணப்படுதல், வாகனம் நிறுவத்துவதற்கான வசதிகள் காணப்படுதல், நீரின் தரத்தினை கண்காணிக்கும் வாய்ப்பு, பயிற்றப்பட்ட உயிர்காப்பாளர்கள் குழு,



மிகத்தூய்மையான கடற்கரை காணப்படுதல், மாற்றுத்திரனாளிகள் இலகுவாக கடலுக்குள் சென்று குளிப்பதற்கான வாய்ப்பு, தகவல்களை அறிந்துகொள்வதற்கான நிலையம் இருத்தல் போன்ற விடயங்களை பூர்த்திசெய்திருப்பதால் இந்தக் கடற்கரை ஏனைய கடற்கரைகளிலிருந்து வேறுபடுகின்றது. சாதாரண கடற்கரைகளில் இவ்வாறான குணாதிசயங்களைக் காணமுடியாது.

இது கடல்எல்லையிலிருந்து குறைந்தது 500 மீட்டர் தொலைவில் உள்ளது. Blue Flag Beach திட்டத்தின் கீழ், கடற்கரை மட்டுமின்றி, கடலும் உள்ளடக்கியுள்ளது. அதன் பிரகாரம், இவ்வாறான கடற்கரைகளில் கடலில் நீந்துதல், கடலுக்கு அடியில் பல்லுயிர் சூழலை உருவாக்குதல், சுற்றுச்சூழல் முகாமைத்துவம் என்பன தொடர்ந்தும் இடம்பெறுவதோடு, சுற்றுலாப் பயணிகள் இலகுவாக குறித்த நீலக்கொடி கடற்கரைகளில் உலாவித் திரிந்து இந்த அனுபவங்களையும் பெறும் வாய்ப்பு உள்ளது.

தற்போது கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் இதன் முதற்கட்டமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் அதிக ஈர்ப்பைப் பெற்றுள்ள காலி உனவட்டுன, அறுகம்பே, பாசிக்குடா மற்றும் பெந்தர ஆகிய கடற்கரைகளை நீலக்கொடி கடற்கரைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

கடல்சார் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி அசேல பி ரெகவா, அதன் பொது முகாமையாளர் ஜகத் குணசேகர உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நீலக்கொடி கடற்கரைகளை அமைப்பது தொடர்பான சான்றிதழைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதோடு, சர்வதேச FEE (The Foundation for Environmental Education) அமைப்பின் அதிகாரிகள் இருவர் கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததோடு, அவர்கள் பல களப் பயணங்களில் ஈடுபட்டதுடன் அது தொடர்பான விழிப்புணர்வையும் மேற்கொண்டனர். ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதி செயலாளர் அலுவலத்தின் நீலக்கொடி கடற்கரைகளை அமைப்பது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கடற் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையினால் இந்த நீலக்கொடி கடற்கரைகளை உருவாக்குவதற்கான ஆரம்ப கட்டம் தற்போது நிறைவடைந்து வருவதோடு, அந்தக் கடற்கரைகளில் அளவுகோல்கள்களுக்கு அமைவான நடவடிக்கைகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காகச் சுற்றுலாத்துறை அமைச்சு பாரிய பங்களிப்பை வழங்கி வருவதுடன், அந்த கடலோர பிராந்தியங்களில் மாவட்ட செயலாளர்களின் ஒத்துழைப்பும் தொடர்ந்து கிடைத்து வருகிறது.

இந்த வருட இறுதிக்குள் இலங்கையில் முதற்தடவையாக சர்வதேசத் தரத்துடனான கடற்கரையை அண்மித்த குளியல் துறைகள் எனப்படும் சர்வதேச தரத்துடனான நான்கு நீலக்கொடி கடற்கரைகள் எமக்கு கிடைக்கவுள்ளன.

இது இலங்கையின் வெளிநாட்டு சுற்றுலாத் துறையில் ஒரு திருப்புமுனையாக அமைவது மட்டுமன்றி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் பாதுகாப்பான மற்றும் அனைத்து வசதிகளையும் கொண்ட எமது இயற்கையான கடற்கரையை சர்வதேச தரத்துடன் கூடிய கடற்கரையாகப் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்பும் கிடைக்கும்.

இதேவேளை, மிரிஸ்ஸ கடல் பிராந்தியத்தை சர்வதேச தரத்திற்கு அமைவாக நீலக் கொடி கடற்கரையாக மற்றும் சமுத்திரவியல் உயிரனங்களின் சரணாலயமாக மாற்றுவதன் மூலம் தென் மாகாணத்தின் சுற்றுலாப் பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் ஐந்து மடங்காக அதிகரிக்கும் செயற்பாட்டில் வனஜீவராசிகள் அமைச்சும் கடற் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையும் சிறந்த சேவையை ஆற்றி வருகின்றன.

2025ஆம் ஆண்டாகும்போது விசேட இலக்குகள் சிலவற்றை நிறைவேற்றிக்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக தற்போது விரிவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தூய்மை அல்லது குப்பைகள் இல்லாத சர்வதேச சுற்றுச்சூழல் தரங்களுக்கு ஏற்ப சான்றிதழுடனான நீலக் கொடி கடற்கரையை கவர்ச்சிகரமான பிராந்தியமாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

மிரிஸ்ஸ கரையோரப் பகுதியில் அமைந்துள்ள அனைத்து கட்டடங்களுக்கும் பசுமைக் கட்டட எண்ணக்கருத் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் சோலார் பேனல்கள் அல்லது உயிர் வாயு அல்லது பிற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்தி மாற்றத்துக்கு உட்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

எம். எஸ். முஸப்பிர்



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்

'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சம்பந்தமில்லாத நால்வர் கூடி பதில் தலைவர் ஒருவரை நியமித்தமை செல்லுபடியற்றது. நீதிமன்றத்தின் ஊடாக உண்மைகளை எடுத்துரைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் நியமிக்கப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.



# சு.கவுக்கு பதில் தலைவர் ஒருவரை நியமித்தமை செல்லுபடியற்றது!

## நீதி, சிறைச்சாலைகள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ கூறுகிறார்

**கே: நீங்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கவில்லை எனவும், உங்களை பதில் தலைவராக நியமித்தமை சட்டவிரோதமானது என்றும் மற்றைய குழுவினர் நீதிமன்றத்திற்குச் சென்றனர். உங்கள் நியமனத்திற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. அடுத்து என்ன நடக்கவிருக்கின்றது?**

பதில்: அதை எதிர்த்து ஒரு குழுவினர் நீதிமன்றம் சென்று தடை உத்தரவு பெற்றனர். நீதிமன்றத்தில் அவர்கள் முன்வைத்த ஒருதலைப்பட்சமான உண்மைகளின்படி, நீதிமன்றம் அத்தகைய உத்தரவுகளை வழங்குகிறது. பின்னர், மற்றைய தரப்பினர் உண்மைகளை சமர்ப்பித்த பிறகு, எதிர்காலத்தில் நீதிமன்றம் பொருத்தமான உத்தரவைப் பிறப்பிக்கும். நான் அவர்களுடைய கட்சிக்காரன் இல்லை என்பது என்மீது அதிருப்தியில் இருக்கும் ஒரு சிலர் சொல்லும் கதை. ஆனால் கட்சியின் 116 உறுப்பினர்கள் அனைவரும் செயற்குழு உறுப்பினர்கள் என்பது தெரிந்த காரணத்தினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அது ஒரு கட்சியாக நீதிமன்றத்திற்குச் சென்று யாரிடமும் எந்தப் பொய்யையும் கூறலாம். இந்த நியமனம் சட்டவிரோதமானது என்றால், நான் அதை ஏற்க மாட்டேன்.

**கே: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் அவர்கள் நினைப்பது போன்று தலைவர்களை நியமிக்க முடியுமா?**

பதில்: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இரண்டு தலைவர்கள் இல்லை. கட்சிக்கு சம்பந்தமே இல்லாத நான்கைந்து பேர் போய் ஒருவரைப் பதில் தலைவராக நியமித்தமை செல்லபடியாகாது. இது ஒரு போலி நியமனம்.

**கே: அரசாங்கத்தின் அமைச்சர்களை மைத்திரி குழு கடுமையாக எதிர்த்தது. மறுபுறம், உங்களுடனான ஈடுபாடு ஒப்பந்தத்தின் அடிப்படையிலானது என சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பொதுஜன பெரமுனவில் இருந்து பாராளுமன்றம் சென்றவர்கள் அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை வகிக்கக் கூடாது என வழக்குத் தாக்கல் செய்தவர்கள் ஒன்றுகூடி தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். நான் இந்த வகையைச் சேர்ந்தவன் அல்லன். நான் உறுப்பினர் இல்லை. நான் பொதுஜன பெரமுனவில் இருந்து தேர்தலில் போட்டியிட்டு, நாங்கள் உருவாக்கிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை வகித்து பாராளுமன்றத்திற்கு வந்தேன். அதற்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பொதுஜன பெரமுனவில் வாக்கு கேட்டவன் அல்லன்.

**கே: முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் உங்களுக்கும் இடையில் ஒப்பந்தம் இருப்பதாக சிலர் கூறுகின்றனர் அல்லவா?**

பதில்: உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்குகளை முடிக்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்பந்தம் செய்திருப்பதாக யாரோ முட்டாள் தனமாகக் கூறியுள்ளனர். இதன் காரணமாக எதிர்காலத்தில் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் தேவையான பணிகளை மேற்கொள்வோம் என நம்புகிறோம். இவர்கள் என் மீது இந்தக் குற்றச்சாட்டுகளை சுமத்தவில்லை. நாட்டின் நீதித்துறைக்கு எதிரான நிலைப்பாட்டையே முன்வைக்கின்றனர். நீதி அமைச்சரை தொடர்பு கொண்டால் தமது வழக்குகளை தீர்த்து வைக்க முடியும் என்பதே இவர்களின் கருத்து. இது ஒட்டுமொத்த நீதித்துறை அமைப்பையே சீர்குலைக்கும் செயலாகும். எனவே, அவ்வாறு கருத்துத் தெரிவித்தவர்கள் மீது அவதூறு வழக்குத் தொடரப்படும்.



> நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. எதிர்காலத்தில் நீதிமன்றத்திற்குச் சென்று உண்மைகளை முன்வைத்து தடை நீக்கப்பட்ட பின்னர், வழமை போன்று செயற்படுவோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த நாட்டின் பலமான அரசியல் கட்சி என்பதை மூன்று மாதங்களுக்குள் நிரூபித்துக் காட்டுவேன்'

**கே: அரசாங்கத்தின் பலமான அமைச்சராக நீங்கள் இருப்பதாக பலர் கூறுகின்றனர் அல்லவா?**

பதில்: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டுமன்றி, அரசாங்கத்தில் அமைச்சர் பதவியை வகிக்கும் முன்னரும் குறைபாடுகளை சுட்டிக்காட்டினேன். அரசாங்கத்தின் குறைபாடுகளை நான் சுட்டிக்காட்டிய அளவுக்கு வேறு யாரும் சுட்டிக் காட்டவில்லை. நான் காட்டிய அளவுக்கு எதிர்க் கட்சிகள் கூட சுட்டிக் காட்டவில்லை. இந்தக் குறைகளை சரிசெய்தேன். கடந்த இரண்டு ஆண்டுகளில் ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையைப் பெறுவதற்கும், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறுவதற்குமான நிபந்தனைகளில் எழுபத்தைந்து சதவீதத்தை நான் பூர்த்தி செய்தேன். ஆனால் அனைத்தும் ஜனாதிபதியின் தலைமையில்தான் நடந்தன. அதைச் செய்யாவிட்டால், மக்கள் உண்ண உணவின்றி மரணிக்க நேரிடும் என்று எதிர்க்கட்சியோ, அரசோ சொல்லாது.

**கே: நீங்கள் இந்தப் பதவியை ஏற்றுக் கொள்வீர்கள் என எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஏன் அவசரமான இந்த முடிவு எடுக்கப்பட்டது?**

பதில்: நாட்டின் பொறுப்பை ஏற்க வேண்டிய நேரத்தில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. பதவிகளுக்காக நான் எதையும் ஏற்றுக்கொள்பவன் அல்லன். ஆறு முறை அமைச்சுக்களை ஏற்றவன். பலமுறை அவற்றை இடையில் இராஜினாமா செய்தவன். பலமுறை பணிநீக்கம் செய்யப்பட்டேன். கட்சித் தலைவர்களை திருப்திப்படுத்த நாங்கள் அரசியல் செய்யவில்லை. நாட்டு மக்களின் தேவை ஏற்படும் போதுதான் அரசியல் செய்கிறோம்.

கோட்டாபயவின் காலத்தில் எனக்கு இரண்டு முறை அமைச்சுப் பதவி வழங்கப்பட்ட போது நான் ஏற்றுக்கொண்டிருக்க முடியும். அப்போது ஏற்றுக் கொண்டால், நான் விரும்பும் வழியில் செயல்பட அனுமதிக்கப்பட மாட்டேன். ஆனால் அவர்கள் கீழே விழ முடியாததால் ஏற்றுக் கொண்டேன். அரசு மற்றும் எதிர்க்கட்சிகள் எதிர்த்த அனைத்து மசோதாக்களையும் நிறைவேற்றினேன். 25 வருடங்களாக எதையும் செய்யாத நீதி அமைச்சின் பணியை இரண்டு வருடங்களில் செய்து முடித்தேன்.

**கே: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு ஏதேனும் தயார்படுத்தல்கள் உள்ளனவா?**

பதில்: எனக்கு நிறைய கோரிக்கைகள் வருகின்றன. ஒரு கட்சி என்ற ரீதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபை உறுப்பினர்கள் 116 பேர் எனக்கு ஆதரவளித்தனர். இலங்கை வரலாற்றில் இவ்வாறு அழைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். அவர்கள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக அப்படிச் செய்கிறார்கள். வேட்பாளர்கள் மீதான இலஞ்சம், மோசடி, ஊழல் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து, எனது அரசியல் கடந்த காலத்தை அவதானித்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**கே: கட்சியின் யாப்பைப் பாதுகாத்து எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமா?**

பதில்: எதிர்காலப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது நீதிமன்றம் தடை விதித்துள்ளது. எதிர்காலத்தில் நீதிமன்றத்திற்குச் சென்று உண்மைகளை முன்வைத்து தடை நீக்கப்பட்ட பின்னர், வழமை போன்று செயற்படுவோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த நாட்டின் பலமான அரசியல் கட்சி என்பதை மூன்று மாதங்களுக்குள் நிரூபித்துக் காட்டுவேன். பல வருடங்களாக என்னால் செய்ய முடியாத வேலையைச் செய்தேன். தமது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சுப் பதவி வகித்த ஒருவர் இவ்வாறு செயற்பட்டதையிட்டு அவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். இந்த நிலைக்கு யாரும் எதிரானவர்கள் என்று நான் நினைக்கவில்லை.

**கே: அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியை எவ்வாறு ஆதரிப்பீர்கள்?**

பதில்: வேட்புமனு தொடர்பாக நாங்கள் இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஜனாதிபதியை அந்த பதவிகளுக்கு கொண்டு வர நான் கடுமையாக உழைத்துள்ளேன். 2015 இல் ஆட்சி அமைக்க நான் நிறைய பங்களித்தேன். பொதுமக்களின் கருத்தை நாங்கள் நன்கு அறிவோம். எனவே, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் விரும்பும் வகையில் இந்த நாட்டு மக்கள் வாக்களிக்கவில்லை. அதற்கு ஜனரஞ்சக சிந்தனைகளும் வேலைத்திட்டங்களும் தேவை.

---

# 300 பெண்கள் பலாத்காரம்; மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஆபாச வீடியோக்கள்!



## முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் பேரன் பிரஜ்வால் ரேவண்ணா மீதான குற்றச்சாட்டுகளால் இந்திய அரசியலில் பெரும் பரபரப்பு!

இந்திய முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் பேரன் பிரஜ்வால் ரேவண்ணா மீது பாலியல் புகார் சுமத்தப்பட்ட நிலையில், அவர் கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கர்நாடகாவைச் சேர்ந்த முன்னாள் பிரதமரான தேவகவுடா, தற்போது மத சார்பற்ற ஜனதா தளம் கட்சியின் தலைவராக உள்ளார். இவரது பேரனும், கர்நாடகாவின் பொதுப்பணித்துறை அமைச்சர் ரேவண்ணாவின் மகனுமான பிரஜ்வால் ரேவண்ணா, கர்நாடக மாநிலம் ஹாசன் மக்களவைத் தொகுதியின் எம்.பி ஆக உள்ளார்.

மேலும், தற்பொது நடந்து வரும் இந்திய மக்களவைத் தேர்தலிலும் அதே தொகுதியில் பா.ஜ.கவின் தேசிய ஜன நாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடுகிறார். இதற்கிடையில், கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி வாக்களித்ததும் பிரஜ்வால் ரேவண்ணா ஜெர்மனிக்கு பறந்துவிட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், அவர் மீது கர்நாடகாவைச் சேர்ந்த பெண் ஒருவர் பாலியல் புகார் அளித்தார். அதில் தன்னை மிரட்டி பலமுறை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக குற்றம் சாட்டியுள்ள அந்தப்பெண், தன் மகளிடத்திலும் பிரஜ்வால் பலமுறை வீடியோ அழைப்பில் தகாத முறையில் பேசி, அச்சுறுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தப் புகார் குறித்து பொலிசார் விசாரணை மேற்கொண்ட நிலையில், பல பென்டிரைவ்களில் பதிவு செய்யப்பட்டிருந்த 3000 இற்கும் மேற்பட்ட வீடியோக்கள் வெளியாகின. மேலும், பிரஜ்வால் மட்டுமின்றி அவரது தந்தை ஹெ.டி ரேவண்ணாவும் பலமுறை பாலியல் தொல்லை அளித்ததாக அப்பெண் புகார் தெரிவித்தார்.

கர்நாடகா அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், விரிவான விசாரணை மேற்கொள்ளப்படும் என்று கர்நாடக முதலமைச்சர் சித்தராமய்யா தெரிவித்தார். அதன் அடிப்படையில், சிறப்பு புலானாய்வுக் குழு அமைத்து விசாரணை தொடங்க முடிவெடுக்கப் பட்டுள்ளது.

மேலும், இந்த வழக்கை தாமாக முன்வந்து எடுத்துள்ள தேசிய மகளிர் ஆணையம், பிரஜ்வாலை உடனே கைது செய்ய வேண்டும் என்றும், இவ்வழக்கு குறித்து 3 நாட்களில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கர்நாடக மாநில பொலிசுக்கு உத்தரவிட்டு கடிதம் எழுதியுள்ளது.

பிரஜ்வால் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று அவரது பெரியப்பாவும், கர்நாடகாவின் முன்னாள் முதலமைச்சருமான குமாரசாமி தெரிவித்திருந்தார். மேலும், "அவர் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்கும், எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை" என்று பா.ஜ.க கைவிரித்துள்ளது. இது தொடர்பாக கருத்து கூறியுள்ள அமைச்சர் அமித்ஷா, "பெண்கள் மீதான வன்முறைக்கு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறியுள்ளார்.



தேவகவுடா

இதற்கு மத்தியில் ஜனதா தளம் கட்சியிலிருந்து பிரஜ்வால் ரேவண்ணாவை இடைநீக்கம் செய்து அக்கட்சியின் தலைவர் தேவகவுடா அறிவித்துள்ளார். இதுகுறித்த அவரது குறிப்பில், பிரஜ்வால் மீது பாலியல் குற்றச்சாட்டு எழுந்ததன் அடிப்படையில் கட்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே இக்கட்சியின் சார்பில் பிரஜ்வால், ஹாசன் தொகுதியில் போட்டியிடும் நிலையில், இந்த நடவடிக்கையால் கர்நாடக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பிரஜ்வால் ரேவண்ணாவுக்கு எதிராக கடும் கண்டனங்கள் எழுந்து வருகின்றன. அந்தவகையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

அமித் ஷா இது குறித்து தெரிவிக்கையில், “பாலியல் குற்றம் புரிந்த யாருக்கும் பா.ஜ.க ஆதரவாக இருக்காது. அது போன்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" என்றார் அமித் ஷா.

பிரஜ்வல் மீது பாலியல் புகார்கள் வெளியான உடனேயே நடவடிக்கை எடுக்காமல் வாக்குப்பதிவு நடந்து முடியும் வரை மாநில காங்கிரஸ் அரசு அமைதி காத்தது ஏன் என்ற கேள்வியும் இங்கு எழுப்பப்படுகின்றது.

காங்கிரசின் இந்த தாமதம்தான் பிரஜ்வல் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்ல காரணமாக அமைந்தது என்று அமித் ஷா குற்றம்சாட்டியுள்ளார்.

இந்நிலையில், பிரஜ்வல் ரேவண்ணா ஆபாச வீடியோ விவகாரத்தில் கோபத்தை வெளிப்படுத்திய அமித்ஷாவுக்கு கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா நன்றி கூறியுள்ளார்.

இதேவேளை பாலியல் சர்ச்சையில் சிக்கிய ஹாசன் தொகுதி எம்.பி பிரஜ்வல் ரேவண்ணாவுக்கு எதிராக சிறப்பு விசாரணைக் குழு 'லுக் அவுட்' நோட்டீஸ் பிறப்பித்துள்ளது.

கர்நாடகாவின் ஹாசன் எம்.பியான பிரஜ்வல் ரேவண்ணாவின் சர்ச்சை வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பரவி பேசுபொருளாக மாறியுள்ளன. இந்த விவகாரம் தற்போது அரசியலில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி உள்ளது. அதேநேரம், குற்றம் தொடர்பாக விசாரிப்பதற்காக கர்நாடக அரசு சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்துள்ளது. அக்குழு விசாரணையை தொடங்கியுள்ள நிலையில் பிரஜ்வல் ரேவண்ணா வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளார்.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்நிலையில் அரசியல் வட்டாரத்திலும் இவ்விவகாரம் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

ஆபாச வீடியோக்கள் வெளியான அன்றே அவர் ஜெர்மனி சென்றதாக சொல்லப்படுகிறது. பிரஜ்வல் ரேவண்ணா வெளிநாட்டிற்கு தப்பிச் சென்றுள்ள நிலையில், விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என அவரது வீட்டில் நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. எனினும், அவர் இன்னும் விசாரணைக்கு ஆஜராகாத நிலையில் தற்போது அவருக்கு எதிராக 'லுக் அவுட்' நோட்டீஸ் பிறப்பித்துள்ளது வழக்கை விசாரித்து வரும் சிறப்பு விசாரணைக் குழு.

அதன்படி, இந்தியா முழுவதும் உள்ள விமான நிலையங்கள், துறைமுகங்களில் அவருக்கு எதிராக 'லுக் அவுட் நோட்டீஸ்' ஒட்டப்படவுள்ளது.

ஹோமம் நடத்திய ரேவண்ணா:

பாலியல் சர்ச்சைகளுக்கு மத்தியில் கர்நாடக முன்னாள் அமைச்சரும் பிரஜ்வலின் தந்தையுமான எச்.டி.ரேவண்ணா ஹோலநரசிப்பூரில் உள்ள தனது வீட்டில் ஹோமம் நடத்தியுள்ளார். அர்ச்சகர்கள் முன்னிலையில் வீட்டில் நடத்தப்பட்ட ஹோமத்தில் ரேவண்ணா மற்றும் அவரது மனைவி பவானி ஆகியோர் சடங்குகள் செய்துள்ளனர். சடங்குகளை முடித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்த அவர், "சதி திட்டத்தால் எங்கள் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. அனைத்தைப் பற்றியும் விரைவில் வெளியே பேசுவேன்" என்று கூறினார்.

பிரஜ்வல் மட்டுமன்றி அவரது தந்தை ரேவண்ணாவும் விசாரணைக்கு ஆஜராக சிறப்பு புலனாய்வு குழு அழைப்பாணை அனுப்பி இருந்தது. இருவருமே விசாரணைக்கு ஆஜராகாததால் அவகாசம் கேட்ட பிரஜ்வல் கோரிக்கையை நிராகரித்தது சிறப்பு புலனாய்வு குழு.

ஆபாச வீடியோக்கள் வெளியானவுடன் ஜெர்மனி தப்பிச் சென்ற பிரஜ்வல் ரேவண்ணா நாடு திரும்பியதும் கைது செய்ய பொலிஸ் திட்டமிட்டுள்ளது. முன்னாள் பிரதமர் தேவகவுடா பேரனும், பாஜக கூட்டணியான ம.ஜ.த. எம்.பியுமான பிரஜ்வல் 300 பெண்களை பலாத்காரம் செய்ததாக புகார் எழுந்துள்ளது.



எஸ்.சாரங்கன்...

# வீதி அனுமதிப்பத்திரங்கள் இல்லாத பஸ்களுக்கு ரூ. 05 இலட்சம் அபராதம்

## விரைவில் சட்டத்தில் திருத்தம்



வீதி அனும திப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ்களுக்கான அபராதத்தை 05 இலட்சம் ரூபாவாக அதிகரிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அதற்கான வரைவு திட்டம் போக்குவரத்து அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

3,200 தொலைதூர சேவை பஸ்கள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினுடைய ஒழுங்குமுறையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பயணிகள் பெரும்பாலும் வீதி அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றனர் . குறிப்பாக வெள்ளவத்தை மற்றும் மருதானையை அண்மித்த பகுதிகளில் வீதி அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்கள் நிறுத்தப்பட்டு சட்டவிரோதமான முறையில் பயணிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றனர்.

ஆகையால் அவ்வாறான பல பஸ்களின் சாரதிகளை கைது செய்து வழக்குத் தொடர தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அப்பஸ் சாரதிகளுக்கு 05 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படுமெனவும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்தது.

## சுற்றுலா பயணிகளுக்கு வீசா

# அமைச்சர் டிரான் திங்களன்று விளக்கமளிப்பதாக அறிவிப்பு




சுற்றுலாப் பயணிகளுக்கு விசா வழங்குவது மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தொடர்பாக நாட்டில் நிலவும் நிலைமையை விளக்குவதற்கான விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நாளை திங்கட்கிழமை காலை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நடைபெறவுள்ளது.

வெளிநாடு சென்றுள்ள அமைச்சர் டிரான் அலஸ் நாடு திரும்பியவுடன் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு, அங்கு எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு விளக்கமளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசா வழங்கும் நடைமுறை இந்தியாவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, விமான நிலையத்தில் இளைஞர் ஒருவர் குரல் எழுப்பும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வந்ததையடுத்தே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பேராசிரியர் நளின் டி சில்வா மறைவுக்கு பிரதமர் இரங்கல்



"நாட்டுக்கும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் அளப்பரிய பணியாற்றிய பேராசிரியர் கலாநிதி நளின் டி சில்வாவின் மறைவு நிச்சயமாக எமது தேசத்துக்கு பாரிய இடைவெளியை ஏற்படுத்தும்" என, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். கொள்கைநிலை இயற்பியலாளரும் தத்துவவாதியுமான பேராசிரியர் நளின் டி சில்வாவின் மறைவையிட்டு பிரதமர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு கூறினார். பிரதமர் தனது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"எமது தேசத்துக்கு அளப்பரிய பணியாற்றி தேசத்துக்கு கீர்த்தியையும் பெருமையையும் சேர்த்த மிகப்பெரிய அறிவாளுமை கலாநிதி நளின் டி சில்வாவுக்கு எமது உன்னதமான மரியாதையை செலுத்துகின்றோம். தாய்நாட்டின் மிகக் கடினமான காலப்பகுதிகளில் துணிச்சலுடன் தேசத்துக்காக தன்னை அர்ப்பணித்து தேசத்தை ஆக்க பூர்வமாக எழுச்சி பெறச் செய்த கலாநிதி நளின் டி சில்வா எமது தேசத்துக்கு அரியதோர் புலமைச் சொத்தாவார். இந்நிலையில் அவருடன் நீண்டகாலம் நெருங்கிப் பழகவும் பணியாற்றவும் கிடைத்ததை இச்சந்தர்ப்பத்தில் நான் மரியாதையுடனும் நன்றியுடனும் நினைவுகூருகிறேன். கலாநிதி நளின் டி சில்வாவின் இழப்பால் வாடும் அவரது மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன். கலாநிதி நளின் டி சில்வாவுக்கு நித்திய சுகம் கிடைக்க பிரார்த்திக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# UK– இலங்கைக்கு இடையிலான இரண்டாவது மூலோபாய பேச்சு

## 07ஆம் திகதி கொழும்பில் நடத்த ஏற்பாடு

இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையிலான மூலோபாய பேச்சுவார்த்தையின் இரண்டாவது கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை (07) கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை சிரேஷ்ட அதிகாரிகள் மட்டத்தில் நடைபெறவுள்ளதாக, இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இந்தக் கூட்டத்தில் வெளிநாட்டு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இடப்பெயர்வு, கடல்சார் ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு ஈடுபாடு ஆகிய துறைகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பொதுநலவாயம் உட்பட சர்வதேச அரங்குகளில் இரு நாடுகளின் ஒத்துழைப்பு தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகவும், அந்த அமைச்சு தெரிவித்தது.

இலங்கையும் ஐக்கிய இராச்சியமும் 2023ஆம் ஆண்டு இராஜதந்திர உறவுகளின் 75 வருடங்களை கொண்டாடியது. இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் இந்த ஆண்டு பிரிட்டிஷ் இளவரசி ஆன் வருகை தந்தமை எமது நீடித்த நட்பின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டு காட்டுவதாகவும், வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இரண்டாவது மூலோபாய பேச்சுவார்த்தையில் வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் பணிப்பாளர் நாயகம் ஷோபினி குணசேகர தலைமையில் இலங்கைத் தூதுக் குழுவினர் வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தனவுடன் இருதரப்பு பேச்சு நடத்தவுள்ளனர்.

ஐக்கிய இராச்சிய தரப்பில் இந்தியப் பெருங்கடல் இயக்குநரகம் மற்றும் வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலக பணிப்பாளர் (Foreign, Commonwealth and Development Office ) பென் மெல்லர் தலைமை தாங்கவுள்ளனர்.

FCDO இல் இலங்கை அணியின் தலைவர் Humairaa Haita, உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் முகவரமைப்புகளும் உள்ளடங்குகின்றன.

## வடக்கு கிழக்கை பிரித்த ஜே.வி.பி.

# தமிழ் மக்களுக்கு நியாயமான அதிகார உரிமையை வழங்குமா?

இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தை உயர் நீதிமன்றம் சென்று இரண்டு மாகாணங்களாக பிரித்த ஜே.வி.பி.யினர் தமிழ் மக்களின் அதிகாரத்துக்கான நியாயமான உரிமைகளை எவ்வாறு தருவார்களென, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (03) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறிய போது,

"அண்மையில் ஆங்கில ஊடகமொன்றுக்கு ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவிக்கையில், நாட்டில் பல ஆண்டுகளாக ஆட்சியாளர்களால் தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்த தமிழ் மக்களின் அதிகாரத்துக்கான நியாயமான உரிமைகளை உறுதி செய்வதோடு, இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுத்து தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப தன்னால் முடியுமெனக் கூறினார். அதேநேரம் 2019ஆம் ஆண்டு தங்களது கொள்கைப் பிரகடனத்திலும் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் குறித்து தமது நிலைப்பாட்டை வெளியிட்டிருப்பதாகவும் சூசகமாக கூறியுள்ளார். இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தை தமிழர்களின் ஒரு நிலத் தொடருள்ள தாயக பூமியாக தமிழ் மக்கள் வாழ்வதைக் கூட விரும்பாத ஜே.வி.பி. அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடி வடக்கு கிழக்கை தனித்தனி மாகாணங்களாக பிரித்தது வரலாறு. குறைந்தபட்சமாக வடக்கு கிழக்கு மாகாணத்தை தமிழர்கள் ஒன்றிணைந்து வாழ்வதைக் கூட விரும்பாத இனவாத சிந்தனையுடன் செயற்பட்ட ஜே.வி.பி. தலைவர், இப்போது ஜனாதிபதி தேர்தல் நடைபெறக் கூடுமென்ற சூழலில் தமிழ் மக்களுக்கான நியாயமான உரிமைகளை உறுதி செய்வதாக அந்த ஊடகத்துக்கு கூறியுள்ளார்.

## யாழ். மற்றும் மட்டு. நகரில்

# சைவப்புலவர் பரீட்சை 24, 25, 26ஆம் திகதிகளில்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் இந்த வருடத்துக்கான இளம் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் இம்மாதம் 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளதாக, அச்சங்க செயலாளர், சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் மற்றும் மட்டக்களப்பு ஆணைப்பந்தி இந்துமகளிர் கல்லூரி பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு உரைநடை, பிற்பகல் 2.00 மணிக்கு வரலாறு, 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இலக்கியம், பிற்பகல் 2.00 மணிக்கு இலக்கணம், 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9.00 மணிக்கு சாத்திரம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இம்மாதத்தின் இரண்டாம் வாரத்தில் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## முதலாளிமார் வழக்கு...

சட்ட உதவிகளை வழங்குமாறு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

கொட்டகலையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்ததுடன், சம்பளம் எவ்வாறு அதிகரிக்கப்படுமென்பதை அமைச்சர் மனுஷ நாணயக்கார விளக்கினார். அன்றையதினம் இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவிப்பை தொழில் ஆணையாளர் நாயகம் வெளியிட்டார்.

இந்நிலையில் தோட்ட நிறுவனங்களுடன் எவ்வித கலந்துரையாடலும் செய்யாமல் உரிய சம்பள அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதால் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக, தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எனினும் முதலாளிமார் சம்மேளனம் அதனை செலுத்துவதற்கான உடன்பாட்டை எட்டும் சந்தர்ப்பங்களை தவிர்த்து வந்ததாகவும், அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## பிரிட்டனின் மேயர்...

ரிஷி சுனக், வடக்கு யார்க்ஷயரிலுள்ள ரிச்மண்ட் தொகுதியின் எம்.பி. தொழிற்கட்சியின் செய்தித் தொடர்பாளர், பிரதமரின் சொந்தக் கட்சியினர் Tory territoryகளை விட தொழிற்கட்சியை தேர்ந்தெடுத்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட Tory territory எம்.பி. ஸ்காட் பென்டனை மாற்றுவதற்கான போட்டியில் தொழிற்கட்சியின் வெற்றி 'உண்மையில் வரலாற்று சிறப்புமிக்கது' மற்றும் தேசிய அளவில் 'மிக முக்கியமான முடிவு' என்று சர்கெய்ர் கூறினார்.

## உயிரிழந்தோருக்கு...

இலட்சம் ரூபாவை வழங்க விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டது.

இந்நிலையில் சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவரை இழப்பீடு வழங்கப்படும்.

தியத்தலாவையில் இடம்பெற்ற கார் பந்தயத்தின் போது பார்வையாளர்கள் மீது கார் மோதியதில் 07 பேர் உயிரிழந்ததுடன், 23 பேர் காயமடைந்துள்ளனர். விபத்து தொடர்பாக சாரதிகள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 50,000 வேலைவாய்ப்புகளை...

அதனூடாக கலிகமுவவை புதிய நகரமாக அபிவிருத்தி செய்து மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் ரம்புக்கனை நுழைவாயிலிலிருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, சம்பந்தப்பட்ட பிராந்திய சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், கேகாலை மாவட்ட அபிவிருத்திக்குழு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களால் சுற்றுலாப் பாதையின் அபிவிருத்தி ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவிக்கையில், நீர் வீழ்ச்சிகள் அதிகமுள்ள சப்ரகமுவ பிரதேசத்தினூடாக இதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பெருமளவில் சிறிய, நடுத்தரவளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியுமெனவும் இதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதே பிரதான பணியாக அமையுமெனவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக 750 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஏற்கெனவே பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமன்றி, உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் முழுப் பிரதேசத்தையும் சுற்றுலா நகரமாக மாற்ற முடியுமெனவும், அவர் சுட்டிக்காட்டினார்.

## G.C.E. O/L...

இந்த ஆண்டு 730 சிறப்பு தேவையுடைய பிள்ளைகளும் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். பரீட்சை மோசடிகளை தடுப்பதற்காக விசேட நடைமுறையொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

# எதிர்கால நம்பிக்கையில் தோட்டத் தொழிலாளர்கள்!

ஜனாதிபதி மீது மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வைத்து நம்பிக்கை தற்போது நிறைவேறியிருக்கின்றது.

இலங்கையில் இரு நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டுள்ள மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் சமூகத்தைப் பொறுத்தவரை இதனை வரலாற்று சாதனையாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது. இத்தனை தொகை சம்பள அதிகரிப்பென்பது தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரை அறிவிக்கப்பட்டதில்லை. ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை 'மகிழ்ச்சியான அதிர்ச்சி' ஆகும்.

இலங்கையில் இரு நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டுள்ள மலையக தோட்டத் தொழிலாளர்களின் அவலங்கள் தீர்த்து வைக்கப்பட வேண்டியவையாகும். நாட்டில் ஏனைய சமூகங்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றமடைந்துள்ள போதிலும், மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் குன்றிய நிலையிலேயே இன்னும் உள்ளது. அன்றாட வருமானம் மிகவும் குறைவாக இருப்பதே அவர்களது வாழ்க்கைத் தரம் முன்னேறாமைக்குரிய காரணமாகும்.

1700 ரூபா சம்பளம் என்பது பாராட்டப்பட வேண்டியதொரு விடயமாகும். இவ்விடயத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பங்களிப்பும் பாராட்டுக்குரியதாகும். இ.தொ.கா மாத்திரமன்றி, அரசுக்கு ஆதரவான ஏனைய தொழிற்சங்கங்களும் சம்பள உயர்வு விடயத்தில் அரசுக்கு அழுத்தம் பிரயோகித்துள்ளனவென்பதை மறுப்பதற்கில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களது கோரிக்கைக்குக் கிடைத்த பெருவெற்றி இதுவாகும். இக்கோரிக்கையை செவிமடுத்து நிறைவேற்றிய ஜனாதிபதிக்கு தோட்டத் தொழிலாளர்களின் நன்றி என்றும் உரியதாகும்.

## இஸ்ரேலில் கட்டட...

மனுஷ நாணயக்கார தலைமையில் நேற்று புதுக்குடியிருப்பில் ஆரம்பமானது. வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு பல நன்மைகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை எதிர்பார்க்கும் அனைவருக்கும் தமது தொழில் கனவுகளை நனவாக்கும் வகையில் 'ஜயகமு ஶ்ரீலங்கா' வேலைத் திட்டத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு சுமார் 50 வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் வருகை தந்தன.

இவ்வாறிருக்க இஸ்ரேலிய வேலைகளுக்கு பதிவு செய்யும் திட்டம் உள்ளதுடன், இஸ்ரேலில் கட்டட நிர்மாணத்துறை சார்ந்த வேலைவாய்ப்பு விரும்பும் அனைவரும் இதில் பதிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை ஆட்கடத்தலை தடுப்பதற்கான விழிப்புணர்வு வேலைத் திட்டத்தை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நேற்று நடைமுறைப்படுத்தியது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலக உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்களுக்கு இவ்விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும், முறைசாராதுறை ஊழியர்களுக்கு தொழில் கௌரவத்தையும் வளத்தையும் வழங்கும் 'கரு சரு' நிகழ்ச்சி நேற்று மாலை அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி நிதியத்தின் ஆதரவுடன் திறமையான பணியாளர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு அனுப்புவதற்கான வாய்ப்பை வழங்கும் 'ஸ்மார்ட் யூத்' திட்டம் இன்று நடைமுறைப்படுத்தப்படும். 'ஷ்ரம வாசன" நிதியத்தின் உதவியுடன் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வேலைத்திட்டம் இன்று மாலை அமுல்படுத்தப்படும்.

நேற்றைய நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், அதிதிகளாக கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வட மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள், படையினர், மாணவர்கள், பொதுமக்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## காணி உறுதி வழங்கலில்...

ஒன்றுபடுமாறும் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். மகாவலி அதிகார சபையினால் 204,002 நிரந்தர காணி உறுதிகளை தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, அனைத்து வலயங்களிலும் நிரந்தர காணி உறுதிகளை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி மே மாத இறுதியில் 20,178 நிரந்தர காணி உறுதிகள் மகாவலி குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

அதன்படி அடையாள ரீதியாக 1,340 காணி உறுதிகள் பொலன்னறுவை மாவட்டத்தின் பீ, சீ வலயங்கள், மெதிரிகிரிய, மொரகாகந்த உள்ளிட்ட மகாவலி வலய குடியிருப்பாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன்போது 30 காணி உறுதிகள் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"'உறுமய' திட்டத்தின் கீழ் அந்தக் காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படும். அதன் பின்னர் நீங்கள் எவருக்கும் அடிபணிய வேண்டியதில்லை. உங்களுக்கு கிடைக்கும் நிரந்தர காணி உரிமையை இரத்துச் செய்யவும் அதிகாரம் இல்லை.

நாம் அனைவரும் கடந்த மூன்று வருடங்களில் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தோம். நாட்டின் பொருளாதாரத்தை போலவே நமது பொருளாதாரமும் சரிவடைந்தது.

கைகளில் பணம் இருக்கவில்லை. அனைவரும் கஷ்டங்களுடன் வாழ்ந்தனர். தற்போது பொருளாதார நெருக்கடிகளுக்கு நாம் படிப்படியாக தீர்வு கண்டு வருகிறோம். இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்கு இந்த வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க முடிந்தது. தனியார் துறையிலும் பல நிறுவனங்கள் சம்பள அதிகரிப்பு செய்தன. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நாட்டின் வறிய மக்கள் முன்னேற்றங்களை நோக்கிச் சென்றனர். அதற்காக நாம் 'அஸ்வெசும' வேலைத்திட்டத்தை செயற்படுத்தினோம். அதற்காக உலக வங்கியின் உதவி கிடைத்ததோடு, சமுர்த்தியின் நன்மைகளை மூன்று மடங்காக அதிகரித்தோம். பயனாளிகள் எண்ணிக்கையும் 18 முதல் 24 இலட்சமாக அதிகரிக்கப்பட்டது.

குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு தமிழ், சிங்கள புத்தாண்டுக் காலத்தில் 10 கிலோ அரிசி பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்தோடு நாட்டில் வளர்ச்சி காணும் பொருளாதாரத்தின் நலன்களை ஒரு தரப்பினர் மாத்திரமே அனுபவித்தனர். அது ஏனைய தரப்பினருக்கும் சென்றடைய வேண்டும். அந்த நோக்கத்திலேயே தற்போது அரசாங்கம் அனைவருக்கும் காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

மக்களுக்கு காணி உறுதிகளை வழங்க அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டம் புரட்சிகரமானது. உலகின் வேறு எந்தவொரு நாட்டிலும் இவ்வாறான திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. நாம் மிகப்பெரிய புரட்சியை செய்திருக்கிறோம். விவசாயத்திற்காக மாத்திரமின்றி, வீட்டு உரிமைகளையும் வழங்கியிருக்கிறோம். மாடிக் குடியிருப்புகளில் வசிப்போருக்கும் வீட்டு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதனாலேயே இந்த திட்டத்தை உலகின் புரட்சிகர திட்டமென கூறுகிறோம். இத்திட்டம் நாட்டு மக்களுக்கான விடுதலையாகும்.

காணி உறுதியை துரிதமாக தயாரிப்பது குறித்து அமைச்சரவையிலும் ஆலோசித்தோம். பிரதமர் இந்தப் பணிகளை பொறுப்பேற்றுள்ளார். அது தொடர்பில் தேடியறிந்து பணிகளை முன்னெடுக்குமாறு மாவட்ட அபிவிருத்திக் குழுக்களுக்கும் அறிவுறுத்தியுள்ளோம். இந்த வேலைத்திட்டம் இரு மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படவுள்ளது. காணி ஆணையாளர் அலுவலகம், மகாவலி அமைச்சு, அளவையியல் திணைக்களம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்தக் காணிகளை பெற்றுக்கொண்ட பின்னர் அரசாங்கத்தின் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்துடன் இணைந்துகொள்வது உங்களது பொறுப்பாகும். நாட்டின் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தி போட்டித்தன்மை நிறைந்த ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்த வேண்டிய பொறுப்பு நம்மிடம் உள்ளதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள அதிகரிப்பு!

"ஒவ்வொருவரும் தத்தமது அரசியல் நோக்கங்களை ஒருபுறம் வைத்துவிட்டு அனைவரும் ஒன்றிணைந்து முயற்சித்தால் மாத்திரமே தொழிலாளர்களின் நீண்ட கால சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க முடியும்."

மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளமை நீண்ட கால பிரச்சினைக்கு கிடைத்த தீர்வாக நம்பிக்கை வெளிப்படும் போது அது தொடர்பான சில சந்தேகங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன.

காலங் காலமாக இழுத்தடிக்கப்பட்டு வரும் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட்டு விட்டதா? இனி அவர்களுக்கு மாதாந்தம் 1700 ரூபா சம்பளம் கிடைக்குமா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தின கூட்டத்தில் கொட்டகலையில் வைத்து பல்லாயிரம் மக்கள் மத்தியில் வழங்கிய வாக்குறுதி நிறைவேறுமா?

அதற்கு முந்தைய தினத்தில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்புக்கு இணங்க தோட்டத் தொழிலாளர்களின் நீண்ட கால இந்த சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட்டு விட்டதா?

அல்லது சில தொழிற்சங்கங்கள், மலையகம் சார்ந்த அறிவிலிகள் தெரிவிப்பது போல இதுவும் எதிர்வரும் தேர்தலை இலக்காக வைத்து மலையக மக்களை ஏமாற்றும் நடவடிக்கையா? இத்தகைய கேள்விகளுக்கு பதில் புதிராகவே உள்ளது. ஜனாதிபதியின் அறிவிப்பு மற்றும் வர்த்தமானி வெளியீட்டையடுத்து அரசாங்கத்திற்கு எதிரான கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள், மலையகம் சார்ந்த சில அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட இது நடக்கின்ற காரியம் அல்ல. வெறும் கண் துடைப்பே என விமர்சனங்களை அள்ளி வீசி வருவதைக் காண முடிகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது தற்போதைய ஜனாதிபதி நாட்டின் பிரதமராக பதவி வகித்தார். இப்போது விமர்சனங்களை அள்ளி வீசி வருபவர்கள் சிலர் அப்போதும் அமைச்சுப் பதவிகளிலும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஐம்பது ரூபாவைக்கூட பெற்றுக் கொடுக்க அவர்களால் முடியவில்லை என்றே குறிப்பிட வேண்டும்.

அப்போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக இருந்தவரே, அதில் அக்கறை காட்டவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். .

எவ்வாறெனினும் இறுதி அறிவிப்புக்குப்பின் சாதக, பாதகமான விமர்சனங்களுக்கு மத்தியில் எமக்குள்ளும் எழுகின்ற கேள்வி, தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டு விட்டதா? அடுத்த மாத சம்பளத்தில் அது கிடைத்து விடுமா? என்பதுதான்.

அரசாங்கம் எதனை அறிவித்தாலும் ஜனாதிபதி வாக்குறுதிகளை வழங்கினாலும் வர்த்தமானி வெளியிடப்பட்டாலும் சம்பள அதிகரிப்பு தொடர்பில் இறுதி முடிவை எடுக்க வேண்டியவர்கள் கம்பெனிகள் அல்லது முதலாளிமார் சம்மேளனமே.

இத்தகைய வாக்குறுதிகள் மற்றும் வர்த்தமானி அறிவிப்புக்குப் பின்னரும் அவர்களிடமிருந்து உடனடியாகவே வெளியிடப்பட்ட செய்தி இந்த சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது. அதற்கு சாத்தியமில்லை என்பதுதான்.

அந்த சம்மேளனத்தின் பேச்சாளர் ராஜதுரை அதற்கு பல்வேறு சாக்குப் போக்குகளையும் முன்வைத்தார். உற்பத்தி செலவு அதிகரிப்பு, இலங்கைத் தேயிலையின் அதிகரித்த விலை என அதற்கு காரணம் காட்டுகின்றார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் தொழிற்சங்கங்களும் தொழில் ஆணையாளரும் சம்பள நிர்ணய சபையும் எனத் தொடர் பேச்சுவார்த்தைகளை அண்மைக்காலமாக நடத்தினர். அந்த பேச்சுவார்த்தைகள் எந்த வித தீர்வும் இன்றி முடிவுக்கு வந்தன.

அதன் பின்னர் ஜனாதிபதியே தலையிட்டு மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் வழங்குமாறு தோட்ட கம்பெனிகளுக்குப் பணிப்புரை வழங்கினார். அதனை அடிப்படையாக வைத்து அதற்குப் பின்னர் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்ட கம்பெனிக்காரர்கள் பங்கு பற்றவே இல்லை. அதற்கான உத்தியோகபூர்வமான காரணத்தையும் அவர்கள் அறிவிக்கவில்லை. இது அவர்கள் அந்த விடயத்தில் எந்த அளவில் அக்கறை காட்டுகின்றார்கள் என்பதை துல்லியமாக வெளிப்படுத்துகிறது.

இதன் மூலம் நாம் ஒன்றை குறிப்பிட முடியும். தோட்டக் கம்பெனிகள் இன்னும் கூட்டு ஒப்பந்த சம்பள அதிகரிப்பு சிந்தனையிலிருந்து வெளிவரவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தில் 20 வீதத்தை அதிகரித்து விட்டு தமது பிரச்சினை முடிந்து விட்டதாக நினைப்பதே. தற்போது சுமார் 70வீத சம்பள அதிகரிப்பை கோரும்போது அவர்களுக்கு அதைப் பற்றி நினைத்துப் பார்க்கவே முடியாமல் உள்ளது. அண்மைய பேச்சுவார்த்தைகளிலும் ஜனாதிபதியின் அறிவிப்பிலும் அவர்கள் இணங்காதமைக்கு இதுவே முக்கிய காரணம்.

புதிய அறிவிப்பின்படி அடிப்படைச் சம்பளம் 1350 ரூபா தான். அதற்கும் கூட அவர்கள் இணக்கம் தெரிவிப்பதாகத் தெரியவில்லை.

அந்த வகையில் இந்த 35 வீத அதிகரிப்பு பற்றி கூட கவனம் செலுத்தாது, அவர்களின் அந்த 20 வீதம் என்ற சிந்தனையிலேயே அல்லது முடிவிலேயே அவர்கள் இன்னும் நிற்கின்றார்கள் என்றே கூற முடியும். தொழில் ஆணையாளரின் சம்பள அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானியின் அடிப்படையில் பார்த்தால் 1350 ரூபாவே அடிப்படைச் சம்பளமாக குறிப்பிடப்படுகின்றது. இந்த 35 வீத சம்பள அதிகரிப்புக்கு கம்பெனிக்காரர்கள் இணங்கவில்லை. அப்படியானால் 1,200 ரூபா என்ற சம்பள அதிகரிப்பிலேயே அவர்கள் நிற்கின்றனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அதேவேளை, இந்த விவகாரம் தொடர்பில் எதிர்க்கருத்துக்கள் அல்லது விமர்சனங்களை தெரிவித்து வருபவர்களின் கூற்றுக்களை கவனித்தால், சம்பள அதிகரிப்பு தொடர்பான அறிவித்தலை மக்கள் மத்தியில் ஜனாதிபதி வெளியிட்டாலும் வர்த்தமானி அறிவித்தல் தொழில் ஆணையாளரினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் அவதானமாகவே கையாளப்பட்டுள்ளன.

## ஜனாதிபதியின் சாதகமான அணுகுமுறையும் எதிர்த்தரப்பின் விமர்சனமும்

தொழில் ஆணையாளரினால் வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. வர்த்தமானியை வெளியிடுவது அவரது கடமையும் பொறுப்புமாக இருக்கலாம்.

ஆனால் அதற்கு முதலாளிமார் சம்மேளனம் கட்டுப்படுமா? என்பது ஒரு கேள்வி. அது ஒரு புறமிருக்க இது நீதிமன்ற உத்தரவைப் போன்று வலிமையான ஒன்றல்ல என்பதும் விமர்சனங்களை முன்வைப்போரின் கூற்றாகும். அதில் சம்பள அதிகரிப்பினை நிர்ணயித்துள்ளதாக அவர் தெரிவித்திருந்தாலும் சம்பள அதிகரிப்பினை வழங்க உத்தேசித்துள்ளதாகவே ஒரு சொல்லை அவர் பயன்படுத்தியிருப்பதாகவும் அந்த சொல்லை அவர் மிகவும் சிந்தித்தே பயன்படுத்தியிருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

1700 ரூபா சம்பளத்தை வழங்குவதாகவோ அல்லது அதற்கான உத்தரவை கம்பெனிக்காரர்களுக்கு வழங்குவதாகவோ அதில் உறுதியாகக் குறிப்பிடப்படவில்லை என்பதும் விமர்சனங்கள் முன்வைப்போரின் கருத்தாகும். உண்மையில் அவ்வாறு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரமும் அவருக்கு கிடையாது.

1350 சம்பளத்துடன் 350 ரூபா இதரக் கொடுப்பனவாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டாலும், அந்த 350 ரூபாய் எந்த அடிப்படையில் அல்லது எதற்காக வழங்கப்படுகிறது? அதனை தோட்டத் தொழிலாளர்கள் எல்லோரும் பெற்றுக் கொள்ள முடியுமா? அதற்கான வாய்ப்புகள் அனைத்து தொழிலாளர்களுக்கும் உள்ளனவா? என்ற கேள்விகளெல்லாம் எழுப்பப்படுகின்றன.

1700 ரூபா சம்பளம் வழங்க வேண்டும் என ஜனாதிபதி கடந்த டிசம்பர் மாதத்திலேயே அறிவித்துவிட்டார். அது தொடர்பில் கம்பெனிக்காரர்கள் எந்தளவு கவனம் செலுத்தியுள்ளனர் என்பதற்கு அதற்கு அடுத்து வந்த இரண்டு சுற்றுப் பேச்சு வார்த்தைகளிலும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்பதிலிருந்தே புரிகிறது.

"நெல்லை யார் குற்றினாலும் பரவாயில்லை அரிசியானால் சரி"

சில மலையகத் தோட்டப்புறங்களில் தொழிலாளர்கள் பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சி கொண்டாடி விட்டார்கள். அந்த மகிழ்ச்சியும் எண்ணமும் உண்மையாக வேண்டும்.

மலையகப் பெருந்தோட்டப் பகுதியில் யார் எந்த விதமான அரசியலையும் மேற்கொள்ளட்டும். ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு என்று வரும்போது அவர்களது உண்மையான பிரதிநிதியாக பெருந்தொட்டப் பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது முக்கியம்.

அவ்வாறு செய்யப்பட்டால் மாத்திரமே அப்பாவி தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை மட்டுமின்றி அவர்கள் எதிர்நோக்கும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

அவர்கள் மத்தியில் இம்முறை ஆழமான நம்பிக்கை வேரூன்றியுள்ளது. விமர்சனங்களை முன் வைப்போர் தெரிவிப்பது போல இந்த முறையும் தோட்டத் தொழிலாளர்கள் ஏமாந்து விடக்கூடாது. அதில் அனைவரும் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் 1700 ரூபா என்பது ஒரு குடும்பத்தைக் கொண்டு செல்லக்கூடிய தொகை கிடையாது. என்றாலும் அதனையாவது அந்த மக்களுக்கு பெற்றுக் கொடுக்க இப்போதாவது அனைவரும் இணைந்து செயற்படுவது முக்கியம்.

மறுபக்கம் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வமான வர்த்தமானி, நாட்டின் தலைவரான ஜனாதிபதியின் அறிவிப்பு மற்றும் பணிப்புரை ஆகியவற்றை மீறி அல்லது அலட்சியப்படுத்தி தோட்டக் கம்பெனிகள் செயல்படுமானால் அதனை எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசாங்கம் அது தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது மலையக பெருந்தோட்டங்களின் முகாமைத்துவம் தொடர்பில் பழைய முறைமைகளை புறந்தள்ளிவிட்டு அரசாங்கம் மாற்று முறைமை ஒன்றுக்கு வழிவகுக்க வேண்டும் என்பதே எமது தாழ்மையான கருத்து.





லோரன்ஸ் செல்வநாயகம் ...

# ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி ஆலயத்தில் தெய்வத்தமிழிசை அறிஞர் சிவ.ச.நடராஜதேசிகரின் பண்ணிசை



தமிழ்நாட்டில் மூன்று தலைமுறை தேசிகர் என்ற ஓதுவார் பாரம்பரியமிக்க தெய்வத் தமிழிசை அறிஞர் "முனைவர்" திருவிடைமருதூர் சிவ.ச.நடராஜதேசிகர் 12ஆம் திகதி கொழும்பு வருகின்றார். தமிழக தொலைக்காட்சி மற்றும் வானொலியின் அனுபவமிக்க தமிழிசை அறிஞரான இவர், தெய்வத்தமிழிசை அறிஞர், திருமுறை கலைக்களஞ்சியம், பண்ணிசைச் செல்வர், சிறந்த தமிழ்பண் இசைப்போன், பண்பாட்டு விருது, தேவார இசைமணி, முனைவர் (டாக்டர் பட்டம் தமிழில்) ஆகிய இசைப் புலமை விருதுகளையும், சைவசமயப் புரட்சியாளர், சைவத்தமிழ் சுடர்மணி, குமரகுருபரர் விருது ஆகிய இயல் புலமை விருதுகளையும் பெற்றவர்.

திருநெறிய தமிழ் சைவசமய பாதுகாப்பு பேரவை என்ற பேரியக்கத்தின் நிறுவனத் தலைவரான இவர், உலகின் முன்னோடியான சைவசமயத்தையும், செந்தமிழையும், அவரது பேரியக்கத்தின் மூலம் இரண்டு மாநாடுகளையும் பல பொது நிகழ்ச்சிகளையும் தமிழகத்தில் நடத்தியுள்ளார்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக தனித் தன்மையாகவே, சைவசமய துறையிலும் தலைமையேற்று இசை நிகழ்ச்சியும், சமய சொற்பொழிவும் நடத்தி வருகின்றார்.

இறைவன் வகுத்த சோதிட சாத்திரத்திலும் புலமை பெற்று, 33 ஆண்டுகால ஜோதிட சாத்திர அனுபவமிக்க வாகீசர் ஜோதிட ஆய்வு மையம் என்ற நிறுவனத்தை நடத்தி வருகின்றார். இந்திய ஜோதிட வரலாற்றில், தமிழ்நாட்டு முதலமைச்சரை துல்லியமாக தேர்வு செய்த ஒரே ஜோதிட வல்லுநர் இவர்.

கொழும்புக்கு வருகை தரும் இவர், கொழும்பு ஜிந்துப்பிட்டி, ஸ்ரீ சிவசுப்ரமணி சுவாமி திருக்கோயிலில் நடைபெறும் மகோற்சவங்களில் கலந்துகொண்டு பண்ணிசை பாடி முருகனைப் போற்றி துதிக்க இருக்கின்றார்.

அத்துடன் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கும் பண்ணிசைப் பயிற்சியை வழங்க இருக்கின்றார்.

**எச்.எச்.விக்கிரமசிங்க**

# யாழ்ப்பாணத்தில் மனத்தூய்மைக்கான இலவச தியானப் பயிற்சி

## மே 27 ஆம் திகதி ஆரம்பம்

சுமார் 2500 ஆண்டுகளுக்குமுன்னர் கௌதம புத்தரால் வடிக்கப்பட்டு, பர்மாவைச் சேர்ந்த ஊ.பா. கின்னிடமிருந்து கற்று, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்றுத்தந்த ச.கோயங்காவால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியானமுறை பற்றி அறிமுகம், யாழ்ப்பாணத்தில் மே மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

குருஜி எஸ்.என்.கோயங்காவின் வழிகாட்டலில் பாத்திமா ரிட்ரீட் ஹவுஸ், பண்டதரிப்பு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இம்மாதம் 27 ஆம் திகதிமுதல் ஜூன் 07 ஆம் திகதி வரை பத்துநாட்கள் தியானப் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளது.

இவர்களது இலவசப் பயிற்சி நெறியில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கலந்துகொள்ளலாம்.

விபாசனா தியான மையத்தில் இணைந்து கொள்ள விரும்புவர்கள் 0716439454 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

மேலும், www.sobha.dhamma.org என்ற இணையத்தில் முன்பதிவு செய்துகொள்ளவும் முடியும். மனத்தூய்மைக்கான இந்த இலவச தியானப் பயிற்சிநெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**எச்.எச்.விக்கிரமசிங்க**

National Lotteries Board

வியாழன் 2024.05.02

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத 5463 ரூ. 20,641,796.00
D 0 3 6 9 6 6

அத சம்பத 038 D 6 9 6 6

3705 2024.05.02 ரூ. 75,678,608.56
Y 15 31 38 74 Y 81444

Mega Power 1811 2024.05.02 92041 ரூ. 431,244,378.00
Z 21 43 48 63 65
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

VIP 2024.05.02 0289
D 3 4 8 2 2 8
LT D
ரூ. 29,208,102.88

2024.05.02 772 ரூ. 3,000,000.00
04 14 17 32 28015 22

தன நிதானய 1493 2024.05.02 ரூ. 90,260,437.04
P 43 50 71 73 P 24285

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

ஆர்வ வெளிப்பாட்டு கோரிக்கை

இலங்கையில் எரிசக்தி வறுமை மற்றும் கொள்கை வழிகாட்டுதல்களை உருவாக்குதல் பற்றிய ஆய்வை நடத்துவதற்கு ஆலோசகர்களை கொள்வனவு செய்தல்

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கையில் எரிசக்தி வறுமை மற்றும் கொள்கை வழிகாட்டுதல்களை உருவாக்குதல் பற்றிய ஆய்வை நடத்துவதற்கு ஆலோசகர்களை கொள்வனவு செய்தல் தகுதியான தரப்பினரிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு (EOI) அழைப்பு விடுக்கிறது.

ஆர்வ வெளிப்பாட்டு கோரிக்கைக்கான வழிகாட்டல்களை ஆணைக்குழுவின் www.pucsl.gov.lk என்ற இணையதளத்தில் பார்வையிட முடியும்.

கோரிக்கையானது முத்திரையிடப்பட்டு கடித உறையில் அனுப்ப வேண்டும் மற்றும் இடது மூலையில் "இலங்கையில் எரிசக்தி வறுமை மற்றும் கொள்கை வழிகாட்டுதல்களை உருவாக்குவது பற்றிய ஆய்வை நடத்துவதற்கான ஆலோசனை சேவை" என்று குறிப்பிட வேண்டும்.

கோரிக்கைகள் அனைத்தும் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி மாலை 2:30 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

தலைவர்
துறைசார் ஆலோசனை பெறுநர்குழு
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
6வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்
28, செயின்ட் மைக்கேல்ஸ் வீதி, கொழும்பு 03

தொலைபேசி: 011- 2392608/7
பெக்ஸ்: 011-2392641
ஈமெயில்: procurement@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 05.05.2024

**காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான (காஆஆ) உறுப்பினர்கள் நியமனம்**

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (காஆஆ)

பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக

- நிகழ்வு கண்டறிதல் அல்லது நுண்ணாய்வு,
- மனிதவுரிமைகள் சட்டம்
- சர்வதேச மனிதாபிமான சட்டம்
- மனிதாபிமான பதிலிறுப்பு

என்பவற்றின் முன்னனுபவம் கொண்டவர்களிடமிருந்தும்

- அல்லது, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இயைபான ஏனைய தகைமைகளை உடையவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்தில் காஆஆ விற்கான உறுப்பினர்கள் நியமனம் என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2024 மே 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாகக் "காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான உறுப்பினர்கள் நியமனம்" எனக் குறிப்பிடவும்.

**அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை -அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை -அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
**2024.05.05**

# தமிழ் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டில் பொது இணக்கப்பாடு இன்னுமில்லை!

**இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகலாம் என்ற எதிர்பார்ப்பு வலுத்துள்ள நிலையில், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் எனும் நிலைப்பாட்டில் தமிழ்க் கட்சிகளால் இன்றும் தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை.**








## கிளிநொச்சி மேதினக் கூட்டத்தில் எதிரும்புதிருமான அபிப்பிராயங்கள்!

இது தொடர்பான கருத்தாடல்கள் இன்னமும் இடம்பெற்று வருவதுடன் மேதினக் கூட்டங்களிலும் இக்கருத்துக்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தன. வடக்கில் உள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து கிளிநொச்சியில் ஏற்பாடு செய்திருந்த தமிழ்த் தேசிய மேதினக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் தேசிய முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகள், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒருமித்த நிலைப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

இங்கு உரையாற்றியிருந்த தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிடுகையில், "தமிழ் மக்கள் முன்னெடுக்கும் போராட்டத்தின் ஓர் வழியாகவே பொதுவேட்பாளரை முன்னிறுத்த வேண்டும்" என்றார்.

"தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நாம் முன்னிறுத்தினால் அவர் மும்மொழிகளிலும் எமது வரலாறு பற்றி, எமக்கிழைக்கப்பட்ட அநியாயங்கள் பற்றி, இன்னல்கள், பாகுபாடுகள் பற்றி உலகுக்கு எடுத்துரைக்க முடியும். எமது வடக்கு, கிழக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களை உலகுக்கு வெளிக்கொண்டுவர முடியும். பொதுவேட்பாளரை முன்னிறுத்தினால் தமக்கு வேண்டிய சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்க முடியாது போய்விடும் என்று பலர் அஞ்சுகின்றார்கள்.

அது தவறு. பொதுவேட்பாளருக்கு நாம் எமது முதல் வாக்கை அளித்து விட்டு 2 ஆம், 3ம் விருப்பு வாக்குகளை நாம் விரும்பும் சிங்கள வேட்பாளருக்கு அளிக்க முடியும். இதன் மூலம் தமிழ் மக்களின் ஒற்றுமை பேணப்படும். எமது எதிர்பார்ப்புகள் உலகறியச் செய்யப்படும். அதே நேரத்தில் எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கும் இடமளிக்கப்படும். இவ்வாறு செய்வதால் இனக்கலவரங்கள் வெடிக்கவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படாது.

எதுஎவ்வாறெனினும் இன்றைய ஆபத்தான பொருளாதார சூழலில் கலவரங்கள் ஏதேனும் வெடித்தால் நாட்டின் நிலை அதலபாதாளத்திற்குத் தள்ளப்பட்டுவிடும் என்பதை எமது அரச தலைவர்கள் அறிந்து வைத்துள்ளார்கள். ஆகவே கலவரங்கள் ஏற்பட விடமாட்டார்கள்" என விக்னேஸ்வரன் எம்.பி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலைப்பாட்டை அவர் ஏற்கனவே முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் அங்கு உரையாற்றியிருந்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், பொதுவேட்பாளர் என்ற விடயத்தில் இணக்கப்பாடு இருக்கின்றபோதும், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுகூடி இணைந்து இது பற்றிய தீர்மானத்தை எடுப்பதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

அது மாத்திரமன்றி, தமிழ் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது என்றும், தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் போது தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய தென்னிலங்கை வேட்பாளருடன், வெளிநாட்டுத் தூதுவர்களின் முன்னிலையில் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தி இரண்டாவது வாக்கை குறித்த தென்னிலங்கை வேட்பாளருக்கு அளிக்க வேண்டும் என்ற யோசனை விக்னேஸ்வரனினால் முன்னர் வெளியிடப்பட்டிருந்ததை மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

## ஒருபுறம் சாதகம், மறுபுறம் பாதகம் என்றவாறு தமிழ்க் கட்சிகளிடையே மாறுபட்ட கருத்துகள்!

இவ்வாறு செய்வது தவறானதாகவே முடியும் என அவர் தெரிவித்தார். தென்னிலங்கை வாக்காளருடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டால் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆயிரம் வாக்குகள் விழும் போது தென்பகுதியில் உள்ள மற்றைய எதிர்வேட்பாளருக்கு பத்தாயிரம் வாக்குகள் அதிகரித்துவிடும். எனவே, அவ்வாறான தீர்மானமொன்றை எடுத்துச் செயல்படுவது பாதகமானதாகவே அமையும்.

எனவே, தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் கட்சிகள் அனைத்தும் கூட்டாக முடிவெடுத்துச் செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் வழமைபோன்று தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் அதிக அக்கறை காண்பிக்கக் கூடிய வேட்பாளருக்கு ஆதரவை வழங்க வேண்டும் என்று மனோ கணேசன் எம்.பி தெரிவித்தார்.

தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் கூட்டணியில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கக் கூடிய எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்துள்ளார். இது முழுமையான தீர்வாக இருக்காது என்றாலும், தென்னிலங்கையிலுள்ள ஏனைய வேட்பாளர்களுடன் ஒப்பிடுகையில் இதனைக் கூறிய ஒரேயொருவர் சஜித் பிரேமதாசவே என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுவேட்பாளர் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கும் சிங்கள சமூகத்திற்கும் எடுத்துக் கூறுவதற்கான சிறந்த சந்தர்ப்பமாக நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் அமையும் என்றார்.

இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் நம்மை நாமே ஆட்சி செய்ய வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்றும், இதனை எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளரும் தரமாட்டார் என்பதால், தமிழ் பேசும் மக்களின் பொதுவான கொள்கையை முன்னிலைப்படுத்தி தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு தனிநபரையும் முன்னிலைப்படுத்தாமல் இந்தக் கொள்கையை முன்னிலைப்படுத்தினால் தென்னிலங்கையின் நிலைப்பாடும், நாட்டின் நிலைப்பாட்டையும் இலகுவாக சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காண்பித்துவிடலாம் என்பதே சிறிதரனின் கருத்தாக இருந்தது.

இந்த அடிப்படையில் வைத்துப்பார்க்கும்போது, தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் தொடர்பில் ஒருமித்த நிலைப்பாடு எட்டப்படவில்லையென்றே தெரிகின்றது. கடந்த காலத்திலும், தேர்தல் காலத்தில் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. இந்த அனுபவத்தை வைத்துப் பார்க்கும் போது தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயம் தமிழ்க் கட்சிகள் மத்தியில் அல்லது தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மத்தியில் எந்தளவு செல்வாக்குச் செலுத்தும் என்பது பாரியதொரு கேள்விக்குறியே.

பாரியதொரு பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில், மிகப் பெரிய அரசியல் மாற்றத்தையே நாடு எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில் நடைபெறக்கூடிய இந்தத் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் விடயத்திற்கு எந்தளவு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்பதும் இங்குள்ள சந்தேகமாகும். எனவே, நடைமுறைச்சாத்தியமான விடயங்களைக் கையாள்வதன் ஊடாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதே உண்மை.

**பி.ஹர்ஷன்...**

---

## காஸா மீதான யுத்தத்தின் எதிரொலி:

# மாணவர் வெகுஜனப் போராட்டங்களால் அமெரிக்காவில் உருவாகியுள்ள நெருக்கடி!



**காஸா மீதான யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்துள்ள வெகுஜனப் போராட்டம் அமெரிக்காவில் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஏப்ரல் 17 ஆம் திகதி நியூயோர்க்கிலுள்ள கொலம்பிய பல்கலைக்கழகத்தில் தொடங்கிய இப்போராட்டம் இரண்டு வாரங்களுக்கும் மேலாக நீடிக்கிறது. அத்தோடு அமெரிக்காவின் பல மாநிலங்களிலும் உள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுக்கும் இப்போராட்டம் பரவியுள்ளது. அதேநேரம் அமெரிக்காவுக்கு வெளியே பிரான்ஸ், அவுஸ்திரேலியா, இத்தாலி, கனடா உள்ளிட்ட நாடுகளது பல்கலைக்கழங்களிலும் இப்போராட்டத்திற்கு ஆதரவாக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.**





மாணவர்களின் இவ்வெகுஜன போராட்டங்களைக் கட்டுப்படுத்தவென பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வகுப்பு தடை, ஒழுக்காற்று நடவடிக்கை போன்றன பல்கலைக்கழக நிர்வாகங்களால் முன்னெடுக்கப்படுகின்ற அதேநேரம், பொலிஸாரும் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தும் தரப்பினரும் மாணவர்களைக் கைது செய்வதையும் தடுத்து வைப்பதையும் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 13 நாட்களில் 2300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இப்போராட்டம் காரணமாக பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சில பல்கலைக்கழகங்கள் நிகழ்நிலை கற்கை நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளன. மாணவர்களின் இப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இயல்புநிலையை ஏற்படுத்தவென பல்கலைக்கழக நிர்வாகங்களும், சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தும் தரப்பினரும் கடும் முயற்சிகளை முன்னெடுத்த வண்ணமுள்ளனர்.

காஸா மீது ஆறு மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் முன்னெடுத்துவரும் யுத்தம் உலகின் பல நாடுகளைப் போன்று அமெரிக்காவிலும் ஆரம்பம் முதல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த யுத்தத்தில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பது அதற்கான பிரதான காரணமாகும்.அதனால் காஸா மீதான யுத்தத்திற்கு எதிராக உலகின் ஏனைய நாடுகளைப் போன்று அமெரிக்காவிலும் சிவில் அமைப்புகளும் சமூக நல ஆர்வலர்களும் தொடராக பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். அமெரிக்காவில் உயர்பதவிகள் வகித்த சிலர் பதவி விலகல்களை மேற்கொண்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். காஸா மீதான யுத்தத்திற்கு எதிராக அமெரிக்க விமானப்படை வீரரொருவரே அமெரிக்காவிலுள்ள இஸ்ரேல் தூதரகத்திற்கு முன்பாகத் தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டார்.

இவை எதனையும் கருத்தில் கொள்ளாத அமெரிக்க நிர்வாகம் இஸ்ரேலுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கிறது. குறிப்பாக இஸ்ரேலுக்கு வருடா வருடம் 3.8 பில்லியன் டொலர்கள் நிதியுதவி வழங்கும் அமெரிக்கா, காஸா யுத்தத்திற்கு பின்னர் மேலதிகமாக ஆயுத மற்றும் நிதியுதவிகளை வழங்கியும் வருகிறது.

யுத்தம் ஆரம்பமானதும் யுத்தக்கப்பல்களையும் இராணுவ விமானங்களையும் மத்திய தரைக்கடலுக்கு அனுப்பியது. அத்தோடு 2023 நவம்பரில் 14.5 பில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவ உதவிகளை இஸ்ரேலுக்கு வழங்க அமெரிக்க பிரதிநிதிகள் சபை அங்கீகாரம் அளித்தது. அதேநேரம் டிசம்பர் 09 இல் ஜனாதிபதி ஜோ பைடன் தமக்குள்ள அவசர அதிகாரத்தைப் பயன்படுத்தி 106.5 மில்லியன் டொல்கள் பெறுமதியான 14,000 தாங்கிகளுக்கான குண்டுகளை இஸ்ரேலுக்கு உடனடியாக விற்பனை செய்ய அனுமதி அளித்தார். அதே போன்று டிசம்பர் 29 ஆம் திகதியும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அவசர அதிகாரத்தைப் பயன்படுத்தி 147.5 மில்லியன் டொலர்கள் பெறுமதியான பீரங்கி குண்டுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆயுதங்களையும் இஸ்ரேலுக்கு வழங்கியுது.

2024 பெப்ரவரியில் 14 பில்லியன் டொலர்களுக்கான உதவிப் பொதியை இஸ்ரேலுக்கு வழங்கும் தீர்மானத்தை அமெரிக்க செனட் சபை நிறைவேற்றியது. மேலும் 2024 மார்ச்சில் மேலதிகமாக 1800 எம்.கே 84 2000 இறாத்தல் நிறைகொண்ட குண்டுகளையும் 500 எம்.கே 82 500 இறாத்தல் நிறைகொண்ட குண்டுகளையும் இஸ்ரேலுக்கு வழங்கவும் அமெரிக்கா கையெழுத்திட்டது. காஸா மீதான யுத்தம் ஆரம்பமானது முதல் நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் அமெரிக்கா ஆயுத தளபாடங்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்தது.

அதேநேரம், காஸா மீது உடனடி மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டு வரப்பட்ட இரு தீர்மானங்களை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா இரத்து செய்தது.

காஸா மீதான யுத்தம் காரணமாக பாரிய மனித அவலங்களும் அழிவுகளும் ஏற்பட்டுள்ளன. கடந்த ஆறு மாத காலப்பகுதியில் 34 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காஸாவில் கொல்லப்பட்டுள்ளதோடு, 76 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். 85 வீதமான மக்கள் இருப்பிடங்களை இழந்து முகாம்களிலும் கூடாரங்களிலும் தங்கியுள்ளனர்.

இவ்வாறான சூழலில் தான் கொலம்பிய பல்கலைக்கழக மாணவர்கள் 70 பேர் கடந்த ஏப்ரல் 17 ஆம் திகதி, காஸாவில் உடனடி யுத்தநிறுத்தம், இஸ்ரேலிய இராணுவத்துடன் தொடர்புடைய நிறுவனங்களின் பல்கலைக்கழக சொத்துக்களை விலக்கிக் கொள்ளுதல், அமெரிக்கா இராணுவ உதவிகளை இஸ்ரேலுக்கு வழங்குவதை நிறுத்திக் கொள்ளுதல், இஸ்ரேலுடனும் அதன் காஸா யுத்தத்துடனும் சம்பந்தப்பட்டுள்ள நிறுவனங்களதும் அமைப்புகளதும் முதலீடுகளை பல்கலைக்கழகங்கள் வெளிப்படுத்தி விலக்கி கொள்ளுதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்நிலையில் கொலம்பிய பல்கலைக்கழகத் தலைவர் மினௌசே சபிக், மாணவர் போராட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர் மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியளிக்காத சூழலில் வளாகத்திற்குள் பிரவேசித்து கூடாரங்களை அகற்றவும் மாணவர்களை கைது செய்யவும் நியூயோர்க் நகர பொலிஸ் திணைக்களத்திற்கு அவர் அனுமதி வழங்கினார். அதற்கேற்ப கூடாரங்கள் அகற்றப்பட்டு முன்னணி மாணவர்களும் கைது செய்யப்பட்டனர். சில மாணவர்களுக்கு வகுப்பு தடை, ஒழுக்காற்று விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் வளாகக் கட்டடமொன்றுக்கு இஸ்ரேல் தாக்குதலில் கடந்த ஜனவரி 29 இல் பலஸ்தீனில் கொல்லப்பட்ட ஆறு வயது சிறுமி ஹிந்து ரஜப் என்பவரின் பெயரையும் சூட்டியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த பல்கலைக்கழக நிர்வாகமும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பினரும் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளின் விளைவாக அமெரிக்காவின் பல மாநிலங்களுக்கும் இந்த மாணவர் வெகுஜனப் போராட்டம் பரவியுள்ளது.

பலஸ்தீன நீதிக்கான மாணவர்கள் (SJP) மற்றும் அமைதிக்கான யூத குரல் (JVP) உள்ளிட்ட 120 இற்கும் மேற்பட்ட மாணவர் குழுக்கள் இணைந்து முன்னெடுக்கும் இப்போராட்டம் வடக்கு கரோலினா, பொஸ்டன், ஒகியோ, ஹவார்ட், தெற்கு கலிபோர்னியா, டெக்சாஸ் உட்பட 20 இற்கும் மேற்பட்ட பல்லைகலைக்கழகங்களிலும் இடம்பெற்றுவருகிறது. இப்போராட்டம் இடம்பெற்றுவரும் சூழலில் உக்ரைன், இஸ்ரேல், தாய்வான் ஆகிய நாடுகளுக்கு 95 பில்லியன் டொலர்கள் பாதுகாப்பு உதவி வழங்கும் தீர்மானத்தை அமெரிக்க பிரதிநிதிகள் சபை கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி நிறைவேற்றியது. அதில் 26 பில்லியன் டொலர்கள் இஸ்ரேலுக்கான உதவியாகும். அவற்றில் தொகை நிதி இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்யவும் பலப்படுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கு அமெரிக்க ஜனாதிபதியும் அங்கீகாரம் அளித்துள்ளார்.

இருப்பினும் தற்போது அமெரிக்க பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக பிரான்ஸ் நாட்டின் சோர்போன், இத்தாலி நாட்டின் சபின்ஸா, பிரித்தானியாவின் லீட்ஸ், வேர்விக், லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி, அவுஸ்திரேலியாவின் மெல்போன், சிட்னி, கனடாவின் மெக்கில், கொங்கோர்டியா பல்கலைக்கழகங்களிலும் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

மாணவர்களின் வெகுஜனப் போராட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸாரையும் அதிகாரத்தையும் அமெரிக்க ஆட்சியாளர்கள் பயன்படுத்தியமைக்கு அமெரிக்காவில் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. அத்தோடு உலகின் பல நாடுகளும் இதனைக் கண்டித்து இருக்கின்றன. இதேவேளை சில பல்கலைக்கழகங்களில் பலஸ்தீன் மற்றும் இஸ்ரேல் ஆதரவு மாணவர்கள் குழுக்களுக்கு இடையில் கடும் வாய்த்தர்க்கங்களும் கூட ஏற்பட்டுள்ளன.

இந்தச் சூழலில் தான் அமெரிக்காவின் பிர்அவ்ன் பல்கலைக்கழக நிர்வாகம், காஸா போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கும் மாணவர்களின் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்துள்ளதோடு, இஸ்ரேலுடனான தொடர்புகளை விலக்கிக் கொள்ளவும் முன்வந்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் ஏப்ரல் 30 முதல் போராட்டத்தை நிறுத்தி கூடாரங்களை அகற்றவும் முன்வந்துள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் ஏனைய பல்கலைக்கழகங்களில் மாணவர் வெகுஜனப் போராட்டம் தொடர்வதை சர்வதேச ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.



**மர்லின் மரிக்கார்...**





# ஐந்து வருடங்களின் பின்னர் களைகட்டிய மேதின விழா!

**2024 ஆம் ஆண்டு இலங்கையைப் பொறுத்தவரையில் தேர்தல் வருடம் என்பது உறுதியாகியிருக்கும் நிலையில், ஐந்து வருடங்களின் பின்னர் மேதினக் கூட்டங்களுக்கு அரசியல் கட்சிகள் முக்கியத்துவம் கொடுத்திருந்தன.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், அதன் பின்னர் கொவிட் தொற்றுநோய், அதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடி எனப் பல்வேறு காரணங்களால் இலங்கையில் களையிழந்து போயிருந்த மேதினக் கூட்டங்கள் ஐந்து வருடங்களின் பின்னர் மக்களின் அதிக பங்கேற்புடன் களைகட்டியிருந்தன.

தேர்தலுக்கான தயார்படுத்தல்களை ஏற்கனவே ஆரம்பித்திருந்த அரசியல் கட்சிகள் மக்கள் தம்முடன் இருக்கின்றனர் என்பதைக் காண்பிக்கும் வகையில் அதிக மக்கள் கூட்டத்தைச் சேர்ப்பதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தன.

உழைப்பாளர்களுக்கான மேதினம் உலகம் முழுவதிலும் அனுஷ்டிக்கப்பட்ட போதும், இலங்கையில் நடைபெற்ற மேதினக் கூட்டங்களில் தொழிலாளர்களின் உரிமைகளை விட அதிகம் அரசியல் பேசப்பட்டதா என்ற கேள்வியே காணப்படுகின்றது. உழைப்பாளர் தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் பல தசாப்தங்களாக நிறைவேற்றப்படவில்லை என்பதே உண்மை. இவ்வாறான பின்னணியில் தேர்தல் நெருக்கும் காலம் என்பதால் இம்முறை மேதினக் கூட்டங்கள் அரசியல் பிரசாரக் கூட்டங்கள் போன்று மாறியிருந்ததையும் காணமுடிந்தது.

அடுத்தடுத்து நடைபெறக் கூடிய தேர்தல்களை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு அரசியல் கட்சியும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தமது மேதினக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தன. அதிலும் கொழும்பு மாவட்டத்திலேயே பிரதான கட்சிகள் தமது மேதினக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான மேனதிக் கூட்டம் மாளிகாவத்தையிலும், ஐக்கிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டம் கொழும்பு புறக்கோட்டையிலும், பொதுஜன பெரமுனவின் மேதினக் கூட்டம் பொரளையிலும், தேசிய மக்கள் சக்தியின் பிரதான கூட்டங்கள் மாத்தறை மற்றும் கொழும்பு விகாரமாதேவி பூங்காவிற்கு அருகிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையேற்றிருந்ததுடன், கடந்த தேர்தல்களில் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்திருந்த அக்கட்சியின் கூட்டத்துக்கு கணிசமான கட்சி ஆதரவாளர்கள் பங்கேற்றிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

## தேர்தலை இலக்கு வைத்துள்ள அரசியல் கட்சிகள்!

நாட்டை சவாலான சூழ்நிலையிலிருந்து மீட்டெடுத்துக் கொண்டமையை இங்கு மீண்டும் நினைவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை வெற்றியடையச் செய்து நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாக்க அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள முன்வருமாறு ஐக்கிய மக்கள் சக்தி,ஜே.வி.பி உள்ளிட்ட அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.









தன்னை சர்வாதிகாரி என சிலர் விமர்சிக்கின்றபோதும் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் மேதினக் கூட்டங்களை நடத்துவதற்கான சூழலைத் தன்னால் ஏற்படுத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்த முடிந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

'மிகவும் சிரமப்பட்டே இன்றைய நிலைக்கு வந்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தினால் அந்த பாதுகாப்பு கிடைத்துள்ளது. இந்த நிலைமையை பாதுகாத்து முன்னேறிச் செல்வதா? அல்லது நாட்டை 2022 இல் இருந்த நிலைக்கு கொண்டுச் செல்வதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட கட்சிகளும் இத்திட்டத்திற்கு எதிராக செயற்படக் கூடாதென கேட்டுக்கொள்கிறேன்.

வேலைத்திட்டத்திற்கு இடையூறு செய்யவும் வேண்டாம். இந்த நிலையைப் பாதுகாக்க மக்களைப் பற்றிச் சிந்தித்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன். நாம் அனைவரும் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும்' என ஜனாதிபதி ஐ.தே.க மேதின மேடையில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேடையில் உரையாற்றிய ஏனையவர்கள் தமது கட்சியின் எதிர்கால அரசாங்கம் குறித்த கருத்துக்களை முன்வைத்திருந்தனர். அதேபோல, பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது கட்சியின் மேதின மேடையில், "ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆசீர்வாதம் பெற்ற வேட்பாளர் வெற்றியீட்டுவார்" என்றும், எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதற்குத் தமது கட்சியின் ஆதரவு முக்கியமானது என்றும் கூறினார்.

தமது வேட்பாளர் யார் என்பது சரியான நேரத்தில் அறிவிக்கப்படும் என்றும் அதுவரை ஏனையவர்கள் ஜனாதிபதியாகக் கனவுகாண முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவைப் பொறுத்தவரையில் இம்முறை மேதினக் கூட்டம் முக்கியமானது என்றே கூற வேண்டும். கடந்த காலத்தில் அவர்களின் கட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்பட்ட விமர்சனங்கள் மற்றும் கட்சியின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் தமது பலத்தை நிரூபிக்க வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு ஏற்பட்டது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் தமது பலத்தை நிரூபிப்பதற்காக பொரளை கம்பல் மைதானத்தை நிரப்பும் அளவுக்கு ஆதரவாளர்களை அழைத்து வந்திருந்தனர். எதிர்காலத்தில் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கக் கூடிய தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு இந்த மேடை முக்கியமானதாக இருந்தது.

மறுபக்கத்தில், பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகக் கூடும் என எதிர்பார்க்கப்படும் பிரபல வர்த்தகரும், பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேரா மேடையின் முன்வரிசை ஆசனத்தில் பசில் ராஜபக்ஷவுக்கு அருகில் அமர்ந்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. இதன் மூலம் அக்கட்சி மறைமுகமான செய்தியொன்றை வெளியிட்டிருப்பதாகவும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது இவ்விதமிருக்க, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கொழும்பு புறக்கோட்டையில் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், எதிர்காலத்தில் தாம் அமைக்கும் அரசாங்கத்தில் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பற்றியே அதிகம் பேசியிருந்தார். அடுத்த தேர்தலில் தமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்து உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நெருக்கடிக்கு முன்னர் 10 முறை பிரதமர் பதவியை ஏற்குமாறு கூறப்பட்டதாகவும், 2018 அரசியலமைப்பு நெருக்கடிக்குப் பிறகு தனக்கு 61 முறை பிரதமர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். எவ்வாறாயினும், நாட்டை வழிநடத்துவதற்கு குறுக்குவழிகளை மேற்கொள்ள தாம் தயாராக இல்லை என்றும், விரைவில் தமது அரசாங்கம் அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து புதிய விசாரணை, புத்திசாலி விவசாயிகள் மற்றும் மீனவர்களை உருவாக்குதல், முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிலிக்கன் வேலி வகை ஐ.டி மண்டலங்களை உருவாக்குதல் போன்ற உறுதிமொழிகளும் இங்கு அவரால் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டன. மாத்தறை மற்றும் கொழும்பில் நடைபெற்ற இரண்டு மேதினக் கூட்டங்களிலும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்களை அநுரகுமார சாடியிருந்தார். விவாதத்துக்கு வருமாறு தொடர்ச்சியாக அழைத்துக் கொண்டிருக்கின்றபோதும், விவாதத்துக்கான திகதியை வழங்கிய பின்னர் வரவில்லை.

விரைவில் பொதுவிவாதத்தை நடத்தி அவர்களின் பிரச்சினையை முடித்து வைத்துவிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். நாட்டில் தேவையான மாற்றத்தைக் கொண்டுவர தமது கட்சி தயாராக இருப்பதாகவும், தம்மைத் தெரிவுசெய்வதற்கு மக்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்ட அநுரகுமார திஸநாயக்க, நாட்டில் பல தசாப்தங்களாக காணப்படும் அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டிய தருணம் இதுவென்றும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற பிரதான கட்சிகளின் மேதினக் கூட்டங்களில் எதிர்கால அரசியல் பற்றியும், தேர்தலின் பின்னர் ஆட்சி அமைப்பது யார் என்பது போன்ற ஏட்டிக்குப் போட்டியான கருத்துக்களே முன்வைக்கப்பட்டன.

இவற்றின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது அடுத்த தேர்தல்களுக்கான கயிறுழுத்தல் அதாவது மக்கள் தம்பக்கம் இருக்கின்றனரா என்பதற்கான பரிசோதனை முயற்சி போலவே தெரிகின்றது. மக்கள் பற்றியோ அல்லது தொழிலாளர் வர்க்கத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான விடயங்கள் பற்றியோ எவ்வித கருத்துக்களோ அல்லது பேச்சுக்களோ இடம்பெறவில்லை.

அதேநேரம், இரண்டு அணிகளாகப் பிரிந்திருக்கும் சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் கம்பஹாவில் நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற இந்த மேதினக் கூட்டத்தில் அவர்கள் தரப்பினரால் பதில் தலைவராக நியமிக்கப்பட்ட அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் கலந்து கொண்டிருந்தார். எனினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தரப்பிலான மற்றைய அணியினர் எவரும் இதில் கலந்து கொள்ளவில்லையென்பதுடன், அவர்கள் தரப்பில் தனியான மேதினக் கூட்டம் எதுவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவுமில்லை.

மலையகக் கட்சிகளின் மேதினக் கூட்டங்களிலும் அதிக மக்களைக் காணக்கூடியதாகவிருந்தது. கொட்டகலவில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினக் கூட்டத்தில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார்.

அதேநேரம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் மேதினக் கூட்டம் தலவாக்கலையில் நடைபெற்றதுடன் இதில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டார். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபா கிடைக்கும் என ஜனாதிபதி இங்கு உறுதிமொழி வழங்கினார். சம்பள அதிகரிப்புத் தொடர்பில் கம்பனிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காதபோதும், ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். இதற்கான வர்த்தமானி வெளியிடப்படவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுபோன்று, நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற மேதினக் கூட்டங்களை கட்சிகள் தமது பலத்தை நிரூபிப்பதற்கும், தாம் யாருக்கு ஆதரவாக இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்திக் கொண்டன.

**தொழிலாளர் நலன்களை விட அரசியல் விவகாரங்களே இம்முறை மேதினக் கூட்டங்களில் பிரதான பேசுபொருள்!**

### வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட 1700 ரூபா நாளாந்த சம்பளம் மலையக வரலாற்று சாதனை!

INTERNATIONAL DRIVING LICENCE

Obtain Your International Driving Licence to Drive Overseas.

AA CEYLON

Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk

## இலங்கை வங்கி

நாடளாவிய வலுவான கிளை வலையமைப்பையும் இலண்டனில் உள்ள துணை நிறுவனம் உட்பட பரந்தகன்ற வெளிநாட்டு வங்கி வலையமைப்பையும் கொண்டுள்ளதும் உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியாகவும் இலங்கையின் 1ம் தர வங்கியாகவும் தரப்படுத்தப்பட்டுள்ள இலங்கை வங்கி பின்வரும் பதவிக்கு பொருத்தமான தகைமைகளும் அனுபவமும் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

### (மின்) தொழில் நுட்பவியலாளர்

### தகுதி பிரமாணங்கள்

➢ **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்**
➢ **தகைமைகளும் அனுபவமும்**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட தரம் 8 பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனமொன்றில் மின்னியல் மற்றும் வளிச்சீராக்கி தொடர்பான ஆறு (06) மாத முழுநேர அல்லது ஒரு (01) வருட பகுதிநேர கற்கைநெறியை பூர்த்தி செய்திருத்தல்

**மற்றும்**

கட்டடங்களுக்கு மின் வடங்கள் (Electrical Wiring) அமைக்கும் பணியில் குறைந்தது 02 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

➢ **ஏனைய பண்புகள்**
- மிகக்குறைவான மேற்பார்வையின்கீழ் வேலை செய்யக்கூடிய ஆற்றல்
- குழுவாக இணைந்து செயற்படுமாற்றல்
- ஊக்கமும் பெறுபேறுகளை மையமாகக்கொண்டு செயற்படுமாற்றலும்

➢ **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 40 வருடங்கள் அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்

### விதிகளும் நிபந்தனைகளும்

- இப்பதவி வழமையான வங்கிச் சேவைக்கு புறம்பானதெனினும் (மூடிய சேவை) வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- விண்ணப்பதாரர் தகுதிகாண் காலத்தின் தேவைப்பாடுகளை வங்கி திருப்தியுறும் வகையிற் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அவர் தகுதியானவர் எனக் கருதப்பட்டால் ஈராண்டு (02) கால தகுதிகாண் காலத்திற்குப் பின்னர் தொழில்நுட்பவியலாளர் - தரம் I பதவியில் வங்கியின் நிரந்தர ஆளணிக்குள் ஈர்க்கப்படுவார்.
- இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம்:

ரூ. 36,565/- - ரூ. 41,765/-

ரூ. 260/- x 20

(அனைத்தும் உள்ளடங்கலாக மாறும் வாழ்க்கைச்செலவுப் படியுடன் மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ ரூ.120,000/- ஆகும்)

- வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல்
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றக்கூடியவராக இருத்தல்

### தெரிவு நடைமுறை

மேற்கூறப்பட்ட தகுதிப் பிரமாணங்களின் அடிப்படையில் பட்டியற்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வு ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

### விண்ணப்ப நடைமுறை

உங்களது சுயவிபரக் கோவையினை **www.boc.lk** என்ற எங்களது இணையத்தள முகவரியூடாக (Careers என்ற பகுதியின் கீழ்) தரவிறக்கம் செய்யக்கூடிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக பூர்த்தி செய்து உறவுமுறை சாராத இரண்டு நபர்களின் தொடர்பு விபரங்களுடன் தேவையான அனைத்துச் சான்றிதழ்களினதும் பிரதிகளுடனும் மற்றும் அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளுடனும் இணைத்து **18.05.2024ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

**விண்ணப்பத்தின் முடிவுத் திகதியில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தொடர்புடைய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளைக் கொண்டிராத அல்லது உண்மைக்குப் புறம்பாக தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.**

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**மனிதவளப் பிரிவு**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**இலங்கை வங்கி சதுக்கம்**
**இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.**

- தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
- பட்டியற்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பை பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு
- வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# IMF உடன்படிக்கை: இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

## IMF உடன்படிக்கை வெற்றிபெறுவதற்கு எம்மோடு இணைந்து செயற்படுங்கள்



### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை வெற்றிகரமாக முன்னெடுத்து நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மையை பாதுகாப்பதற்கு அரசாங்கத்துடன் உடன்படிக்கை ஒன்றுக்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தி, ஜேவிபி உள்ளிட்ட அரசியல் கட்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டத்தின் போது அழைப்பு விடுத்தார்.

வழமையான அரசியலில் ஈடுபட்டு சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை எதிர்த்து, அதனைச் சீர்குலைக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, நாடு 2022இல் இருந்த நிலைமைக்குத் திரும்ப இடமளிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தை நாம் துணிச்சலுடன் முன்னோக்கிக் கொண்டு வந்ததாலேயே கண்டி பெரஹெராவை கண்டுகளிக்கவும், நல்லூர் திருவிழா மற்றும் தெவிநுவர பெரஹரா போன்றவற்றை பார்வையிடச் செல்வதற்கும் உகந்த சூழல் உருவானது. இதற்காக உதவிய அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மொட்டுக் கட்சியின் ஒரு பகுதியினர் ஒத்துழைப்பு வழங்கினர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பினரும் உதவ முன்வந்தனர். டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட பல தரப்பினர் எங்களுடன் இணைந்து செயற்படுகின்றனர். கட்சி சின்னமொன்று இல்லை. மொட்டுக் கட்சியின் ஒரு குழு எம்மோடு இணைந்தது. மற்றுமொரு குழு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டது. மிகவும் சிரமப்பட்டு இந்த நிலைக்கு வந்துள்ளோம். எமது தீர்மானங்கள் வெற்றியளிக்கும் என்று எவரும் நினைக்கவில்லை. மேலும், குற்றச் செயல்களுக்கு எதிராக கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. கஷ்டப்பட்டாவது அந்த தீர்மானங்களை எடுத்தோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டத்தின் போது புதிதாக பணத்தை அச்சிட முடியாது என்று அறிவிக்கப்பட்டது. மேலும் அரச வங்கிகளில் கடன் வாங்கவும் முடியாதென அறிவிக்கப்பட்டது. அரசு வருமானம் ஈட்ட வேண்டும் என்றும் தெரிவித்தனர். ரூபாயை பலப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

## சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றுவோம்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச


ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் மக்கள் விரும்பும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடனான திருத்தப்பட்ட புதிய உடன்படிக்கையை மேற்கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மே தின கூட்டத்தில் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ள அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றுவது அவசியம் எனத் தெரிவித்துள்ளார். நாட்டு மக்களை வாழ வைக்கும், நாட்டை சிறந்த பாதையில் முன்னெடுத்து செல்வதற்கு பொருத்தமான மக்கள் விரும்பும் திருத்தங்களை உள்ளடக்கிய உடன்படிக்கையை தயாரிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் இந்த கருத்து தொடர்பில் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் மாற்றுக் கருத்துக்கள் வெளிப்படுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தோடு மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையை ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனக்கு வேண்டியவாறு மாற்ற முடியுமா என்பதே அவர்களின் கேள்வியாகியுள்ளது.

அவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை மாற்றுவதானால் சர்வதேச நாடுகளின் நம்பிக்கையில் பாதிப்பு ஏற்படும் என்பதே அது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

## IMF நிபந்தனைகளை மாற்றினால் சர்வதேச நம்பிக்கை சிதைந்து விடும்



### கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானப் பிரிவின் முன்னாள் பேராசிரியர் விஜிதபுரே விமலரத்ன தேரர்

நாடு சர்வதேச உடன்படிக்கைகளுக்கு உட்பட்டதன் பின்னர் புதிய அரசாங்கம் நாட்டில் ஆட்சிக்கு வந்ததும் அதனை மாற்ற முடியாது. அவ்வாறு மாற்றம் செய்ய முற்பட்டால் சர்வதேசத்தின் நம்பிக்கை சிதைவடையும்.

இது சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் மட்டுமல்ல. எந்த நாடுகளுடன் அல்லது அமைப்புகளுடனும் நாடு மேற்கொண்டுள்ள உடன்படிக்கைகளுக்கும் பொருந்தும்.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் போது கொழும்பு துறைமுக நகரத்தை மாற்றப் போவதாக தெரிவிக்கப்பட்டது. அது சுமார் ஒரு வருட காலம் சிக்கலாக காணப்பட்டதுடன் அதனால் நாட்டிற்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. எனினும் வழமை போன்றே அதனை முன்னெடுக்க நேர்ந்தது. ஏனென்றால் அது தொடர்பில் மேற்கொண்ட உடன்படிக்கையே அதற்குக் காரணம்.

## IMF நிபந்தனைகளை மாற்றினால் நாடு இரு வாரங்களில் வங்குரோத்தடையும்



### போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன

2022 ஆம் ஆண்டு நாடு பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. எரிபொருள், சமையல் எரிவாயு இன்றி நாடு எதிர்கொண்ட நெருக்கடியிலிருந்தும் தேசிய அழிவிலிருந்தும் அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் உடன்படிக்கைக்கு சென்றது.

அதன் மூலம் எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரை இலங்கையானது வழமையான பொருளாதார நிலையை முன்னெடுக்க முடியும் அதற்கு ஏதுவான திட்டத்துடன் அந்த கடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் 2027ஆம் ஆண்டிலும் அந்த வருடத்தின் வெளிநாட்டு நிதி நிலுவை 3911 அமெரிக்கன் டொலர் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உடன்படிக்கையின் கீழ் 329 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்கு கிடைக்கவுள்ளதுடன் 2027ஆம் ஆண்டு வரவு செலவு திட்டம் தயாரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் 600 அமெரிக்க மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளது. அந்த வகையில் உலக வங்கி 600 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்குவதற்கு இணக்கப்பாடு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க கடன் நிவாரணமாக 1482 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## IMF நிபந்தனைகளுக்கு நாம் உடன்பட்டாயிற்று



### கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞான கல்வி பிரிவின் விரிவுரையாளர் சசிதாங்கனி வீரவன்ச

நாடு என்ற வகையில் நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் 16 தடவைகள் சென்றுள்ளோம். 1965ஆம் ஆண்டு முதல் இதுவரை 16 முறை அதன் கடன் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டுள்ளோம். நாம் இந்த நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்காவிட்டால் எமது நாடு தொடர்பான நற்பெயருக்கு களங்கம் ஏற்படலாம் என்ற சந்தேகம் காணப்படுகிறது. அந்த வகையில் 17ஆவது தடவையாக நாம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உடன்பட்டுள்ளோம். இது தனிப்பட்ட ஒப்பந்தம் அல்ல.

அரசாங்கமானது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை கவனத்திற் கொண்டே அந்த உடன்படிக்கைக்கு சென்றுள்ளது.

## பிரச்சினையின் பாரதூரத்தை அறிந்துகொள்ளாத ஒருவரிடம் நாட்டை ஒப்படைக்க முடியுமா?



### பேராதனை பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் பேராசிரியர் மில்டன் ராஜரத்ன.

பொறுப்பற்ற நிலையில் பேசி ஆக்கபூர்வமற்றவற்றை கட்சியில் தெரிவிக்க முடியும்.

அவ்வாறானவர்கள் தாம் நினைத்ததை எல்லாம் கூறிக் கொண்டிருக்க முடியும்.

எனினும் அரசியலில் ஈடுபட்டுள்ள ஆளும் கட்சியோ அல்லது எதிர்க் கட்சியோ அரசாங்க நிறுவனங்கள் தொடர்பில் பேசும் போது பொறுப்பற்ற விதத்தில் கருத்துக்களை வெளியிடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் அரசாங்கத்தின் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதை விட அரசாங்கத்தை பாதுகாக்க வேண்டும் என்ற முறைமை தொடர்பில் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

## IMF உடன் வேறு உடன்படிக்கைக்கு தற்போது இடம் கிடையாது



### பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வசந்த அதுகோரால

சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருக்கும் எதனையும் மாற்ற வேண்டிய அவசியம் கிடையாது. சில விடயங்களை மட்டும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

எனினும் சில அரசியல் கட்சிகளுக்கு அது தெரிவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் என்ன கூறப்பட்டுள்ளது என்பதே அவர்களுக்குத் தெரியாது. நாட்டில் என்ன இடம்பெறுள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

சர்வதேச நாணய நிதியும் நாட்டின் வரி வருமானத்தை அதிகரிப்பது அவசியம் என கூறுகிறது. அவ்வாறானால் அரசாங்கம் வரி அதிகரிப்பையன்றி வரி செலுத்த தவறுவோரை வரி அறவீட்டு வலையமைப்பில் இணைத்துக் கொள்ள வேண்டும் .

## நாடு பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடைந்துள்ளதை நிரூபிப்பது அவசியம்



### களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞான பிரிவின் பேராசிரியர் நவரத்ன பண்டா

உண்மையில் சர்வதேச நாணய நிதியம் என்பது, நாம் நிதிப் பங்களிப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய இடம். அந்த நிதியமானது நிதியத்தின் உறுப்பினர்களான நாடுகளுக்கு கடன் ஒத்துழைப்பை வழங்கும். நாமும் அங்கத்துவ நாடு என்ற வகையில் அந்த நிதியத்திற்கு பங்களிப்பு செய்துள்ளோம்.

அந்த நிதியத்திற்கு அமெரிக்காவே அதிக நிதியை வழங்கியுள்ளது. அவர்களுக்கு அதனால் அதிகமான கடனை அந்த நிதியத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். நாமும் அதற்கு நிதி பங்களிப்பு செய்துள்ளதால் அதன் அடிப்படையிலேயே எமக்கு கடன் பெற்றுக் கொள்ள முடிகிறது.

1944ஆம் ஆண்டு உடன்படிக்கைக்கு இணங்கவே சர்வதேச நாணய நிதியம் உருவாக்கப்பட்டது.

சில நாடுகளுக்கு தற்காலிக பிரச்சினைகள் ஏற்படுமாயின் அந்த நாடுகளுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவது சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகோள் விடுப்பதற்கு எமக்கு உரிமையுள்ளது.

அவ்வாறு கடனை பெற்றுக் கொள்ளும் போது நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது நாட்டின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளலாம் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுப்பர். எனினும் வரி அதிகரிப்பு போன்ற நடவடிக்கையை அரசாங்கமே மேற்கொள்கிறது.

## நிபந்தனைகளை மாற்றி விட்டு பாதிப்புகளை சுமப்பது யார்?



### கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞான கல்விப் பிரிவின் பேராசிரியர் சிறிமல் விஜேரத்ன

தேர்தலை கோரும் ஒருவருக்கு எதையும் பேச முடியும். எனினும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால் உடன்படிக்கையை செயற்படுத்த வேண்டும்.

அந்த வகையில் நிபந்தனைகளை மாற்ற முடியுமா மாற்ற முடியாதா என்பதை தீர்மானிப்பது மத்தியஸ்த தரப்பினரே.

நிதியமைச்சும் மத்திய வங்கியுமே சர்வதேச நாணய நிதியத்துடனான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அத்துடன் நாம் மேற்கொள்ள வேண்டிய விடயங்களும் உள்ளன அந்த வேலைத் திட்டத்தை நாம் விரைவாக முன்னெடுப்பது அவசியம். நிபந்தனைகளை மாற்றுவதன் மூலம் அதனால் ஏற்படும் பாதிப்புகளை எவ்வாறு நிவர்த்திக்க முடியும்? அவ்வாறு கூறும் தரப்பினரிடம் நாம் அது தொடர்பில் கேள்வி எழுப்பவேண்டும்.

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்


சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

**வர்த்தகம்**


202 வர்த்தக வழங்கல்கள் மற்றும் அறிவிப்புகள்

உங்களுக்கு சொந்தமான தங்கம் கூடிய விலைக்கு விற்பனை செய்வதற்கு மாற்று தங்கம், வெள்ளி பொருட்கள், வைர வகைகள் தங்க மாற்றங்களுக்கு உங்களது பாவிக்கப்பட்ட அல்லது பழைய தங்க நகைகளுக்கு புதிய தங்கம், தங்கம் புதுப்பிக்க தொடர்புகள் 0711625053 029392



209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

அத்துருகிரிய நகர மத்தியில் பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்துள்ள வியாபாரஸ்தலம் 4000 சதுரஅடி எந்த வியாபாரத்திற்கும் பொருத்தமானது. வாகன நிறுத்துமிடம் குத்தகைக்கு உண்டு. தொடர்புகள் 0777004453029530



212 அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு

அச்சடிக்கும் இயந்திரம் விற்பனைக்கு. Hiedelberg Kord Long Box அச்சடிக்கும் இயந்திரம்/ soco box automatic number ing&perforating machin e & plate maker உடன் விற்பனைக்கு, நல்ல நிலைமையில் அதியுயர் விலைக்கு. 0112825694/ 0773692004. 028852

adz.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling

**வேலைவாய்ப்பு**



308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

அனுபவமுள்ள மற்றும் உற்சாகமான விற்பனையாளர்கள் தேவை. இது புறக்கோட்டையில் உள்ள விவசாய விற்பனைக் கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டது. சிங்கள, ஆங்கிலம், தமிழ் மொழியில் சிறந்த மொழி ஆற்றல் அவசியம் சிறந்த விற்பனை செயற்பாட்டிற்கு சிறந்த சம்பளத்திற்கு உத்தரவாதம். சுயதரவுகளை அனுப்புங்கள் hkimports185@gmail.com, Whatsapp - 0756625235 029276



312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

எமது தொழிற்சாலைக்கு மின்சாரம் அல்லது வெல்டிங் பற்றிய அறிவுடைய 18 35 வயதிற்கிடைப்பட்ட ஆண்கள் சுப்பவைசர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். மாதாந்த சம்பளம் ரூ 45000/ மேலதிக நேர வேலை ஏனைய கொடுப்பனவுகளுடன் ரூ. 55000/ இற்கு மேற்படும். பகல் உணவுடன் தங்குமிடம் இலவசம். முகாமையாளர் ஐஸ் கியூப்ஸ் தனியார் கம்பனி, 9, புதிய வீதி. ஹுனுப்பிட்டிய வத்தளை 0776819009 029291






320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

பன்னிப்பிட்டிய உணவகத்திற்கு கொத்து, ரைஸ் & கறி வேலைக்கு பாஸ்மார் தேவை. அழையுங்கள் 071 2897194 029479

மாத்தறை முதல்தர ஹோட்டலுக்கு இந்திய உணவு/ சைனீஸ் உணவு தயாரிக்க கூடிய மூவர் மற்றும் ரோல்ஸ் தயாரிக்கக்கூடிய பாஸ்மார் தேவை. கூடுதல் சம்பளத்துடன் தங்குமிட வசதிகள் தொடர்புகள் 076 8289061 029265



323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

தனியார் வைத்திய சாலைக்கு சுத்திகரிப்பு ஊழியர்கள் தேவை. தங்குமிடம் மற்றும் உணவுடன். 0772519551, 0775731669 029609

மேல் மாகாண அத்துருகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள கருங்கல் ஆலையில் சேவைக்கு (சிங்கள மொழி கதைக்கக் கூடிய) தொழிலாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தங்குமிட வசதிகள்.அழையுங்கள் 0718736241 029600



325 தொழில்துறை பொது

பாதுகாப்பு அதிகாரி பதவிக்காக இரத்தினபுரிக்கு அருகில் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியொருவர் தேவை. சமன் இன்டர்நெஷனல், இல.18, பொது விற்பனை நிலையம், இரத்தினபுரி 071 4916467 029654

பேருவளை பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பாமஸி ஒன்றுக்கு அனுமதிப் பத்திரமுள்ள ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு 0772482988. 028408

**காணி/தோட்டம்**

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

தெஹிவளை, சுதர்மா மாவத்தை 5 பேர்ச் வெற்றுக்காணி உடனடியாக விற்பதற்கு உள்ளது. தரகர் தேவையில்லை. 0779614559. 029640

617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கந்தான கனேமுல்ல வீதியில் 1ம் மைல்கல் அருகில் பிரதான வீதிக்கு முகப்பாக 18 பேர்ச் காணி உடன் விற்பனைக்கு.076 3844378 029301

ஹெந்தளை வத்தளை சாந்தி வீதியில் 35 பேர்ச் விற்பனைக்கு. 10 பேர்ச் பகுதிகளாகவும் வழங்கப்படும். 071 0894658 028962

631 வீடு சொத்து மாத்தறை மாவட்டம் விற்பனைக்கு

மாத்தறை இசதீன் நகர் சந்திக்கு அருகில் நவீன இருமாடி வீடு, அறைகள் (6). பேர்ச் (22) சகல வசதிகளும் உண்டு. அதிவேக பிரவேச வீதிக்கு அருகில். கௌரவமான பாதுகாப்பு வலயமாகும். விற்பனைக்கு தொடர்புகள் 0718185426 029542

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100

இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377 (லேக்ஹவுஸ் கிளை)

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

---

**PALLIYAGURU GLASS ENGINEERING**

Our Service
- Installation Tempered Glass
- Shower Cubicle
- Shop Front Partition
- Door Repair
- Ceiling & Wall Cladding
- Fabrication of Aluminum Curtain Walls
- Installation Mirror and More Services

TEMPERED GLASS & ALUMINUM EXPERT

070 406 7848 / 076 665 2403

---

**මානසික පීඩනය, අධික කේන්තිය, අනවශ්‍ය සැක, අමතක වීම, ලිංගික ගැටළු, දිවි හානි තැත්කම්, සබකෝලය, ඇබ්බැහි වීම්.**

(මධ්‍යසාර, මත් ද්‍රව්‍ය, දුම්වැටි, කැසිනෝ හා විවිධ නොවිධිමත් ක්‍රියා)

නිවසේ පාලනය කල නොහැකි රෝගීන් සඳහා

ජාතික, කළුබෝවිල හා අංගොඩ රෝහල් අනුයුක්ත විශේෂඥ මානසික වෛද්‍යවරුන් හරහා ප්‍රතිකාර

NEPTUNE HEALTH

නො.186, (2වන මහල) පාක් පාර, කොළඹ 05.
දු.ක: 011 - 2055 644
www.neptunehealth.lk (පෞද්ගලික වෛද්‍ය මධ්‍යස්ථානයකි)

---

**අමානෝ වැහිපීලි සහ සෙවිලි**

Zinc Aluminium Sheet

0777 394 679 | 070 663 33 88

---

**VICTORIAN GUEST Bandarawela**

victorianbungalow.lk

2km Away from Railway Station and BANDARAWELA Town

බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...

Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available

077 3 711 196 | 070 2 536 896

---

**VISA REFUSALS - APPEALS & RE- APPLICATIONS FRESH VISA APPLICATIONS**

STUDENT VISA to Australia, UK, Europe, & Canada.
(all consultancies are free of charge)

*The consultant was an employee of Sam & Co. Solicitors UK with 25 years experience in immigration law related issues*

PR VISA CONSULTANCIES - Sri lanka
PARTNER OF IPC LANKA - COLOMBO 05
No. 53, 01 Floor, Sanasa Square, Court Road, Gampaha.
077 305 1518/ 0715 857 282/0777 396 415
00 447 901 113 824
prconsulting.services@yahoo.com

---

**DAMBULLA**
**COMMERCIAL LAND FOR SALE**

- Total 436 perches Facing Athabandiwewa Road (Richard Peiris Road)
- Easy Access for 40 feet Containers
- Suitable for a Yard / Stores / Factory / Hotel
- or Any Other Commercial Project

Rs. 125,000/- per perch

Contact - 0773 063 868

---

Upto 25% Discount

At Ambalama during May 2024 discounts upto 25% for AC & Non AC rooms, family cottages, Family rooms.

Sunday to Wednesday.
** Only for Prior Bookings **

*Conditions apply

075 966 0 178 / 075 966 0 526 / 075 966 0 519 / 036 493 21 44
ambalama.lk | AmbalamaHotel | contact@ambalama.lk

---

**கட்டிட வரைஞரினால் வடிவமைக்கப்பட்ட டைல் பதித்த வீடு**
**சிநேகபூர்வமான அயலவர்கள் - தொழில் நிபுணர்கள்**

- காணி - 14.2 பேர்ச்
- இடவசதியுடனான அமரும் மற்றும் இரு உணவருந்தும் பிரதேசங்கள்
- 04 அறைகள் (A/C உடனான மாஸ்டர் படுக்கையறை
- 02 குளியலறைகள் (சுடுநீர் முழுமையாக சாதனங்களுடனான)
- பாரிய தொலைக்காட்சி வைக்கப்படும் பிரதேசம்
- வேலைக்காரருக்கான இணைக்கப்பட்ட குளியலறைகளுடனான விடுதி
- சாரதிக்கான விடுதி
- இடவசதியுள்ள rooftop பிரதேசம்
- பாரிய பல்கனி பிரதேசம்
- தனியான சமையலறையும் பான்ரி கப்போட்கள்
- வாகன நிறுத்துமிடம், கராஜ் பிரதேசம்
- Remote operated Roller gate with wicket gate
- சீரமைக்கப்பட்ட தோட்டம்

அனைத்து ஆவணங்களும் தெளிவானவை
(உறுதி விபரங்கள் மற்றும் வங்கி வசதிகள் உண்டு)

**வீதிகள் மற்றும் ஏனைய அணுகுவழிகள்**

வீட்டிற்கான 20 அடி அகலமுள்ள அணுகுவழி
இலகுவில் வீடு செல்லக்கூடிய பிரதான வீதிகள்
நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு 5 நிமிட பயணம்
அத்துருகிரிய அல்லது கொத்தலாவல
மாலபே பிரதான நகருக்கு 5 நிமிடங்கள்
பஸ் வழிக்கு 250 மீட்டர்
மாலபே நகருக்கு 2.5 கிமீ

டொக்டர் நெவில் பெர்ணாண்டோ வைத்தியசாலை, ஹொரிசொன் சர்வதேச பாடசாலைக்கு, SLIIT வளாகம், அனைத்து வங்கிகள், கீல்ஸ், க்ளோமார்க், ஸ்பார், கார்கில்ஸ் புட் சிட்டி, BodyDoc, OPD கிளிக்னிக்குகள், ரெஸ்டுரண்ட் மற்றும் பல முக்கிய இடங்கள் ஆகக் குறைந்த தூரத்தில் உள்ளவைகளுக்கான அணுகுவழி.

**மாலபேயில் வீடு விற்பனைக்கு**



விலை: 46.5 மில்லியன் ரூபா (பரீட்சித்தலின் பின்னர் விலை தொடர்பாக பேசித் தீர்க்கலாம்)

தொடர்பு - 0777 409 126

---

**ALL TYPES OF BUILDING CONSTRUCTION**

ON HOUSES, HOTELS, FACTORIES, STORES, NEW CONSTRUCTION, RENOVATION, REPAIRING, MAINTENANCE WORK, PAINTING, CARPENTRY, INTERIOR, DESIGN WORK. ELECTRICAL, PLUMBING, ALUMINIUM WORK

Call us on 0771 713 987, 0766 186 487

24 HRS , ISLAND WIDE SERVICE

GOVERNMENT REGISTERED CONTRACTOR (ICTAD 13711)

---

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

**போட்டோ குறும் விளம்பரம்**



கொங்கிறீட் டிரக் மிக்ஷர் மிட்சுபிஷி - FUSO 2.5m³ 1999 மேலதிக டிரம் சகிதம் நல்ல நிலைமையில். தொடர்புகொள்ளவும்: 077 7 915 563 / 071 832 800 9

kua - 01

DON'T TEXT & DRIVE    DON'T TEXT & DRIVE

---

தினகரன் வாரமஞ்சரி

**சிறு விளம்பரங்கள்**

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா *ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

---

We are open 24 hours for your well being

**FLORENCE ELDER CARE HOME / NURSING HOME & HOME NURSING**

A PROFESSIONAL AND GOVERNMENT QUALIFIED NURSING STAFF
(Registered in Sri Lanka Medical Council) &
PRIVATE TRAINED NURSING STAFF (With experience of more than 5 years)
*You'll experience our special health care services*

- Ambulance Service
- Physiotherapy
- Medical Care for 24 hours
- Providing Medical Instruments
- Collecting samples for laboratory testing
- Catheterization and Catheter care
- Wound care (specially for diabetic patients)
- Fluid resuscitation

FLORENCE ELDER CARE HOME & HOME NURSING (PVT) LTD.

JA-ELA: No. 261/1, Old Negombo Rd, Kanuwana, Ja-Ela
BORALESGAMUWA: No. 44/11, 1st Lane, Alexandra Mw, Boralesgamuwa
COLOMBO 05: No. 501/A, Thimbirigasyaya Rd, Colombo 05.
KANDY: No. 303A, Peradeniya Rd, Kandy

E-mail: florencecarehomenursing@gmail.com
Tel: 0718 661 006 / 071 2608070

---

**வீடு விற்பனைக்கு**
**இராஜகிரிய**

- 5 படுக்கையறைகள்
- 5 குளியலறைகள்
- பாரிய தோட்டம்
- 31 பேர்ச்சுக்கள்

ஏனைய வசதிகளுடன்

தொடர்பிற்கு : 0777 28 78 78

---

**SKYPORT GARDENS**

අවුරුදු DISCOUNTS

LAND SALE IN KATUNAYAKE

JUST 1 MINUTE from Katunayake Highway Entrance
JUST 2 MINUTES to the Katunayake Airport

GRAND DISCOUNTS OF UP TO 3 MILLION

Make this Avrudu unforgettable with Skyport Gardens

Offer valid from April 01 TO 30

Terms and conditions apply*

Skyport Gardens By Ark Residencies

HNB

0776 351 231    0743 480 490

---

தினகரன் வாரமஞ்சரி

**திருமண சேவைகள்**

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்

classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347
011 2 429 342

---

**WAREHOUSE FOR RENT / LEASE / SALE**

- ✓ PELIYAGODA
- WATTALA ✓
- ✓ SAPUGASKANDA
- KELANIYA ✓
- ✓ DEMATAGODA
- JA - ELA ✓

**LAND FOR SALE - WATTALA 2 ACRES AND 6 ACRES**

- AMPLE PARKING
- WATER ELECTRICITY, UNLOADING BAY
- TRANSFORMER SECURITY ROOM
- LUNCH ROOM
- WASHROOM
- HIGH BAY LIGHTS
- CONTAINERS CAN BE TAKEN INSIDE THE WAREHOUSE
- CLOSE TO HIGH WAY LAND 80 PERCHES 60 PERCHES 200 PERCHES

17000 SQ FEET | 20000 SQ FEET
68000 SQ FEET | 40000 SQ FEET
30000 SQ FEET | 12000 SQ FEET
5000 SQ FEET

CONTACT : 0712 791 881

---

Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
**Marriage Proposals**
*Decades of Trusted Service*

Pay online and save your precious time
BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch

E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# மேதின பேரணிகளின் வெற்றியாளன் யார்?

ஒரு காலத்தில், மே தின பேரணிகள் மற்றும் கூட்டங்களில் வெளிப்படுத்தப்பட்ட கோஷங்கள் மற்றும் கோபத்தின் வெளிபாடுகள் காரணமாக பொது மக்களுக்கு உத்வேகமடைந்திருக்கிறார்கள். இந்த மே தினத்தில் இரண்டு தெளிவான பிரிவுகள் இருந்தன. ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் தான் அவை. ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என எதிர்க்கட்சியினர் அரசை விமர்சித்து கருத்து தெரிவித்த நிலையில் ஆளுங்கட்சியினர் தாங்கள் செய்த, செய்யப்போகும் பணிகள் குறித்து கருத்து தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டங்களில் கூறப்பட்ட சுலோகங்கள், பங்குபற்றும் குழுக்களின் பல்வேறு செயற்பாடுகள் மற்றும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் மக்களின் எண்ணிக்கை என்பனவற்றின் ஊடாக பொதுமக்களுக்கு உத்வேகம் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்த நேரத்திலும், இடதுசாரி முகாமில் இருந்து மிகவும் கவர்ச்சிகரமான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. ஆனால் கொவிட் தொற்று, பொருளாதார நெருக்கடி, மற்றும் அதைத் தொடர்ந்து வந்த போராட்டம் நாட்டின் செழுமை அனைத்தையும் விழுங்கியது. புத்தாண்டு, கிறிஸ்மஸ், ரமழான், தீபாவளி, வெசாக், பொசன் போன்று நாட்காட்டிகளில் மே தினம் என்பது மற்றொரு நாளாக மாறியது.

ஆனால் சமீபகாலமாக மேற்குறிப்பிட்ட அனைத்து தேசிய கொண்டாட்டங்கள் மற்றும் தேசிய விழாக்களை மக்கள் கொண்டாடுவதைப் போன்று இந்த ஆண்டும் மே தினத்தையும் வெகு சிறப்பாக கொண்டாடுகின்றனர். எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்கு முன்னர் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை நோக்கமாகக் கொண்டிருப்பதால் அனைத்து அரசியல் கட்சிகளும் கூடுமானவரை மே தினத்தை கொண்டாட முன்வந்துள்ளதாக தெரிகிறது.

எனவே, பல ஆண்டுகளுக்குப் பிறகு மே தினத்தை மிகுந்த ஆர்வத்துடன் கொண்டாடும் பணியில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டிருந்தன, மே தினம் நாட்டின் அரசியலை மிகவும் சூடாக உணர வைத்ததாகத் தெரிகிறது.

முன்பு போலவே ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தாங்கள் நடத்திய பேரணிகளில் தங்களது மே தின பேரணிதான் மிகச் சிறந்தது என்று அறிவித்தன. இருப்பினும், எல்லாக் காலத்தையும் போலவே சிறந்த மே தினப் பேரணி எது என்பதை தீர்மானிப்பது கடினமானதாகவே உள்ளது. கூட்டம் நடைபெறும் இடம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வாகனங்களில் கொண்டு வரப்படும் கூட்டத்தைக் கையாள்வதிலும் கட்டுப்படுத்துவதிலும் உள்ள சிரமம் போன்ற காரணங்களால் கூட்டத்துக்கு வருபவர்களின் எண்ணிக்கை குறித்து முடிவெடுக்க முடியாது.

அதே சமயம், ஊடகங்கள் ஒவ்வொரு கூட்டத்தையும் வெவ்வேறு கோணங்களில் பார்க்கும் போது, ஒரு கூட்டத்தின் அளவு பெரும்பாலும் கேமராமேன்கள் பார்க்கும் விதத்தை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. சில பத்திரிக்கையாளர்கள் மற்றும் வீடியோ எடிட்டர்கள் கூட்டத்தை அதிகரித்து காட்ட எடிட்டிங் வித்தைகளை கையாளுகிறார்கள் என்பது இரகசியமானதல்ல.

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டம் கொழும்பு கோட்டை செத்தாம் வீதியில் நடைபெற்றது. போராட்டம் நடந்த இடத்துக்கும், ஜனாதிபதி செயலகம், போராட்டக்காரர்கள் ஆக்கிரமிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகைக்கும் மிக அருகில் செத்தாம் வீதி அமைந்துள்ளது. 2022ஆம் ஆண்டு போராட்டம் நடைபெற்ற காலத்துடன் ஒப்பிடும் போது, இன்று அப்பகுதி மிகவும் அமைதியாகவும், அனைத்து அரச நிறுவனங்களும் முறையாகவும் இயங்கி வருகின்றன. போராட்டத்துக்கு ஆதரவாக போராட்ட களத்திற்கு சென்ற சஜித் பிரேதமதாச விரட்டியடிக்கப்பட்ட இடத்தில் தான் சஜித்தின் கூட்டம் இடம்பெற்றது.

அநுரவின் கூட்டம் லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெற்றது. அலரி மாளிகை போராட்ட களத்திற்கு அருகில் உள்ளது. அந்த இடத்திற்கு மிக அருகிலேயே கூட்டம் நடந்தது. அப்போது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ போராட்டக்காரர்களின் பாரிய தாக்குதலுக்கு ஆளாகாமல் இருக்க படையினர் பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், அவரை விசேட விமானத்தில் கடற்படை மத்திய நிலையத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டியுமிருந்தது. அநுர திஸாநாயக்கவுக்கும் போராட்ட களத்தில் சில அசம்பாவிதங்கள் ஏற்பட்டாலும் ஒரு கட்டத்தில் அவர் போராட்டகாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலை காணப்பட்டது.

மொட்டுக் கட்சியின் கூட்டம் கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. மே மாதம் 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் மொட்டுக் கட்சியின் பிரதேச தலைவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டதன் காரணமாக மொட்டுக் கட்சி நீண்டகாலமாக செயலிழந்திருந்தது என்று கூறுவது மிகவும் சரியானது என நினைக்கிறேன். ஆனால் இன்று மொட்டுக் கட்சியினரும் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் மே தினத்தை கொண்டாட முடிந்துள்ளது.

மே தினத்தன்று காலை நுவரெலியா கொட்டகலையில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினப் பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். மாலை கொழும்பு மாளிகாவத்தையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்திலும் கலந்து கொண்டார். போராட்டத்தின் போது அதற்கு ஆதரவான சட்டத்தரணிகள் பலரின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மாளிகாவத்தையை தாண்டிய டெக்னிக்கல் சந்தி வளைவில் உள்ள அளுத்கடை நீதிமன்ற மைதானத்திலேயே நடைபெற்றது.

நாட்டின் எதிர்காலம் குறித்து அரசியல் கட்சித் தலைவர்கள் எந்த மாதிரியான அறிவித்தலை முன்வைப்பார்கள் என்பதிலேயே இந்த மே தினத்தில் நாட்டு மக்கள் விசேட ஆர்வம் காட்டினர். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் நாட்டில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் குறித்து சஜித் பிரேமதாச மே பேரணியில் தெரிவித்தார். அநுரகுமார திஸாநாயக்க தாம் கொண்டு வரும் மாற்றங்கள் குறித்து விளக்கமளித்ததுடன், "ஒழுங்குமுறையான மக்கள் சக்தியையே நாங்கள் எதிர்பார்க்கிறோம்" எனவும் குறிப்பிட்டார். அந்த அறிவிப்புகளைக் கேட்கும் போது, லால்காந்த மற்றும் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோரால் பாராளுமன்றத்தை முற்றுகையிட பொதுமக்கள் எவ்வாறு தூண்டப்பட்டனர் என்பது பலருக்கு நினைவுக்கு வரும். அவர்கள் இருவரும் மே தினப் பேரணிகளில் உரையாற்றினர், மேலும் அவர்கள் ஏற்கனவே ஜனாதிபதி பதவி தமது கட்சிக்குக் கிடைத்துவிட்டது போன்று பேசியதாக பொதுமக்கள் உணர்ந்தனர். சிலர் அதனை தேசத்துக்கான உரையாகப் பார்த்தார்கள். ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கூட இன்னும் கோரப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில், தமது கட்சி ஆதரிக்கும் வேட்பாளரைத் தவிர வேறு எவரும் வெற்றிபெற முடியாது என மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார். அவர்கள் தமது சொந்த வேட்பாளரை முன்னிறுத்துவதாக அறிவிக்காதது பொதுமக்களின் விசேட கவனத்தை ஈர்த்தது என நினைக்கிறேன். பல்வேறு சம்பவங்களுக்கு முகங்கொடுத்த போதிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே நாட்டின் பெரும்பான்மையான மக்களின் அரசியல் கட்சியாக உள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அண்மையில் நடைபெற்ற மே தின பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது மிகத் தெளிவான கருத்தை நாட்டு மக்களுக்கு முன்வைத்தார். இரண்டு வருடங்களுக்கு முன்பு எல்லோரும் கஷ்டத்தில் இருந்தார்கள், ஆனால் இன்று எல்லாம் மாறிவிட்டது. கொழும்பு நகரில் மிக நெருக்கமான இடங்களில் மே தின பேரணிகளை நடத்தக்கூடிய இந்த நிலைமை நாட்டில் உண்மையான ஜனநாயகம் நிலவுவதற்கான உதாரணமா இல்லையா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். எல்லா கஷ்டங்களும் தீரவில்லை. ஆனால், இக்கட்டான நிலைமைகளை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான தெளிவான பாதை இப்போது திறக்கப்பட்டுள்ளது. அதற்காக அனைத்து கட்சிகளின் ஆதரவையும் பெறவும். அதற்கான உடன்படிக்கைகளை மேற்கொள்ள தயாராகவும் இருப்பதாகக் கூறிய அவர், அதற்காக அனைத்து கட்சி தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

சமூகவலைத் தளங்களில் வைரலான பதிவு ஒன்றில், இந்த ஆண்டு மே தினக் கூட்டங்களில் இரண்டு வெற்றியாளர்கள் இருப்பதாகவும், அது மொட்டுகட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்றும் அறிவிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி காணாமல் போனதாகத் தோன்றிய போதிலும் இன்று ஐக்கிய தேசியக் கட்சி அனைத்தையும் ஒன்று திரட்டும் மக்கள் சக்தியாக மாறியுள்ளதாகவும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. பேரை ஏரியில் குளித்து கிராமத்திற்கு சென்று காணாமல் போன மொட்டுக் கட்சி தற்போது மீண்டும் மக்கள் சக்தியாக மாறியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்த ஆண்டு மே தின வெற்றியாளர் யார் என்பதை தீர்மானிப்பது கடினம் எனத் தெரிகிறது. ஐக்கிய மக்கள் சக்தி பெருந்திரளான மக்கள் கூட்டத்தை கூட்டிச் சென்றிருந்தாலும் சிறிது நேரத்திலேயே சரத் பொன்சேகா கூட்டத்திலிருந்து வெளியேறினார். பிரபல தலைவர்களான ராஜித சேனாரத்ன மற்றும் திருமதி தலதா அத்துகோரள, ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. இவை அந்த முன்னணியின் வளர்ச்சியை விட சரிவை பிரதிபலிக்கிறது, என சிலர் கூறினால், அதை நீங்கள் தவறாகச் சொல்ல முடியுமா? ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவோரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதற்குக் காரணம் என்ன? தொடர்ந்தும் ஐ.ம.சயில் இனியும் தங்கியிருக்க விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சியினரால் அல்லவா?

பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களில் இருந்து நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியை தேசிய மக்கள் சக்தி தெரிவு செய்வதாக கூட்டத்தில் தெளிவாக லால்காந்த குறிப்பிட்டார். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதற்கு ஜனதா விமுக்தி பெரமுனவும் வழங்கிய அங்கீகாரம் இது என அதனை செவிமடுத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு, மாத்தறை, அனுராதபுரம் ஆகிய மூன்று கூட்டங்களும் வெற்றியடைந்தாலும், யாழ்ப்பாணப் பேரணி வெற்றியடைந்ததாக மக்கள் விடுதலை முன்னணியினர் கூறவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற முடியாது என்பதற்கான காரணத்தை மே தினக் கூட்டம் மூலம் அப்பட்டமாக வெளிப்படுத்தியது. கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமே சிங்கள பௌத்த வாக்குகளால் ஜனாதிபதியானார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மே தினக் கூட்டத்தை தனது முழு பலத்தையும் காட்டி நடத்தவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியில் இணையலாம் என எதிர்பார்த்தவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இன்னும் சிறிது காலம் பொறுமை காக்குமாறு கேட்டுக் கொண்டார். ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதில் பெரும் பங்கு வகிக்கும் நிமல் லான்சா எம்.பி.க்கும் இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

வடக்கிலும் கிழக்கிலும் அவருக்கு ஆதரவாக பல கட்சிகள் இருந்தும் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

ஏனைய கட்சிகள் மட்டுமன்றி ஐக்கிய மக்கள் சக்திக்கு சென்றவர்கள் உட்பட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் தற்போது தம்மைச் சூழ்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த மே தினப் பேரணியின் வெற்றியாளரை நீங்களே தேர்ந்தெடுங்கள்



சுனந்த மத்துமபண்டார
களனிப் பல்கலைக்கழகத்தின்
பொருளியல் கற்கைகள்
பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர்
தமிழில். வீ.ஆர்.வயலட்

# வியட்னாம் போரின் எதிர்ப்பலைகளை நினைவூட்டும் மாணவர் போராட்டங்கள்!

## மாணவர்களது எழுச்சியானது உலகளாவிய அரசியல் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உலக வரலாற்றின் அதிகமான காலம் ஆட்சியாளரது கொள்கைகளுக்கு எதிரான போராட்டங்களும் எதிர்ப்பு உணர்வுகளும் சமூகங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது நாடுகளுக்குள் நிகழ்வது மட்டுமல்லாது நாடுகளைக் கடந்தும் அதிக போராட்டங்கள் நிகழ்கின்றன. காஸாவில் நிகழும் ஆக்கிரமிப்புக்கும் படுகொலைகளுக்கும் எதிராக, அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்களது போராட்டங்கள் அமெரிக்காவை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. அதிலும் அமெரிக்க ஆட்சியாளர்களது இஸ்ரேலிய ஆதரவுக்கு எதிரான போராட்டங்கள் அடிப்படையில் ஜனநாயக் கட்சியின் தேர்தல் இருப்பினை சீர்குலைக்கக் கூடியதென்ற அச்சம் அவர்கள் மத்தியில் ஏற்பட தொடங்கியுள்ளது. அதற்கு குடியரசுக் கட்சி வழங்கிய ஆதரவும் அதன் மரபார்ந்த தேர்தல் வாய்ப்புக்களை பாதிக்கத் தொடங்கியுள்ளது. மாணவர்களது எழுச்சியானது உலகளாவிய அரசியல் வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததொன்றாகவே உள்ளது. இக்கட்டுரையும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் எழுச்சியடைந்து வரும் மாணவர்களின் எதிர்ப்புப் போராட்டங்களை தேடுவதாக உள்ளது.

காஸா மீதான இஸ்ரேலியப் போரை நிறுத்துமாறான கோரிக்கையை முதன்மைப் படுத்திக் கொண்டு அமெரிக்காவிலுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் போராடி வருகின்றனர். கொலம்பியாப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்தி தொடங்கப்பட்ட போராட்டம் அமெரிக்க நகரங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் தீவிர போராட்டமாக நிகழ்கின்றது. கடந்த சில தினங்களாக நிகழ்ந்துவரும் மாணவர்களது போராட்டம் சிகாகோ, பிரான்ஸ்சிஸ்கோ, நியூயோர்க், மற்றும் கலிபோர்ணியா நகரங்களில் அமைந்துள்ள கொலம்பியா, ஹார்வாட், யேல், ஐவி லீக், தெற்கு கலிபோர்ணியா, டெக்சாஸ் பல்கலைக்கழகங்களில் இரண்டுக்கு மேற்பட்ட வாரங்களாக நீடிக்கும் போராட்டமாக மாறியுள்ளது.

பலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும் போராட்டம் நிகழ்ந்து வருகிறது. இதேநேரம் கடந்த 30.04.2024 அன்று கொலம்பியப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களது போராட்டம் தீவிரமடைந்து பிரதான கட்டடத் தொகுதியை கைப்பற்றி அதனைக் கட்டுப்படுத்தியதுடன் அமெரிக்க கொடியை இறக்கி, பலஸ்தீனக் கொடியை கம்பத்தில் பறக்க விட்டு போராட்டத்தின் திசையை முதன்மைப்படுத்தினர். ஹாமில்டன் அரங்கை கைப்பற்றிப் போராட்டத்தை நிகழ்த்திய மாணவர்களை கட்டுப்படுத்த, நியூயோர்க் காவல்துறையினர் அழைக்கப்பட்டு தீவிர முயற்சியின் பின்னர் போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டதுடன் கட்டத் தொகுதி பொலிஸாரது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதனை அடுத்து ஏனைய பல்கலைக்கழகங்களில் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவரும் நகர்வில் அமெரிக்க அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதே சந்தர்ப்பத்தில் பலஸ்தீன ஆதரவுத் தரப்பு மாணவர்களால் போராட்டத்திற்காக அமைக்கப்பட்ட கூடாரங்கள் நியூயோர்க் பொலிஸாரின் ஆதரவுடன் இஸ்ரேலிய ஆதரவு அணியினரால் தகர்க்கப்பட்டதுடன் இரு தரப்புக்கும் இடையில் பாரிய மோதல் நிகழ்ந்துள்ளது. கறுப்பு உடையணிந்த யூத ஆதரவாளர்களால் அத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக, அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன. மறுபக்கத்தில் மாணவர்களுக்கும் உள்ளூர் அரசியல் மற்றும் பல்கலைக்கழக உறுப்பினர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நிகழ்வதாகவும் பல பல்கலைக் கழகங்களில் பொலிஸார் அழைக்கப்பட்டு போராட்டத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரியவருகிறது.

இதேநேரம் யூதர்களுக்கு எதிரான இனவாத உணர்வுகள் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த கூடிய நடவடிக்கைகள் வேண்டும் எனவும் தேசிய அரசியல் தலைவர்கள் கூறிவருகின்றனர். ஒருவகையில் மாணவர்களது பலஸ்தீன போராட்டத்தினால் அமெரிக்காவின் உள்ளூர், பிராந்திய, சர்வதேச அரசியல் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.



அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் தீவிரமாக பரவிவரும் போராட்டங்களை ஏன் அமெரிக்க அரசாங்கம் அடக்க வேண்டுமென கருதுகிறது. இதனை விரிவாக ஆராய்வது அவசியம்.

முதலாவது, காஸா மீதான இஸ்ரேலியப் போர் உலக வரலாற்றை மாற்றத்திற்குள் தள்ளக்கூடியது. இந்தப் போரை என்ன விலை கொடுத்தேனும் இஸ்ரேல் மேற்கொள்ளும். அதனை எந்த சக்தியாலும் இலகுவில் தடுத்துவிட முடியாது. இது இஸ்ரேலுக்கு மட்டும் உரிய போரல்ல. இது அமெரிக்கா உட்பட்ட மேற்குலகத்தின் போர். இதன் மூலம் பிராந்திய அரசியல் மட்டுமல்லாது முழு உலகத்தினது அரசியல், பொருளாதார, இராணுவப் பரிமாணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது. அதனை அடைவதே அமெரிக்க இஸ்ரேலிய ஐரோப்பிய மற்றும் இந்தியாவினது கூட்டின் எதிர்பார்க்கையாகும். இந்தியாவும் இஸ்ரேலியக் கூட்டின் வடிவமாகவே உள்ளது. மிகத் தெளிவாக, உலக ஒழுங்கில் புதிய அணியொன்றின் அடையாளம் சாத்தியமாகியுள்ளது. அது இஸ்ரேல் பலஸ்தீன போரை மையப்படுத்தி வடிவமாகிறது. அதில் இந்தியா மிகத் தெளிவாக இஸ்ரேல் அமெரிக்கா ஐரோப்பிய சக்திகளுடன் கைகோர்த்துள்ளது. எனவே, இந்த அணியின் உலகளாவிய அரசியலை கட்டமைக்கும் போராக இஸ்ரேல் ஹமாஸ் போர் காணப்படுகிறது. இரண்டாவது, மேற்குறித்த அணியின் நகர்வுகள் அனைத்துமே சீனாவின் பட்டுப் பாதையை உடைப்பதற்கான உத்தியாகவே தென்படுகிறது. சீனாவின் புதிய பட்டுப்பாதை மேற்காசிய நாடுகளை பலமாக இணைப்பதாக அமைந்திருந்தது. அது மட்டுமன்றி, போர் தொடங்குவதற்கு முன்னர் சவுதி அரேபியாவும் ஈரானும் துருக்கியும் சீனாவின் முயற்சியால் கைகோர்த்திருந்தன. அத்தகைய கைகோர்ப்பானது பட்டுப் பாதையை பலப்படுத்துவதுடன் பிராந்திய ரீதியில் சீனாவின் இருப்பை வலுவானதாக்கும் நகர்வாகவே அமைந்திருந்தது. போர் மீளவும் ஈரானுக்கு எதிரான சக்திகளாக, கட்டாரையும் சவுதி அரேபியாவையும் கொண்டுவர உதவியுள்ளது. அத்தகைய அமெரிக்க இஸ்ரேலிய நகர்வு சீனாவின் பட்டுப்பாதையை தகர்ப்பதாகவே அமைந்துள்ளது. சீனா, உலகத்தை பட்டுப்பாதை ஊடான வர்த்தக மார்க்கத்தினாலேயே இணைப்பதில் முனைப்புக் கொண்டிருந்தது. அதனையே, மென்அதிகார வரம்பெனவும் சீனா அடையாளப்படுத்தியிருந்தது. அதனை இஸ்ரேலியப் போர் தகர்த்துள்ளது. அதற்கான உதவிகளை அமெரிக்கா வழங்குவதென்பதும் மேற்குலகம் இஸ்ரேலுடன் அணிசேர்வதென்பதும் தவிர்க்க முடியாதது. மூன்றாவது, சீனா தனது கடற்படையை டியப்டியில் நிறுவியுள்ளது. அதனை விஸ்தரிக்கவும் ஏடன் துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் சீனாவின் கடற்படையை வலுப்படுத்தவும் அண்மைக் காலமாக சீனா திட்டமிட்டு வருவதாக அமெரிக்க புலனாய்வுத் துறை குற்றம்சாட்டி வருகிறது. இதனால் தென் மேற்கு இந்து சமுத்திரத்தின் கடற்பகுதியில் சீனாவின் கை ஓங்குமாயின், அமெரிக்காவின் டியாகோ கார்சியாவுக்கு அதிகமான நெருக்கடியாக அமைய வாய்ப்புள்ளது. ஏற்கனவே பாகிஸ்தான், இலங்கை, மாலைதீவு, மியான்மார் கடற்பகுதியில் அமைந்துள்ள துறைமுகங்களை சீனா தனதாக்கியுள்ளது. அதனால் இந்து சமுத்திரத்தின் வடக்குப் பகுதி கணிசமாக சீனாவின் செல்வாக்குக்குள் உள்ளது. இத்தகைய சீனாவின் கடலாதிக்க உத்தியையும், இஸ்ரேலிய ஹமாஸ் போரினால் தகர்த்தெறிய முடியும் என அமெரிக்கா கருதுகிறது. எனவே இந்தப் போர் அமெரிக்காவினதும் அதன் கூட்டணியினதும் உலகளாவிய இருப்புக்கு அவசியமானது. அமெரிக்கப் பல்கலைக்கழக மாணவர்களது போராட்டம் அத்தகைய வாய்ப்பினைத் தகர்த்துவிடும் என அமெரிக்க ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். அதனால் அத்தகைய முடிவைத் தோற்கடிப்பதே ஒரே வழியென் அமெரிக்கா கருதிச் செயற்படுகிறது. நான்காவது, வியட்நாம் போரின் போது அமெரிக்க மக்களுக்கு ஏற்பட்ட உணர்வு மீளவும் ஏற்பட்டுவிடக்கூடாது, என்பதில் அமெரிக்க நிர்வாகம் கவனமாக உள்ளது.

காரணம் அனேக அமெரிக்க ஊடகங்களும் எழுத்துகளும் வியட்நாம் போரின் போது அமெரிக்காவில் எழுந்த எழுச்சி போன்றே தற்போது காணப்படுவதாக குறிப்பிடுகின்றன. அத்தகைய நிலை ஏற்படுமாயின் அதனால் அமெரிக்காவின் எதிர்கால இலக்குகள் தகர்ந்து போய்விடும் என, அமெரிக்க நிர்வாகம் கருதுகிறது. எனவே, அதனை முறியடிக்க போராட்டம் நசுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திருப்பதாக தெரியவில்லை.

உலகளாவிய ரீதியில் அனைத்து போராட்டங்களுக்கு அடிப்படையான ஜனநாயமும், மனித உரிமையும் அரசுகளின் நலன்களுக்குள்ளால் நசுக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் மரபாகவே உள்ளது. அரசுகளின் நலன்களுக்குட்பட்டதே ஜனநாயமும் மனித உரிமையும்.

எனவே அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் எழுச்சியடைந்துவரும் மாணவர்களது ஆதரவான போராட்டங்கள் போரை நிறுத்துவதைவிட தனியரசுக்கான வாய்ப்பினை பலஸ்தீனத்திற்கு ஏற்படுத்தும் என்ற எதிர்பார்க்கை வலுவானதாக உள்ளது. ஐரோப்பிய நாடுகள் இரு நாட்டுத் தீர்வுத்திட்டத்தை அதிகம் முதன்மைப் படுத்துகின்றன.

அத்தகைய பலஸ்தீனத்திற்கான தனியரசும் அமெரிக்க கூட்டணி நாடுகளின் தயவிலேயே அமைய வேண்டும் என்ற உத்தியுடனேயே காய் நகர்த்தப்படுகிறது. அதனால் போர் முடிவுக்கு வருதல் என்பதைக் காட்டிலும் போரால் புதிய உலக ஒழுங்கு உருவாக்கப்படுவதென்பதே முதன்மையானதாக உள்ளது.

# சென்னையில் பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம்




இணையத்தில் தமிழ் மொழியின் பயன்பாட்டை அதிகரிக்க, இணையத் தமிழ் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள, தொழில்நுட்பங்களின் வளர்ச்சியில் தமிழின் நிலைகுறித்து ஆராய உயர் கல்வியில் இணையத்தமிழ் குறித்த ஆய்வுகளை முன்னெடுக்க, இளம் திறமைகளை அடையாளம் காணுவது உள்ளிட்ட இலக்குகளை அடிப்படையாக கொண்டு உலகத் தமிழ் வர்த்தக சங்கம் சார்பில்ஜூன் 28,29 ஆம் திகதிகளில் பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய புதிய அரங்கில் நடைபெற உள்ளது.

அந்நிகழ்வு தமிழக அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், தமிழ்நாடு மென் ஆளுமை முகமை (TNeGA), மென்பொருள் தகவல் தொழில்நுட்ப பூங்கா இந்தியா (STPI) போன்ற அரசு நிறுவனங்களின் அனுசரணையில் நடைபெற உள்ளது. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் இந்திய அளவில் மூன்றாவது மாநிலமாக வளர்ந்திருந்தாலும், தமிழ் மொழி மென்பொருள் வளர்ச்சியில் பின்தங்கி உள்ளது. அதேபோல தமிழகத்தில் மென்பொருள் ஏற்றுமதி ஆண்டுக்கு 2.25 மில்லியன் டொலரிலும் உள்நாட்டு வர்த்தகத்தில் 2.5 மில்லியன் டொலரிலும் நடைபெற்று வருகிறது. இவை அனைத்தும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாக வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக அரசு தகவல் தொழில்நுட்பத்துறை செயல்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் பல்வேறு முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஸ்டார்ட் ஆப்ஸ், கணனி நிறுவனங்கள், மென்பொருள் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள், மார்க்கெட்டிங் ஏஜென்சி, ரோபோடிக் போன்ற நிறுவனங்கள் அரங்கம் அமைக்க உள்ளன. மேலும் தகவல் தொழில்நுட்ப துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்தரங்கத்தில் கருத்துரைக்கவும் கணனித் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளையும் வேலை வாய்ப்புகளையும் அறியவும், தங்களுடைய கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தி முதலீடுகளை ஏற்கவும், தங்கள் கண்டுபிடிப்புகளுக்கு பெரு நிறுவனங்களின் மூலம் முதலீடுகளை ஈர்க்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் தமிழ் மென்பொருள் உருவாக்கம், கையடக்கக் கருவிகளில் மொழிகளுக்கான உள்ளீடு தொழில் நுட்பம்,செயற்கை நுண்ணறிவு, (Artificial Intelligence), இயந்திரவழிக் கற்றல் (Machine Learning), "தானியங்கிக் கருவிகளில் தமிழ் மொழிப்பயன்பாடு" (TamilRobotics and Language Processing), அதிகளவில் மொழி மாதிரிகளை உருவாக்குதல் (LLM), டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்கம், கற்றல் கற்பித்தல் தொழில்நுட்பம் மின் ஆளுமை, ஆய்வுக் கட்டுரைகள் படைத்தல், குழு விவாதங்கள், நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் முதன்மை உரைகள், நிரலாக்கப் போட்டிகள் கண்காட்சி அரங்குகள் என பல்வேறு சிறப்பம்சங்கள் இடம் பெறும். இந்தப் பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் அடுத்துவரும் சவாலான தொழில்நுட்ப யுகத்தை இன்றைய தலைமுறை எதிர்கொள்வதற்கான அடித்தளங்களை அமைத்துத் தரும் என உலகத்தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவரும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளருமான செல்வகுமார் தெரிவித்தார். தொடர்புக்கு +60166167708

# கிழக்கு ஆளுநரை சந்தித்த தமிழக அமைச்சர் பழனிவேல்



தமிழக தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானை மரியாதை நிமித்தமாக கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது, இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த காலத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசில் நிதி அமைச்சராக பதவி வகித்த போது, இலங்கை மக்களுக்கு தமிழக அரசு வழங்கிய உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நினைவு கூர்ந்தார்.

அத்துடன், தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளை வலுவாக பேணவும் இருவரும் கலந்துரையாடினர்.

# கோடிக்கணக்கில் பணம் புரளும் பந்தய விளையாட்டு!



## சிவப்பு பிடியாணை மூலம் கைது செய்யப்பட்ட இருவரையும் நாட்டுக்கு அழைத்து வர இந்தியா முயற்சி





இந்திய ம க்கள் இரு பிரிவாகப் பிரிந்துள்ளனர். ஒரு பிரிவினர் பாலிவுட் சினிமாவிலும், மற்றைய பிரிவினர் கிரிக்கெட்டிலுமாகப் பிரிந்துள்ளனர். இரு பிரிவுகளுக்கும் பாதாள உலக அழுத்தங்கள் இருப்பது இரகசியமானதல்ல. உலகின் மிக ஆபத்தான மற்றும் அத்தியாவசியமான பத்து குற்றவாளிகளில் ஒருவராக இருக்கும் பாதாள உலக தலைவன் தாவூத் இப்ராஹிம் ஒரு காலத்தில் பாலிவுட் சினிமாவிலும் இந்திய கிரிக்கெட்டிலும் செல்வாக்குச் செலுத்தியவர் என்பது அனைவரும் அறிந்த ரகசியமாகும். அவனின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிச் செல்லும் இன்னும் பல குற்றவாளிகளும் பிந்திய காலத்தில் இந்தியாவில் உருவாகினர்.

இணையத்தின் ஊடாக பந்தயம் கட்டும் சர்ச்சைக்குரிய பல சம்பவங்கள் மீண்டும் பொலிவூட் சினிமாவிலும், கிரிக்கெட் துறையிலும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அண்மையில் பொலிவூட் நடிகர், நடிகைகள் சிலர் இந்திய நிதிக் குற்றங்கள் மற்றும் ஊழல் மோசடிப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

சில காலங்களாக துபாய் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான பந்தய மோசடி தொடர்பான தகவல்கள் இவ்வாறுதான வெளிவந்தன. மகாதேவ் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட இணைய செயலி ஊடாக துபாயில் இருக்கும் இந்திய நாட்டவர்கள் இருவரின் சொத்து மதிப்பு இந்திய ரூபாவில் 15,000 கோடிகள் என அந்நாட்டு நிதிக் குற்றங்கள் மற்றும் ஊழல் மோசடிப் பிரிவினரால் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த பந்தய செயலி ஊடாக தினமும் 200 கோடி இந்திய ரூபாய் வருமானம் ஈட்டப்படுவதாக மேலும் தெரிய வந்துள்ளது. அது மாத்திரமின்றி, கடந்த வருடம் ஐ.பி.எல் போட்டியின் நேரடி ஒளிபரப்பினைத் திருடி அதனை மகாதேவ் செயலியுடன் தொடர்புடைய பெயார்பிளே அப்ளிகேசன் ஊடாக ஒளிபரப்புச் செய்தும், அந்நேரத்தில் உடனடியாகப் பந்தயம் பிடித்தும் இன்னும் பல கோடிகள் வருமானம் ஈட்டியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இந்த செயலியை விளம்பரப்படுத்துவதற்காக அதிக பணத்துக்கு பொலிவூட் நடிகைகளைப் பயன்படுத்தியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. ஐ.பி.எல் உத்தியோகபூர்வ ஒளிபரப்பு நிறுவனமான "வியகொம் 18" நிறுவனத்திற்கு அதன் மூலம் 100 கோடிக்கும் அதிக தொகை இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

மகாதேவ் செயலியை உருவாக்கி இந்தியாவை பரபரப்புக்குள்ளாக்கிய மோசடிக்காரர்களின் தலைவர் சவுராப் சந்திரகராகும். 28 வயதையுடைய இந்த பிரபலமான நபரின் பல நிதி மோசடிகளை தற்போது இந்திய நிதிக் குற்றங்கள் மற்றும் ஊழல் மோசடிப் பிரிவு கண்டுபிடித்துள்ளது. இதனுடன் தொடர்புடைய ஏராளமானோர் கைது செய்யப்பட்டுமுள்ளனர். சவுராபின் மோசடிகளுடன் தொடர்புடையதாகத் தகவல் கிடைத்துள்ள பாலிவுட் நடிகர் நடிகைகள் பலரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மகாதேவ் என்ற பெயரிலான இணையச் செயலியை உருவாக்கி கோடிக் கணக்கில் பணம் ஈட்டும் இந்த மோசடியில் ஐ. பி. எல் போட்டிகளும் உள்ளடங்கியதன் பின்னர் சவுராப் சந்திரகர் எனும் நபர் அண்மைய காலத்தில் இந்தியாவின் சட்டவிரோத நிதி மோசடிகாரர்களுள் பிரதானமானவராக அந்நாட்டின் நிதிக் குற்றங்கள் மற்றும் ஊழல் மோசடிப் பிரிவினரால் இனங்காணப்பட்டுள்ளார். சட்டவிரோதமாக கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் சவுரப் சந்திரகர், தற்போது தனது தொழில் பங்காளியான 43 வயதுடைய ரவி உப்பால் என்பவருடன் ஐக்கிய அரபு ராச்சியத்தில் பதுங்கி இருப்பதோடு, அவர்கள் இருவரும் இணைந்து தங்களது இந்த பாரியளவிலான மோசடியை பல நாடுகளில் விரிவுபடுத்தி வருகின்றனர்.

சவுராப் 2017ஆம் ஆண்டளவில் மத்திய இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் பிலாய் நகரில் தனது சகோதரருடன் இணைந்து நடைபாதையில் பழச்சாறு குடிபானக் கடை ஒன்றினை நடத்திச் சென்ற ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞனாகும். அவன் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், சத்தீஸ்கரில் உள்ள சூதாட்ட கும்பல்களிடத்தில் சென்று கிரிக்கெட் போட்டிகளில் பந்தயம் கட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இதனால் சட்டவிரோத பந்தய மோசடிக்காரர்ளுடன் நெருங்கிய தொடர்பு அவனுக்கு இருந்தது. அவனது சகபாடியான ரவி உப்பால் ஒரு பிரபலமிக்க குடும்பப் பின்னணியைச் சேர்ந்தவனாகும். அவன் குழாய்க் கிணறு நிர்மாணிக்கும் ஒப்பந்ததாரராக பணிபுரிகின்றான். எனினும் அவனும் இந்தச் சூதாட்டத்திற்கு அடிமையாகி இருந்தான். மேலதிகப் பணத்தைச் சம்பாதிப்பதற்காக கிரிக்கெட் பந்தய மோசடிக்காரராக இரகசியமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த உப்பாலுக்கு சவ்ராபின் அறிமுகம் கிடைத்தது. அதிகளவு பணம் சம்பாதிக்க வேண்டுமாயின் இணையத்தின் ஊடாக பந்தயம் பிடிக்கும் முறையினை ஆரம்பிக்க வேண்டும் என அவன் எற்கனவே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

உப்பாலை சவ்ராப் எதேச்சையாகவே சந்தித்தான். ஒருநாள் நகரில் பாபுல் கடைக்கருகில் தனது நண்பருடன் கதைத்துக் கொண்டிருந்த போது அவனுக்கு சவ்ராபை அறிமுகம் செய்து வைத்தது வேறொரு நபராகும். பின்னர் இருவருக்குமிடையில் உரையாடல் இடம்பெற்றதோடு, பந்தயம் பிடிப்பதற்கான இணையத்தளச் செயலியை உருவாக்குவதற்கு அடித்தளமிடப்பட்டது அந்த சந்திப்பின் போதாகும். பின்னர் இருவரும் இணைய செயலி அதிகளவில் பிரபலமாகியிருந்த ஹைதராபாத் சென்று செயலி தொடர்பில் மேலதிகத் தகவல்களைத் தேடிப் பெற்றுக் கொண்டனர்.

இன்று இந்திய நிதிக் குற்ற மோசடிப் பிரிவுக்கு தலைவலியாக மாறியிருக்கும் 'மகாதேவ்' இணையத்தள பந்தய செயலி இவ்வாறுதான் உருவானது. மகாதேவ் என்பது சவுராப்பின் குடும்பப்பெயர். சில நாட்களிலேயே சத்தீஸ்கார் பிராந்தியத்தில் பந்தயக்காரர்களிடையே அதிகமாகப் பிரபலமடைந்த மகாதேவ் செயலியின் ஊடாக எப்பொழுமில்லாதவாறு அதிக வருமானத்தை இருவரும் ஈட்டினர். போகர் சீட்டு, கிரிக்கெட், பேட்மிண்டன், டென்னிஸ் போன்ற விளையாட்டுகளில் பந்தயம் கட்டக்கூடிய வகையில் செயற்படும் மகாதேவ் செயலி மோசடி பொலிஸாரின் கழுகுக் கண்ணில் சிக்க வாய்ப்புகள் அதிகம் என்பதை இருவரும் அறிந்திருந்தனர்.

2018ஆம் ஆண்டில், சவுராப் மற்றும் உப்பால் ஆகிய இருவரும் பொலிஸாரிம் சிக்கிக் கொள்வதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும், அதிகளவு வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்காகவும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்குப் புறப்பட்டனர். துபாயில் தங்களுடைய பந்தய மோசடியைச் சுதந்திரமாக நடத்த ஒரு அரேபியரின் உதவியுடன் அலுவலகம் ஒன்றை அமைத்தனர். பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவரும் அவர்களோடு இணைந்து கொண்டார். எமிரேட்ஸின் சட்டத் திட்டங்களின்படி வெளிநாட்டவர்கள் அங்கு ஏதேனும் தொழிலை ஆரம்பிக்கும் போது அந்நாட்டுப் பிரஜை ஒருவர் அனுசரணையாளராக பெயர் குறிப்பிடப்பட வேண்டும் என்பதோடு, அதற்காக முன்வரும் அரேபியர் எமிரேட்ஸைச் சேர்ந்தவராக இருக்கவும் வேண்டும். பின்னைய காலங்களில் அந்த வணிகங்களின் இலாபத்தில் ஒரு பகுதியை விரும்பியவாறு அனுபவிக்கும் அந்த அனுசரணையாளர் 'ஸ்லீப்பிங் பார்ட்னர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள்.

பெயார்பிளே செயலியின் ஊடாக ஐ.பி.எல் போட்டி ஒளிபரப்பினைத் திருடி தனது இணையத்தளத்தில் ஒளிபரப்புச் செய்தது தெரிய வந்ததன் பின்னர் அதனைப் பிரபலப்படுத்துவதற்காக இணைந்து கொண்ட பிரபல பொலிவூட் நடிகர் நடிகைகளான ரன்பீர் கபூர், ஷ்ரத்தா கபூர், தமன்னா, ஹுமா குரேஷி, கபில் ஷர்மா, போமன் இரானி, ஹினா கான் ஆகியோருடன், சஞ்ஜய் தத் மற்றும் ஜாக்குலினின் முகாமையாளர்களுடனும் இந்திய நிதி மோசடி ஊழல் பிரிவினரால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணைகளுக்கு ஒத்துழைக்காத பொலிவூட் நடிகர் சாஹுல்கான் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதுமாத்திரமின்றி, தற்போது பாகிஸ்தானில் மறைந்திருப்பதாக இந்திய அரசாங்கத்தினால் சந்தேகிக்கப்படும் பாதாள உலக தலைவன் தாவூத் இப்ராஹிமின் சகோதரரான முஷ்தகீம் இப்ராஹிமுடன் சவுராப் மற்றும் உப்பலுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. முஷ்தகீமினால் மகாதேவ் செயலிக்காக பாகிஸ்தானிலும் 'கெலோயார்' என்ற பந்தய செயலியை உருவாக்கி, அதனை உலகம் முழுவதிலும் பல்வேறு நாடுகளில் நடக்கும் 20க்கு 20 பிரீமியர் லீக் போட்டி அனுசரணையாளராக முன்னிறுத்தி அணி உரிமையாளர்களாக செயற்பட்டதும் தெரியவந்துள்ளது. சவுராபின் பாதுகாப்பிற்காக தனது நம்பிக்கைக்குரிய மெய்க்காப்பாளர்கள் 20 - 30 பேரை ஈடுபடுத்துவதற்கும் முஷ்தகிம் இப்ராஹிம் ஏற்பாடு செய்திருப்பது தெரியவந்துள்ளது.

குண்டு துளைக்காத ரோல்ஸ் ரொய்ஸ் உள்ளிட்ட உலகின் அதிக விலை மதிக்கத்தக்க ஐந்து சொகுசுக் கார்களை வைத்திருந்த டுபாயில் மிகச் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த சவுராப் சந்திரகர் மற்றும் ரவி உப்பல் ஆகியோருக்கு எதிராக இந்திய நிதிக் குற்ற மோசடி ஊழல் பிரிவு அறிக்கைக்கு அமைய கடந்த வருட இறுதியில் இண்டர்போல் பொலிஸாரால் சிகப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கமைய துபாய் பொலிஸாரால் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது இருவரும் பொலிஸ் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களை மீண்டும் இந்தியாவுக்கு அழைத்து வர தற்போது இந்திய நிதிக் குற்ற ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் முயற்சித்து வருகின்றனர்

டிசம்பரில், துபாய் பொலிஸாரால் சிவப்பு பிடியாணை மூலம் இருவரும் கைது செய்யப்பட்டனர். தற்போது அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை நாட்டுக்கு அழைத்து வர இந்தியா முயற்சி செய்து கொண்டிருக்கின்றது.

பௌஸ் முஹம்மட்
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# நாமல் உயனவை பாதுகாக்கும் வனவாசி ராகுல தேரர்


சிறப்பு அதிதிகள் நிறைந்திருந்த விழாவில் உரையாற்றிக் கொண்டிருந்த தேரர் திடீரென தனது உரையை நிறுத்தினார். அவருடைய கண்கள் சபைக்கு வந்து கொண்டிருந்த ஒரு விருந்தினரை நோக்கி இருந்தது. அதே சமயம் அவர் அழவும் ஆரம்பித்தார். அவரது பேச்சில் அந்த அழுகை குறுக்கிட்டதும், சபையோரும் கலங்கினர். சபையில் வீற்றிருந்த அதிதிகள் பலரது உள்ளங்களில் பொக்கிஷமாக நிற்கும் பாத்திரமாக இருந்தும், அவரைக் கண்ட நொடியில் ஏன் ராகுல தேரர் கதறி அழுதார், ஆனால் அந்தச் சந்தர்ப்பம் பலரது மனதைத் தொட்டது.

கடந்த ஏப்ரல் 30ம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அலரி மாளிகை வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே இந்த உணர்வுபூர்வமான தருணம் இடம்பெற்றது. தேசிய நாமல் உயனவின் 33ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அதன் ஆரம்பம் முதல் இன்று வரையும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் வழங்கப்பட்ட ஒத்துழைப்பைக் கௌரவிப்பதே இந்த நிகழ்வின் நோக்கமாகும். நிகழ்வு ஆரம்பமானதன் பின்னர் தேசிய நாமல் உயனவின் ஸ்தாபகர் வனவாசி ராகுல தேரர் மேடைக்கு வந்தது வரவேற்புரை மற்றும் விழாவின் நோக்கத்தை தெளிவு படுத்துவதற்காகும். அவர் தனது உரையை ஆரம்பித்து சிறிது நேரம் சென்றிருந்த போது மூத்த பத்திரிகை ஆசிரியர் எட்மன்ட் ரணசிங்க தனது மகள் மற்றும் மருமகனுடன் விழா மண்டபத்தினுள் பிரவேசித்தார். அச்சந்தர்ப்பத்தில் வனவாசி ராகுல தேரர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டார். அவரது இரு கண்களும் கண்ணீர் சிந்தியதோடு, சில வினாடிகள் செல்லும் வரைக்கும் அவரால் பேச முடியாமல் போனது. அந்நேரத்தில் அங்கிருந்த அனைவரும் உணர்ச்சிவசப்பட்டது எட்மன்ட் ரணசிங்க என்பவர் தற்போது இந்நாட்டில் இருக்கும் மூத்த பத்திரிகை ஆசிரியராக ஊடகவியலாளர்களால் பெரிதும் போற்றப்படுபவர் என்பதனாலாகும். மேடையிலிருந்து இறங்கி வந்த வனவாசி ராகுல தேரர் எட்மன்ட் ரணசிங்கவுக்கு அருகில் வந்ததோடு, எட்மன்ட் ரணசிங்க ஆசனத்தில் அமர்ந்தது அதுவரைக்கும் விழாவினை அலங்கரித்த ஒளி விளக்குகளில் ஒளிராமல் இருந்த ஒளி விளக்கையும் ஒளிரச் செய்ததன் பின்னராகும். எட்மன் ரணசிங்க பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ராஹுல தேரர் ஆகியோரின் மரியாதை, வாழ்த்துக்கள் மற்றும் சபையில் ஊடக நண்பர்களிடமிருந்து கிடைத்த மரியாதையையும் எட்மண்ட் ரணசிங்க தனது வழமையான மென்மையான குரலில் ஏற்றுக்கொண்டதோடு, மேடைக்கு சென்றதைத் தொடர்ந்து வனவாசி ராகுல தேரர் மீண்டும் தனது உரையைத் தொடர்ந்தார்.

"இன்று நாமல் உயன உயிர்பெற்றிருப்பதும், நான் உயிர் வாழ்வதும் எட்மன்ட் ரணசிங்கவினாலாகும். இந்த தேசியப் பணியின் தலைவர் அவரே. திவயின பத்திரிகையில் நாமல் உயன தொடர்பில் முதலாவது கட்டுரையைப் பிரசுரித்து அவர் தான்." என வனவாசி ராகுல தேரர் தனது மனம் நிறைந்த வாழ்த்துகளை எட்மன்ட் ரணசிங்கவுக்கு தெரிவித்தார்.

தேசிய நாமல் உயனவுக்கும் வனவாசி ராகுல தேரருக்குமிடையில் பிரிக்க முடியாத உறவு இருக்கின்றது. அதே அளவிலான ஆழமான பிணைப்பு தனக்கும் ஊடகங்களுக்குமிடையில் இருக்கின்றது என்பது தேரரின் நம்பிக்கையாகும். நாமல் உயன 33 வருடங்களை பூர்த்தி செய்துள்ள நிலையில், அதற்காக ஆதரவளித்த அனைத்து ஊடகங்களையும் கௌரவித்து நன்றிகளைத் தெரிவிப்பதற்கு அவர் எண்ணியது அதனால்தான். இந்த விழாவில் சிரேஷ்ட ஊடகவியலாளர் எட்மண்ட் ரணசிங்கவின் வருகையினால் அந்தளவுக்கு உணர்ச்சிவசப்பட்டது ஏன் என நாம் தேரரிடம் வினவினோம்.

"எட்மண்ட் ரணசிங்க என்பவர் இந்நாட்டின் மூத்த மற்றும் சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியராகும். அமைச்சர்களிடமிருந்தும், அரச அனுசரணையினாலும் நாமல் உயனவுக்காக அனைத்தும் கிடைத்த போதிலும் அவர் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பை என்னால் ஒருபோதும் மறந்துவிட முடியாது. ஆரம்பத்திலிருந்தே எனக்கு உண்பதற்கு அரிசி, சீனி, தேயிலை, தேங்காயிலிருந்து அனைத்தையும் கொண்டு வந்து தந்தது அவரேயாகும். அவரது வயோதிப காலத்தில் அவர் இந்த விழாவுக்கு வருவது எனக்கு ஒரு அரசர் வருவதைப் போன்றிருந்தது. அவர் வருகை தருவதற்குச் சற்று தாமதமாகிய அந்த சிறிய நேரம் எனக்கு கஷ்டமாக இருந்தது. அந்தக் காலத்தில் அவர் சிங்கத்தைப் போன்று பெரும் ஆளுமையுடன் இருந்த ஒருவராகும். துறவியாக இருந்தாலும், வாழ்க்கை நிலையற்றது என்பதை நினைத்துப் பார்த்தபோது மிகுந்த வருத்தமும் வேதனையும் ஏற்பட்டது. அதனால் தான் அந்த நேரத்தில் நான் உணர்ச்சிவசப்பட்டேன். ஆரம்பம் முதலே இந்த தேசியப் பணிக்கு முட்டுக் கொடுத்த, என்னை வாழவைத்த, நான் தனிமையில், ஆதரவற்ற நிலையில் இருந்த போதெல்லாம் அடைக்கலமாக இருந்த, துன்புறுத்தல் அச்சுறுத்தல்கள் வந்தபோது எனக்கு வலிமை அளித்த ரணசிங்க மீது எனக்கு மிகுந்த மரியாதை உள்ளது. கடந்த வருடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பாக நிகழ்த்திய கௌரவிப்பு நிகழ்வில் நானும் கலந்துகொண்டேன். அதற்காக ஜனாதிபதிக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எட்மண்ட் ரணசிங்க இல்லாவிட்டால், நாமல் உயனவை நானும் இழந்திருப்பேன்" அந்த கடந்த காலத்தை நினைவுகூரும் ஒவ்வொரு முறையும் வனவாசி ராகுல தேரர் உணர்ச்சிவசப்பட்டார்.





"நான் சத்கோரலையில் வசிப்பவன். நான் பிறந்தது குருநாகல் மாவட்டத்தின் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மிக அழகான சிறிய கிராமத்திலாகும். எனது தந்தை அந்த கிராமத்தின் கிராமசபை உறுப்பினர். எனக்கு இரண்டு மூத்த சகோதரிகளும், இரண்டு மூத்த சகோதரர்களும், ஒரு இளைய சகோதரரும் இருந்தனர். இன்று அவர்களில் ஒருவரும் உயிருடன் இல்லை. எனக்கு நான்கு வயதாக இருக்கும் போது, என் தாய் இறந்துவிட்டார். தந்தை எங்களைக் கவனிக்க ஒரு வளர்ப்புத் தாயைக் கொண்டு வந்தார். கிராமத்தி ல் நாங்கள் குடும்பமாக இருந்தாலும், அதன் பிறகு எங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கவில்லை. அதனால் தான் எனக்கு பத்து வயதாக இருக்கும் போது துறவியானேன்.

சுரேகா நில்மினி இலங்கோன்
தமிழில் எம். எஸ். முஸப்பிர்



தமிழ்நாடு மல்லைத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கத்திற்கு மல்லை தமிழ்ச் சங்கம் மற்றும் ஆசிய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க தலைவரும், மறுமலர்ச்சி தி.மு.க துணைப் பொதுச் செயலாளருமான மல்லை ஏ. சி.சத்யா பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளார். இந்தோ சிலோன் வர்த்தக சம்மேளனம் மற்றும் மெடிகல் டுவரிஸத்தின் பணிப்பாளர் சத்தியப்பிரியா உள்ளிட்ட குழுவினரையும் படத்தில் காணலாம்.




# ஏங்கி மடிகிறாள்

"ஏங்கி மடிகிறாள்
கொண்ட அன்பினால்
அவள் "
மழை வேண்டுமென
நான் கேட்கவே இல்லை

கடும் வெயில் போர்த்தி
கண் கூசும் வகை
ஒளிர் திக்கெல்லாம் பரந்து கிடக்க
மரங்கள் மரத்து அசைவற்று நின்றிருக்க

உடல் ஏறிய வெம்மை
காது மடல் சூடேற்றி
தலைக்குள் வண்டுக்கள் தேனுறிஞ்சுவதாய்
ரீங்காரச் சத்தமிட

வறண்டு கிடக்கும் நாவுக்கு
தண்ணீரும் தாகத்தைக் கூட்ட

இன்னும் நாளுண்டு
மழைக்கு இன்னும் காலம் உண்டு
காத்திருக்கிறாள் காலம் கனிய

சடுதியாய் ஒரு மாற்றம்

சன்னமாய் மகிழ்வில்
அவளுள் ஓர் இழையோட்டம்

எங்கோ ஓர் இடிச்சத்தம்
மேகத்துள் வெட்டிச் சென்றது ஒரு மின்னல்,
நீல வான் எங்கே தேடும் படி
ஒன்று கூடி மறைத்துக்கொண்டது
கார்மேகம்.
அசதியில் இருந்த பறவைகளும் பாடும் ஒலி

இதோ வந்து விழுந்தது நிலம்
ஒற்றை துளி மழை

தூசும் துளியும் முத்தமிட
சுவையின் மனம் தீண்ட நாசி

கொண்ட களிப்பில்
குளிரப்போகும் தெளிவில்
தளர்த்திக்கொண்டு ஆடை
வாசல் தாண்டி
வீட்டின் திட்டில் அமர்ந்தாள் இந்தப் பாவை

வான் பார்க்கிறாள்,
அதுவும் அவளைத்தான் பார்க்கிறது

வெளுத்தது வான்
சிரித்தது சூரியன்

வாடினாள் காரிகை

உடல் கொண்ட வெம்மை
தகிக்கிறது இப்போது
தணிக்க வழி இன்றி தவிக்கிறாள்
இந்த மடந்தை

எதிர் பார்த்தல் பிழை
சரிதான்

நம்பிக்கையிட்டு
ஏங்கச் செய்தல் எவ்வகை…?

ஏனோ இப்படியாய் நீங்களும்…

மழை வேண்டவில்லை அவளும்.

இன்றோ மண்டியிட்டு கேட்கிறாள்
பொழியேன் கொஞ்சம்…

யார் பிழை?
சரிதான்
அவளே பிழை…

இமையி…


# நீண்ட நிசப்தத்தின் மத்தியில்

கார் இருள்
கலையத்தொடங்குகிறது
நட்சத்திரங்களுக்கும்
நிலாவுக்கும்
நித்திரை செய்யும் நேரம்
நெருங்கிவிட்டது
பனி படர்ந்த குளிர்ச்சி
கதிரவன் வருகை கண்டு
கலைந்து செல்கின்றது
காலையில் முதல்
ஒலி எழுப்பும் காகங்கள்
கரையத்தொடங்கிவிட்டன…
சேவல்களும்
கூவத்தொடங்கிவிட்டன
பட்சிகளின் சப்தங்கள்
இனிய காலைப்பொழுதை
இனிதே வரவேற்று
பள்ளியெழுச்சி பாடுகின்றன…
ஆலையங்களில் மணியோசைகள்
ஒலிக்கச் தொடங்கிவிட்டன…
நீண்ட நிசப்தத்தின் மத்தியில்
கனரக வாகனங்கள்
ஒலி எழுப்பியபடி
விரைந்து செல்கின்றன..
கூலித் தொழிலாளர்களான
மீன் வியாபாரிகளும்
மரக்கறி வியாபாரிகளும்
தங்கள் தங்கள்
விற்பனைப் பொருட்களை
கூவியபடி செல்கின்றனர்…
இயற்கையின்
நீண்ட நிசப்தத்தை
நிராகரிக்க முடியாத
ஆளுகைக்குள்
நானும் ஒருவனாக
இயைந்து கொண்டிருக்கின்றேன்.

சி.மௌனேஷ்
மட்டக்களப்பு



# நானும் மதியும்



நாட்கள் தவறாது
பேசிக்கொண்டிருக்கிறேன்
அந்த மதியிடம்

கருமை இரவில்
தனிமை போக்க
அவளுக்கு யான் துணையா
தனித்து நிற்கும் எனக்கு
இவள் துணையா

சில நாட்கள் வளர் பிறையாய்
அன்பை வீசுவாள்
சில நாட்கள் தேய் பிறையாய்
கோபம் காட்டுவாள்

அவள் அன்பின் விளையாட்டு
ஏராளம்
நான் சற்று விழி மூடுகையில்
மேகத்தில் ஒளிந்து
என்னை தேடச் செய்வாள்


அவள் ஒளியில்
என் நிழல் காண்பேன்
என் நிழலில் அவள்
குணம் காண்பேன்

அவளுக்கும் எனக்கும்
இருக்கும் ஈர்ப்பு தான் என்ன

அவள் அவளாக இருப்பாள்
நான் நானாக இருப்பேன்

மீண்டும் அடுத்த
இரவு..............
இப்படியே பயணிக்கும்…!

நினைவின் தோழன்
இம்ரான்




# மே தினம் கொண்டாடுவோம்

அடக்கப்பட்ட தொழிலாளர்
கூட்டத்தின்
அடிமை தளையை அறுப்பதற்காக
ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்களின்
உரிமைகளை வென்றெடுக்க
நசுக்கப்பட்ட நய வஞ்சகத்தை
நாள் தோறும் கலைய வேண்டி
தடுக்கப்பட்ட உரிமையைவெல்ல
தரணிக்கே சங்கநாதம் ஒலித்த
உழைப்போர் தினமாம் 'மே' தினத்தை
உயர்வுடன் போற்றி மகிழ்வோம்

முதலாளி குரல் கேட்டால் போதும்
அஞ்சி பயந்து வாழ்ந்த வர்க்கம்
அச்சம் கொண்டு அடிபணிந்து
அடிமைப்பட்டு வாழ்ந்தது போதும்
துச்சமாக உயிரை விட்டுழைத்து
நச்சரித்த நய வஞ்சகத்தின்
கொட்டத்தை ஒழிக்க
கொண்டாடும் தினமே

இந்த மே தினமாம்

தடைகள் பல தாண்டி வந்து
சளைக்காது சாதனைபுரிந்து
மேடையில் தானேற உரிமை
குரல் கொடுத்து போராடி
கோடை இடிபோல் துன்பங்கள்
வந்த போதும் சளைக்காது
உரிமை பெற்ற தினமே
உழைப்பாளரின் மே தினமாம்

உடப்பூர் வீரசொக்கன்

# தன்னலமற்ற தாய்க்கு

உன் கைப்படாத உணவில்லை
உன் வதனம் காணாத நாளில்லை.

படிக்கும் போதும் உன் வதனம் கண்டேன்
தூங்கும் போதும் உன் வதனம் காண்பேன்

ஈரைந்து மாதங்கள் என்னை
இன்னலுடன் வயிற்றில் சுமந்து
ஈன்றெடுத்தாய் என்னை
இவ்வுலகில் தாயே…!

என் கனவுகள் நனவாக
உன் இரவுகள் பகலாகின.
என் மகிழ்வுக்காய் உன் இன்பங்கள்
துன்பங்களாக உரு மாறின

வாழ்க்கையின் வசந்தத்தை
அன்பளிப்பாய் எனக்கு
அளித்தாய்.
வாழ்க்கையின் யதார்த்தத்தை
படிப்படியாக உணர வைத்தாய்.

சில காலங்கள் உன் மடியில்
சிறகடித்தேன் சிறு
வயதில்
உன் குரல் கேட்காத
நேரமில்லை.

ஆனால் இன்று உன்னை பிரிந்து
விடுதியில் தவிக்கிறேன்.
உன் வதனம் காண
ஆவலாய் துடிக்கிறேன்.



உஸ்மான் ரஸ்மீ
அல்ஹக்கானிய்யா அரபுக் கல்லூரி

# இன்றைய விடியல் பொழுது…

பனித்
தூறல் பொழிந்திடும்
பொன்நிற
காலைப் பொழுது …
பாறைகள் மூடி
பனிமூட்டம் மேடை போட்டு
படர்ந்திருக்கின்றது குளிர் …

பறவைகளின் பரிபாஷைகள்
பனி வானில் பறந்தாடும் அவை
பாடிடும் இனிய சுகராகங்கள் …

கூட்டில் சேவல் கூவ மறந்ததோ
பனியின் தீண்டலில்
இறகுகள் கூம்பிக் கிடக்கின்றன…

முற்றத்தில் சாரல் காற்றும்
மரம் செடி கொடிகளோடும்
ராகம் இசைத்துக் கொண்டிருக்கும் …

பனி வாடை வீசும் காற்றோடு
மலர்கள் தேகம்
சுகம் சேர்ந்து நனைகின்றது …

குளிர் நனைந்த வீட்டுப்பூனை
வாசற் கால்துடைப்பில்
சுவரோரம் சுருண்டுக் கிடக்கின்றது …

மேசையில் தேனீர் கோப்பை
வெண்ணிற ஆவி
சூடாக மூச்சு விட்டுக்
கொண்டிருக்கும் …

குளிர் எடுத்து
சுருட்டிக்கொண்
டிருக்கும்
என்னுடல் பிரியாத
போர்வைக்குள்
கூச்செறியும் மயிர்க் கால்களும் …


உலராத சன்னல் கண்ணாடியில்
மேகத்திரை மூடுபனி
போர்வை ஓரத்தில் ஒளிந்து பார்க்கின்றன
பனிப் போர்வைக்குள்
சோம்பல் முறித்து தெறிக்காது
மனதின் பள்ளத்தில் ஏதோ
தேடித் தொலைக்கின்றது
இன்றைய எனதான விடியல் …

முஸம்மில் கமர்தீன்
கொழும்பு



# தீர்ந்தது தாகம்

பசுமை காணாத
பாலை நிலம்போல
அவள் கருவறை
அனலின் வெப்பமதை விட்டெரிய
அழகாடும் தேகமது அதில் பட்டெரிய
காலமது சுட்டது
கவலையிருளை நிறைத்தது
அனாதை நிலவுபோல



அமாவாசை வாழ்வினிலே !
மறைவாக அழுகிறாள்

இலைமீது தங்கிவிழும்
இளங்காற்று அவள்
தலைகோதிச் செல்லும்

அவளோ !

வாழ்வின் முள்நிமிடங்களில் நடக்கிறாள்
கூர்முனை சொல்லாடும்
எதிர்காற்றில் நடந்து வலியோடு வாழ்ந்து
காலத்தை ஏசுகிறாள்
கடவுளை நிந்திக்கிறாள்
நாத்திக கட்சியில் சேர்ந்து நின்றவள்
இறுதியில் மரணதேவனை மட்டும்
நமபுகிறாள்
எல்லையிட்ட வாழ்வுக்குள்
ஏகாந்த வேதனையோடு

மொத்தமாய் மறந்த
முத்தான துடிப்பொன்று மடியறையில்
வித்தாக அசைவதை உணர்ந்தவள்
பலநேரம் உதவிக்கு அழைக்கிறாள்

தொலைந்து போன தன்பிள்ளையைத்
தொடராக தேடிவந்து
பல்லாண்டு போனபின்பு
தூரத்தில் கண்டுவிட்டு
மலைத்து நின்று

மகிழ்ச்சி கொண்டு
மனங்கொள்ளா சந்தோசத்தில்
எண்திசைகள் எல்லாம் ஓடி
வான்முட்டும் வரை கத்துகிறாள்
அவளை மலடியென்று ஒதுக்கி
வாள்முனை சொல்லாலே
வஞ்சித்தோர் எல்லோர்
காதுகளிலும் அது இறங்கிடவே
சத்தமிட்டுக் கத்துகிறாள்

பூஜ்ஜியமான வாழ்வுக்குள்
ராஜ்ஜிய தேசம் கண்டுவிட்டு
புன்னகை சோலைக்குள்
புதைந்து கிடந்து
படைத்தவனை ஏற்று
பணிந்து தொழுது அழுது
பாதுகாப்பு தேடுகிறாள்

சிந்தையின் எல்லைக்குள்
சிக்கிடாத ஏகனிறைவனின்
செயலுக்கு காலநேரம்
தேவையில்லை
ஞாலமும் அவன் எல்லை

ஏரூர் றமிஸ்
ஏறாவூர்



# "பாலித தெவரபெரும"எனும் மனித நேயனுக்காக…

பல்லின மக்களின் மனங்களில்
பக்குவமாய் குடியேறி
சொல்லிடும் சேவைகள் பலவற்றால்
சொக்கத்தங்கமாய் ஜொலித்தவரே

மக்கள் பணிக்காய் அரசியலை
மானசீகமாய் தேர்ந்தெடுத்து
சிக்கல் சூழும் நேரங்களிலும்
சிநேகிதமாய் பணியைத் தொடர்ந்தவரே

உள்ளூராட்சி மன்ற பதவியில்
உயரிய அந்தஸ்தை அடைந்து
அரசியல் பயணத்தின் ஆரம்பத்தை அதில்
அடித்தளமாய் இட்டவரே

அதிகாரங்களும் பதவிகளும்
அணியணியாய் குவிந்த போதும்
அகந்தை எனும் ஆடையை
அணிந்திடாமல் தவிர்த்தவரே

கலவரங்களும் குழப்பங்களும்
கட்டவிழ்த்து விட்ட போது
களத்திலே காலூன்றி மக்களை
காப்பாற்றிய மனித நேயனே

சிறுபான்மையினரின் உரிமைகள்
சிதைந்திடாமல் காப்பதிலே
சிலாகிக்கப்பட்ட ஒருவராய் இத்
தேசத்திலே ஒலித்தவரே

மக்களோடு மக்களாய்
தோளோடு தோள் சேர்த்து
நட்பு ரீதியான உறவுகளை
நயமாற விதைத்தவரே

மக்களுக்காகவே நான் எனும்
மனம் திறந்த கொள்கையோடு
மன்றங்கள் பலவற்றில்
மகத்தான உரையைச் செய்தவரே

சீரிய சிந்தனையும்
நேரிய செயற்பாடும்
கூரிய தொலைநோக்கும்
குவியலாய் கொண்டவரே

இலங்கை எனும் தீவு
இனவாதத் தீயில் மிதந்த வேளை
இனங்களுக்குள் ஒற்றுமையை
இரட்டிப்பாக்கிட உழைத்தவரே

தேவையை இனம் கண்டு
சேவையை விஸ்தரித்து
வாகையைப் பெற்றிடவே
வாய்ப்பாய் அரசியலைக் கொண்டவரே

அகமும் புறமும் ஒன்றாக
அரசியலில் பயணித்தவன் நீதானே
இதமாய் பழகும் பாங்கினிலே
இலங்கிய மனிதனும் நீதானே

முன்னுதாரண அரசியல்வாதியென
முழுமையாய் பெயரெடுத்தவன் நீதானே
பின்வரும் சமுதாயத்தினருக்கும்
பிரகாச வழியைக் காட்டியவனும் நீதானே
பாலித தெவரபெரும.....

நல்ல சேவகன் உம்பிரிவால்
நாடே அழுததே அறிவீரா
வில்லங்கமில்லா உனக்காக மக்கள்
விம்மி விம்மி அழுததை உணர்வீரா

மனங்களைச் சம்பாதித்து
மக்கள் மனங்களில் வாழும் பாலிதவே
மனமுருகிடும் மக்களின் ஒரே பிரார்த்தனை
உன்
ஆத்மா சாந்தியடையவே!

உசனார் எம்.பஷீர்
ஏறாவூர்

# 2024ஆம் ஆண்டின் சுற்றுலாத்துறை வருமானம் 5 பில்லியன் டொலருக்கும் அதிகமாக இருக்கும்

**பொருளாதார மீட்சியை கருத்திற் கொண்டு விமான நிலைய சூப்பர் சீட்டிழுப்பினை அறிமுகப்படுத்தவும் பரிந்துரை**

**அடுத்த மூன்று மாதங்களில் பொருளாதாரம் தொடர்ந்து வலுவடையும்**

**ஏப்ரல் மாதத்தின் முதல் 28 நாட்களில் 132,152 சுற்றுலாப் பயணிகள் வருகை**

சுற்றுலாத் துறையின் வலுவான வளர்ச்சியால், அதனால் கிடைக்கும் வருமானம் ஆண்டிறுதிக்குள் 5 பில்லியன் டொலர்களை தாண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

"ஏப்ரல் 25 ஆம் திகதியன்றைய நிலவரப்படி, இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 757,000 ஐத் தாண்டியது, இது வெளிநாட்டு இருப்புக்களின் அதிகரிப்புக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது. ஆண்டு இறுதிக்குள் இந்தப் பெறுமதி 5 பில்லியன் டொலர்களை தாண்டும் திறன் பெற்றுள்ளது," என்று அபிவிருத்தி லொத்தர் சபையின் தேசிய அபிவிருத்தி மாநாட்டில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உகந்த சூழலே சுற்றுலாத்துறையின் இந்த சாதகமான போக்குக்குக் காரணம் என்று சேமசிங்க கூறினார்.

2024ஆம் ஆண்டில், இலங்கை சுற்றுலாத்துறையானது 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து 4 பில்லியன் டொலர்களுக்கு மேல் வருமானத்தை ஈட்ட இலக்கு நிர்ணயித்துள்ளது. ஏப்ரல் மாதத்தின் முதல் 28 நாட்களில், இலங்கை மொத்தமாக 132,152 சுற்றுலாப் பயணிகளை வரவேற்றுள்ளது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் (SLTDA) வெளியிடப்பட்ட சமீபத்திய தரவுகளின்படி, ரஷ்யா மற்றும் இங்கிலாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்தே அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர்.

இந்த உத்வேகத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கொழும்பு விமான நிலைய சுப்பர் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பினை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கு இராஜாங்க அமைச்சர் முன்மொழிந்தார், இது சுற்றுலாப் பயணிகள் சூப்பர் பரிசுகளை வெல்லும் வாய்ப்பை வழங்கும் திட்டமாகும். "இந்த வகையான முன்முயற்சியானது பொருளாதார மீட்சிக்கான முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் மற்றும் சுற்றுலாப் பயணிகள் செலவு செய்யும் திறனை ஊக்குவிக்கும் தன்மை கொண்டுள்ளது" என்று அவர் மேலும் கூறினார்.



பொருளாதார மீட்சிக்கான நம்பிக்கையை வெளிப்படுத்திய இராஜாங்க அமைச்சர், பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான நாட்டின் திறன் பற்றிய சந்தேகங்கள் தற்போது மறைந்துவிட்டதாகக் குறிப்பிட்டார். சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் மூலம் நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்வதில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரின் கூட்டு முயற்சியை அங்கீகரித்த சேமசிங்க, தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பங்குதாரர்களிடையேயான பரஸ்பர மரியாதையின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

அடுத்த மூன்று மாதங்களில் பொருளாதாரத்தை தொடர்ந்து வலுப்படுத்துவது குறித்தும் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டார். நாடு நிலையான பொருளாதார மறுமலர்ச்சியை நோக்கி முன்னேறும் போது மக்களுக்கு உறுதியான நன்மைகள் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**அபி**

# நியு அந்தனீஸ் பார்ம்ஸை பாராட்டிய USDA உப செயலாளர் டெய்லர்



அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் (USDA) வர்த்தக மற்றும் வெளிநாட்டு விவசாய விவகாரங்களுக்கான உப செயலாளர் அலெக்சிஸ் டெய்லர் அண்மையில் ஹங்வெல்லவில் அமைந்துள்ள நியு அந்தனீஸ் பார்ம்ஸ் பகுதிக்கு விஜயம் செய்திருந்தார். இலங்கையின் முன்னணி கோழிப்பண்ணைச் செய்கையாளர்களாகத் திகழும் நியு அந்தனீஸ் பார்ம்ஸ், நிலைபேறாண்மை தொடர்பில் பின்பற்றும் செயன்முறைகளையும், அமெரிக்காவுடன் கட்டியெழுப்பும் பிணைப்புகளையும் அவர் பாராட்டியிருந்தார்.

நியு அந்தனீஸைப் பொறுத்தமட்டில் இந்த விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருப்பதுடன், தமது உற்பத்திச் செயன்முறையில் நிலைபேறாண்மையை பின்பற்றிய நவீன வசதிகள் படைத்த பண்ணையை வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது. உப செயலாளர் டெய்லர் தமது இலங்கைக்கான விஜயத்தின் போது, நாட்டின் விவசாயத் துறைக்கு USDA இன் ஆதரவை வலுப்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடியிருந்தார்.

தமது பங்காண்மையினூடாக நாட்டில் உணவுப் பாதுகாப்பை எவ்வாறு மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும் என்பது தொடர்பில் உப செயலாளர் மற்றும் நியு அந்தனீஸ் நிர்வாகத்தை சேர்ந்தவர்கள் தமது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

U.S. Soybean Export Council (USSEC) இனால் வழங்கப்படும் 'Fed with Sustainable U.S. Soy' எனும் முத்திரையை பெற்றுக் கொண்ட முதலாவது சர்வதேச நிறுவனமாக நியு அந்தனீஸ் திகழ்கின்றது. அதனூடாக அமெரிக்காவிடமிருந்து நிலைபேறான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

# வணிக அடித்தளத்தை விரிவாக்கும் Kaspersky

உல களாவிய இணையப் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் தனியுரிமை நிறுவனமான Kaspersky, இலங்கை, கம்போடியா மற்றும் பங்களாதேஷ் உட்பட ஆசிய பசுபிக்கிலுள்ள (APAC) புதிய பிரதேசங்களில் அதன் விரிவாக்கத்தை மேற்கொண்டுள்ளது. இந்த மூலோபாய நடவடிக்கையானது, பிராந்தியத்தில் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் முழுவதும், குறிப்பாக நிறுவன இணையப் பாதுகாப்பு சந்தையில் டிஜிட்டல் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் நிறுவனத்தின் பணியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை இது குறிக்கிறது.

இணைய அச்சுறுத்தல்கள் உலகளவில் தொடர்ந்து உருவாகி, பெருகி வருவதால், Kaspersky அதன் முழுமையான இணையப் பாதுகாப்பு தீர்வுச் சேவைகளை APAC இல் வளர்ந்து வரும் சந்தைகளுக்கு விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தைக் கொண்டுள்ளது. புத்தாக்கமான தீர்வுகள் மற்றும் நிபுணத்துவத்தை வழங்குவதில் நிரூபிக்கப்பட்ட சாதனையுடன், கம்போடியா, இலங்கை மற்றும் பங்களாதேஷில் தனிநபர்கள், அரசாங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் இணைய பாதுகாப்பு சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள நிறுவனம் தயாராக உள்ளது.

Kasperskyஇன் இந்த புதிய பிராந்தியங்களில் தனது சந்தை தடத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கையானது, அரசு, நிதி, சுகாதாரம் மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உள்ள நிறுவனங்களுக்கு அவர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப செயல்படும் இணைய பாதுகாப்பு தீர்வுகளை பெற்றுக் கொள்ள உதவும். நிறுவனத்தின் விரிவான கோப்புறை தனிநபர்கள், சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் (SMBகள்), மற்றும் பெரிய நிறுவனங்கள் மற்றும் முக்கியமான உட்கட்டமைப்பு நிறுவனங்களுக்கான இணைய பாதுகாப்பு தீர்வுகளை உள்ளடக்கியது.

# மக்கள் வங்கியின் அனுசரணையுடன் தொழில்நுட்ப திறன் விருத்தி பயிற்சி

இலங்கையில் டிஜிட்டல் வங்கிச் சேவையில் முன்னோடியான மக்கள் வங்கி, தனது "நாளைய புத்தாக்குனர்களுக்கு வலுவூட்டுதல்" என்ற இளைஞர்களுக்கான தொழில்நுட்ப திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்காக 100 மாணவர்களை வெற்றிகரமாக தெரிவு செய்துள்ளதாக பெருமையுடன் அறிவித்துள்ளது. சர்வோதய இயக்கத்தின் தகவல் தொழில்நுட்ப கல்விப் பிரிவான Sarvodaya Fusionஇன் கூட்டாண்மையுடனான இந்த முயற்சி, எதிர்கால தொழில்களுக்கு அத்தியாவசியமான தொழில்நுட்பவியல் திறன்களை தேசத்தின் இளைஞர்களுக்கு வழங்கி, அவர்களை தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

சமூக மேம்பாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலமான தனது நிறுவன சமூகப் பொறுப்புணர்வில் மக்கள் வங்கி காண்பிக்கும் அர்ப்பணிப்பை இம்முயற்சி பிரதிபலிக்கின்றது. நாடெங்கிலுமிருந்து இதற்காக விண்ணப்பிப்பதற்கு ஆர்வம் கொண்டவர்கள் மத்தியிலிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மத்தியில், புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தெரிவு 2024 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இடம்பெற்றது.

வட மத்திய, வட மேல், மேல் மாகாணங்கள் உட்பட பல்வேறு மாகாணங்களில் இதற்கான தெரிவு நடைமுறை இடம்பெற்றது.

'நாளைய புத்தாக்குனர்களுக்கு வலுவூட்டுதல்: இளைஞர் தொழில்நுட்ப திறன்கள் அபிவிருத்தி செயற்திட்டம்' ஆனது கணினி விஞ்ஞான டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தில் 15 – 19 வயதிற்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 100 புலமைப்பரிசில்களை வழங்கும். கணனி விஞ்ஞானத்தின் பல்வேறு பட்ட அம்சங்கள் இக்கற்கைநெறியில் அடங்கியுள்ளன.

# One Galle Face Mall இல் 'SOS Wonder Village'

கொழும்பு One Galle Face Mall உடன் கைகோர்த்து இலங்கை SOS சிறுவர் கிராமங்கள், SOS Wonder Village நிகழ்வை முன்னெடுத்திருந்தது. தேவைகளைக் கொண்ட சிறுவர்களின் நலனுக்காக நிதி திரட்டுவது மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையாக இது அமைந்திருந்தது.

SOS Wonder Village நிகழ்வு கொழும்பிலுள்ள One Galle Face Mall இல் மார்ச் மாதம் நடுப்பகுதி முதல் ஏப்ரல் மாதமுற்பகுதி வரை வார இறுதி நாட்களில் நான்காம் மாடியிலுள்ள Playscape பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த காலப்பகுதியில், 1000க்கும் அதிகமான சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் SOS Wonder Village இல் இணைந்து, களிப்பான விநோத அம்சங்களில் பங்கேற்றிருந்தனர். இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்ததனூடாக விநோத அம்சங்களை அனுபவித்தது மட்டுமன்றி, சிறுவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான பங்களிப்புகளையும் வழங்கியிருந்தனர்.

சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கான வர்ணம் பூசும் அமர்வுகளை விருந்தினர்கள் அனுபவித்திருந்தனர். சிங்கிதி அவுருது குமார மற்றும் குமாரிய தெரிவும் நடைபெற்றது. பல உள்ளக விளையாட்டுகளும் முன்னெடுக்கப்பட்டன. இந்த விளையாட்டுகளில் பங்கேற்று வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதியான பரிசுகளும் வழங்கப்பட்டன. SOS சிறுவர் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு மாதாந்த அல்லது வருடாந்த செலவுகளுக்கான தொகையை அனுசரணை வழங்குவதற்கான வாய்ப்பு பங்குபற்றுநர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

# சிறந்த செயற்பாட்டாளர்களை கௌரவித்த டோக்கியோ சீமெந்து

டோக்கியோ சீமெந்து குழுமம் தனது வருடாந்த விநியோகத்தர் மாநாடு 2024 நிகழ்வை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் முன்னெடுத்திருந்தது. நாடு முழுவதையும் சேர்ந்த 140க்கும் அதிகமான சிறப்பாக தமது பங்களிப்பை வெளிப்படுத்தியிருந்த விற்பனை பங்காளர்களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் சிற்றி ஹார்ட்வெயார் அன்ட் ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு ஆஞ்சனேயர் சீமெந்து அன்ட் ஹார்ட்வெயார், குருநாகல் – நஷனல் டிரேடிங் ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி – சண்முகம் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி – எமரல்ட் ஹார்ட்வெயார் மற்றும் கட்டுநேரிய – ஹன்சிக ட்ரான்ஸ்போர்ட் ஆகியன 2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த விநியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தன.

டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பிஎல்சியின் நிறைவேற்று முகாமைத்துவ அணியினரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், முகாமைத்துவ பணிப்பாளர் எஸ். ஆர்.ஞானம், குழும பிரதம செயற்பாட்டு அதிகாரி எம். தயானந்தன், ஆலோசனைப் பணிப்பாளர் கிறிஸ்டோபர் பெர்னாண்டோ மற்றும் சந்தைப்படுத்தல் குழும பொது முகாமையாளர் தசந்த உடவத்த ஆகியோர் பங்கேற்றிருந்தனர். நாடு முழுவதையும் சேர்ந்த டோக்கியோ சீமெந்து விற்பனையாளர்கள் இந்நிகழ்வில் ஒன்றிணைக்கப்பட்டு, நினைவில் நிலைத்திருக்கும் கொண்டாட்டமாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பிஎல்சி முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஆர்.ஞானம், முழு விற்பனை வலையமைப்பின் அர்ப்பணிப்பான செயற்பாட்டையும் பாராட்டியிருந்தார். வியாபார செயற்பாடுகளின் வரலாற்றில் மிகவும் சவால்கள் நிறைந்த காலப்பகுதியிலும் விற்பனை பங்காளர்களின் ஒப்பற்ற ஆதரவுடன் வெற்றிகரமாக செயலாற்றுவதற்கு முடிந்ததாக குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவிய கடினமான பொருளாதார சூழ்நிலை தொடர்பில் ஞானம் குறிப்பிடுகையில், தளம்பல்களுடனான சந்தைப்படுத்தல் சூழலிலும், டோக்கியோ சீமெந்தினால், தேசிய கடமையை பூர்த்தி செய்ய முடிந்ததுடன், சக குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் பங்களிப்புச் செய்ய முடிந்தது. நிறுவனத்தின் விநியோகத்தர்கள் மற்றும் விற்பனையாளர்களின் ஆதரவினால் தம்மால் இதனை நிறைவேற்ற முடிந்ததாக கூறினார்.

# 'இலங்கையின் தலைசிறந்த வங்கி' மகுடம் சூட்டப்பட்ட கொமர்ஷல் வங்கி



தொடர்ந்து 22ஆவது வருடமாக 'இலங்கையின் தலைசிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கி' தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் செயல்படும் குளோபல் பினான்ஸ் சஞ்சிகையால் வெளியிடப்பட்டுள்ள 2024இன் உலகின் தலைசிறந்த வங்கிகள் பட்டியலில் கொமர்ஷல் வங்கியும் இடம் பிடித்துள்ளது.

சிறந்த வங்கிகளுக்கான தனது அங்கீகாரமானது நிதி நிறுவனங்கள் வழங்கும் விரிவான பல்வேறு வகையான சேவைகள், நீண்ட கால நம்பகத்தன்மை மற்றும் தொழில்நுட்ப ரீதியான கண்டுபிடிப்புக்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டவை என்று குளோபல் பினான்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த கீர்த்திமிக்க விருதை வென்றுள்ளமை பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க "எமது வங்கி செயற்பாட்டு ரீதியாக கடந்த நிதி ஆண்டில் பல மைல்கற்களை கடந்துள்ளது.

நிலைத்தன்மையில் புதிய தளத்தை அது உருவாக்கியுள்ளது. டிஜிட்டல் மயமாக்கல், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான உதவிகள், மகளிர் தொழில்முயற்சியாளர்கள் தமது தொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகள் என்பன இதில் அடங்கும். சந்தையில் நிலவிய நிலையற்ற தன்மைகளை சமாளித்துக் கொண்டே இவை அனைத்தும் எட்டப்பட்டன.

அத்தோடு எமது சந்தை தலைமைத்துவ நிலையை தக்க வைத்துக் கொண்டு கடந்த ஆண்டும் உறுதியாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. கொமர்ஷல் வங்கிக் குழுவினரால் சாத்தியமாக்கப்பட்ட கொமர்ஷல் வங்கியின் திடமான ஸ்திர நிலைக்கு இந்த விருது மகத்தான ஒரு கௌரவமாகவும் அமைந்துள்ளது" என்றார்.

# லுமாலா– ZeroPlastic முன்னெடுப்பினூடாக பிளாஸ்ரிக் பாவனையற்ற புத்தாண்டு



ஸ்மார்ட் போக்குவரத்து மற்றும் சூழல் நட்பான சேவைகளையும், தீர்வுகளையும் வழங்குவதில் முன்னோடியாகத் திகழும் லுமாலா என அறியப்படும் சிட்டி சைக்கிள் இன்டர்ட்ரீஸ் மெனுபக்ஷரிங் (பிரைவட்) லிமிடெட், விகாரமகாதேவி பூங்காவில் ஏப்ரல் 23ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட ZeroPlastic முன்னெடுப்பு புத்தாண்டு நிகழ்வின் பிரதான அனுசரணையாளராகத் திகழ்ந்தது.

இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் பங்கேற்றிருந்ததுடன், இந்த ஆண்டின் தமிழ், சிங்கள புத்தாண்டை வரவேற்கும் வகையிலான கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டனர். நிகழ்வின் விசேட அம்சமாக, ஒற்றைப் பாவனை பிளாஸ்ரிக் பொருட்கள் எதுவும் இந்த நிகழ்வின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஏனையவர்களுக்கு முன்மாதிரியான செயற்பாடாக இது அமைந்திருந்தது. சூழல் நிலைபேறாண்மைக்கான திரண்ட அர்ப்பணிப்புடன், இந்த நிகழ்வின் போது, பாரம்பரியம் மற்றும் சூழல்அக்கறை ஆகியன இணைந்ததாக கொண்டாட்டங்கள் அமைந்திருந்தன.

ஏனைய வைபவங்களுக்கும் முன்மாதிரியானதாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

பாரம்பரிய விளையாட்டுகள் முதல் கலாசார செயற்பாடுகள் வரை, புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஒவ்வொரு அம்சமும் நிலைபேறாண்மையை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தன. திரண்ட முயற்சிகளினூடாக, லுமாலா மற்றும் ZeroPlastic முன்னெடுப்பு இணைந்து, கொண்டாட்ட வைபவங்கள், புவிக்கு நட்பான வகையில் முன்னெடுக்கப்படக்கூடியதை வெளிப்படுத்தியிருந்தன.

# வவுனியூர் இரா. உதயணன் இலக்கிய விருது 2023






இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, இணைந்து வழங்கி வரும் வவுனியூர் இரா. உதயணன் இலக்கிய விருது 2023, இம்முறை வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில், 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தமிழ் இலக்கிய பெரு விழாவும் "வளர் தமிழ் கலைச்சொற்கள்" நூல் அறிமுகமும் எனும் தலைப்பில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது.

வவுனியூர் உதயணன் முன்னிலையில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் த. மங்களஸ்வரன், பேராசிரியர் வ. மகேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

ஊடக விருந்தினராக இ. பாரதி, எஸ். ஸ்ரீகஜன், வி.பிரபாஹன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வரவேற்புரையை எழுத்தாளர் மைதிலி தயாபரன் வழங்கினார், தொடக்கவுரையை கதிர் சுவர்ணராஜா நிகழ்த்தினார். கவிஞர் மைக்கல் கொலின் கவிவாழ்த்தினை பாடினார். வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

பேராசிரியர் சபா. ஜெயராசாவின் "வளர் தமிழ் கலைச்சொற்கள்" நூல் அறிமுகத்தை பேராசிரியர் வ. மகேஸ்வரன் நிகழ்த்தினார்.

இதன் போது சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஷ்ணா, கமலநாயகி ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆகியோரின் ஞாபகார்த்தமாக விருதுகளும் வழங்கப்பட்டன.

அதி உயர் இலக்கிய விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது. சிறந்த ஆவணவாக்கல் சேவை விருது, சிறந்த ஊடகவியலாளர் விருது, சிறந்த இளம் ஊடகவியலாளர் விருது. சிறந்த நாவல் இலக்கிய விருது, சிறந்த சிறுகதை இலக்கிய விருது, சிறந்த கவிதை இலக்கிய விருது, சிறந்த சிறுவர் இலக்கிய விருது, சிறந்த தமிழ் வளர்ச்சி இலக்கிய விருது, சிறந்த மொழிபெயர்ப்பு இலக்கிய விருது, சிறந்த இன நல்லிணக்க இலக்கிய விருது, சிறந்த அயலகப் படைப்பு விருது இலக்கிய விருது, என்பன வழங்கப்பட்டன.

நன்றியுரையை தமிழ்தென்றல் தம்பு சிவா வழங்கினார். நீண்ட இடைவெளிக்கு வவுனியா ஒரு தமிழ் இலக்கிய பெருவிழா கண்டது.

***விருது பெற்றோர் விபரம்***

**ச. அருளாந்தம் கேணிப்பித்தன்**
**திருகோணமலை,**
**நயிமா சித்திக், கம்பளை,**
**நி.பி. அருளானந்தம், வவுனியா.**

***பாக்பர் யோவான்பிள்ளை சந்திரசேகரம், திருமதி பாக்கியம் சந்திரசேகரம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது.***

***வாழ்நாள் சாதனையாளர் விருது.***

**வி. ரி. இளங்கோவன், பிரான்ஸ்,**
**அற்புதராணி காசிலிங்கம்**
**(மலரன்னை) திருநெல்வேலி**
**கோகிலா மகேந்திரன்**
**தெல்லிப்பழை.**

***சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஷ்ணா, திருமதி கமலநாயகி ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆகியோரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது.***

***சிறந்த ஆவணவாக்கல் சேவை விருது.***

**என். செல்வராஜா.**

***தம்பு– தையல்நாயகி ஆகியோரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது***

***சிறந்த ஊடகவியலர் விருது***

**நா. பத்மசீலன் , கொழும்பு 06.**
**சந்திரா பெர்ணான்டோ, கொழும்பு 13.**

***சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஷ்ணா, கமலநாயகி ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆகியோரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது.***

***சிறந்த இளம் ஊடகவியலாளர் விருது***

**நவரட்ணம் கபில்நாத் வவுனியா.**

***திரு. சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஷ்ணா, திருமதி கமலநாயகி ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆகியோரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது.***

***சிறந்த நாவல் இலக்கிய விருது.***

**திரு. சிவ ஆரூரன் அல்வாய்**
நூல்: " ஊமை மோகம்" (2020)

***வேலுப்பிள்ளை – சிவஞானம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது.***

***சிறந்த நாவல் இலக்கிய விருது.***

**ஆ. மு. சி. வேலழகன் திருப்பழுகாமம்**
நூல் "அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு" (2021)

**ஏ.எஸ். உபைத்தல்லா மூதூர்**
"வேராகிப்போன மனிதர்கள்" (2022)

# சுகாதார சேவையில் மக்கள் மனம் கவர்ந்தவர் மருத்துவர் கேதீஸ்வரன்

## *யாழ் மாவட் சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரனுக்கு நேற்று மணிவிழா*



சிலரைப் ப தவிகள் பெருமைப்படுத்துகின்ற ன . வேறு சிலர் பதவிகளைப் பெரு மைப்படுத்துகிறார்கள். இவற்றில் நி ச்சயமாக இரண்டாவது வகையான ஆளுமையாகவே நான் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனைப் பார்க்கிறேன். மிகவும் இளம் வயதில் இலங்கை சுகாதாரத் துறையில் பல உயர்பதவிகளை வகித்து அளப்பரிய சேவையாற்றிவரும் அவர் நேற்று தனது 60 வது அகவையில் பிரவேசித்தார்.

வடமராட்சியின் கரவெட்டி காலங்காலமாக பல்வேறு துறைகளிலும் தலைசிறந்த ஆளுமைகளைத் தோற்றுவித்த பாரம்பரியம் கொண்ட மண் ஆகும். தமிழ் மண்ணில் முதன்முதலான கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையா, தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் எம். சிவசிதம்பரம் தொடக்கம் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்று இந்த ஆளுமைகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

மணிவிழாக்காணும் கேதீஸ்வரன் கரவெட்டியை அடையாளப்படுத்தும் பெருமைக்குரிய ஆளுமைகளில் ஒருவராக விளங்குகிறார். சோவியத் ரஷ்யாவில் தனது மருத்துவக் கல்வியைப் பெற்ற கேதீஸ்வரன், சமுதாய மருத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார்.

தனது 25ஆவது வயதில் கேதீஸ்வரன், மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரியாக, முதல் நியமனம் பெற்றார்.

அதன் பின்னர், வவுனியா பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரி, வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிகளை வகித்து தற்போது யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சேவையாற்றி வருகிறார். சுகாதார சேவையில் இளவயதில் இருந்தே முக்கியமான பதவிகளை வகித்து வளமான அனுபவத்தைக் கொண்டிருக்கும் கேதீஸ்வரன் இன்று இலங்கையில் உள்ள முக்கியமான சுகாதார சேவை அதிகாரிகளில் ஒருவராக விளங்குகிறார்.

தனது நிருவாகத்தின் கீழ் இருக்கும் பிராந்தியங்களின் சுகாதார சேவைகளின் சிறப்புக்காக அரச கௌரவத்தையும் அவர் பல தடவை பெற்றிருக்கிறார்.

கேதீஸ்வரனின் எளிமையும் நாகரிக அணுகுமுறையும் மக்களுடனான தொடர்பாடல்களில் அவரின் கண்ணியமான நடத்தையுமே, அவரை இன்றைய உயர்ந்த நிலைக்கு கொண்டுவந்தன.

சுகாதாரசேவை அதிகாரிகளுக்கு மாத்திரமன்றி அனைத்துத் துறைகளையும் சேர்ந்த உயரதிகாரிகளுக்கும் இருக்க வேண்டிய சகல உயர் பண்புகளையும் உருவகப்படுத்தும் சிறந்த ஒரு ஆளுமையாக அவர் பிரகாசிக்கிறார்.

அவரது அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவைகளை ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் நான் அறிவேன். வவுனியாவில் அவர் பல வருடங்கள் சேவைசெய்து அந்த பிராந்திய மக்களினதும் பிரதிநிதிகளினதும் பெருமதிப்புக்குரியவராக திகழ்ந்த மாண்பை காலஞ் சென்ற மூத்த பத்திரிகையாளரான எனது நெருங்கிய நண்பர் வவுனியா பொன்னையா மாணிக்கவாசகம் என்னிடம் பல தடவைகள் கூறியிருக்கிறார்.

கேதீஸ்வரனின் நிருவாகத்தின் கீழ் அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் சுகாதாரசேவையில் முன்னெடுக்கப்படுகின்ற மேம்பாட்டு நடவடிக்கைகள் அவருடைய நிருவாகத் திறமைக்குச் சான்று பகர்கின்றன. கரவெட்டி ஆதார வைத்தியசாலையை இன்று பல்வேறு வசதிகளையும் கொண்டதாக மேம்படுத்தியதில் கேதீஸ்வரன் செய்த பங்களிப்பு அளப்பரியது. கேதீஸ்வரனின் மணிவிழாவை கரவை மக்களும் புலம்பெயர்ந்த உறவுகளும் நேற்று விமரிசையாகக் கொண்டாடினர். நேற்றுக் காலை நெல்லியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் முன்னாள் அதிபர் நடராஜா தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற விழாவில் மருத்துவத்துறை மற்றும் கல்வித்துறை உட்பட பல்வேறு துறைகளையும் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு கேதீஸ்வரனை பாராட்டிக் கௌரவித்தனர். அவரின் சேவைகளையும் சாதனைகளையும் விளக்கும் 'ஆற்றலாளன்' என்ற மகுடத்திலான மணிவிழா மலர் நேற்றைய விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மணிவிழாவுக்கான விரிவான ஏற்பாடுகளை செய்வதில் முன்னின்று உழைத்த கரவை திரு இருதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இளையதம்பி இராகவனும் அவரைச் சார்ந்த குழுவினரும் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

கேதீஸ்வரன் ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ்ந்து குறிப்பாக இலங்கை சுகாதார சேவைக்கும், மக்களுக்கும் தொடர்ந்து பயனுறுதியுடைய சேவையைத் திறம்படச் செய்ய வேண்டுமென்று கரவை மக்களுடன் சேர்ந்து வாழ்த்துகிறேன்.

*வீரகத்தி தனபாலசிங்கம்*

# "ஆத்தங்கரை ஓரத்தில " பாடலுக்கு விருது வென்ற பிரபாலினி



நோர்வே சர்வதேச தமிழ் திரைப்பட விழாவில் பிரபாலினிக்கு விருது கிடைத்துள்ளது.

தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா காதலர் தினத்தன்று வெளியிட்ட "ஆத்தங்கரை ஓரத்தில" பாடல் மாபெரும் வெற்றி படைத்துள்ளது.

Youtubeஇல் 1மில்லியனுக்கும் மேல் பார்வையாளர்களால் பாராட்டப்பட்ட பாடல் இது.

பிரபாலினி பிரபாகரன் வெளியிட்ட Queen Cobra என்ற ஆடியோ ஆல்பம் தொகுப்பில் இருந்து வெளியான வீடியோ ஆல்பம் இது. முழுக்க முழுக்க இலங்கையில் படமாக்கப்பட்டது.

ஒரு இலங்கைப் பெண்ணான பிரபாலினி எழுதி, இசையமைத்து, பாடி, தயாரித்து, நடித்த பாடலும் இதுவாக மட்டுமே இருக்கிறது என்பதும் இந்தப்பாடலின் சாதனை தான்.

பிரபாலினி, ஈழத்து மெல்லிசை மன்னர் எம்.பி. பரமேஷ் மற்றும் சங்கீத பூஷணம் சிவமாலினி பரமேஷ் தம்பதிகளின் மூத்த மகளாவார். இலங்கையின் 1968களில் முதல் தமிழிசைத் தட்டை தனது காதலிக்காக "உனக்குத்தெரியுமா நான் உன்னை நினைப்பது" என்று எழுதி, இசையமைத்து, பாடி, தயாரித்து வெளியிட்ட மூத்த கலைஞர் ஈழத்து மெல்லிசை மன்னர் எம். பி.பரமேஷின் மகள் தான் இந்த பிரபாலினி பிரபாகரன். அவரது பெற்றோரின் வழியில் இலங்கையின் முதல் பெண் இசையமைப்பாளர் என்ற பெருமைக்குரியவர் ஆகின்றார் பிரபாலினி.



நோர்வே சர்வதேச தமிழ் திரைப்பட விழாவில் பிரபாலினிக்கு இந்த விருது கிடைத்துள்ளது. அவரை நாமும் வாழ்த்திப் பாராட்டுவோம்.

# பரதநாட்டிய அரங்கேற்றம்



கமலநாதன் கிரிஷங்கர் மற்றும் தாரணி கிரிஷங்கர் தம்பதிகளின் புதல்விகளான, அபினேத்ரி மற்றும் மஞ்சரி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றமும், அவர்களது இளைய புதல்வியான சதுரியின் சலங்கை பூஜையும், இம்மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை பி,ப 5.30க்கு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவர்கள் நாட்டிய கலாமந்திர் ஸ்தாபகரும், பணிப்பாளருமான கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகளாவர். இவ்வரங்கேற்றத்துக்கு மேல் மற்றும் வட மேல் மாகாண முன்னாள் ஆளுநர் கே.சி. லொகேஸ்வரன், பிரதம அதிதியாகவும் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையின் அதிபர் அருட் சகோதரி சரித்தா தண்டல்கே, பிரபல பரதநாட்டியக் கலைஞர் கலைச் செம்மல் பாலசுந்தரி பிராதலிங்கம், சோல்ஸ் சவுண்ட்ஸ் அகடமியின் பணிப்பாளர் சௌந்தரி டேவிட் ரொட்றிக்கோ ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கலந்துகொள்வர்.

வி. ஜெகதீசன்



# 200 நட்சத்திரங்கள் இணைந்து வெளியிட்ட முட்டக்கண்ணி ஆல்பம்




தேசிய விருதுபெற்ற இசையமைப்பாளர் ஸ்ரீகாந்தேவா இசையில் இலங்கை கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதிய முட்டக்கண்ணி ஆல்ப பாடல் வெளியாகியுள்ளது.

இந்த பாடலை ஜேர்மனியை சேர்ந்த பாடகர் முல்லைசசி பாடியுள்ளார்.

பாடலில் நடன இயக்குனர் ஸ்ரீதர் மாஸ்டர், காயத்ரி சான் ஆகியோர் நடித்துள்ளனர்.

நடிகர் விஜய் சேதுபதி, விஜய் ஆண்டனி, ஆர்யா, சாம், பரத், சாந்தனு பாக்கியராஜ், ஜோன் விஜய், சினேகா, சங்கீதா உட்பட ஏராளமான தமிழ் சினிமா கலைஞர்களுடன் மலேசியா பாராளுமன்ற உறுப்பினர் டத்தோ எம்.சரவணன், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் உட்பட 25 நாடுகளில் உள்ள 200 நட்சத்திரங்கள், இப்பாடலை வெளியிட்டுவைத்துள்ளனர்.

விஜய் ஆண்டனியின் நான் திரைப்படத்தில் இடம்பெற்ற "தப்பெல்லாம் தப்பே இல்லை" பாடலின் ஊடாக தமிழ் சினிமாவில் நுழைந்து "ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்" பாடலின் ஊடாக உலகத் தமிழர்களின் உள்ளங்களை கவர்ந்த பொத்துவில் அஸ்மினின் "முட்டக் கண்ணி" பாடல் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பினை பெற்று வருகிறது.

# புதிய வடமேல் மாகாண ஆளுநருக்கு வாழ்த்து



வடமேல் மாகாண ஆளுநர் பதவியேற்றிற்கும் முன்னால் சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமதுக்கு நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்வதாகவும் எதிர்காலத்தில் அவரது பணிகள் சிறப்பாக அமைய பிரார்த்திப்பதாகவும் ஸ்ரீ லங்கா ஐக்கிய முன்னணியின் தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி சதீக் (முப்தி) தெரிவித்தார் .

அவர் மேலும் குறிப்பிடுகையில், நசீர் அஹமத், கடந்த காலங்களில் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலகட்டத்திலும், சுற்றாடல் துறை அமைச்சராக இருந்த காலகட்டத்திலும், கிழக்கு மாகாண மக்களுக்கு தமிழ், முஸ்லிம் என்ற பேதமின்றி உன்னதமான சேவைகள் செய்தவர். வடமேல் மாகாணத்தில் இரண்டு மாவட்டங்கள் இருக்கின்றன. புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். ஆனால் குருநாகல் முஸ்லிம் சமூகம் சிறுபான்மையாக வாழ்கின்ற ஒரு மாவட்டம். 163 க்கும் மேற்பட்ட முஸ்லிம் கிராமங்கள் அங்கே காணப்படுகின்றன. கல்வியிலும் உயர்ந்த மாவட்டமாகும். இருப்பினும் 20 வருடமாகியும், இன்னும் முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாத ஒரு மாவட்டமாக இந்த மாவட்டம் காணப்படுகின்றது, நசீர் அகமதுக்கு ஆளுநர் பதவி கிடைத்திருப்பது குருநாகல் மாவட்ட சிறுபான்மை மக்களுக்கு பக்கபலமாக அமையும் என்றும், ஆளுநரின் அதிகாரத்தை குருநாகல் மாவட்ட மக்கள் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டுமானால் குருநாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்து அமைப்புகளும் ஆளுநர் நசீர் அஹமதுடன் இணைந்து மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு கட்சி பேதமின்றி பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# நெஞ்சிலாடும் நினைவலைகள்



சுகைரா சிறு வயதிலிருந்து பத்திரிகை, வானொலிக்குப் பல ஆக்கங்களை எழுதிவருபவள். அவற்றோடு மட்டும் நின்றுவிடாமல், சில நூல் வெளியீடுகளையும் அவ்வப்போது செய்து வருவாள். புத்தகங்களை நூலுருவாக்கம் செய்து விடலாம். இலக்கியவாதிகளையும், கலைஞர்களையும், ஆர்வலர்களையும், அன்பர்களையும், சொந்தங்களையும் தேடிப் பிடித்து அழைப்பிதழ்களைக் கொடுப்பதில் போதும் போதுமென்றாகிவிடும். எவ்வாறாயினும், அவளது நூல் வெளியீட்டு விழா கலகலப்பாக நடந்து முடிந்துவிடும். இவ்வாறிருக்கையில், அவளது நூல்களில் ஒன்றான "மிதுஹாவின் நந்தவனம்" பற்றிய இரசனைக் குறிப்புகளை ரிம்சா பத்திரிகையில் எழுதியிருந்தாள். அதனை வாசித்து விட்டு

பலரும் நூலினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டனர். அதன்படி சுகைராவும் அனுப்பி வைத்தாள். அன்று சனிக் கிழமைக் காலை தொலைபேசி பல முறை அடித்துக் கொண்டேயிருந்தது. சுகைரா அவசர அவசரமாக வந்து தொலைபேசியை எடுத்துக் காதில் வைத்தாள். மறுமுனையிலிருந்து " குட் மோனிங் மெடம்" உங்களது மிதுஹாவின் நந்தவனம் நூலின் இரசனைக் குறிப்பினை வாசித்தேன். அதிலிரு நூல்களை எனக்கு அனுப்பி வையுங்கள் என்றார். அவரது விலாசத்தையும் கூறினார். அவ்வாறே சுகைராவும் அனுப்பி வைத்தாள். நூலின் அன்றைய விலை150 ரூபாய். அவரோ 5000 ரூபாய் அனுப்பி வைத்திருந்தார். புத்தகத்தை விட, தொகை அதிகமாக உள்ளதே என்றாள்.

மெடம்..! நான் உங்க எழுத்துக்குச் செய்யும் சிறு அன்பளிப்பு. நீங்க தொடர்ந்து எழுத வேண்டும். பல நூல்கள் வெளியிட வேண்டும். பெண் ஆளுமையாக இவ்வுலகில் பிரகாசிக்க வேண்டும். எனது அட்வான்ஸ் வாழ்த்துக்கள் மெடம். அத்துடன் ஆயிரம் ரூபாய் பெறுமதியான இரு புத்தகங்களை அனுப்பி வைத்திருந்தார். இது என்னிடம் இருப்பதை விட, உங்களுக்கு மிகவும் பிரயோசனமாகவிருக்கும் என்றார். உங்க புத்தகத்தை வாசித்தேன். நீங்க நந்தவனத்தைத் தேடி எங்கையும் போக வேண்டாம். எமது வீட்டுக்கு ஒரு முறை விஜயம் செய்யுங்க. நீங்க எதிர்பார்க்கும் அத்தனை பூ மரங்களும் நமது வீட்டிலுள்ளது என்றார்.

அவர் கதையைக் கேட்டதும், எப்படியும் அவரில்லம் சென்று வர வேண்டுமென சுகைராவின் உள்ளம் துடியாய்த் துடித்தது. இதுபற்றி அவளது கணவரிடம் கூறினாள். அவரில்லம் எவ்வாறு வர வேண்டுமெனக் கேள். எப்போதும் வருமாறு அழைக்கிறார், ஒரு முறை போய் வருவோமே என்றார்.

சுகைரா அவரது அழைப்புக்காகக் காத்திருந்தாள். அவரும் அழைப்பை ஏற்படுத்தினார். உங்களில்லம் வருவதாயின், எவ்வாறு வரலாம்..? நீங்க ஓட்டமாவடியில் வந்து Dr.பாலகிருக்ஷ்ணனின் வீடு எங்கே எனக் கேட்டால். யாரும் சொல்லித் தருவாங்க. நான் முஸ்லிம்களோடு நெருக்கமாகப் பழகுபவன். எனக்குச் சாதி, மதம் வேறுபாடில்லை.

எல்லோரும் சமமானவர்கள். எல்லோரோடும் அன்பாகவே பழகுவேன். குட்டிப் பிரசங்கமே நடத்திமுடித்தார். சுகைராவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒரு நாள் கூட, தான் ஒரு வைத்தியர் எனக் கூறவில்லை. அவரது பேச்சில் பண்பும், பணிவுமே குடி கொண்டிருந்தன."நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த படித்தவர்களும், பணக்காரர்களும் அவளின் உள்ளத்தைச் சுற்றிச் சுற்றி வலம் கொண்டிருந்தார்கள்.

சுகைரா தனது குடும்பத்துடன் வாழைச்சேனை நோக்கிப் பயணமானாள். கல்குடா அவரது வசிப்பிடமாகும். அன்போடு வரவேற்றார். மதிய நேரச் சாப்பாட்டைச் சாப்பிட்டுச் செல்லுமாறு கெஞ்சினார். அவரது விருப்பத்துக்கு அவர்கள் சம்மதித்தனர். விருந்துபசாரம் பிரமாதம். அவரது மகன் 'கொட்டல் மனேஜ்மன்ட், சிங்கப்பூரில் முடித்தவர். இக் கொட்டலுக்கு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளே அதிகமாக வருகை தருகின்றனர். எமது தோட்டத்திலிருந்து தேங்காய்கள், காய்கறிகள், மரக்கறிகள், கீரைகள், பழங்கள் என்பன பெறப்படுகின்றன. உடனடியாகவும், புதியதாகவுமுள்ளன. சுவாரஸ்யமான உரையாடல்களுடன் மதியச் சாப்பாடு முடிவடைந்தது. தனது தோட்டத்தைச் சுற்றிக் காட்டினார். வளவைச் சுற்றி மதில்கள் அமைக்கப்பட்டிருந்தன. மதிலோரங்களில் மஞ்சள், பச்சை, சிவப்பு, கபிலம் எனக் குரோட்டன்கள் கண்களைக் கவர்ந்தன.

அதன் மத்தியில் ரோசாச் செடிகள் வெவ்வேறு நிறங்களில் பூத்துக் குழுங்கின. அந்தூரியம், ஓர்கிட், நித்திய கல்யாணி, மல்லிகை,மொசண்டாஸ், பாபட்டேஸ், டெகிலியா, போகன்விலா என அடுக்கிக் கொண்டே போகலாம். அத்துடன் மூலிகைத் தோட்டங்களும், காய்கறித் தோட்டங்களும் மனதைக் கொள்ளை கொண்டன.

பச்சைப் பசேலெனக் காட்சி தரும் புல் வெளிகள். அதில் வாத்துக்கள் உலா வருவது போல ஒரு காட்சி, ஆங்காங்கே கொக்குகள், கிளிகள், யானையும் அதன் இரு குட்டிகளும் உண்மையில் இவை அசலா..? நகலா..? என சுகைராவின் உள்ளத்தில் தோன்றியது. இவற்றையெல்லாம் கண்டு களிப்பதற்காக சொகுசு ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. வேப்ப மரங்களிலிருந்து குளுகுளுவென காற்று வீசிக்கொண்டிருந்தது. அவற்றில் ஊஞ்சல் கட்டப்பட்டிருந்தது. வெளி நாட்டவர் தங்குவதற்கான விடுதி வசதிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

அதில் சுவரோவியங்கள் வரையப்பட்டிருந்தன. ஒவ்வொரு தூண்களும் மரத்தினால் செதுக்கப்பட்டவை போன்று காட்சியளித்தன. எல்லாவற்றையும் பார்த்து விட்டு மா மர நிழலில் அமர்ந்து கொண்டார்கள். தொமிதேசி மாங்காய்கள் காய்த்துத் தொங்கின. அவை கடதாசி பேக்கினால் கட்டப்பட்டிருந்தன. எல்லாமே காய்கள். இல்லையேல் உங்களுக்கு உண்ணத் தருவேன் என்றார். மாஷா அல்லாஹ். எமது கண்களே பட்டுவிடும் போலிருந்தது. இதமான காற்றின் வருடல்கள் மேனியைத் தாலாட்ட, கண்கள் தூக்கத்தை வரவழைத்தது. தூக்கத்தைக் கலைப்பது போல் ஒவ்வொருவரிடமும் பெரிய.. பெரிய புகைப்பட அல்பம் தந்தார். அவர் குடும்பத்தாரோடு இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கொங்கொங், பங்காளதேஷ் டென்மார்க், பாகிஸ்தான் எனப் பல நாடுகளுக்குச் சென்றபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள். இதேபோல இலங்கையில் பிரசித்தி பெற்ற இடங்கள் பற்றி விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இதேபோல சுகைராவையும் எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று இயற்கையை இரசிக்க வைத்து நிறைய எழுத வையுங்கள்.'வைத்தியத் தொழில்' என்பது மற்றவர்களின் நோயைக் கேட்டு மனசு வேதனைப்பட்டுக் கொண்டே

இருக்கும். நோயாளிகளுடனே எமது வாழ்வு கழியும். சிலவேளைகளில் தூக்கம் வராது. அதுபற்றியே யோசிக்கவேண்டும்.

இலக்கியம் என்பது அவ்வாறில்லை. இயற்கையை இரசித்துச் சுதந்திரமாகக் கற்பனை உலகில் சஞ்சரிக்கும் அழகான கலை. அதனால் இலக்கியத் துறையை ரொம்ப.. ரொம்பப் பிடிக்கும். அவவைத் தொடர்ந்து எழுத உற்சாகம் கொடுங்கள். சுகைராவின் கணவரைக் கேட்டுக் கொண்டார். மாலை நேரத் தேநீர் விருந்துபசாரம் நடந்தது. அவற்றை அருந்தி விட்டு எழுந்த போது நாய் குரைக்கும் சத்தம் காதைச் செவிடுபடுத்தியது.

ஆண் பிள்ளைகளைக் கேட்கவும் வேண்டுமா..? போவதும் வருவதுமாக நாயை எட்டிப் பார்த்த வண்ணமிருந்தனர். இது நாயா..?

ஆடா..? இவ்வளவு பெரிதாகவுள்ளது..! ஆச்சரியமாக றுஸ்னி கேட்டான். Dr சிரித்து விட்டுக் கூறினார், இது நாய் தான். அல்ஷேஷியன் (ஜேர்மன் ஷெப்பர்ட்) என்றழைப்பார்கள். இதற்குரிய வீடு தான் இது. கதவுகளைத் திறந்தவாறே எங்கும் போய் வருவோம். வீட்டைப் பாதுகாக்கும். அதன் குரைக்கும் சத்தத்தினால் யாரும் உள்ளே வர மாட்டார்கள். நாய் தூங்குவதற்கே கட்டில் போட்டுள்ளோம். அப்ப, உங்க நாய் புத்தகமும் படிக்குமா..? அஸ்லின் கேட்டான். Dr க்குச் சிரிப்பை அடக்க முடியல்ல. சிரித்துக் கொண்டே பழைய புத்தகங்கள் தூக்கி வீச விருப்பமில்ல. அதுதான் உயரமான இடத்தில் அடுக்கியுள்ளேன் என்றார்.

இந்த நாய்க்கு என்ன சாப்பாடு கொடுப்பீங்க..? முப்லிகா கேட்டாள். ஒரு மாதம் பத்தாயிரம் ரூபாய் செலவாகும். கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. நீங்க வந்த வாகனத்தை வைத்து விட்டு, எனது காரில் பாசிக்குடா கடற்கரைக்கு அழைத்துச் செல்கிறேன் என்றார். காரில் பாடல் ஒலி பரப்பாகவில்லை.

'மியூசிக்' மட்டுமே ஒலிபரப்பானது. எங்கே பாடலைக் காணோம்..? அஸ்லின் கேட்டான். நான் வைத்திய சாலைக்கு செல்லும் போது மியூசிக்குடன் சேர்ந்து பாடுவேன். அதனால் பாடல் கேட்பதில்லை என்றார். Dr எங்களுக்கும் பாடிக் காட்டுங்களேன் என்றான். இப்போது பாட முடியல. இன்னும் ஒரு நாளைக்குப் பாடுகிறேன் என்றார். Dr க்கு அஸ்லினை மிகவும் பிடித்து விட்டது. அன்றைய பொழுதை பாலகிருஷ்ணன் Dr இன் குடும்பத்தாருடன் கழித்து விட்டு வீடு திரும்பினர். முப்லிகாவுக்குப் படம் வரைவதற்கான புத்தகம், வரைதற் கொப்பி, கலர், பேக் எனப் பலவற்றை வழங்கினார். அவரது ஊக்குவிப்பினாலேயே முப்லிகா இன்று வரை வரைந்து கொண்டிருக்கிறாள்.

ஒவ்வொரு வருடமும் நோன்பு, ஹஜ் பெரு நாள்களில், பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் முன் நிற்பார். இவர்களது நட்புத் தொடர்ந்தது.

சுகைராவுக்கு மீண்டுமொருமுறை வாழைச்சேனை செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. Dr.பாலக்கிருஷ்ணனையும் சந்தித்து விட்டுச் செல்வதாகத் தீர்மானித்தனர். அவரைச் சந்திப்பதற்காகச் சென்றபோது சனக் கூட்டம் நிறைந்திருந்தது. நேர்ஸ் வந்து விசாரித்தாள். அவள் சென்று Dr ரிடம் கூறியதும்,உடனே உள்ளே வரச் சொன்னார். சுகைராவின் கணவர் யோசித்தார்.

எம்மோடு கதைத்துக் கொண்டிருந்தால்..அவருடைய நேரம் வீணாகிடும். நீண்டதொரு வரிசை காத்திருக்கிறது. அதையும் மீறி, Dr உங்களைக் கட்டாயம் உள்ளே வரட்டுமாம். இதற்கு மேலும் மறுக்க முடியாது. உள்ளே சென்றார்கள்.

உங்களைத் தான் நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்களே வந்திட்டீங்க. அவர் முகத்தில் ஆனந்தம் ஊற்றெடுத்து ஓடியது. உங்க புத்தகங்களை வாசித்தேன். எழுந்து சென்று அலுமாரியைத் திறந்து எடுத்து வந்து காட்டினார்.

இல்லையேல், நான் பொய் சொல்வதாக நினைப்பீர்களல்லவா..? இவர் எனது இவ்வளவு பெரிய அபிமானியா..? சுகைரா மனசுக்குள் நினைத்துக் கொண்டாள். வந்த நீங்கள், எங்க வீட்டுக்கு வந்திட்டுப் போங்கள்.கெஞ்சினர். இல்லை Dr. இன்னுமொரு நாளைக்குப் பார்ப்போம். உங்களை நம்பி மக்கள் கூட்டம் காத்திருக்கிறாங்க. அவங்களைக் கவனியுங்க, Dr. விடை பெற்றார்கள்.

ஆனாலும்...நேர்ஸை பக்கத்திலுள்ள கடைக்கு அனுப்பி, மில்க் பக்கட், கேக், பிஸ்கட், சொக்லேட் எனப் பலவற்றை வாங்கி, பேக் நிறையக்கொடுத்தார். Dr ரின் அன்பையும்,ஆதரவையும் பேசிப் பேசிச் சென்றனர்.

அன்று மைனா ரீச்சரின் மகள் Dr சப்ராவின் 'வலிமா' வுக்கு வாழைச் சேனைக்குச் சென்ற போது சுகைராவின் குடும்பத்ினரை, மஸாகிர் சேர் அவரில்லம் அழைத்துச் சென்றார். அவர் மனைவி றிஸானா ரீச்சரிடம் பாலகிருஷ்ணன் Drஐத் தெரியுமா..? என விசாரித்தாள்.


அவர் போன வாரம் இறந்து விட்டாராம். சுகைராவின் தலையில் வானமே இடிந்து விழுந்தாற் போலிருந்தது.வாய் விட்டே கத்த வேண்டும் போலிருந்தது. அவளால் இருப்புக் கொள்ள முடியல. மரணம் யாரையும் விட்டு வைக்காது. உலகமே போலியானது. சுகைரா வீடு வந்து சேர்ந்ததும் Dr ரின் தொலை பேசி இலக்கத்தைச் சுழற்றினாள்.

நேர்ஸ் தூக்கினாள். பாலக்கிருஷ்ணன் Dr ருடன் பேசலமா..? அவர் மறைந்து ஒரு வாரமாச்சு. அவரது மறைவு பேரிழப்பாகும். மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டாள். அன்னாரின் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டாள் சுகைரா.

பண்பான மனிதர்.சுகைராவின் உள்ளத்தில் பாலகிருஷ்ணன் Dr ரின் நினைவலைகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்
கிண்ணியா

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
### இல: 119




திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.................... ....................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 119
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 119

**இடமிருந்து வலம்**

1. ஆட்சித் தலைவரின் தெரிவுக்காக இது விரைவில் நடைபெறவிருக்கிறது.
4. மனதை வருத்தும் துக்க உணர்வு
7. அழிவு அல்லது சேதம் (குழம்பியுள்ளது)
8. மன அமைதி
9. கேலி
11. விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பு (திரும்பியுள்ளது)
12. திக்கு
14. அரைப்பங்கு (திரும்பியுள்ளது)
16. தூக்கம் குழம்பிவிட்டது
18. வங்கியில் சேமிப்புப் பணத்துக்கு இது கிடைக்கும்.
20. உண்மை நிலைக்கு மாறானது (குழம்பியுள்ளது)
22 . செருப்பு (திரும்பியுள்ளது)
23. உலகம் குழம்பிவிட்டது.
24. கல்வி கற்பிப்பவர் குழம்பிவிட்டார்.

**மேலிருந்து கீழ்**

1. நாட்டுப் பற்று
2. காய்ந்த வாழை மடலிலிருந்து பிரித்தெடுக்கப்படுவது (தலைகீழ்)
3. கணவன் _ மனைவியை இப்படியும் சொல்வர்.
4. வேகவைத்த அரிசி
5. இது ஒரு வாழை இனம்
6. இதுவும் ஒரு மலர் (குழம்பியுள்ளது)
8. ஒரு தமிழ் மாதம்
10. முன்னைய காலத்தில் குற்றம் செய்தவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை
13. அழகு
15, கவிஞர்
17. செல்வம் (குழம்பியுள்ளது)
19. பார்வையில் காணும் தோற்றம் (குழம்பியுள்ளது)
21. கணை மேல்நோக்கிப் பாய்கின்றது
22. சுவரில் நாட்காட்டியைத் தொங்கவிடுவதற்கு இது தேவை.
23. பொதுநலத் தேவைக்காக அரசாங்கம் வசூலிக்கும் கட்டணம்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 118

### விடைகள்

| இடமிருந்துவலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. பிரகாசம் | 12. கிலேசம் | 1. பிரவேசம் | 13. சபதம் |
| 5. சாது | 14. கனி | 2. காசு | 14. கண் |
| 7. பரிசு | 15. விண் | 3. சரி | 15. தவில் |
| 8. வால் | 17. சாதனை | 4. அப்பம் | 16. பதாகை |
| 9. வேர் | 19. ஊதா | 5. சால்பு | 17. சாவி |
| 10. பரப்பு | 20. விபரீதம் | 6. துவாரம் | 18. பனை |
| 11. அலி | 21. சிகை | 11. கிலி | 19. ஊசி |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 118

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **ச. தனஷேத்திரா,** வடிவேல் வீதி, காரைதீவு | **ஹிமா மரியம் முஜாஹிட்,** 63/2 ஹுரீமலுவா மொஹிடீன் மஸ்ஜித் மாவத்தை, ரம்புக்கண | **என்.உம்மு ஹாபிரா** 38, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று 18 |

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.ஏ.எச்.எம் வபா** குருநாகல்
2. **பி. குணசேகரன்** களுதாவளை
3. **எம்.டபிள்யூ.எம் நபாஸ்** துல்ஹிரிய
4. **த. நாகையா** கல்முனை
5. **எஸ். செல்வராஜா** பதுளை
6. **எஸ். சஞ்சனா** வந்தாறுமூலை
7. **கே.எப். மில்ஹானி** ஏறாவூர்
8. **எஸ். செல்வராஜ்,** கொழும்பு 11
9. **எம். ஆர். பாதீஸ் சஹ்ரி** பாலமுனை
10. **மல்லிகா பத்மநாதன்** பசறை

# வாழும்போதே வாழ்த்துவோம்

## மெல்லிசைப் பாடகர் அமுதன் அண்ணாமலை



எமது நாட்டிலே அறுபதுகளின் ஆரம்பத்தில் பிரபல பாடகராக அறியப்பட்டு ஜொலித்தவர் ஈழத்துப் பாடகர் அமுதன் அண்ணாமலை.

இவர் 1954ஆம் ஆண்டு பள்ளி மாணவராக இருந்த காலத்திலேயே பிரபல நடிகரும், பாடகருமான என். எஸ். கிருஷ்ணனின் ஆசியைப் பெற்றவர். என்.எஸ். கிருஷ்ணனும், அவரது துணைவியார் மதுரமும் தங்கள் குழுவினருடன் இலங்கைக்கு கலை நிகழ்ச்சிக்காக வந்திருந்த சமயம், அவர்களது கச்சேரியில் "ரகுபதி ராகவ ராஜாராம்" என்ற பாடலைப் பாடுவதற்கு குழுவினருடன் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்தான் அமுதன் அண்ணாமலை. ஆனால் இவரது திறமையை கண்டு கொண்ட என். எஸ். கிருஷ்ணன், அந்தப் பாடலை இவர் தனித்துப் பாடுவதற்கு அன்று சந்தர்ப்பம் வழங்கினார். மிகச் சிறப்பாக பாடிய அமுதன் அண்ணாமலைக்கு, அன்றே தனது ஆசீர்வாதத்தை வழங்கி, பிற்காலத்தில் நீங்கள் ஒரு சிறந்த பாடகராக வருவீர்கள் என்றும் கூறினார்.



அந்த மகா கலைஞனின் ஆசிர்வாதம் எமது கலைஞரான அமுதன் அண்ணாமலைக்குக் கிடைத்ததால், அவர் சொன்ன மாதிரியே பிற்காலத்தில் பிரபல பாடகராகத் திகழ்ந்தார் அமுதன் அண்ணாமலை.

இவர் ஆரம்பத்தில் ராஜலட்சுமி சதுர் கச்சேரி, இரட்டையர் குழு ஆகிய குழுக்களுடன் சேர்ந்து பாடி வந்தார். பின்புதான் இவர் கண்ணன் கோஷ்டியுடன் இணைந்து கொண்டார்.

தொழில்நுட்ப வசதிகள் ஏதும் இல்லாத காலத்தில், தொலைக்காட்சியோ, சமூக வலைத்தளங்களோ இல்லாத காலத்தில் வெறுமனே வானொலி சேவை மட்டுமே இயங்கிக் கொண்டிருந்த காலத்தில் கண்ணன் கோஷ்டியுடன் மேடை நிகழ்ச்சிகளிலும், வட, கிழக்கு கோயில்களின் உற்சவ காலங்களில் நடைபெறும் திருவிழா சிறப்பு நிகழ்ச்சிகளில் கண்ணன் கோஷ்டியின் சிறப்பு பாடகராக, முதன்மை பாடகராக இருந்தவர்தான் அமுதன் அண்ணாமலை. எழுபதுகளின் ஆரம்பத்தில் ஈழத்தில் பொப்பிசை பாடல்கள் பிரபலம் பெற்றிருந்த தருணம் இவர் பாடிய பொப்பிசைப் பாடல்கள், இசைப் பிரியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. வடக்கு, கிழக்கு, மலையகம், மற்றும் தலைநகர் கொழும்பிலும் பல மேடை நிகழ்ச்சிகளில் பாடி ரசிகப் பெருமக்களின் அமோக வரவேற்பையும் பாராட்டுகளையும் பெற்றவர் அமுதன் அண்ணாமலை.




இலங்கையில் தொலைக்காட்சி வருவதற்கு முன்னரே இந்தியாவுக்குச் சென்று அங்கு "தூரதர்ஷன்" தொலைக்காட்சியில் பாடிய முதல் ஈழத்து பாடகர் அமுதன் அண்ணாமலை என்றால் அது மிகை அல்ல.

எழுபதுகளில் இவர் பாடிய பல பாடல்கள் மக்கள் மனதில் இடம் பிடித்திருந்தாலும், குறிப்பாக "ஓ ஷீலா ஓ லீலா யு டோன்ட் லுக் அற் மீ" என்ற பாடலும் "மாணிக்கத் தேரிலே மயில் வந்தது " என்ற பாடலும் மக்கள் மனதில் நீங்காத இடத்தை பிடித்த பாடல்களாக இருக்கின்றன.

இவர் ஈழத்தில் வெளிவந்த "கலியுக காலம்" மாமியார் வீடு "போன்ற திரைப்படங்களிலும் பாடியுள்ளார். அதனால் பின்னணிப் பாடகர் என்ற பெருமையும் இவருக்கு கிட்டியது. தென்னிந்திய பாடகர்களான டி.எம். சௌந்தரராஜன், கே.ஜே.ஜேசுதாஸ் மற்றும் பி.சுசீலா. எஸ்.ஜானகி ஆகியோருடனும் இவர் மேடை நிகழ்ச்சிகளில் பாடி அவர்களின் பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

அமுதன் அண்ணாமலைக்கும் எனக்கும் மிக நீண்ட கால உறவு இருக்கின்றது. அகவை 85 நெருங்கிக் கொண்டிருக்கும் இவரை நான் எனது பள்ளிக்காலப் பருவத்தில், எனது ஊரான திருக்கோவிலுக்கு கண்ணன் கோஷ்டியுடன் இவர் பாட வந்த காலம் தொட்டே அறிவேன். பல தடவைகள் அறுபதுகளின் இறுதிக் காலங்களில் கண்ணன் கோஷ்டியுடன் இவர் எனது ஊருக்கு வந்து பாடியிருக்கின்றார். அன்று மேடைக்கு முன்னால் இருந்து பார்த்து ரசித்த இவரை, பிற்காலத்தில் நான் கொழும்புக்கு ஊடகத்துறையில் நுழைந்த போதும், சந்திக்க, பழக வாய்ப்புகள் கிடைத்தன. நான் முன்னர் எழுத்து ஊடகத்திலும், பின்னர் இலங்கை வானொலியிலும் பணிபுரிந்த காலங்களில் எங்கள் இருவருக்கும் நல்ல நட்பும், சகோதர பாசமும் இருந்தது. அது இன்று வரை தொடர்கிறது. அதற்கு உதாரணமாக புலம்பெயர்ந்தபின், நான் எனது படைப்புகளுடன் கனடா நாட்டுக்கு செல்லும் போதெல்லாம் அவர் எனது நிகழ்வுகளில் கலந்து கொண்டு எனக்கு பெருமை சேர்த்திருக்கின்றார். எனது மேடை நிகழ்ச்சிகளில் பாடியும் இருக்கின்றார்.

இவரது இசைத்துறைச் சாதனை மிகப் பெரியது. எழுபது வருடங்களுக்கு மேலாக இவர் இந்த இசைத் துறையில் இருக்கின்றார். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இவரது பாடல்களை "அமுதகானம்" என்ற தலைப்பில் கனடாவில் இருக்கும் இசைக்கலைஞரும், பாடகருமான பாபு ஜெயகாந்தன் மீள் உருவாக்கம் செய்திருந்தார்.

அந்த இறுவட்டும் இவரது இசைத் துறை வாழ்வின் பயணத்தில் ஒரு மைல் கல்லாக அமைந்தது.

அன்று இருந்த இவரது தனித்துவமான குரல் இன்றும் மாறாமல் இருக்கின்றது. இதற்கு சாட்சியாக அண்மையில் கனடா, டொரன்டோவில் நடந்த விஜய் டிவி புகழ் "மணிஅண்ட் பான்ட்" இசைக் குழுவுடனும், ஜி டிவி சரிகமப டைட்டில் வின்னர், பாடகி அருணாவுடனும் இவர் பாடிய பாடல்கள் சாட்சியாக இருக்கின்றன. இதே நிகழ்வில் இவர் தனது " மாணிக்க தேரினில் மயில் வந்தது" என்ற பாடலையும் பாடினார். இவரை அனைத்து இசைக் கலைஞர்களும் பாராட்டினார்கள். காணொளியில் பார்த்து நானும் மகிழ்ந்தேன்.

இவர் புலம்பெயர்ந்து கனடா நாட்டுக்கு சென்று, அங்கு கியூபேக் என்ற மாநிலத்தில் மொன்றியல் என்ற இடத்தில் வாழ்ந்து வருகின்றார். அங்கும் இவர் பல நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்றார். இங்குள்ள Montreal QC DDO HinduMandir இல் பஞ்சாப் கோயிலில் தபேலா கலைஞராகவும், ஹிந்தி பஜன் பாடும் பாடகராகவும் 1997 லிருந்து 2014வரை ஆஸ்தான கலைஞராக இருந்திருக்கின்றார். பல அரசியல் தலைவர்கள் இவருக்கு நண்பர்களாக இருக்கின்றார்கள். குறிப்பாக . ஜஸ்டின் ரூடோ கனடா நாட்டிற்கு பிரதமர் ஆவதற்கு முன்பே அவர் எம்.பியாக இருந்த காலத்திலேயே அமுதன் அண்ணாமலைக்கு நண்பராக இருந்திருக்கின்றார். ஆரம்பத்தில் அவர் எம். பி ஆவதற்கு அமுதன் அண்ணாமலையும் பக்கபலமாக இருந்திருக்கின்றார்.

85 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ஈழத்தின் மிக மூத்த கலைஞர், பாடகர் அமுதன் அண்ணாமலையை எமது மக்களும், இளைய சந்ததியினரும் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு இன்றைய அறிவியல் உலகில் இருக்கின்ற, செயற்படுகின்ற அனைத்து ஊடகங்களும், இவருக்கு பிரகாசமான வெளிச்சத்தைக் கொடுக்க முன்வர வேண்டும் என்பதே எனது அவா. ஐரோப்பிய நாடுகள், கனடா, ஆவுஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இயங்கும் சமூக வலைத்தளங்கள், எழுத்து, ஒலி, ஒளி ஊடகங்கள் இவருக்கு முக்கிய இடங்களை கொடுக்க வேண்டும் என்பதையும் எனது தாழ்மையான வேண்டுகோளாக வைக்கின்றேன்.

அமுதன் அண்ணாமலை நீண்ட ஆயுளுடன் நீடூழி வாழ வேண்டும் என்று எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டி நாமும் பிரார்த்திப்போம் .

**கோவிலூர் செல்வராஜன்**


**வ/ப மத்திய மாகாண கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்திற்கு சொந்தமான இல. 107, பேராதனை வீதி, கண்டி என்ற முகவரியில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடத்தை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்**

மேற்படி கட்டிடத்துடனான வளாகத்தை விற்பனை செய்வதற்காக 2024.06.05 பி.ப. 12.00 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய சகல விபரங்களை வ/ப மத்திய மாகாண கிராமிய வங்கிச் சங்கத்தின் தலைமையகத்தில் வாரத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

**குறைந்த பட்ச கேள்வி ரூபா நூற்றி எண்பது மில்லியனாகும் (ரூ. 180,000,000/-)**

**தொடர்புகள்:**
பொது முகாமையாளர் 081-2232477 மற்றும் 081-4940425

**தலைவர்,**
**வ/ப மத்திய மகாண கூட்டுறவு**
**கிராமிய வங்கி சங்கம்,**
**107, பேராதனை வீதி, கண்டி.**



**களனி பல்கலைக்கழகம் - இலங்கை**

**பதவி வெற்றிடங்கள்**

2022/2023 ஆம் கல்வி ஆண்டிற்காக பின்வரும் பதவிகளுக்காக 2024.05.20 ஆம் திகதியன்று வரையும் களனி பல்கலைக்கழகமானது விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும்.

- தற்காலிக விரிவுரையாளர்
- தற்காலிக செய்விளக்கம் காட்டுனர் (Demonstrator)

**சமூக விஞ்ஞானங்கள் கற்கைநெறிப் பீடம்**
பல்லூடக தொடர்பாடல்/ தத்துவசாஸ்திரம்/ நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம்/ வரலாறு/ சமூகவியல்/ புவியியல்/ தொல்லியல்/ பொருளாதாரம்/ சமூக புள்ளி விபரம்/ சமூக விஞ்ஞானம்/ சர்வதேச கற்கைநெறிகள்/ தகவல் தொழில்நுட்பவியல்.

**பீடாதிபதியின் அலுவலகம்**
வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ கற்கைநெறிகள் கற்கைநெறிப்பீடம் வர்த்தகம் மற்றும் நிதிசார் முகாமைத்துவம்/ கணக்கியல் திணைக்களம்

**விண்ணப்பிக்கும் முறை:**
விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஒன்-லையினூடாக மாத்திரமே அழைக்கப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டி மற்றும் தகைமைகள் தொடர்பான தகவல். சம்பளம் மற்றும் அனுகூலங்கள் ஆகியவற்றை அணுகுவதற்காக https://www.kln.ac.lk/vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**03.05.2024**



**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**

**பதவி வெற்றிடம்**

**பிரதான கணக்காளர் பதவி**
**(Post of Chief Accountant)**

**மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**தகைமைகள் மற்றும் அனுபவம்** : இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணக்கியலில் ஒரு பட்டம்
மற்றும்
அங்கீகாரம் பெற்ற தொழில்சார் கணக்கியல் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்
மற்றும்
இதனையொத்த கொள்ளளவில் 10 வருடகால அனுபவம்
மற்றும்
இயைபுடைய துறைக்கான முதுமாணிப் பட்டம் (Masters) மேலதிக தகைமையாகும்

**வயது** : விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும். (50 வயதிற்குக் குறைவானவர்கள் இல்லாத பட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டோர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு கவனம் செலுத்தப்படும்.)

**சம்பள அளவு : ரூபா 102,810.00 - 16x2,930 - 149,690.00 மாதாந்தம்.**

**பணி விபரம்** : இந்தப் பதவிக்கு முடிவு சார்ந்த, தன்னம்பிக்கை ஆளுமை தேவை. அவர் வைத்தியசாலையின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் கணக்கியல், வரவு செலவுத் திட்டம், நிதி திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் களஞ்சியசாலை முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருப்பார்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்:**
நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம்.

விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 2024 மே 20ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
**2024-05-03**



**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை**
நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

**வேலைவாய்ப்பு**

பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து பின்வரும் தகைமைகளை மற்றும் முன் அனுபவங்களைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ/இ | பதவியின் பெயர் | சம்பள அலகு | வெற்றிடம் |
|---|---|---|---|
| 01. | பிரதி பொது முகாமையாளர் (வசூல் மற்றும் ஊழியர் நட்புறவுகள்) | HM 1-3 | 01 |
| 02. | பிரதி பொது முகாமையாளர் (தகவல் தொழினுட்பம்) | HM 1-3 | 01 |
| 03. | உதவி பொது முகாமையாளர் (செயல்படுத்தல் வலையம் மற்றும் I/O) | HM 1-1 | 02 |
| 04. | உதவி பொது முகாமையாளர் (பங்களிப்பு சேகரிப்பு மற்றும் மிகை கட்டணம்) | HM 1-1 | 01 |
| 05. | உதவி பொது முகாமையாளர் (முதலீடு) | HM 1-1 | 01 |
| 06. | முகாமையாளர் (நிர்வாக அமைப்பு) | MM 1-3 | 01 |
| 07. | கணினி அமைப்பு பகுப்பாய்வினை திட்டமிடுபவர் / கணினி அமைப்பு பகுப்பாய்வாளர்) | JM 1-1 | 01 |
| 08. | தனிச் செயலாளர் | JM 1-1 | 01 |
| 09. | கொள்முதல் அதிகாரி | JM 1-1 | 01 |
| 10. | கணினி வலைத்தள நிர்வாக அதிகாரி | JM 1-1 | 01 |
| 11. | முதலீட்டு ஆய்வாளர் | JM 1-1 | 01 |
| 12. | நிதி அலுவலகர் | JM 1-1 | 02 |
| 13. | பிராந்திய அலுவலகத்திற்கான செயற்பாட்டு அதிகாரி - (காலி, யாழ்ப்பாணம், *கொழும்பு மாவட்டம், *களுத்துறை, நுவரெலியாத்தோட்டை, அம்பாறை, திருகோணமலை, கொழும்பு 1-7) | JM 1-1 | 08 |
| 14. | பிராந்திய உதவி செயற்பாட்டு அதிகாரி (யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட அலுவலகம்) | MA - 4 | 02 |
| 15. | உதவி நிதி அதிகாரி | MA - 4 | 02 |
| 16. | உதவி அமைப்பு நிர்வாக அதிகாரி | MA - 4 | 01 |
| 17. | உதவி கணினி வன்பொருள் பராமரிப்பு அதிகாரி | MA - 4 | 01 |
| 18. | கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் | MA 2-2 | 01 |
| 19. | கணினி அமைப்பு நிர்வாக உதவியாளர் | MA 2-2 | 01 |
| 20. | கணினி வலையமைப்பு நிர்வாக உதவியாளர் | MA 2-2 | 01 |
| 21. | கணினி வன்பொருள் பராமரிப்பு உதவியாளர் | MA 2-2 | 01 |
| 22. | கணினி ஆய்வாளர் / நிரல் உதவியாளர் | MA 2-2 | 01 |

மேல்குறிப்பிடப்பட்ட பணிகளுக்கான தகுதிகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் எமது www.etfb.lk இணையதளத்திற்குச் சென்று தகுதிகள் மற்றும் விண்ணப்பப்படிவத்துடன் அதுதொடர்பான விபரங்களை பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் மேலும் 2024.05.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எமக்கு கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

தலைவர் / கொள்முதல் குழு,
**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை,**
தபால்இல. 807 (23ம் மாடி) "மெஹெவர பியச",
நாராஹேன்பிட்ட, கொழும்பு 05.



**இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்**

**பதவி வெற்றிடங்கள்**

அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனமானது மருந்தாக்கல்கள் மற்றும் மருத்துவ சாதனங்களை அரசாங்க வைத்தியசாலைகளுக்கான ஏக இறக்குமதியாளரும் இலங்கையில் மருந்தாக்கங்களின் தனியார் வைத்தியசாலைகளுக்கான முன்னணியிலுள்ள இறக்குமதியாளரும் விநியோகஸ்தருமாவார்.

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருந்தக்கூடிய தகைமையையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**1. உள்ளக கணக்காய்வு அலுவலர் ஜேஎம் - தரம் II**

**தகைமைகள் :**

**1.1. பட்டப்படிப்பாளர்கள்:**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம்/ கணக்கியல்/ வர்த்தக நிர்வாகம் அல்லது நிகரான தகைமைகள்.

அத்துடன்

(ஆ) கணனி அறிவு

அத்துடன்

(இ) பொதுத்துறை/ கூட்டுத்தாபனம்/ சபை/ நியதிச் சட்ட சபை/ புகழ்வாய்ந்த வாணிப தாபனம் ஆகிய துறைகளில் பெற்ற ஆகக் குறைந்தது 3 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**1.2 தொழிற்பயிற்சி / தொழில்சார் :**

(அ) (i) இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவக இடைநிலை மட்டம்/ பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவகம்/சான்றளிக்கப்பட்ட மற்றும் கூட்டுரு கணக்காளர்களின் சங்கம் அல்லது தொழில்துறைசார் அமைப்பொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் நிகரான தகைமைகள்.

அல்லது

(ii) கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்களின் சங்க முழுமையான தகைமை

அல்லது

(iii) அரசாங்க தொழில்நுட்ப கல்லூரியொன்றின் கணக்கியலில் தேசிய உயர் டிப்ளோமா

அத்துடன்

(ஆ) கணனி புலமை

அத்துடன்

(இ) அரசதுறை/கூட்டுத்தாபனம்/சபை/நியதிச்சட்ட சபை/ புகழ்வாய்ந்த வணிக தாபனமொன்றில் கணக்காய்வு/ கணக்கிடல் துறையில் ஆகக் குறைந்தது 3 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

சம்பள அளவுத் திட்டம் : 42,600-755x10,1135x18 – 70,580 ரூபா அண்ணளவான மாதாந்த வேதனமானது ஏறக்குறைய 97,780 ரூபாவாகும்

வயதெல்லை : 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லையானது உள்ளக அபேட்சகர்களுக்கு ஏற்புடையதாகாது.

**2. அமைப்புமுறை கணக்காய்வு அலுவலர்: ஜேஎம் 1.1 தரம் II**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக தகவல் அமைப்புமுறை, முகாமைத்துவ தகவல் அமைப்புமுறை, வணிகத்திற்கான தகவல் தொழில்நுட்பவியல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்காக உரித்தான துறையில் வேறேதாவது பட்டப் படிப்பு.

சம்பள அளவுத்திட்டம் : 42,600-755x10,1135x18 – 70,580 ரூபா அண்ணளவான மாதாந்த வேதனமானது ஏறக்குறைய 97,780 ரூபாவாகும்

வயதெல்லை : 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லையானது உள்ளக அபேட்சகர்களுக்கு ஏற்புடையதாகாது

**மேலதிக அனுகூலங்கள் :**

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் கவர்ச்சிகரமான அனுகூலங்கள் தொடரில் மாதாந்த வருகை உற்சாகப்படுத்தும் படி, பாவிக்கப்படாத சுகவீன விடுமுறை, வருடாந்த மிகையூதியம், இலாப பங்கீட்டு உற்சாகப்படுத்தும் படி, நலவுதவி அனுகூலம், மருத்துவ நன்மைகள் மற்றும் மருத்துவ காப்புறுதி திட்டம் ஊழியருக்கும் குடும்பத்தினருக்கும் வைத்தியசாலையில் தங்கியிருந்து மருத்துவம் செய்வதற்குமான காப்புறுதி திட்டம் உத்தியோகபூர்வமாகவும் சொந்தப் பாவனைக்கும் கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் மாதாந்த எரிபொருள் படியும் அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் முழுமையான சுயதரவுடன் வயது, தகைமைகள், பயிற்சி, வேலை அனுபவம், தற்போதைய பதவி, சம்பள கட்டம் மற்றும் மட்டம், முன்னர் வகித்த பதவி, முன்னைய தொழில்வழங்குநருடன் சேர்ந்த திகதி முன்னைய தொழில்வழங்குநரை விட்டு விலகிய திகதி, சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கலாக இருத்தல் வேண்டும்.

உரித்தான சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென்பதை தயவு செய்து குறித்துக் கொள்ளவும்.

பொதுத் துறை அமைப்புகளின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரியொருவர் பல எண்ணிக்கையான பதவிகளுக்கு விண்ணப்பித்தல், அவ்வாறான விண்ணப்பங்கள் தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களையடக்கியுள்ள தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2024.05.20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்**
**'மெஹெவர பியச',**
**16 ஆம் மாடி, 41, கிருள வீதி,**
**கொழும்பு-05.**
**தொலைபேசி: 011 2320356/9.**

# பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில் ஆஸாத் மௌலானா நினைவுகள்!







*இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 07ஆம் திகதி செவ்வாய் இரவு (07.05.2024) 8.15 ம ணியளவில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரின்" நேர்காணலில் முன்னாள் முஸ்லிம் சேவை சிரேஷ்ட தயாரிப்பாளர் மர்ஹூம் ஆஸாத் மௌலானாவின் நினைவுகள் பரிமாறப்பட இருக்கின்றன. ஆஸாத் மௌலானா 1970இல் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் தயாரிப்பாளராக இணைந்து கொண்டார்.*

*பல்வேறு நிகழ்ச்சிகளை தயாரித்தும், வெளிக்கள நிகழ்ச்சிகளாக நாட்டில் ஆங்காங்கே நிகழ்வுற்ற சமய, கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளோடு, அரசியல் தலைவர்கள் பங்கேற்ற முக்கிய அரச நிகழ்வுகள் பலவற்றையும் ஒலிப்பதிவு செய்து தொகுத்தும் வழங்கினார். சுமார் 18 மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். தேசிய ரீதியான பல வெளிநாட்டு நிகழ்வுகளில் பங்கேற்று பாராட்டுகளைப் பெற்றுள்ளார். தனது மொழி, பேச்சாற்றலால், இவர் இலங்கை வானொலியின் அனைத்து சேவையின் மூத்த ஒலிபரப்பாளர்கள் மத்தியிலும் பிரபலமானார்.*

*இந்நிகழ்ச்சியில் ஆஸாத் மௌலானாவின் கனிஷ்ட புதல்வர் உளவள ஆலோசகர் மௌலவி செய்யத் ஜெஹான் மௌலானா, ஆஸாத் மௌலானாவின் சகோதரனின் மகனும் முஸ்லிம் சேவையின் கலைஞரும் விளம்பர நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான செய்யத் ரஸ்மி மௌலானா ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு ஆஸாத் மௌலானாவின் நினைவுகளை நேயர்களோடு பகிர்கின்றார்கள். நிகழ்ச்சியினை எம். எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பொறுப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்கிறார்.*


## மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் (PGIM)
### கொழும்பு பல்கலைக்கழகம்

## பெறுகை அறிவித்தல்

### சுத்திகரிப்பு மற்றும் தூய்மையாக்கல் சேவைகளை வழங்கல்

விலைமனு இல. 01. **PGIM** பிரதான இடப்பரப்பிற்கான சுத்திகரிப்பு மற்றும் தூய்மையாக்கல் **(PGIM/GA/CS/2024/01)**

விலைமனு இல. 02. **PGIM** கல்விசார் நிலையத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் தூய்மையாக்கல் **(PGIM/GA/CS/2024/02)**

**2024.05.29** ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் சுத்திகரிப்பு மற்றும் தூய்மையாக்கல் சேவைகளை வழங்குவதற்காக கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2024.05.05 ஆம் திகதியிலிருந்து 2024.05.29 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 011-2688650/0704702867 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, **saradmin@pgim.cmb.ac.lk** என்ற மின்னஞ்சலூடாகவும் PGIM இன் பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத கட்டணமான 2,500 ரூபாவை(ஒரு தொகுதி ஆவணங்களுக்கானது) பொரளை மேற்தரக் கிளை இலங்கை வங்கியின் 193413 என்ற கணக்கிலக்கத்திற்கு PGIM என்ற பெயரில் செலுத்திய பின்னர், **saradmin@pgim.cmb.ac.lk** என்ற மின்னஞ்சல் வழியாக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக பொது நிர்வாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு பற்றுச்சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

அனைத்து விலைமனுக்களும் 180,000 ரூபா பெறுமதியுள்ள விலைமனு இல. 01 இற்கான விலைமனுப் பிணையாகவும் 180,000 ரூபா பெறுமதியான விலைமனு இல. 02 இற்கான விலைமனுப் பிணையாகவும் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணையானது இலங்கை வங்கி பொரளை மேற்தரக் கிளை 193413 என்ற PGIM இன் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டு விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் இரு தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் **''Provision of Cleaning & Janitorial Services for PGIM Main Premises – Bid No. 01(PGIM/GA/CS/2024/01)" or "Cleaning & Janitorial Services for PGIM Academic Center – Bid No. 02(PGIM/GA/CS/2024/02"** என குறிக்கப்பட்டு 2024.05.29 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-07, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, 160 ஆம் இலக்கத்திலுள்ள மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் பொது நிருவாக கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024.05.29 ஆம் திகதியன்று பி.ப.2.30 மணிக்கு விலைமனுவை திறக்கும் நிகழ்வில் சமுகமளிக்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன பொது நிருவாக கிளையில் திறக்கப்படும். தாமதமானதும் பூர்த்தி செய்யப்படாததுமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்,**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-07.**
**02.05.2024.**



IFAD INTERNATIONAL FUND FOR AGRICULTURAL DEVELOPMENT

SAPP

## ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI)
### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)
### கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## பெறுகை அறிவித்தல்

### சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தினால் (SAPP) செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் வருடாந்த விளைவு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை நிறுவனம்/நிறுவனங்களை தெரிவு செய்தல்

சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) நடைமுறைப்படுத்தப்படுகிறது மற்றும் இதற்கு இலங்கை அரசாங்கத்தினாலும் சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியத்தினாலும் (IFAD) கூட்டாக நிதியளிக்கப்பட்டுள்ளது. சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டமானது (SAPP) இலங்கையின் சிறு அளவிலான உடைமையாளர்களின் வறுமைக் குறைப்பு மற்றும் போட்டித் தன்மைக்கு பங்களிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வணிக ரீதியிலான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அமைப்புகளில் ஈடுபட்டுள்ள 57,500 சிறு பங்குடைமை குடும்பங்களின் வருமானம் மற்றும் உணவின் தரத்தை நிலையாக உயர்த்துவதே திட்ட வளர்ச்சியின் நோக்கமாகும். பொது, தனியார், உற்பத்தியாளர் கூட்டாண்மைகள் (4Ps) மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் இலங்கை அரசாங்கம் (GOSL) முன்னுரிமைகளை அடைய சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP) திட்டம் கருவியாக உள்ளது.

### பணியின் நோக்கம் மற்றும் குறிக்கோள்

இந்தப் பணியின் ஒட்டுமொத்த நோக்கமானது திட்டத் தலையீடுகளுக்கு எதிராக அந்தந்த திட்ட விளைவுகளில் எட்டிய முன்னேற்றத்தை மதிப்பிடுதல் மற்றும் அடிப்படைத் தகவல்களுக்கு எதிராக பிரதிபலிக்கும் செயற்றிட்டத்தின் M & E கட்டமைப்பில் குறிப்பிட்ட விளைவு குறிகாட்டிகளில் அளவு மற்றும் தரமான விளக்கங்களை வழங்குவது மற்றும் திட்டத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்திற்கு (SAPP) வழங்குவதாகும்.

பின்வரும் 09 வருடாந்த விளைவு ஆய்வுகளை நடாத்த தகுதியான ஆலோசனை நிறுவனங்களை அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்த (EOI) சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் (SAPP) சார்பாக செயற்றிட்ட ஆலோசகர்கள் பெறுகைக் குழு இப்போது அழைக்கின்றது.

1) ருவன்சிறி பாற்பண்ணை - ஊவாவில் உள்ள சிறிய அளவிலான பாற்பண்ணையாளர்களின் வாழ்வாதார அபிவிருத்தி
2) நிலக்கடலை கொத்தணி திட்டம் - FRIENDS Guarantee Ltd
3) பாற்பண்ணை அபிவிருத்தி - பெல்வத்த பாற்பண்ணை
4) விதை உருளைக்கிழங்கு - DOA/DAD/FAO/கொலம்பகே டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லங்கா
5) மரக்கறி பயிர்ச்செய்கை - ஜேகே மார்கெட்டிங் சேர்விஸ் பிரைவட் லிமிடெட் (கீல்ஸ்)
6) கௌபீ DOA/DAD/LAPMC
7) விதை நெல் ரோயல் விதை திம்புலாகல கூட்டுறவுச் சங்கம்
8) உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை திட்டம் - ஜனதா கொவி சங்கமய - கஹத்தேவெல
9) பாற்பண்ணை அபிவிருத்தி - CEETEE

ஆர்வமுள்ள ஆலோசகர்கள் / ஆலோசனை நிறுவனங்கள் இந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்ட படிவத்தைப் பயன்படுத்தி ஆர்வ வெளிப்பாடுகளை (EOI) வழங்க வேண்டும். ஆர்வமுள்ள ஆலோசனை நிறுவனங்கள் குறிப்பு விதிமுறைகளை (TOR) www.sapp.lk எனும் எமது இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். (குறித்த குறிப்பு விதிமுறையை பதிவிறக்கம் செய்யும்போது "DOWNLOAD" எனும் தலைப்பு மற்றும் "PROCUREMENT" எனும் உபதலைப்பு என்பவற்றை தயவுசெய்து பார்க்கவும்)

குறிப்பிடப்பட்ட திட்டம் தொடர்பான வருடாந்த விளைவு கணக்கெடுப்புகளை நடத்துவதற்கான முன்மொழிவுகளை அழைப்பதற்கு தகுதியான நிறுவனங்களாக நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் போது பின்வரும் காரணிகள் கருதப்படுகின்றன. முழு முன்மொழிவுகளுக்கு (தொழில்நுட்ப மற்றும் நிதி) தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மட்டுமே அழைக்கப்படும். முன்மொழிவுகள் பின்னர் தரம் மற்றும் செலவு அடிப்படையிலான அமைப்புகள் (QCBS) முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படும்.

1. வியாபாரப் பதிவு ஆதாரம்
2. நிறுவனத்தின் அனுபவம்
3. இதனையொத்த பணிகளை கையாள்வதில் நிறுவனத்திற்குள்ள அனுபவம் (உ-ம்: அடிப்படை ஆய்வுகளை நிறைவுசெய்தல்)
4. உடன் வேலை செய்த முன்னைய அனுபவம் (சரியான நேரத்தில் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல், அறிக்கைகளின் தரம்)
5. நிறுவனத்தின் குழு அமைப்பு (தற்போதைய)

ஆர்வ வெளிப்பாடுகளை (EOI) 2024 மே 15ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வருடாந்த விளைவு ஆய்வு'' எனத் தயவுசெய்து குறிப்பிடவும். குறும் பட்டியலிடப்பட்ட ஆலோசகர்கள் மட்டுமே எதிர்கால பணிக்காக தொடர்புகொள்ளப்படுவார்கள்.

**தலைவர்,**
**செயற்றிட்ட ஆலோசனை பெறுகைக் குழு,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP),**
**இல. 212A, நாவல வீதி, இராஜகிரிய.**



## சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024

2024ஆம் வருடத்திற்காக சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத் தொகுதி அதிகாரசபைக்கு பின்வரும் பொருட்கள், சேவைகள், திருத்த வேலைகள், பராமரிப்பு வேலைகள் மற்றும் ஒப்பந்த வேலைகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த நிறுவனங்கள், வழங்கல் நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் முகவர் நிறுவனங்கள், அரச அமைப்புகள், சமூக கூட்டறவுச் சங்கங்கள், அரச மற்றும் தனியார் சங்கங்கள், கூட்டு வியாபாரம் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அ. பொருட்கள் மற்றும் மூலப் பொருட்கள்**

| | |
|---|---|
| 01 | காகிதாதி உருப்படிகள் |
| 02 | கணனி சார்ந்த உபகரணங்கள் மற்றும் மென்பொருள்கள் |
| 03 | மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் (தாழ்நிலைதூன் அமைப்பிற்கு தேவையான துணைப்பாகங்களுடன்) |
| 04 | அச்சு வேலைகள் |
| 05 | அலுவலக தளபாடங்கள், மற்றும் ஏனைய உபகரணங்கள் |
| 06 | வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 07 | டயர்கள், டியூப்கள் மற்றும் கொலர்கள் |
| 08 | அனைத்து வாகனங்களுக்கும் தேவையான பட்டறிகள் |
| 09 | சீருடைகளுக்கு இயைபான பொருட்கள் |
| 10 | தைக்கும் நிறுவனம் (திரைச்சீலைகள், குஷன், தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள் போன்றன) |
| 11 | நீச்சல் தடாக பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்கள் |
| 12 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| 13 | கனரகப் பொருட்கள் (Hardware) |
| 14 | நிறப்பூச்சுகள், மெழுகு, வார்னிஷ், பூச்சுக் கலவைப் பொருட்கள் |
| 15 | ஒட்டுப் பலகைகள், அரித்த மரங்கள் |
| 16 | துப்பரவேற்பாட்டுப் பொருட்கள் (சவர்க்காரம், சனிடைசர், கை கழுவும் திரவங்கள்) மற்றும் குப்பைத்தொட்டிகள் வழங்குதல் |
| 17 | இயந்திரம் மற்றும் பொறிமுறை பொருட்கள் (Bush cutter machines/vehicle Parking ticket machines & System supply & maintenance/ID printing card machines etc:) |
| 18 | கன்று வகைகள், கால்நடை உரங்கள், சிவப்பு மண் வகைகள், தும்புத் தூள்கள், புல் பற்றைகள், இரசாயன உரங்கள், பீடை நாசினி, களைநாசினி வழங்குதல் |
| 19 | பொறியியல் உபகரணங்கள் (கருவிகள்) மற்றும் தச்சு வேலைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் |
| 20 | இயந்திர உதிரிப்பாகங்கள் (ஜெனரேட்டர், கியூப் இயந்திரம், புல்வெட்டும் இயந்திரங்கள், போன்றளவற்றிக்கு) |
| 21 | கண்ணாடி வகைகள் |
| 22 | தும்புத்தடி, விளக்குமாறுகள், தும்பினால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் |
| 23 | இலத்திரனியல் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 24 | பொதுமக்கள் தொடர்பு முறைமைக்குத் தேவையான உபகரணங்கள் |
| 25 | குழாய் உபகரணங்களும் பொருட்களும் (PVC Item) |
| 26 | நீர் பம்பிகள் மற்றும் நீரில் அமிழக்கூடிய பம்பிகள் (Water Pump, Submersible pump) |
| 27 | இறப்பர் சார்ந்த உற்பத்திகள் (கார்பட்) மற்றும் இறப்பர் புஷ் (Rubber Bushes) |
| 28 | நீச்சல் தடாகத்திற்கு தேவையான இரசாயனப் பொருட்கள் |
| 29 | CCTV கெமரா மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் |
| 30 | தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் |
| 31 | வீட்டுத்தோட்ட துணைப்பாகங்கள் வழங்குதல் |

**ஆ. சேவைகள்/திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்**

| | |
|---|---|
| 01 | கணனி வலையமைப்பு மற்றும் மென்பொருள் அபிவிருத்தி முறைமைகள் |
| 02 | குஷன் வேலை மற்றும் கதிரைகளைப் பின்னுதல் |
| 03 | கை டிரக்டர், புல் வெட்டும் இயந்திரங்கள், புதர்களை வெட்டும் கருவிகள், வீதி உருளைகள் ஆகிய இயந்திரங்களையும் கருவிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு |
| 04 | மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 05 | இயந்திர திருத்தவேலைகள் மற்றும் ஏனைய மோட்டார் வாகனங்களின் திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் |
| 06 | வாகனங்களின் தகர வேலை மற்றும் நிறப்பூச்சு வேலைகள் |
| 07 | வாகனங்களின் தவணை சேர்விஸ்கள் |
| 08 | கறையான்/எலிகள், கொரிக்கும் விலங்குக் கட்டுபாட்டு சேவைகள் |
| 09 | சீருடைகள் மற்றும் தைக்கும் வேலைகள் |
| 10 | அலுமினிய வேலைகளை வடிவமைத்தல் மற்றும் திருத்தவேலைகள் (Partition) |
| 11 | புள்ளிடும் பலகைகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு (LED Display Board) |
| 12 | வாகன ஆசனங்களுக்கான மேலனை வழங்குதல் மற்றும் குஷன் செய்யும் வேலைகளும் |
| 13 | கட்டுருவாக்கம் மற்றும் இயந்திர மூலம் சீர்ப்படுத்தல் (Fabricating & Machine) |
| 14 | புகைப்படப் பிரதி இயந்திரங்கள் லெமினேடிங் மற்றும் புத்தகம் கட்டுதல் |
| 15 | ஒட்சிசன் வாயு/அசிட்வில் வாயு வழங்குதல் |
| 16 | சலவை சேவைகளை வழங்குதல் |
| 17 | மரத்தாலான தரைகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல் (Timber floor repair and maintenance) |
| 18 | பாரிய அளவிலான தரைவிரிப்புகளை சுத்திகரித்தல் (Dry clean and wet clean) |
| 19 | LED அறிவித்தல் பலகை வழங்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 20 | சுத்திகரிப்பு சேவை வழங்குதல் |
| 21 | பலகை வகை பொருட்களை வழங்குதல் மற்றும் பராமரிப்பு |
| 22 | சூரிய பெனல் வழங்குதல் மற்றும் பராமரித்தல் |
| 23 | கேஸ் உடன் அடுப்பு/ ஒலிம்பிக் டோச் போன்றவை பழுதுபார்த்தல் |
| 24 | ரெக்சின் உருப்படி பழுதுபார்த்தல் (ரெக்சின் உடனான கூரைகள்/மெத்தை உறைகள் தைத்தல்) |

**C. நிர்மாணத்துறை**

| | |
|---|---|
| 01 | ஆலோசனை சேவை (சிவில் இயந்திரவியல், மின்சாரம், இலத்திரனியல், வீட்டுக் கட்டிடக் கலை நிர்மாணம், தோட்ட அலங்காரம், உள்ளக வடிவமைப்பு, இலத்திரனியல்) |
| 02 | நிர்மாண ஒப்பந்த நிறுவனங்கள் (சிவில், இயந்திரவியல், மின்சாரம், தோட்ட அலங்காரம், உள்ளக வடிவமைப்பு, இலத்திரனியல்) |

01. இதற்கான விண்ணப்பப் படிவங்களை 2024.05.06 முதல் 2024.05.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.30 மணி வரை சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் கொள்வனவுப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் ஒரு தொகுதியின் பொருட்டு மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
02. பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை 2024.05.31ஆம் திகதிக்கு முன் பினவரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களை பதிவு செய்தல் 2024' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
03. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
04. விளைகள் கோரப்பட்ட போதும் விலைமனுக்களை சமர்ப்பிக்காத, அல்லது பொருட்களை வழங்கள் தவறும், தேவையான தரத்தைக் கொண்டிராத மாதிரிக்கு அமைவாக சமர்ப்பிக்காத வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பதிவேட்டிலிருந்து எந்தவொரு நிறுவனத்தையும் நீக்கி விடுவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
05. பொருட்கள் கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்ட பின்பு அல்லது சேவைகள் முறையாக நிறைவேற்றப்பட்ட பின்பே கொடுப்பனவுகள் செலுத்தப்படும். பொருட்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின் எதிர்வரும் ஒரு மாத காலத்திற்கு (30 நாட்கள்) கடன் வசதி வழங்குவதற்கு வழங்குநர்கள் உடன்படல் வேண்டும்.
06. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) மற்றும் இலங்கை நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் சங்கம் (ACCSL) நிறுவனங்களில் பதிவாகியுள்ள மற்றும் வழங்குநராக பதிவு செய்து கொள்ளும் வருடத்தின் பொருட்டு ICTAD, ACCSL நிறுவனங்களில் பதிவாகியுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே சம்பந்தப்பட்ட துறைகளுக்கு விண்ணப்பிக்கத் தகமை பெறுவர். (இந்த வர்த்தக பதிவுச் சான்றிதழ்களின் (ICTAD, ACCSL) பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
07. ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்குள் குறித்த ஏக முகவர்/ வழங்குநர் மற்றும் சேவை ஒப்பந்தங்கள் வழங்குவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளவர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும். இயைபுடைய ஆவணங்களை இணைத்தல் வேண்டும். (வியாபாரப் பதிவுச் சான்றிதழ், வெட் சான்றிதழ் அனுபவத்தை உறுதி செய்யும் ஆவணங்கள் போன்றன)
08. இது தொடர்பான மேலதிக விபரங்களை கொள்வனவுப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல. : 070 6130199, 011 2445677 தொலைநகல்: 011 2445675
மின்னஞ்சல் : psnsca@yahoo.com

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**ஆர்த்தர் டி சில்வா மாவத்தை, கொழும்பு -13.**

# இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை

## கல்வி அமைச்சு

## பதவி வெற்றிடங்கள்

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையானது நாட்டின் அரசாங்க துறையின் விஞ்ஞானிகளுக்கு நிதிசார் உதவியை வழங்கும் அரசாங்கம் நிதியிடும் முகவரான்மையொன்றாகும்.

தேசிய ஆராய்ச்சி சபையில் பின்வரும் பதவிகளுக்காக தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

### விஞ்ஞான/ஆராய்ச்சி அலுவலர் – ஏஆர் 1 – 01 வெற்றிடம்

பணி விளக்கம்: ஆராய்ச்சி செயற்றிட்ட முகாமைத்துவம், செயற்றிட்ட தகவல் பிரசுரிப்பு, தரவு அடிப்படைகளை பராமரித்தல், புள்ளிவிபர பகுப்பாய்வு, அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் கருத்தரங்குகள்/பட்டறைகள் போன்ற நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பாகவிருத்தல்.

**தகைமைகள்:**

**வெளியக அபேட்சகர்கள் (1 அல்லது 2)**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், கமத்தொழில், பொருளாதாரம், புள்ளிவிபரம், ICT கணனி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பவியல், கணனி பொறியியல் ஆகியவற்றில் உரித்தான துறையொன்றில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்றதொரு விஷேட பட்டம்.

அல்லது

2. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், கமத்தொழில், பொருளாதாரம், புள்ளிவிபரம், ICT கணனி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பவியல், கணனி பொறியியல் ஆகியவற்றில் உரித்தான துறையொன்றில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்றதொரு பட்டம் அத்துடன் உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின் டிப்ளோமா பட்டம்.

வயது : 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல். மேல் வயதெல்லை உள்ளக அபேட்சகர்களுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

சம்பள அளவுத்திட்டம் : ஏஆர் 1-2016[53,150-10x1,375-15x1,910- 95,550 ரூபா.]

### பெறுகை அலுவலர் – ஜேஎம் 1 – 1 – 01 பதவி வெற்றிடம்

பணி விளக்கம்: தேசிய ஆராய்ச்சி சபை/ தேசிய பெறுகை வழிகாட்டிகளுக்கமைவாக தூதுக்குழுவின் வினைத்திறனுடனான முகாமைத்துவத்திற்கு ஆதரவு வழங்கும் அனைத்து பெறுகை/ ஒப்பந்தங்கள் தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பாகவிருத்தல்.

**தகைமைகள்:**

**வெளியக அபேட்சகர்கள் (1 அல்லது 2)**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம், கணக்கியல், முகாமைத்துவம் அல்லது வணிகம் ஆகியவற்றில் பெற்ற பட்டப்படிப்பு பட்டமொன்று.

அத்துடன்

அரச சேவை, கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்ட சபை/ நிறுவகம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள்:**

1. வெளியக அபேட்சகர்களினால் மேலே தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல்.

அல்லது

2. பதவிக்குரித்தான பாடப் பரப்பில் II ஆம் தரத்தில் முகாமைத்துவ உதவியாளர்-தொழில்நுட்பவியல் சாராத (எம்ஏ1) பதவியொன்றில் ஆகக்குறைந்தது 5 வருடங்கள் பூர்த்தி செய்திருத்தல்

வயது : 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல். மேல் வயதெல்லை உள்ளக அபேட்சகர்களுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

சம்பள அளவுத்திட்டம் : ஜேஎம் 1-1-2016[42,600-10x755-18x1,135-70,580 ரூபா]

**அனைத்து பதவிகளுக்கும் ஏற்புடையதான ஏனைய நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரிகள் இலங்கை பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர் உடல் உளரீதியில் பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கான ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் தீவின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு பொருத்தமாகவுமிருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரர் மிகச்சிறந்த குணவியல்புகளைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.
4. ஆட்சேர்ப்பானது எழுத்து மூலமான போட்டிரீதியிலான பரீட்சையொன்றின் மூலமாகவும் மற்றும்/அல்லது கட்டமைப்பான நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாகவும் நடைபெறும்.
5. நியமனத்தின் தன்மையானது நிரந்தரமானதும் ஊழியர் சேமிப்பு நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் உரித்துடையதாகவுமிருக்கும்.
6. விண்ணப்பதாரிகள் அவர்களின் கையொப்பமிட்ட விண்ணப்பங்களை பிறப்பு சான்றிதழ், ஏனைய உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியவற்றுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2024 மே 26 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் “தலைவர், தேசிய ஆராய்ச்சி சபை, 120/7, வித்யா மாவத்தை, கொழும்பு-07” என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
7. அரசாங்க திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகளின் அலுவலர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் உரித்தான நிறுவனங்களூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.
8. மேலேயுள்ள தேவைப்படுத்தல்களுக்கு அமைந்தொழுகாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரமானது **www.nrc.gov.lk** என்ற தேஆச இன் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**தேசிய ஆராய்ச்சி சபை,**
**120/7, வித்யா மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 011-2655176, 2675430.**
**தொலைநகல்: 011-2675136.**


**For classified advertisements and for replies**

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
+ 94 112429342
+ 94 112429343


# களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

## வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக 2024-05-17ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

### கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம்

**பிரயோகக் கணனி கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**கணனி முறைமை பொறியியல் கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

முறைமை பகுப்பாய்வு நிரலாளர் (Programmer Cum System Analyst) IIஆம் தரம்

### மருத்துவ பீடம்

**நோயியல் கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**சத்திரசிகிச்சை கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

### மானுடவியல் பீடம்

**அழகியற்கலை கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**நிர்வாகப் பிரிவு**

பிரதான ஒழுக்கக்காப்பாளர் (Chief Marshal)

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பதவிக்காவும் சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் மற்றும் இயைபுடைய சகல தகவல்களையும் https://www.kln.ac.lk/vacancies ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**சம்பள அளவு**

1. **விரிவுரையாளர் (பயிலுநர்)**
   ரூபா 54,600 – 10 x 1,335 - 67,590 (*U-AC 3 (IV)*
   (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 181,054.00)
2. **விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத)**
   ரூபா 69,580 – 5 x 1,630 – 77,730 p.m.
   (*U-AC 3 (II)* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 239,760.20)
3. **சிரேஷ்ட விரிவுரையாளர் -** II
   ரூபா 79,360 – 11 x 1,630 – 97,290 p.m.
   (*U-AC 3 (II) -* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 290,798.40)
4. **சிரேஷ்ட விரிவுரையாளர் -** I
   ரூபா 91,310 – 7 x 2,170 – 106,500 p.m.
   (*U –AC 3 (I)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 331,906.40)
5. **பிரதான ஒழுக்கக்காப்பாளர்** (Chief Marshal)
   ரூபா 66,180–8x1335; 8x1630–89,900 p.m.
   (U-EX 2 (II) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 131,000.00)
6. **முறைமை பகுப்பாய்வு நிரலாளர்** (Programmer Cum System Analyst) IIஆம் தரம்
   ரூபா 50,625-3x1335-54,630(EB)55,965-14x1335-74,655 p.m.
   (*U-AS 2 (II)-* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 106,000.00)

**விண்ணப்பிக்கும் முறை**

இந்த பதவியின் பொருட்டான விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரத்தினுள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்வி நிறுவனங்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே https://www.kln.ac.lk/vacancies எனும் பல்கலைக்கழக இணையதளத்திற்குப் பிரவேசித்து உரிய விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தரவிறக்கம் (Downloads) செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தபாலில் பெற வேண்டுமானால் அதற்கான வேண்டுகோளொன்றுடன் முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 செ.மீ. அளவான கடித உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவியின் பொருட்டும் தனித்தனியான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2024-05-17ஆம் திகதி அல்லது அதற்கு முன் பிரதிப் பதிவாளர் / கல்வி நிறுவனங்கள், களனிப் பல்கலைக்கழகம், களனி எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, திணைக்களம் மற்றும் மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பும்போது தலைப்பு (Subject) குறிப்பிடப்படும் நிரலில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களம் என்பன குறிப்பிடல் வேண்டும். பூரணமற்ற, தெளிவற்ற மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| **கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம்** | - | **applyct@kln.ac.lk** |
| **மருத்துவ பீடம்** | - | **applyme@kln.ac.lk** |
| **மானுடவியல் பீடம்** | - | **applyhu@kln.ac.lk** |
| **பிரதான ஒழுக்கக்காப்பாளர்** | - | **aead@kln.ac.lk** |
| **முறைமை பகுப்பாய்வு நிரலாளர்** | - | **aead@kln.ac.lk** |

அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச்சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை குறும்பட்டியலிடும் முழுமையான உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**களனி.**
**2024-05-02**

வாழ்க்கைத்தொழில்சார்
தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக கல்லூரிகள்

## வெற்றிடம்

அனுராதபுரம், படங்கல, யாழ்ப்பாணம், குளியாப்பிட்டிய, மாத்தறை மற்றும் இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரிகளிற்கு

**சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் 2)**
**விரிவுரையாளர் (தகுதிகாண்)**
**போதானாசிரியர் (Instructor)**
**உதவிப் பதிவாளர்**
**உதவி நூலகர்**
**உதவி நிதி மேலாளர்**

கல்விசார் கல்வி சாரா பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதோடு அதற்கான பத்திரிகை விளம்பரம் **2024 மே 05ம் திகதியன்று** Sunday Observer பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களின் இணையதளத்தைப் பார்க்கவும்.

**அனுராதபுரப் பல்கலைக்கழகக் கல்லூரி**
0252 222 010
web : www.uca.ac.lk

**படங்கல பல்கலைக்கழக கல்லூரி**
0362 235 570
web : www.ucbatangala.lk

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி**
0212 217 792
web : www.ucj.ac.lk

**குளியாபிட்டிய பல்கலைக்கழக கல்லூரி**
0372 059 570
web : www.uck.ac.lk

**மாத்தறை பல்கலைக்கழக கல்லூரி**
0412 222 962/7
web : www.ucm.ac.lk

**இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரி**
0112 626 297/8
web : www.ucr.ac.lk

2024 மே 05


Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer


# வெற்றிடங்கள்

## நீர்ப்பாசன அமைச்சுக்கு

## திட்டப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பு

காலநிலை பாதிப்பை குறைக்கும் பல் கட்ட திட்ட நுழைவின் (CResMPA) உலக வங்கி நிதி அளிக்கப்பட்ட திட்டத்திற்கான அரச ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் 01⇔2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) சுற்றுநிருபத்தின்படி பின்வரும் பதவிகளுக்காக “ஒப்பந்த அடிப்படை” ஒன்றில் திட்ட முகாமைத்துவ பணியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு தகுதிபெற்ற விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்புடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பதவிகளின் சம்பளம் மேற்குறிப்பிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின் அட்டவணை 3 இல் குறிப்பிடப்படும்.
- விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலத்தில் தேர்ச்சி அதேபோன்று அரச ஒழுங்குமுறையில் உள்ள பரீட்சயம் மற்றும் கணினி அறிவு ஆகியவை அவசியமான முற்றேவைப்பாடுகளாகும். இலங்கையில் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் குறிப்பாக உலக வங்கி நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் வேலை அனுபவம் மற்றும் குறித்த துறையில் உள்ள அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.

| இல. | PS பிரிவு | பதவி | நிலைகளின் எண்ணிக்கை | நியமன அடிப்படை | பொருந்தும் சுற்றுநிருபம் |
|---|---|---|---|---|---|
| 01 | PS 3 | சிரேஷ்ட நிரலாக்க நிபுணர் (கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்றல்) | 01 | ஒப்பந்தம் | 01/2019 ஆம் இலக்க MSD |
| 02 | PS 3 | பெறுகை மற்றும் ஒப்பந்த முகாமைத்துவ நிபுணர் | 01 | ஒப்பந்தம் | |
| 03 | PS 5 | சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரி | 01 | ஒப்பந்தம் | |
| 04 | PS 5 | தொடர்பாடல் அதிகாரி | 01 | ஒப்பந்தம் | |
| 05 | PS 6 | திட்ட செயலாளர் | 01 | ஒப்பந்தம் | |

மேலதிக விபரங்களுக்கு www.irrigationmin.gov.lk என்ற இணையதளம் மற்றும் மேல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தை பார்ப்பதற்கு நிதி அமைச்சின் இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

விண்ணப்பங்களை கீழுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு 2024 மே 20 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

**திட்டப் பணிப்பாளர்**
**காலநிலை பாதிப்பை குறைக்கும் பல் கட்ட திட்ட நுழைவு (CResMPA)**
**இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05**

தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சை ஒன்றுக்காக அழைக்கப்படுவதோடு 01, 04 மற்றும் 05 ஆகிய பதவிகளுக்காக எழுத்துப் பரீட்சை ஒன்று நடத்தப்படும். எந்த வகையான ஆதரவு திரட்டலும் தகுதியிழப்பாக அமையும் என்பதோடு அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
திகதி: 2024.05.05


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# வாரபலன்



05.5.2024 - 11.5.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**மேஷம் (அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

எதையும் துணிச்சலுடன் செய்து முடிப்பீர்கள். பூமி, வீடு தொடர்பான பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். கோபம், படபடப்பு குறையும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சலும், பண விரயமும் நீங்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது துரிதமாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மனதிற்கு இனிமையான செய்திகள் வந்து சேரும். வேலையை மனதிற்கு பிடித்து செய்வீர்கள். குடும்பத்தில் நிம்மதி அதிகரிக்கும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் மறையும். பிள்ளைகள் நலனில் அக்கறை காண்பீர்கள். பெண்கள் எந்த காரியத்தில் ஈடுபடும் போதும் யோசித்து செயல்படுவது நல்லது. கலைத்துறையினருக்கு வீண் அலைச்சல் அகலும். சுபச்செலவு கூடும். மாணவர்கள் கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்ல மதிப்பெண் பெற உதவும். எந்த காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது.

## ரிஷபம்

**இடபம் (கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

நீங்கள் எடுக்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். எதிர்பாராத வீண் செலவு ஏற்படலாம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்திசாதூரியத்துடன் நடந்து கொண்டு நன்மை அடைவார்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கக் கூடும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். புதிய வீடு கட்டுவது, பழைய வீட்டை புதுப்பிப்பது போன்ற பணிகளை தொடங்க முற்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு லாபம் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் ஏற்படும். புதிய பொறுப்புகள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு பாராட்டு கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.

## மிதுனம்

**மிதுனம் (மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

வரவுக்கு ஏற்ற செலவு இருக்கும். அதேநேரத்தில் அதற்கான கூடுதலாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டி இருக்கும். மனதில் இருந்த கவலை அகலும். வாய்க்கு ருசியான உணவு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சுபச்செலவு ஏற்படும். கூட்டுத் தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் பங்குதாரர்களுடன் சுமூகமான முறையில் அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திடீர் நெருக்கடிகள் ஏற்படலாம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பயணங்கள் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கவனமாக பேசுவது நல்லது. கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் கல்வி தொடர்பான விஷயங்களில் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள் விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர். கலைத்துறையினருக்கு ஆன்மீக பயணம் செல்வதில் விருப்பம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை நீங்கும்.

## கடகம்

**கடகம் ( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

உடல் உழைப்பாலும், மனத் தைரியத்தாலும் வெற்றி பெறுவீர்கள். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேரலாம். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடும். சாதூரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் கடன் பிரச்சினைகள் தீரும். போட்டிகள் குறையும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்தவை நல்லபடியாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில விஷயங்களை தவறாக புரிந்து கொண்டு சங்கடப்பட வேண்டி இருக்கும். வாக்குவன்மையால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த இடைவெளி குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். பெண்களுக்கு பணவரத்து திருப்தி தரும். கலைத்துறையினர் வெளியூர் பயணம் செல்ல நேரலாம். மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் உண்டாகும். பாடங்களை கவனமாக படிப்பது முன்னேற்றத்துக்கு உதவும்.

## சிம்மம்

**சிம்மம் (மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

தேவையற்ற குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். மனவருத்தம் நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பணத்தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் நெருக்கடி ஏற்பட்டு நீங்கும். வழக்கம்போல் வியாபாரம் இருந்தாலும் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த வேலையை செய்யும் முன்பும் அதுபற்றி அதிகம் யோசிப்பர். சிலருக்கு புதிய வேலையும் கிடைக்கலாம். குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரும். பெண்கள் மற்றவர்களுக்கு உதவி செய்வதால் வீண் அலைச்சல் உண்டாகலாம். கலைத்துறையினருக்கு மிகப் பெரிய மாற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை உண்டாகும்.

## கன்னி

**கன்னி (உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். புத்தி தெளிவு ஏற்படும். மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். மனக்குழப்பம் நீங்கும். தொழிலதிபர்கள் அதிக பொருளாதார வரவுகளை பெறுவார்கள். உத்தியோகத்தர்கள் அரசு தனியார் துறைகளில் உள்ளவர்களும் இது வரை இருந்த ஆடம்பர செலவினங்களை தவிர்த்து தங்களின் குடும்பத்தினருக்கு மகிழ்ச்சிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும். கணவன், மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் உங்கள் நற்செயல்கள் இருக்கும். தந்தை வழி சார்ந்த உறவினர்கள் தங்களுக்கு தேவையான உதவிகளை உங்களிடம் கேட்டுப் பெறுவார்கள். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வேகம் காணப்படும்.

## துலாம்

**துலாம் (சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

எல்லாவற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி ஆகியவை இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் பணியாளர்களிடம் நீங்கள் காட்டி வந்த கடுமையான போக்கு மாறி உங்கள் செயலில் கனிவான தன்மை நிறைந்து இருக்கும். குடும்பத்தில் திருமணம் ஆனவர்களுக்கு புத்திரப்பேறு கிடைக்கும். தம்பதிகளிடையே ஒற்றுமை அதிகரிக்கும். ஆயுள் அபிவிருத்தி அடைவதற்கான வகையில் கிரகங்கள் செயற்படவுள்ளதால் அதற்கேற்றவாறு பழக்கவழக்கங்களை அமைத்துக்கொள்ளுங்கள். பணியில் ஈடுபட்டுள்ள பெண்கள் தொழில் மேன்மை பெறுவார்கள். கலைத்துறையினர் நிறைவான பொருளாதாரம் பெறுவார்கள். மாணவர்கள் சாமர்த்தியமான செயல்களால் மற்றவர் மனதில் இடம் பிடிப்பர்.

## விருச்சிகம்

**விருச்சிகம் (விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எதிர்ப்புகள் விலகும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்களின் நட்பும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். தொழிலதிபர்கள் புதிய வாடிக்கையாளர்களை நிரம்பப் பெறுவார்கள். நன்மதிப்பும் பொருளாதார உயர்வும் பெறுவார்கள். உத்தியோகத்தர்கள் அரசு மற்றும் தனியார்துறைகளில் பணிபுரிபவர்களின் செயலில் இருந்த மந்த நிலைகள் நீங்கி சுறுசுறுப்பான செயற்பாடுகள் உருவாகும். குடும்பத்தில் கணவன், மனைவி குடும்ப ஒற்றுமையில் அனுகூல பயன்கள் உண்டாகும். உறவினர்கள் உங்கள் வளர்ச்சி கண்டு சிறிது பொறாமைப்படுவார்கள். பெண்களுக்கு சீரான வாய்ப்புகள் வரும். குழப்பமான மனநிலை அகலும். கலைத்துறையினர் முன்யோசனையுடன் திட்டமிடல் அவசியம். புதிய உற்சாகமும் நம்பிக்கையும் கிடைக்கும். மாணவர்களுக்கு தொழிற்கல்வி கற்பதில் ஆர்வம் உண்டாகும். திட்டமிட்டுப் படிப்பது எதிர்காலத்திற்கு உதவும்.

## தனுசு

**தனுசு (மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இருந்த தடங்கல் நீங்கும். தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் வேகமான போக்கு காணப்படும். நிர்ப்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் மந்தமான போக்கு நீங்கும். கிடப்பில் இருந்த கடன்கள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினரின் செயல்கள் மனவருத்தத்தை தருவதாக இருக்கலாம். பிள்ளைகளுடன் அனுசரித்துச் செல்வது நன்மையை தரும். கணவன், மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படும். பெண்கள் பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் பாராட்டுதல்களை பெறுவார்கள். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் வந்து கொட்டும். தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்விக்கு தேவையான வசதிகள் தன்னிறைவாய் கிடைக்கும். மற்றவர்கள் பாராட்டும் வண்ணம் உங்கள் செயல்பாடுகள் இருக்கும்.

## மகரம்

**மகரம் (உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

கடினமான பணிகளையும் எளிதாக செய்து முடிக்கும் சூழ்நிலை உண்டாகும். புதனின் சஞ்சாரம் பணவரத்தைத் தரும். நீண்ட தூர பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தடங்கல்கள் அகலும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகை இருக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். பிள்ளைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். பெண்கள் தங்களது உடைமைகளை கவனமாக பாதுகாத்துக்கொள்வது நல்லது. கலைத்துறையினருக்கு நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேறும். மாணவர்கள் முதல் தர மாணவர்களாக தேர்ச்சி பெறுவார்கள். படிப்பில் ஆர்வம் காட்டி, பெற்றோருக்கு நற்பெயர் வாங்கித்தருவர்.

## கும்பம்

**கும்பம் ( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

நல்ல பலன்கள் உண்டாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகளில் சாதகமான நிலை காணப்படும். தானதர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைபளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் எல்லா பிரச்சினைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். அக்கம் பக்கத்தினரிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்கள் அடுத்தவர்களின் வேலைக்காக வீணாக அலைய நேரிடும். கலைத்துறையினருக்கு மனோ தைரியம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு புதிய நட்பு கிடைப்பதுடன் அவர்களது ஆலோசனையும் வெற்றிக்கு உதவும். ஆனால் எதிலும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

## மீனம்

**மீனம் (புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சுகள் சாதகமாக முடியும். வீடு, வாகனம் வாங்குவது அல்லது புதுப்பிப்பதில் நாட்டம் அதிகரிக்கும். பெண்களுக்கு அவர்கள் எடுத்த காரியம் நல்லபடியாக நடந்து முடியும். கலைத்துறையினர் மனதில் எதைப்பற்றியாவது சிந்தித்த வண்ணம் இருப்பர். மாணவர்களுக்கு கல்வியில் சீரான போக்கு காணப்படும். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிபெறும்.

# 11 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 34

# கல்வெட்டை மங்கலச் சொல்லுடன் ஆரம்பிப்பது புராதன வழக்கம்

தமிழகத்தின் எல்லா மாவட்டங்களில் இருந்தும் பேராளர்கள் வருகை தந்திருந்தார்கள். அவர்கள் ஊடான அறிமுகம் அவர்களின் ஊரின் சிறப்பு பற்றி அறிந்து கொள்ளும் வகையில் கலந்துரையாடல் தொடர்ந்த வண்ணம் அமைந்தது. எம் அணியினரோடு ஆரோக்கியமான தொடர்பையும் கலந்துரையாடலையும் பேணியதில் முக்கியமானவராக தென்காசி மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்ட முனைவர் சே.சொர்ணலதா விளங்கினார். தென்காசி என்றதும் காசி விஸ்வநாதர் ஆலயம், மேற்கு தொடர்ச்சிமலை, குற்றால அருவி ஆகிய உலகளவில் பிரசித்தமான சுற்றுலாத் தலங்களே ஞாபகத்துக்கு வருகின்றன. வைத்திலிங்க சுவாமி அன்னை யோகாம்பிகை திருக்கோயில் அமைந்துள்ள இடமாகவும் விளங்குகிறது. சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சியோடு மிகநெருங்கிய தொடர்பினை கொண்ட மாவட்டமாக தென்காசி விளங்குகிறது. 2019ஆம் ஆண்டின் பின்னரே தனியொரு மாவட்டமாக தமிழ்நாடு அரசின் அரசாணையுடன் அங்கீகாரம் பெறுகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து சிலபகுதிகளை இணைத்துக்கொண்டே இம் மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேற்கே கேரள மாநிலத்தையும், கிழக்கே தூத்துக்குடி மாவட்டத்தையும், வடக்கே விருதுநகர் மாவட்டத்தையும், தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தையும் எல்லையாகக் கொண்டே இம் மாவட்டம் அமைந்துள்ளது.




தென்காசி மாவட்டம், நல்லூர் நகரில் அமையப் பெற்றுள்ளதாக சி. எஸ். ஐ ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி விளங்குகிறது. 1998ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக் கல்லூரி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. கலை, வணிகவியல், அறிவியல் ஆகிய துறைகளின் உயர் பாடநெறிகள் இக் கல்லூரியில் போதிக்கப்படுகின்றன. இக் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியாகவே முனைவர் சொர்ணலதா கடமையாற்றுகிறார். இலங்கையில் தமிழர்களின் வாழ்க்கை, அரசியல் நிலைத் தொடர்பில் மிக ஆர்வமாக கேட்டு அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வத்தை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஆய்வரங்கில் "கல்வெட்டுத் தகவல்கள்" எனும் தலைப்பில் ஆய்வுரையை முன்வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.ஆதி காலத்தில் நீண்டகாலம் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கருதப்பட்ட செய்திகள் கற்களில் பொறிக்கப்பட்டன. இவ்வாறு கற்களில் பொறிக்கப்பட்டசெய்திகள் கல்வெட்டுகள் எனப்படுகின்றன. பெரும்பாலும் மன்னர்களின் பணிகள், ஆணைகள் இவ்வாறு கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன. வீரர்கள், பிரபுக்கள், அதிகாரிகள் போன்றோருடன் தொடர்புபட்ட வகையிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகள் பெரும்பாலும் மக்கள் திரளும் பொது இடங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. கோயில்கள், குகைகள், பொது மண்டபங்கள், வெற்றித் தூண்கள் உட்பட இறந்தோர் நினைவுக் கற்களான நடுகற்கள் ஆகியவற்றில் கல்வெட்டுத் தடயங்கள் காணப்படுகின்றன. தொல்லியல் ஆய்வுகளுக்கு மிகமுக்கிய ஆவணமாக இக் கல்வெட்டுகள் திகழ்கின்றன. மொழிகள் தொடர்பிலான ஆய்வுகளுக்கு மிக முக்கிய தடயப் பொருட்களாக திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்திற்கு முற்பட்ட காலத்திலேயே தமிழகத்தில் கல்வெட்டுகள் குறித்த அவதானம் நிலை பெற்றுள்ளதை அறியமுடிகிறது. அகநானூறு, புறநானூறு பாடல்களில்; கல்வெட்டுகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கது. தமிழகத்தில் வரலாற்றை முழுமைப் படுத்துவதற்கு இக் கல்வெட்டுஆதாரங்களே முக்கியத்துவம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது. இத் தொன்மவியல் ஆய்வுமுறை "கல்வெட்டியல்" எனும் கற்கைநெறியாக வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கல், ஏனைய பொருட்களினால் வெட்டப்பட்ட அல்லது உலோகங்களால் வார்க்கப்பட்ட எழுத்துக்கள் தொடர்பான ஆய்வுத்துறை என விரிவுபெறுகிறது. இத் துறை ஈடுபாட்டாளர்கள் "கல்வெட்டியலாளர்கள்" எனவும் வகைப்படுத்தப் படுகிறார்கள். இத் துறை 16ஆம் நூற்றாண்டு தொடக்கம் உறுதியான வளர்ச்சிப்போக்குடன் திகழ்வதை அறியமுடிகிறது.

இலங்கையின் கல்வெட்டுக்கள் குறித்த ஆய்வுகள் முக்கியத்துவம் பெற்றுவிளங்குகின்றன. இக் கல்வெட்டு ஆய்வுகள் மூலம் இலங்கையில் பௌத்த கலாசாரத்தின் மூப்புதன்மையை நிறுவும் முனைப்பும் தீவிரமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே அக் கல்வெட்டு ஆய்வுகள் பல இடங்களில் பௌத்தத்திற்கு முன்னரான மூப்புநிலையை வெளிப்படுத்துகின்றமை கவனிக்கத்தக்கது. இவ் ஆய்வு வெளிப்பாடுகளை அமரர் தங்கேஸ்வரியின் ஆய்வுஎழுத்துக்கள் வெளிப்படுத்தி நிற்பதையும் அறியலாம். இந் நிலையில் பிராமி சாசனம் என்ற விடயம் முக்கியத்துவம் பெறுகிறது. பண்டையகாலத்தில் தமிழ் எழுத்துக்கள் தமிழ்ப் பிராமி அல்லது தமிழி எனும் எழுத்துமுறைப் பிரயோகத்தில் எழுதப்பட்டுள்ளது. இது தமிழ் மொழிக்குமுன்னோடியான எழுத்துமுறையாக பிரயோகத்தில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை மலையகப் பகுதிகளிலும் கல்வெட்டு தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கண்டி இராசதானி தொடர்பிலான தரவுகள் இதன் மூலம் வெளிப்படுகின்றன. இந்திய வம்சாவளித் தமிழர்களின் வரலாற்றை எடுத்துரைக்கும் ஆவணங்களாக திகழும் கல்வெட்டுகள் குறித்து கவனம் செலுத்தப்படாமை ஓர் குறைபாடாகவே திகழ்கின்றமை கவனிக்கத்தக்கது.

"மலையகத் தமிழர்கள்" எனும் சமூக உருவாக்கம் இலங்கையில் இருநூறு வருடகால வரையறையிலிருந்து விரிந்துசெல்கிறது. இந் நிலையில் இச் சமூக தொன்மங்கள் குறித்த அவதானத்தில் நாட்டார் பாடல்கள் தொடக்கம் சமூக இலக்கியங்கள்வரை மலையக மக்களின் வாழ்வியலையும் வரலாற்றையும் எடுத்துரைக்கும் ஆவணங்களாகின்றன. மலையகம் குறித்த பிரக்ஞையில் அதனுடன் தொடர்புபட்ட அழகியல் சார்ந்த விடயங்கள் முனைப்புப் பெறாமல் இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும். மலையகம் எனும் பிற்புலத்தில் அதன் தொன்ம வரலாற்றை பரிசோதிக்கும் முனைப்பில் கல்வெட்டியல் எண்ணக்கரு பிரயோகிக்கப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. சிறுதெய்வ ஆலயங்கள், கல்லறைகள், பாலங்கள், சிலவீடுகள் என்ற வகையில் மலையகப் பகுதிகளில் உள்ள கல்வெட்டுத் தடங்களும் ஆதாரங்களாக காணப்படுகின்றன. பலதோட்டங்கள் மூடப்பட்டு பெரும்பான்மை இனத்தவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ள தோட்டங்களில் அவ்வாறான ஆதாரங்கள் தற்போதும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்தவருடம் "மலையகம் 200" தொடர்பான கவனம் பெரிதும் நிலவிய நிலையில் நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம், இலங்கை தபால் திணைக்களத்துடன் இணைந்து வெளியிட்ட மலையக கல்வெட்டியல் தொடர்பான அவதானத்தில் அமைந்த முத்திரை குறிப்பிடத்தக்கதாகும். இவ் அமைப்பினரால் இந்திய வம்சாவளி தமிழர்கள் இலங்கைக்கு புலம்பெயர்ந்து இருநூறு வருடத்தை குறிக்கும் "மலையகம் 200"முத்திரையில் நாவலப்பிட்டி, இம்புல்பிட்டி தோட்டம், கல்லாறு பிரிவில் அமைந்துள்ள ஐந்துமுனியாண்டி ஆலய விக்கிரகம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. அவ் விக்கிரகத்திலும் கல்வெட்டுகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கல்வெட்டியலில் மலையகம் குறித்த அவதானத்தை ஏற்படுத்தும் நோக்கம் கருதியே இவ் விடயம் இம் முத்திரையில் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (அம் முத்திரையின் படம் இதனுடன் உள் வாங்கப்படுகிறது.) இந் நிலையில் தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தில் மலையக சமூகத்தை சேர்ந்த,பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஜெயசீலன் தனது கலாநிதிப் பட்ட ஆய்விற்காக பூர்வாங்க பணிகளை நிறைவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந் நிலைமை மலையக கல்வெட்டியல் தடங்களின் ஆய்வில் உத்வேகத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையைத் தருகிறது எனலாம்.



முனைவர் சே.சொர்ணலதா "கல்வெட்டுத் தகவல்கள்" தலைப்பிலான தனது ஆய்வுரையில், கல்வெட்டுகள் ஒரு நாட்டின் காலக் கண்ணாடி, வரலாற்றுப் பெட்டகங்கள், சமுதாயப் பண்பாட்டின் விளக்கங்கள், மக்கள் பழக்கவழக்கங்களின் பிரதிபலிப்புகள், நிகழ்ச்சிகளின் கையேடுகள் என விளக்கமளித்ததுடன் அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அவரது உரைதொடர்ந்தது. தமிழ்நாட்டில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுகள் தொன்மையான தமிழ் எழுத்திலும், வடமொழிக்கு பயன்பட்ட கிரந்த எழுத்துக்களிலும், நாகரி எழுத்திலும், சமகாலத்தில் பிரயோகத்தில் உள்ள எழுத்துக்களிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இக் கல்வெட்டு தடயங்கள் வாயிலாக வரலாற்றுச் சமுதாய ஆய்வுகளுக்கு கல்வெட்டு தகவல்கள் பெரிதும் துணை நிற்கின்றன என்பதை வலியுறுத்துவதாகவும் பேராசிரியரின் உரை விரிந்து சென்றது. கல்வெட்டுகள் பல அரிய நிகழ்வுகளையும்,மரபு சார்ந்த தகவல்களையும் மக்களுக்கு தெளிவுறுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது என்ற கருதுகோளுடன் அமைந்த இவரது உரை அரங்கில் மிகுந்த கவனத்தை வென்றதாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. ஒருநாட்டின் நாகரீக வளர்ச்சியை கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன. இந்தியாவில் தான் அதிகம் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதிலும் தென்னிந்தியாவிலேயே அதிகமான கல்வெட்டுகள் காணப்படுவதாக அறிகிறோம். இது தமிழர்களினதும், தமிழ் மொழியினதும் பூர்வீகத்துக்கான சான்றுகளாக அமைகின்றமை சிறப்பம்சமாகும். இவ்வாறான கல்வெட்டுகளை படித்தறிந்து, வரலாற்றுச் சான்றுகளாக அவற்றை உருவாக்கி அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்திய பெருமை மேலைநாட்டவரையே சாரும். அவர்களில் ஜேம்ஸ் பிரின்செப், டாகடர் பர்னல், காலின், டாக்டர் ஹீல்டஸ் ஆகியோரது பணி குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவின் மிகப் பழமையான கல்வெட்டுகளாக அசோகரின் கல்வெட்டுகளே அடையாளப்படுத்தப்படுகின்றன. இக் காலத்திலிருந்தே பிராமி எழுத்துக்களில் இருந்து தமிழ், கன்னடம்,தெலுங்கு, மலையாளம், குஜராத்தி, ஒரியா போன்ற மொழி எழுத்துக்களிலும் கல்வெட்டுகள் தோன்றின எனலாம். அசோக மன்னன் காலத்திற்கு முன்பிருந்தே வடநாட்டிலிருந்து மேற்கு நோக்கி வந்த சமணத் துறைவிகள் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் தாங்கள் தங்கிய பாறை இடுக்குகள், குகைகள் ஆகியவற்றில் கல்வெட்டுகளை பொறித்துள்ளனர். பல்லவர் காலத்தில் கல்வெட்டுகள் உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகமாயின. கல்வெட்டுகளை ஆட்சியாளர்கள் (அரசர்கள்) அமைத்த கல்வெட்டுக்கள், குடிமக்கள் அமைத்த கல்வெட்டுகள் என இரண்டு பிரிவாக நோக்கலாம். அரசர்கள் அமைக்கும் கல்வெட்டுகள் பரம்பரை மரபு, பெற்ற வெற்றிகள், சிறப்புப் பெயர்கள், வழங்கிய கொடை விபரங்கள் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். மாறாக குடிமக்களின் கல்வெட்டுகளில் மேற்குறித்த விடயங்கள் இடம்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டில் காணப்படும் கல்வெட்டுகளை ஆராய்ந்து பின்வரும் ஐந்து பகுப்புகளாக அவதானிக்கும் முறைமை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு கல்வெட்டை எழுதத் தொடங்குபோது மங்கலச் சொல்லுடன் ஆரம்பிப்பது வழக்கமாக இருந்துவந்துள்ளது. இச் சொல்லுக்கு அடுத்த படியாக கல்வெட்டுச் சாசனம் தோன்றிய காலம் குறிப்பிடப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். கல்வெட்டு சாசனம் குறிப்பிடப்பட வேண்டிய செய்தியை உள்ளடக்கிய பகுதியாக கல்வெட்டின் செய்தி குறித்து நிற்கின்றமையும் கவனத்திற்குரியது. அவ்வாறே கையெழுத்துப் பகுதி மற்றும் கல்வெட்டினை பாதுகாக்கும் கொடை சிறப்பை எடுத்துரைக்கும் "ஓம்படைக் கிளவி" என்ற பகுதியும் கல்வெட்டொன்றின் சிறப்பாக நோக்கப்படுகிறது எனலாம். சில கல்வெட்டுகள் மங்கல சொல்லுக்கு அடுத்ததாக "மெய்கீர்த்தி" என்ற சிறப்புபகுதியும் உற்றுநோக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. உரைநடைக் கல்வெட்டுகள் தொடர்பான அவதானம்; ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்னரே தமிழில் உரைநடை விருத்திபெற்றுள்ளமைக்கான வழுவான கல்வெட்டு ஆதாரங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சொர்ணலதாவுடனான உரையாடல் மலையகத்தோடு கல்வெட்டியலை பிரயோகிக்கும் லாவகம் குறித்த அவதானத்தை செலுத்தியதாகவே அமைந்திருந்தது.

பயணம் தொடரும்...

# படித்ததும் பகர்வதும் 189



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### மற்றுமொரு தொழிலாளர் தினம்!




மற்றுமொரு தொழிலாளர் தினம் கடந்த வாரம் எம்மை கடந்து சென்றது. உலகம் முழுதும் வாழும் தொழிலாளர்கள் வருடா வருடம் மே மாதம் முதலாம் திகதியன்று தொழிலாளர் தினத்தை கொண்டாடுகின்றனர். அவ்வாறான மற்றுமொரு தொழிலாளர் தினக் 'கொண்டாட்டம்' இலங்கையிலும் இந்த வருடமும் மே முதலாம் திகதி முடிவடைந்திருக்கிறது.

தொழிலாளர்களின் நலன்களைப் பேணவும், அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கவும், அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்தவும், அவர்களது எதிர்காலத்தை சுபீட்சமாக்கவும் தேவையான தீர்மானங்களை எடுத்து அவற்றை உரிய முறையில் அமுல் நடத்தும் நோக்கிலேயே தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது அல்லது கொண்டாடப்படுகிறது.

பொதுவாக தொழிலாளர்கள் தமது சம்பளத்தை அதிகரித்துக்கொள்ளவும், தங்களுக்கான வசதி வாய்ப்புகளையும் சலுகைகளையும் அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும், இழந்து போன அல்லது மறந்து போன அல்லது இதுவரை கிடைக்காத தமது உரிமைகளை பெற்றுக் கொள்ளவும் இத்தினத்தை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர். உண்மையில் அத்தகைய முயற்சிகளை வெற்றி பெற செய்வதற்கே தொழிலாளர் தினம் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு நடைபெறுகின்றனவா? அத்தகைய நோக்கங்கள் நிறைவேறுகின்றனவா? என்பன கேள்விக்குறிகளாகவே உள்ளன.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும், தொழிலாளர் தினமான மே முதலாம் தினத்தில் கொழும்பில் பல பிரிவினர்களால் நடத்தப்படுகின்ற ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், கலை கலாசார நிகழ்ச்சிகள் எனப் பல இடங்களில் பரவலாக இடம்பெறுகின்றன. கொழும்பை அடுத்து இதேபோன்ற நிகழ்சிகள் அதிக அளவில் மலையகத்திலேயே இடம் பெறுவதைக் காண முடிகிறது.

எவ்வாறாயினும், இவற்றை தொகுத்து, ஆழமாக நோக்கும் போது தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி இடம் பெறுகின்ற நிகழ்வுகளால் தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேறுகின்றனவா? அவர்களது நலன்களில் அபிவிருத்தி ஏற்படுகின்றனவா? அவர்களது தேவைகள் பூர்த்தியாகின்றனவா? அவர்களது சம்பளம் குறிப்பிடத்தக்க அளவில் அல்லது திருப்தியான அளவில் அதிகரிக்கப்படுகின்றதா? அவர்களது உரிமைகள் வென்றெடுக்கப் படுகின்றனவா? எனும் பல கேள்விகளுக்கு பெரும்பாலும் "இல்லை" என்ற பதிலே கிடைக்கும் நிலைமையே உள்ளது என்பதை எந்தவிதத்திலும் மறுக்க முடியாதுள்ளது..

இலங்கையில் பெரும்பாலும் இந்த தொழிலாளர் தினத்தை அரசியல் கட்சிகளே தமது பலத்தை காட்டவும், தமது செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளவும், தம்மீதான ஆதரவை பெருக்கிக் கொள்ளவுமே பயன்படுத்துவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான அரசியல் கட்சிகள், பெருமளவில் பணத்தை செலவிட்டு, தமது நிகழ்ச்சிகளுக்கு தமது ஆதரவாளர்களையும் பொதுமக்களையும் திரட்டி, தமது பலத்தைக் காட்டுகின்றனர். நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தம்முடந்தான் இருக்கின்றனர் என்ற எண்ணத்தை தோற்றுவிக்க முனைகின்றனர்.

இவை தொழிலாளர் தினத்தின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றுவனவாகத் தெரியவில்லை. இந்நிலை மாறி தொழிலாளர் தினங்களில் தொழிலாளர்களுக்கு நன்மைகள் கிடைக்கும் நிலைமை உருவாக வேண்டும். அவர்களது அபிலாஷைகளும் எதிர்பார்ப்புகளும் நிறைவேற வேண்டும். அப்போதுதான் 'தொழிலாளர் தினம்' உண்மையான கொண்டாட தினமாக மலரும் என எதிர்பார்க்கலாம்.

## நெஞ்சுக்கு நீதி

உழைத்து வாழ்வோரே உலகினில் உயர்ந்தோர்
உழைப்பினை சுரண்டிப் பிழைப்போர் இழியோர்
பிழைக்க உழைக்கும் எல்லோருமே நல்லோர்
உணர்ந்து வாழ்வோர்கள் என்றுமே சிறந்தோர்

## பாராட்டுரோம்! வாழ்த்துகிறோம்!!



### அஷ்ஷெய்க் ஓ. எல். அமீர் அஜ்வாத் (நளீமி)

சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெற்றுள்ள, இலங்கை வெளிவிவகார அமைச்சில் மேலதிகச் செயலாளர், சட்டத்தரணி அஷ்ஷெய்க் ஓ. எல். அமீர் அஜ்வாத் (நளீமி) க்கு நாம் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். பொருளாதாரம் உட்பட சகல விடயங்களிலும் இலங்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாடாக திகழும் சவூதி அரேபியா, இலங்கை முஸ்லிம்களுக்கும் தமது சமய ரீதியில் விசேடம் மிக்கதாக இருப்பதனால் இப்பதவி மிகவும் பொறுப்பு வாய்ந்ததாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜாமியா நளீமியா, பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பட்டம் பெற்ற இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டமாணி, சட்ட முதுமாணிப் பட்டங்கள் பெற்று 1997இல் உயர்நீதிமன்ற சட்டத்தரணியானார்.

இலங்கை வெளிநாட்டு நிருவாகச் சேவையில் இணைந்த இவர், ஏற்கனவே ஓமான், யெமன், இந்திய நாடுகளிலும் இலங்கைத் தூதுவராக, பிரதித் தூதுவராகக் கடமையாற்றியுள்ளார்.

பல்துறை ஆளுமைமிக்க இவர், தமது உயரிய பதவியின் பரபரப்பான கடமைகளுக்கு மத்தியிலும், கலை, இலக்கிய செயற்பாடுகளை மறக்காமல் தொடர்கிறார். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் 1990களில் இவர், "இளைஞர் இதயம்" நிகழ்ச்சியைத் தொடராக நடத்தியுள்ளதோடு இஸ்லாமிய நற்சிந்தனை, அல்குர்ஆன் விளக்கம், ஆங்கில மொழியில் ஸஹர் சிந்தனை போன்றவற்றையும் காலத்துக்குக் காலம் வழங்கியிருக்கிறார்.

கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி ஒலிபரப்பான 'பாரம்பரியம்' நிகழ்ச்சியில் அதிதியாக கலந்து தன் அனுபவங்களையும் இவர் பகிர்ந்து கொண்டார். முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் பாத்திமா ரினோஷியா தயாரிப்பில், கலைஞர் எம்.எஸ்.எம். ஜின்னா வழங்கிய இந்த 'பாரம்பரியம்' நிகழ்ச்சியில் அமீர் அஜ்வாத் (நளீமி) பரிமாறிய கருத்துக்கள் அவரது ஆற்றல்களையும், ஆளுமையையும் சிறப்பாக வெளிப்படுத்தியதுடன் இன்றைய இளைஞர்களுக்கு சிறந்த பாடமாகவும் அமைந்திருந்தன. மொத்தத்தில் இந்நிகழ்ச்சி சவூதி அரேபியாவிற்கான புதிய இலங்கை தூதுவருக்கு வழங்கிய விருந்தாகவே இருந்தது எனலாம்.

ஓமான் நாட்டுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவராக கடமையாற்றியபோது இவர் எழுதிய ஆங்கில நூல் "இலங்கை – ஓமான் உறவுகள் கடந்த, நிகழ், எதிர்காலம்" (Sri Lanka – Oman Relations Past, Present, Future" மிகவும் பிரபலமடைந்து, பலரதும் பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்படத்தக்கது.

இன்னும் ஓரிரு வாரங்களில் சவூதி அரேபியாவிற்கான இலங்கை தூதுவராக பதவி ஏற்கவுள்ள பல்துறை ஆளுமைமிக்க சட்டத்தரணி அஷ்ஷெய்க் ஓ. எல். அமீர் அஜ்வாத் (நளீமி) அவர்களை பாராட்டுவதோடு, அவரது பணிகள் சகல துறைகளிலும் வெற்றிபெற வாழ்த்துகிறோம்!

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### "இரண்டுக்கு ஒன்று"

இரண்டு கேள்விகளைக் கேட்டு, அவற்றிற்கு ஒரே பதிலைச் சொல்லுமாறு சவால் விடும் 'ஒரு சொல் விளையாட்டு' தமிழில் உண்டு.

உதாரணமாக, "(1) தேர் ஓடுவது எதனால்? (2) தெருவை மெழுகுவது எதனால்?" என்ற இரண்டு கேள்விகளுக்குமான ஒரே பதில், "அச்சாணியால்" என்பது.

தேர் ஓடுவது 'அச்சாணியால்', அதேபோல் தெருவை மெழுகுவது 'அச் – சாணியால்' என்று பதிலுக்கு விளக்கம் கிடைக்கும்.

"(1) நீ வசிக்கும் ஊர் எது? (2) உன் காலில் காயம் வந்தது எப்படி?" என்ற இரு கேள்விகளுக்கான ஒரே பதில் "செங்கல்பட்டு" என்பது. வசிக்கும் ஊரின் பெயர் 'செங்கல்பட்டு'. காலில் காயம் வந்தது, 'செங்கல் பட்டதனால்..' என்று விளக்கம் கிடைக்கும்.

இதே போன்றுதான் "(1) சாம்பார் மணப்பதேன்? (2) உடல் நலிவதேன்?" என்ற இரு வினாக்களுக்கும் ஒரே பதில் "பெருங்காயத்தால்!" என்பது.

இன்று ஆங்கில மொழிக் கல்வி பெருகிவிட்ட காலமானதால் இத்தகைய தமிழ் சொல் விளையாட்டுக்கள் அருகிவிட்டன. முன்னர் பெரும்பாலானோர் தமிழ் வழிக் கல்வியில் பயின்றபோது இத்தகைய சொல் விளையாட்டுகள் குழந்தைகளின் தமிழறிவையும், சிந்தனைத் திறனையும் ஒரு சேர வளர்த்தன.

இக்காலத்திலும் கூட தமிழில் ஆர்வமுள்ளவர்கள், பொழுது போக்குக்காக ஒன்று சேரும் போதும், மற்றும் சுற்றுலாக்கள் செல்லும் போதும், வாகனங்களில் பயணிக்கும்போதும் இந்த சொல் விளையாட்டை விளையாடி மகிழலாமே!

## தகவல் களஞ்சியம்

### இலங்கையில் தொழிற்படையில் வீழ்ச்சி!



இலங்கையில் தொழிலாளர் எண்ணிக்கை குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்திலேயே இக்குறைவு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் படி, 2022ஆம் ஆண்டில் பொருளாதார ரீதியாக 8.54 மில்லியனாக இருந்த இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு 8.40 மில்லியனாகக் குறைந்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் 2022ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையிலும், மத்திய வங்கியின் 2022ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கையின் தொழிற்படையில் 8,547,062 பேர் உள்ளடங்குகின்றனர். இது ஒட்டுமொத்த சனத்தொகையில் 49.8% ஆகும். இவர்களில் ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 5,580,786 (70.5%) பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,966,276 (32.1) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் பங்களிப்பு விகிதம் 2022 ஆண்டில் 49.8 சதவீதத்திலிருந்து 2023 ஆண்டில் 48.6 சதவீதமாக சரிவடைந்துள்ளது. வேலையற்ற மக்கள் தொகை மற்றும் தொழிலாளர் எண்ணிக்கையில் ஏற்பட்ட சரிவு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவு காரணமாக, வேலையின்மை விகிதம் முந்தைய ஆண்டை விட 2023 ஆண்டில் 4.7 சதவீதமாக மாறாமல் உள்ளது.

2022இல் 0.399 மில்லியனாக இருந்த வேலையில்லாத மக்கள் தொகை 2023ல் 0.39 மில்லியன் வரை சிறிதளவு குறைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2022 இல் 8.14 மில்லியனாக இருந்த வேலைவாய்ப்பாளர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 8.01 மில்லியனாகக் குறைந்துள்ளது எனவும் மத்திய வங்கியின் அவ் அறிக்கை கூறுகிறது.

## தொழுக்குத் தீனி

### வெளிநாட்டில் கற்ற பாடங்கள்

இத்தனை வருட வெளிநாட்டு வாழ்க்கையில் ஒரு பிரயோஜனமும் இல்லை என்று சொல்பவர்களுக்கு, வெளிநாட்டில் செய்துவிட்டு வந்த ஒரு குறும்புக்கார தொழிலாளியின் பதிலடி இது. கொஞ்சம் இரசித்து வாசியுங்கள்.

ஒரு கப் நெய் சோறு அரிசிக்கு இரண்டு கப் தண்ணீர் ஊற்ற வேண்டும் என்று படித்ததும் இங்கேதான்.

நாம சாப்பிட்ட,, குடிச்ச பாத்திரத்தை நாமதான் கழுவி வைக்க வேண்டும் என்று படித்ததும் இங்கேதான்.

எந்த உணவு சாப்பிட்டாலும் அதில் உப்பில்லை, காரமில்லை, சுவை இல்லை என்று குறை சொல்லக்கூடாது என்றும் படித்ததும் இங்கேதான்.

சாப்பாட்டை இன்று பிரிட்ஜில் வைத்து நாளை சூடாக்கி சாப்பிட்டாலும் ஒன்றும் ஆகாது என்று படித்ததும் இங்கேதான். வாழ்க்கையில் சரியான நேரத்திற்கு அலாரம் வைத்து எழுந்திருக்கவும்,, உறங்கவும், சத்தம் இல்லாமல் கதவை திறக்கவும், மூடவும் படித்ததும் இங்கேதான்.

தனது கனவு தேவதையாக தலையணையை கட்டிப்பிடித்து உறங்கி பழக படித்ததும், 'பொறுமை' என்ற 3 எழுத்து சொல்லுக்கு அர்த்தம் என்ன என்பதை படித்ததும் இங்கேதான்.

எவ்வளவு கும்மிரட்டிலும் ரூமில் உறங்குபவர்களுக்கு தொந்தரவு செய்யாமல் ஆடை அணியவும், சாப்பாடு சாப்பிடவும் படித்ததும், நூறு ரூபாய் கிடைத்தாலும் பத்து ரூபாய் கடன் வாங்கி 110 ரூபாவாக நாட்டுக்கு அனுப்ப படித்ததும் இங்கேதான். அத்துடன் மின்சாரத்தையும், தண்ணீரையும், சோப்பையும், பற்பசையையும் சிக்கனமாக உபயோகிக்க படித்ததும் இங்கேதான்.

பள்ளிக்கூடத்தில் 10, 15 வருடங்களில் படிக்காத பல மொழிகளைப் படித்ததும், வாழ்க்கையில் இன்ப துன்பங்களை தாங்கி வாழ பழகி படிச்சதும் இங்கேதான்.

சொந்தமாக ஒரு டீ கூட போட தெரியாதவன் வெளிநாட்டுக்கு வந்து ரெண்டு மூணு மாதங்களுக்குள் பிரியாணியும், கப்சாவும் போட படித்ததும் இந்த வெளிநாட்டில்தான்.

தக்காளி, வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, வெள்ளைப்பூடு, மஞ்சப்பொடி, மிளகாய் பொடி, மல்லிபொடி ஆகியவை சூடாக்கிய எண்ணெயில் போட்டு வதக்கி மீன் போட்டால் மீன் குழம்பும், சிக்கன் போட்டால் சிக்கன் குழம்பும், மட்டன் போட்டால் மட்டன் குழம்பும், மோர் ஊற்றினால் மோர் குழம்பும் ஒன்றும் போடவில்லை என்றால் அது தக்காளி குழம்பும் என்கிற வெளிநாட்டு வித்தையை வேற ஏதாவது யுனிவர்சிட்டியிலோ அல்லது ஹோம் சயின்ஸ் பாடத்திலோ படித்திருக்க முடியுமா?

உலகத்தில் எங்கேயும் படிக்க கிடைக்காத பொருளாதார சாஸ்திரத்தை படித்ததும் இங்கேதான்.

வெளிநாட்டு வாழ்க்கை, அது ஒரு கதை. யாரும் சொல்லாத கதை. அது சொல்ல மறந்த கதை. வெளிநாட்டில் தொழில் செய்பவர்களை வாழ்த்துகிறேன். நானும் அவர்களில் ஒருவன் என்று பெருமை கொள்கிறேன்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207




# தெரியவில்லையே கொலைகாரன் யார் என்று சிரஞ்சீவியும் தடுமாறுகிறாரே வீதியில் நின்று!

அவர் என்ன கேட்கப் போகிறார் என்று புரியாமல் இருந்தாலும் கூட,

"நீங்கள் என்ன கேள்வி கேட்டாலும் அதற்கு நான் பதில் சொல்லுகிறேன் மாமா" என்றான்.

"நீ.. உண்மையாகவே துர்காவைக் காதலிக்கிறாயா?"

அவர் இப்படிக் கேட்டதும்,

சிந்துஜனின் முகத்தில்,

நாணம் வாடகைக்கு குடி புகுந்தது!

"ஆமாம்... நான் உண்மையாகவே அவளைக் காதலிக்கிறேன்!"

உறுதி அவனது வார்த்தைகளில் ஊர்வலம் வந்தது!

"இதைப்பற்றி நீ அவளிடம் சொன்னாயா?"

"இல்லை இதுவரையில் நான் இதைப்பற்றி அவளிடம் சொல்லவில்லை... அப்படி சொல்லி அவள் அதை ஏற்கவில்லையென்றால் அதை தாங்கிக் கொள்ளும் அளவுக்கு என்னிடம் சக்தி இல்லை மாமா..."

"அப்படியானால் அதைப்பற்றி அவளிடம் சொல்ல வேண்டுமென்று உனக்குத் தோன்றவில்லையா சிந்துஜா...?"

"ஏனில்லாமல்...சரியான சந்தர்ப்பம் வரும் போது அதைப்பற்றி நான் அவளிடம் சொல்லுவேன். ஆனாலும் இப்போதுள்ள இந்த சூழ்நிலையில் எங்கள் காதலைப்பற்றி பேசுவது அவ்வளவு நன்றாக இருக்காதில்லையா மாமா?"

"ஆமாம்... அது எனக்குப் புரிகிறது. உன்னைப் பற்றிய துர்காவின் புரிந்துணர்வு எப்படி இருக்கிறது?"

"அவரும் என்னை விரும்புவதாகத்தான் தெரிகிறது!"

"அப்படியானால் அவளும் உன்னை காதலிக்கிறாளா?"

"அப்படித்தான் என்று உறுதியாகச் சொல்ல முடியாது... ஆனாலும் நான் அவளை விரும்புவது அவளுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்...!"

"அப்படியானால் அது போதும்... இதைப்பற்றித் தான் நான் தெரிந்து கொள்ள விரும்பினேன்...ஒரு பெண், தன்னை ஒரு ஆண்மகன் காதலிக்கிறான் என்று தெரிந்த பிறகும் அதே அன்புடன் அவள் பழகி வருகிறாள் என்றால் அவள் காதலின் மீது அவன் நம்பிக்கை வைக்கலாம் என்பதுதான் என்னுடைய அனுபவ படிப்பு"

"நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா...?" முக மலர்ச்சியுடன் கேட்டான் சிந்துஜன்.

அவன் இப்படிக் கேட்டதும்,

படாரென்று எழுந்து நின்ற சிரஞ்சீவி,

அவன் கையைப் பிடித்து,

தன் அருகில் இழுத்தெடுத்து,

அவன் தோளில் கையைப் போட்டு,

"ஆமாம் சிந்துஜா... அவள் உனக்கேற்ற நல்ல மனைவியாவாள்!" என்று சொல்லி

அவன் கன்னத்தில் மெல்ல முத்தம் கொடுத்தார்.

தனக்கிருக்கும் ஒரே உறவினரான அந்த மாமாவின் அந்த வார்த்தை,

சிந்துஜனை உணர்ச்சியின் உச்சிக்கே கொண்டு சென்றது.

அவன் இமைகள் ஈரம் கண்டன.

இப்போது,

அவன் மாமாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

"அதற்கான அனுமதியை நான் உனக்குத் தருகிறேன்"

இப்போது,

சிரஞ்சீவியின் குரலும் பாசத்தின் பிடிக்குள் விழுந்தது.

தனது பெற்றோர்களை இழந்த பிறகு,

தனக்கு எல்லாமாக இருந்து கவனித்து வந்த தனது மாமா இப்போது தனது திருமண விஷயத்திலும் அக்கறை எடுத்துக் கொண்டதைப்பற்றி எண்ணும் போது,

சிந்துஜனுக்கு அழுகையே வந்து விட்டது!

"சரி இப்போது அவளிடம் போய் அவளை உன்பக்கம் இழுப்பதற்கான முயற்சிகளை செய்... தனியாக இருந்து செய்ய வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன!" என்று சொல்லி விட்டு,

அங்கிருந்து நகன்று சென்றார்.

பொழுது கொஞ்சம் இருட்டிக் கொண்டு வந்த போது,

துர்காவையும் அழைத்துக் கொண்டு வெளியே சென்றான் சிந்துஜன்.

இதுவரையில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றியே பேசிக் கொண்டு வந்த இருவரும்,

அங்கே இருந்த பெரிய பாறையில் அமர்ந்து கொண்டார்கள்.

தனது மனதில் உள்ளதை இன்று எப்படியாவது அவளிடம் சொல்லிவிடவேண்டும் என்ற முடிவோடு,

ரோஜா மலரைப் போலிருந்த வலது கரத்தை மெல்லப் பற்றிக் கொண்டான்.

பிறகு,

"துர்கா...!' அவன் இதழ்கள் மெல்லத் துடித்தன,

இமைகள் படபடத்தன.

அந்த உச்சரிப்பில்

ஒரு வித மோகம்,

ராகம் பாடியது,

"ம... என்ன சிந்து...?"

அதே மோகம்,

அவள் உச்சரிப்பிலும் ஒட்டிக் கொண்டது.

"நான்... நான்...!" அவன் நாவில் என்னவோ ஒட்டிக் கொண்டதைப் போலிருந்தது!

"நீங்கள்... நீங்கள்... சொல்லுங்க சிந்து...?" அவன் பேச முடியாமல் தடுமாறுவதைப் பார்த்து,

"அவள் மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்!

"நான்... உங்களை விரும்புகிறேன் துர்கா!" மெல்லக்குனிந்து,

அவள் காதுக்குள் சொன்னான் சிந்துஜன்.

இப்போது,

அவன் இதயம் விரைவாக அடித்துக் கொண்டது.

"ஓ... அதுதான் எப்போதோ எனக்குத் தெரியுமே...!"

"தெரியுமா...! அப்போ நீங்களும்...!" அதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை.

அவளை நிமிர்ந்து பார்த்தான்.

இப்போது,

அவள் முகத்திலும் காதலின் ஊற்று ஊர்ந்து கொண்டிருந்தது!

மன்மத அம்பு பாய்ந்திருந்ததினால்,

அவள் விழிகளும் பாதி மூடியே இருந்தன!

"ஆமாம்... சிந்து... நானும் உங்களை விரும்புகிறேன்... அப்படி இல்லையென்றால் இப்படி உங்களோடு தனியாக அமர்ந்து பேசிக் கொண்டிருக்க எப்படி முடியும்...!" சொல்லியபடியே,

அவன் கை விரல்களுக்குள்,

தனது கைவிரல்களை இணைத்துப் பிடித்துக் கொண்டாள்.

பிறகு,

கையை அழுத்தினாள்.

சிறிது நேரத்தில்

திருமணத்தைப் பற்றி பேசி முடிவெடுத்துவிட்டு,

மீண்டும்

ரெஸ்ட் ஹவுசை நோக்கி நடந்தார்கள்.

அவர்கள் அங்கே போனபோது,

இரவு உணவும் தயாராகி இருந்தது

இதயத்திற்குள் ஏற்பட்டிருந்த மகிழ்ச்சியுடன்,

தனது மாமானாரைச் சந்திக்கச் சென்றான்.

மகிழ்ச்சியுடன் வந்தமர்ந்த அவனைப் பார்த்ததும்,



சிரஞ்சீவிக்கு விஷயம் புரிந்துவிட்டது!

"ம்... மாமா... உங்களுக்கொரு விஷயம் தெரியுமா?" மகிழ்ச்சியுடன் விழிகளை உருட்டியபடியே கேட்டான் சிந்துஜன்.

"துர்காவை திருமணம் செய்து கொள்வதற்கு நாள் குறிக்கும் அளவுக்கு உனது காதல் முன்னேறி விட்டது... என்ன சரியா...?"

"அடடா... அது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"அது உண்மையா என்பதை மட்டும் சொல்லு...?"

"உண்மைதான்... எனது மனதில் இருந்த பெரிய பாரம் ஒன்று குறைந்துவிட்டது!"

"ஆனாலும் இந்த விஷயம் வெளியே இப்போது தெரிவதை துர்கா விரும்பமாட்டாள். அதற்குக் காரணமும் இருக்கிறது. அதாவது அவளது தந்தை உறவானவர் இறந்து இன்றோடு மூன்று நாள்தான் ஆகிறது. இதனால் ஊரார் பேசும் கதைகளை கேட்க அவள் விரும்பமாட்டாள்!"

சிந்துஜனுக்கு எப்படியோ தெரியவில்லை,

ஆனால்,

அன்றைய தினம்,

தூக்கம் என்றால் என்னவென்றே தெரியாமல் இருந்தது துர்காவிற்கு!

வழக்கம் போல் கட்டிலில் அமர்ந்து கொண்டு,

அன்றுமாலை நடந்த காதல் விளையாட்டைப் பற்றி,

தனது டைரியில் எழுதினாள்.

அப்படி எழுதியதை,

மீண்டும் மீண்டும் வாசித்தாள்!

வாசித்து வாசித்து தனியாகவே மகிழ்ந்தாள்.

இரவு ஒரு மணிவரையில் வாசித்து மகிழ்ந்த அவள்,

அதன்பிறகு,

லைட்டை அணைத்துவிட்டு,

தூங்கப் போனாள்,

தூக்கம் அவளை அணைத்துக் கொள்ள வந்த போது,

டோர்ச்லைட் வெளிச்சமொன்று அவள்முகத்தில் பாய்ந்தது.

படாரென்று விழிகளைத் திறந்து பார்த்த அவளுக்கு,

அங்கே அதிர்ச்சி காத்திருந்தது.

ஒரு கையில் ஒரு டோர்ச்லைட்!

மறுகையில்,

கூர்மையான ஒரு கத்தி!

கறுப்பு முகமூடி அணிந்த ஓர் உருவம்,

அவள் எதிரில்!

அதைப் பார்த்து,

அச்சத்தில் மூழ்கிய அவள்,

பேச்சு மூச்சின்றி அப்படியே அமர்ந்திருந்தாள்!

முகமூடி அணிந்து,

தலையில் ஒரு தொப்பியும் போட்டிருந்ததனால்,

அந்த உருவத்தை அடையாளம் கண்டு பிடிக்கவே முடியாமல் இருந்தது!

துர்காவின் தொண்டையும் அடைத்துக் கொண்டது.

மேனியின் துடிப்பு அடங்கி விடப் போவதைப் போல்,

வியர்த்துக் கொட்டியது!

"உயிரின் மீது ஆசையிருந்தால் ஆடாமல் அசையாமல்... கத்தாமல் அப்படியே இரு!"

அடித்தொண்டையால் ஆணையிட்டது அந்த உருவம் குத்துவதற்கு மட்டுமல்ல

அசைவதற்குக் கூட சக்தியில்லாமல் இருந்தாள் துர்கா!

மெல்ல நடந்து சென்ற அந்த உருவம்,

மேசைமீதிருந்த ஏதோ ஒரு பொருளை எடுத்து தனது சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டது!

பிறகு,

கதவை நோக்கி நடந்தது!

"சுமார் பத்து நிமிடங்கள் வரையில் நான் அந்த கதவுக்கு அந்தப் பக்கம் நின்பேன். நீ சத்தம் போடாமல் இப்படியே அமர்ந்திருக்க வேண்டும்...அப்படி இப்படி ஏதாவது செய்ய நினைத்தால்... அதன் பிறகு உன் அப்பா போன இடத்திற்கு நீயும் போய் விடுவாய்!"

கையில் இருந்த கத்தியை அப்படியும் இப்படியும் அசைத்துக் காட்டி விட்டு,

வெளியே போய் கதவை சாத்திக் கொண்டது!

அவன் போய் பத்து நிமிடங்களாகி விட்டன என்று முடிவு செய்த துர்கா,

படாரென்று எழுந்து,

லைட்டைப் போட்டு விட்டு,

"திருடன்... திருடன்...!" என்று கத்தினாள்.

(தொடரும்)




சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 112

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | | 12 | 13 | |
| 14 | | 15 | 16 | | 17 |
| 18 | 19 | 20 | | | 21 |
| | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ..............................................

வகுப்பு ..............................................

தொலைபேசி இல ..............................................

பாடசாலை பெயர் ..............................................

வதிவிட முகவரி ..............................................

..............................................

.............................. ..............................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) வெப்பநிலையை அளவிடுவதற்கான கருவி.
(8) மீன்பிடிப்பதற்காக மீன்பிடித் தொழிலாளர்கள் பயன்படுத்துகின்ற உபகரணம்.
(10) மரங்கள் அடர்ந்த, மக்கள் வசிக்காத நிலப்பகுதி இது. பிராணிகள் அதிகமாக வாழ்கின்ற பிரதேசம்.
(12) குளங்களில் நீரைத் தேக்கி வைப்பதற்காக தடுப்புச்சுவர் போன்று அமைக்கப்படுவது. (தலைகீழான சொல்)
(15) நாம் வசிக்கின்ற உறையுள் இது. (தலைகீழான சொல்)
(18) வருடமொன்றின் பன்னிரண்டில் ஒரு பகுதி. (தலைகீழான சொல்)
(23) மாடு, மா, வேம்பு, பலா ஆகியவற்றின் இளமைப் பருவம்.

### மேலிருந்து கீழ்

(1) எமது சமையலின் போது கறி, சம்பல் போன்ற பல உணவுகளுக்கு சுவையூட்டுவதற்காக சேர்க்கப்படுவது. மிளகாய் போன்று இதுவும் ஒன்று.
(3) உணவு உண்ண வேண்டுமென்ற உணர்வு ஏற்படும் போது எமக்கு உண்டாவது இது. உணவு உண்டதும் நீங்கிவிடும்.
(5) உலகம் என்பதன் ஒத்தபொருள் சொற்களில் ஒன்று. (தலைகீழான சொல்)
(12) நரம்பு வாத்தியக் கருவி. இந்து பெண் தெய்வமொன்றின் கையில் உள்ள இசைக்கருவி. (தலைகீழான சொல்)
(15) மனிதனுக்கு அதிக பயன்களைத் தருகின்ற வளர்ப்பு மிருகம் இது. ஊட்டச்சத்து மிக்க பானம் தருவதிலும், விவசாயத்திலும் உதவுகின்ற மிருகம். (தலைகீழான சொல்)
(17) கிராமங்களில் தண்ணீர் பெற்றுக் கொள்வதற்காக நிலத்தைத் தோண்டி அமைக்கப்படுவது. நகரங்களில் குழாய்நீர் விநியோகம் உள்ளதால், இதன் பாவனை குறைவு.
(19) எமது உடலின் மேற்பகுதியிலுள்ள பிரதான அங்கம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 111

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கதிரவன் 07. காளை 09. களை
14. கல்லூரி 18. தவில் 22. வானவில்

**மேலிருந்து கீழ்**

02. கத்தி 04. வளையல் 05. கான்
09. தவளை 12. பரிசு 14. கல்வி 19. வில்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 110

### பாராட்டு பெறுவோர்

**1. லீனா மர்யம் முஜாஹித்**
தரம் 06, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹூரிமலுவ, ரம்புக்கண.

**2. எம்.என். அப்லல் அஹ்மத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**3. எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தம் 08, அலிப் சர்வதேச பாடசாலை, தர்கா நகர்,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**4. பர்ஹாத் ரியாஸ்**
தரம் 08, மீகஹமுல்ல, அட்டுலுகம,
பண்டாரகம.

**5. பவாஸ் அப்துல்லா**
தரம் 06, நபாவல மு.ம. வித்தியாலயம்,
இல. 25, சீதாகம, குடாகம வீதி, அவிசாவளை.


**6. பத்ரியா ஜெஹான்**
தரம் 05B, கைரியா பெண்கள் கல்லூரி,
இல. 155/32, மொஹிதீன் மஸ்ஜித் வீதி, மருதானை.

**7. எம்.ஏ.எம். அத்லான்**
தரம் 07, தி/ கிண்ணியா தேசிய பாடசாலை,
இல. 112, நகரசபை வீதி, கிண்ணியா.

**8. எம்.ஏ.என். ஸல்மா அப்ளல்**
தரம் 04A, மாறை / வெலிகம முஸ்லிம்
ஆரம்பப் பாடசாலை,
இல. 411, அழுத் வீதிய, வெலிகம.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 112
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**ஈகை : இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகங் காணு மளவு**

**தெளிவுரை :**
பொருள் வேண்டும் என்ற இரந்தவரின் மகிழ்ந்த முகத்தைக் காணும் வரைக்கும் (இரத்தலைப் போலவே) இரந்து கேட்கப்படுவதும் துன்பமானது.

## 2500 மைல்கள் பறக்கும் பட்டாம்பூச்சி



அமெரிக்காவிலுள்ள மொனார்ச் பட்டாம்பூச்சிகள் ஒவ்வொரு வருடமும் குளிர் காலத்தில், வெப்பத்தைத் தேடி கிட்டத்தட்ட 2500 மைல்கள் பறந்து செல்கின்றன.

வட அமெரிக்காவிலிருக்கும் குளிர் நிறைந்த பகுதிகளிலிருந்து கலிஃபோர்னியா, மெக்சிகோ நோக்கி பயணிக்கும் இந்தப் பட்டாம்பூச்சிகள் வருடத்திற்கு 4 தலைமுறைகளை உருவாக்குகின்றன. இவற்றில், நான்காவது தலைமுறை பட்டாம்பூச்சிகள் மட்டுமே இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றன. முதல் மூன்று தலைமுறை பட்டாம்பூச்சிகளின் ஆயுட்காலம் ஆறு வாரங்கள் மட்டுமே. ஆனால், நான்காவது தலைமுறை பட்டாம்பூச்சிகள் ஆறு முதல் எட்டு மாதங்கள் வரை உயிர்வாழ்கின்றன. இதனாலேயே இவற்றால் நீண்ட தூரப்பயணத்தை ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ள முடிகிறது.

இப்பட்டாம்பூச்சிகள் புழுவாக இருக்கும் காலத்தில், வெள்ளை எருக்கை (milk weed) விரும்பிச் சாப்பிடுகின்றன. இந்த உணவிலிருக்கும் பொருட்கள், நாளடைவில் விஷமாக மாறி தவளை, எலி போன்ற எதிரிகளிடமிருந்து இவற்றைக் காப்பாற்ற உதவுகின்றன.



## இவ்வார மழலை



அரவிந்த் – ஸ்டெலா



க. கிஷாலன்
தரம் - 09, லசாலி ஆங்கில பாடசாலை, கொழும்பு - 13



## கப்பல்

நீல நிறக் கடலில்
நீந்தும் பெரிய கப்பல்!
தொலைதூரம் போகும்
துடுப்பில்லாத கப்பல்!

சிறிய இரும்புக் குண்டும்
நீரில் மிதப்பதுண்டோ?
பெரிய இரும்புக் கப்பல்
மிதக்கும் மாயம் என்ன?

இரும்புக் குண்டு மூழ்கும்
இரும்பு ஏனம் மிதக்கும்
இரும்புக் கப்பல் நீரில்
மிதப்பதெப்படியாகும்!

ஸாதிக் பாரிஸ் - மள்வானை

## மல்லிகைப் பூக்கள் இரவில் மலர்வதன் இரகசியம்



மல்லிகை பூ மட்டும் இரவில் பூப்பதேன்? மல்லிகைச் செடி பூக்களைப் பூக்க வைக்கும் florigen என்ற ஹோர்மோனை சூரிய ஒளியின் உதவியால் இலைகளில் உருவாக்குகின்றன. இலைகளிலிருந்து இந்த ஹோர்மோன், மொட்டுகளை நோக்கி நகரும் "Nastic Movement", பகலில் வெளிச்சம் குறைந்து இரவு துவங்கும் நேரத்தில் தூண்டப்படுகிறது. இதுவே, மல்லிகைப் பூக்கள் இரவில் மலர்வதன் இரகசியம்.

மல்லிகைச் செடிகளின் மகரந்தச் சேர்க்கைக்கு பெரிதும் உதவுவது அந்துப்பூச்சிகள்/விட்டில் பூச்சிகள். இரவு நேரத்தில், இந்தப்பூச்சிகளைக் கவர்ந்திழுக்கவே, மல்லிகைகள் வெள்ளை நிறமும் கொள்ளை மணமும் கொண்டிருக்கின்றன.

ஹவாய், இந்தோனேஷியா, பாகிஸ்தான் மற்றும் பிலிபைன்ஸ் ஆகிய நாடுகளின் தேசிய மலர் மல்லிகையாகும்.

## வித்தியாசமான விளக்கத்தை கொடுக்கும் Mayday

"Mayday" மேதினம் என்றால் காலம்காலமாக நாம் அறிந்தது தொழிலாளர் தினமாகும். ஆனால், விமானம் பறந்துகொண்டிருக்கும்போது, அதிலிருப்பவர்களுக்கு பெரிய ஆபத்து நேர்ந்தால், தரையிலிருக்கும் கட்டுப்பாட்டு அறைக்கு தாங்கள் ஆபத்திலிருக்கிறோம் என்று தெரிவிக்க விமானிகள் "Mayday" என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

1923ஆம் ஆண்டு லண்டன் விமான நிலையத்தில் பணியாற்றிய Frederick Stanley Mockford என்பவரை அவசர காலத்தில் விமானிகள் உபயோகிக்க வார்த்தை ஒன்று சொல்லுங்கள் என்று வினவிய அதிகாரிகள். "Help" என்ற வார்த்தை மிகச்சாதாரணமாக எல்லோராலும் உபயோகிக்கப்படுவதால், ஆபத்துக்காலங்களில் அந்தச் சொல்லைப் பயன்படுத்தும்போது வித்தியாசம் தெரியாது என்றனர்.

1923களில் லண்டனுக்கும் பாரிசுக்கும் இடையில் அதிக விமானங்கள் பறந்ததால், கட்டுப்பாட்டு அறையில் இருப்பவர்கள் பிரெஞ்சு மொழி பேசும் விமானிகளுடன் அதிகம் உரையாட வேண்டியிருந்தது. இவற்றை அவதானத்தில் கொண்டு அந்த அதிகாரி, "Help Me" என்று பொருள் தரக்கூடிய "m'aider" என்ற பிரெஞ்ச் வார்த்தையின் சாயலில் "Mayday" வார்த்தையை பரிந்துரைத்துள்ளார். அவ்வாறு உருவானது தான் இந்த Mayday. விமானங்கள் மட்டுமல்ல, கப்பல்களிலும் இதே வார்த்தைதான் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவில் தேவையில்லாத நேரத்தில் Mayday அழைப்பு விடுத்தால், விமானிக்கு 6 வருட சிறையும், 250,000 டொலர்கள் அபராதமும் விதிக்கப்படும். செப்டெம்பர் 11 விமானத் தாக்குதலின் போது ஒரே ஒரு விமானத்திலிருந்து மட்டும் இந்த Mayday அழைப்பு வந்தது. சில வருடங்களுக்கு முன் காணாமல் போன மலேசிய விமானத்திலிருந்து இந்த Mayday அழைப்பு கடைசி வரை வரவில்லையாம்.

## நினைவுச்சின்னம்



1989ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி காங்கோவிலிருந்து பெரிஸ் நோக்கி புறப்பட்ட விமானம் ஒன்று, விமான நிலையத்திலிருந்து கிளம்பிய 46ஆவது நிமிடத்தில் வெடித்துச் சிதறி சகாரா பாலைவனத்தில் விழுந்தது. விமானத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு தான் விபத்திற்குக் காரணம் என்று விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது. இவ் விபத்து நடந்து 18 வருடங்களுக்குப் பிறகு, 2007ஆம் ஆண்டு அதில் பயணம் செய்த பயணிகளின் உறவினர்கள் ஒன்று சேர்ந்து விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தில் ஒரு நினைவுச் சின்னம் அமைக்க முடிவு செய்தார்கள்.

தொலைதூரத்திலிருந்து சிறு பாறைகளைக் கொண்டுவந்து 200 மீற்றர் விட்டத்தில் ஒரு வட்டம் அமைத்து, அதில் விபத்துக்குள்ளான விமானம் போன்ற உருவத்தை உருவாக்கினார்கள்.

விபத்தில் உயிரிழந்த 170 பேரின் நினைவாக 170 கண்ணாடிகளையும், சேதமடைந்தது போக மீதமிருந்த விமானத்தின் சிறு பகுதிகளையும் நினைவுச் சின்னத்தில் சேர்த்தார்கள்.

அதுமட்டுமல்லாமல் சேதமடைந்த விமான இறக்கை ஒன்றில் இறந்தவர்களின் பெயர்களைப் பதித்து அந்த வட்டத்திற்குள் புதைத்து வைத்திருக்கிறார்கள்.

## அறிந்து கொள்வோம்

1) நாக்கில் ஊறும் உமிழ் நீர் தான் நமக்கு உணவின் சுவையை தெரியப்படுத்துகிறது. நீங்கள் ஒரு துணியினால் உங்கள் நாவை நன்றாக துடைத்துவிட்டு, ஏதாவது ஒன்றை சாப்பிட்டு பாருங்கள், அது என்ன சுவை என்று உங்களால் அறிய முடியாது.

2) வளர்ந்த மனிதனுக்கு இருக்கும் எலும்புகளை விட குழந்தைகளுக்கு ஏறக்குறைய 100 எலும்புகள் அதிகமாக இருக்கும்.

3) பூமியில் உங்கள் எடை 200 கிலோ என்றால் மார்ஸ் கிரகத்தில் அது 76 கிலோவாக மாறும்.

4) Vantablack என்பது கருப்பு நிறத்தை விட கருப்பானதாகும்.

5) உலகத்திற்கு தேவையான 20 சதவிகித ஒக்சிஜனை அமேசன் மழைக்காடுகள் வழங்குகிறது.

6) கோலா என்ற விலங்கு ஒரு நாளைக்கு 20 மணி நேரம் தூங்கும்.

## நாம் பயன்படுத்தும் பற்பசை பெட்டியில் இருக்கும் வர்ணங்கள்



**கருப்பு** – முழுதும் வேதிப்பொருட்கள் நிறைந்தது.
**சிவப்பு** – இயற்கை மற்றும் வேதிப்பொருட்கள் கலவை.
**நீலம்** – இயற்கை பொருட்கள் மற்றும் சில மருந்துகள் நிறைந்தது.
**பச்சை** – முழுதும் இயற்கை பொருட்கள் நிறைந்தது.

## ஆபத்துக்களை கடந்து இடம்பெயரும் விலங்குகள்



காலநிலை மாற்றத்தால் ஒவ்வொரு வருடமும் உணவுக்காகவும், குடிநீருக்காகவும் விலங்குகளின் இடம்பெயரும் எண்ணிக்கை மட்டும் குறையவில்லை.

ஜூலை முதல் ஒக்டோபர் வரையிலான மாதங்களில் ஒவ்வொரு வருடமும் 2 மில்லியன் விலங்குகள் தான்சானியாவில் இருக்கும் Serengeti National பார்க்கிலிருந்து கென்யாவிலிருக்கும் Maasai Mara National Reserveக்கு இடம்பெயர்கின்றன.

இந்த இடம்பெயர்வு உலகின் நவீன அதிசயங்களில் ஒன்று. Wildebeest எனப்படும் ஆபிரிக்க மான்களே அதிகம் இடம்பெயர்கின்றன. தான்சானியாவிலிருந்து கென்யா செல்லும் வழியில் விலங்குகள், Mara என்ற ஆற்றைக்கடக்க வேண்டும்.

இந்த Mara ஆற்றிலிருக்கும் எக்கச்சக்கமான முதலைகளிடமிருந்து தப்பித்து, (Maasai Mara என்ற இடத்தில் சிங்கங்களின் எண்ணிக்கையும் அதிகம், மக்களால் வேட்டையாடப்படும் விலங்குகளின் எண்ணிக்கையும் அதிகம்.) இத்தனை ஆபத்துகள் இருந்தாலும் ஒவ்வொரு வருடமும் உணவுக்காகவும், குடிநீருக்காகவும் இடம்பெயரும் விலங்குகளின் எண்ணிக்கை மட்டும் குறையவில்லை.

# விளையாட்டு



# T20 உலகக் கிண்ணம்: அணிகளின் தயார் நிலை?



டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கு கிட்டத்தட்ட பாதி நாடுகள் தனது 15 பேர் குழாத்தை அறிவித்து விட்டன. நியூசிலாந்து அணி முதல் நாடாக தனது அணியை அறிவித்திருப்பதோடு, நடப்புச் சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் தென்னாபிரிக்காவும் தமது அணியை அறிவித்து விட்டன.

மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் எதிர்வரும் ஜூன் 1 தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறப்போகும் இந்த உலகக் கிண்ணத்திற்கு 15 பேர் கொண்ட அணிகளை அறிவிப்பதற்கு சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் மே 1 ஆம் திகதி வரை கெடு விதித்திருந்தது. அப்போது கட்டாயம் அணிகள் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டபோதும், அது பேச்சளவிலேயே இருந்தது.

ஏனென்றால் அறிவிக்கப்படும் அணிகளில் மாற்றம் செய்ய மே 25 ஆம் திகதி வரை வாய்ப்பு வழக்கப்பட்டது. எனவே, ஐ.சி.சியின் கெடுவை இலங்கை உட்பட பல நாடுகள் பொருட்படுத்தியதாக தெரியவில்லை.

இம்முறை எப்போதும் இல்லாத அளவுக்கு மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றனர். ஆனால் ஐ.சி.சி. விதித்த மே 1 ஆம் திகதி கெடுவில் ஒன்பது அணிகள் வரையே தமது 15 பேர் குழாத்தை வெளியிட்டிருந்தன. அதாவது பல நாடுகள் தமது டி20 உலகக் கிண்ணத்திற்கான தயார்படுத்தல்களை இன்னும் பூர்த்தி செய்யவில்லை.

பாகிஸ்தான் அணி அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து சென்று டி20 போட்டிகளில் ஆடவிருக்கிறது. பங்களாதேஷ் சொந்த மண்ணில் சிம்பாப்வேயுக்கு எதிராக ஐந்து போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடுகிறது. பின்னர் அந்த அணி சமயோசிதமாக உலகக் கிண்ணத்திற்கு முன் அமெரிக்கா சென்று அந்நாட்டு அணியுடன் டி20 போட்டிகளில் ஆட திட்டமிட்டிருக்கிறது.

நெதர்லாந்து, அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து மோதும் முக்கோணத் தொடர் ஒன்று நெதர்லாந்தில் நடக்கப்போகிறது. உலகக் கிண்ணத்திற்கு இன்னும் ஒரு மாதம் கூட இல்லாதபோதும், அதற்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடைபெறுவது தெரிகிறது.

இந்தியாவில் இந்திய பிரீமியர் லீக் முடிந்தபாடில்லை. என்றாலும் இந்தியா அந்தப் போட்டியை மையப்படுத்தி அணியை தேர்வு செய்யவில்லை என்பது தெரிகிறது. அதனாலேயே அந்த அணி முன்கூட்டி 15 பேர் குழாத்தை வெளியிட்டு விட்டது.

பாகிஸ்தானுக்கு எதிராக ஏப்ரல் கடைசியில் ஐந்து டி20 தொடர் ஒன்றில் ஆடிய நியூசிலாந்து அந்தத் தொடரை 2–2 என சமநிலை செய்த நிலையில் தனது உலகக் கிண்ண குழாத்தை அறிவித்து விட்டது. அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கு தொடர்ந்து சர்வதேச போட்டிகள் இல்லாதபோதே உலகக் கிண்ணத்திற்கு தயாராகி விட்டன.

ஆனால் இலங்கை அணிக்கு உலகக் கிண்ணத்திற்கு முன் இனியும் சர்வதேச டி20 போட்டிகள் இல்லாத நிலையில் அது குறித்த காலக்கெடுவில் இறுதி அணியை அறிவிக்கவில்லை. அந்த அணியை உறுதி செய்வதில் இன்னும் குழப்பம் இருக்கிறது. ஏற்கனவே 25 பேர் கொண்ட ஆரம்ப அணியை இலங்கை தேர்வு செய்தது. அதில் இருந்தே இறுதி அணியை தேர்வு செய்ய வேண்டும்.

கடந்த இரண்டு மூன்று மாதங்களாக இந்த ஆரம்ப அணி கொழும்பில் பயிற்சிகளை பெற்று வந்த நிலையில் தமக்குள் மூன்று அணிகளாக பிரிந்து தற்போது முக்கோண டி20 தொடர் ஒன்றில் ஆடி வருகிறது. ஆர். பிரேமதாச மைதானத்தில் கடந்த மே 2 ஆம் திகதி ஆரம்பமான இந்த முக்கோணத் தொடர் எதிர்வரும் 11 ஆம் திகதியே முடிவடைகிறது. இதற்குள் 15 பேர் குழாத்தை இலங்கை தேர்வு செய்ய வேண்டி இருக்கிறது.

மறுபக்கம் இலங்கையின் ஐந்து வீரர்கள் தற்போது ஐ.பி.எல். தொடரில் ஆடுகிறார்கள். இவர்களும் அணித் தேர்வில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இதில் விஜயகாந்த வியாஸ்காந்தை தவிர்த்துவிட்டு பார்த்தாலும் மதீஷ பதிரண, மஹீஷ் தீக்ஷன, நுவன் துஷார, துஷ்மந்த சமீர ஆகியோர் முக்கியமானவர்கள்.

இலங்கை அணி எதிர்வரும் மே 14 ஆம் திகதி உலகக் கிண்ணத்திற்காக அமெரிக்கா செல்ல திட்டமிட்டிருக்கும் நிலையில் அதற்குள் அணியை தேர்வு செய்ய வேண்டியிருக்கிறது. இதில் ஐ.பி.எல். ஆடி வரும் வீரர்கள் அங்கிருந்து அப்படியே அமெரிக்கா சென்று இலங்கை அணியுடன் சேர்வது தான் திட்டம். ஏனென்றால் ஐ.பி.எல். தொடர் மே கடைசிவரை நீடிக்கிறது.

உண்மையில் உலகக் கிண்ணத்திற்கான இலங்கை குழாம் கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. அதனை சராசரி ஒருவருக்கும் ஊகிக்க முடியுமாகவே இருக்கிறது. ஆனால் சில இடங்களை நிரப்புவதில் போட்டியும், பொருத்தமான வீரர்களை தேர்வு செய்வதில் சவாலையும் இலங்கை தேர்வுக் குழு சந்தித்து வருகிறது. இதுவே தற்போதைய இழுபறிக்குக் காரணம்.

என்றாலும் இம்முறை டி20 உலகக் கிண்ணத்திற்கு இலங்கையால் வனிந்து ஹசரங்க தலைமையில் வலுவான அணி ஒன்றை அனுப்புவதற்கு வாய்ப்புக் கூடி வந்திருக்கிறது.



என்றாலும் பழக்கமில்லாத அமெரிக்கா ஆடுகளங்கள் உலகக் கிண்ணத்தில் எப்படித் தாக்கம் செலுத்தும் என்பது பற்றியே பல அணிகளும் அவதானம் செலுத்துகின்றன. அதனாலேயே இலங்கை உலகக் கிண்ணம் ஆரம்பிப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னராக அமெரிக்கா செல்கிறது.

இதற்கிடையே உபாதைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அணியின் சமநிலைக்கு முக்கியம்.

டி20 உலகக் கிண்ணம் என்பது குறுகிய போட்டியாக இருப்பதாலோ என்னவோ, கிண்ணத்தை வெல்வதற்காக வாய்ப்பும் அனைத்து அணிகளுக்கும் திறந்தே இருக்கும். அதனை கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டால் வெற்றி நிச்சயம்.


## இரயில்வே விளையாட்டு சங்கத்தின் வருடாந்த மகா சபைக் கூட்டம் 2023(24)

இரயில்வே விளையாட்டு சங்கத்தின் வருடாந்த மகா சபைக் கூட்டம் 2024 மே 10ம் திகதி கொழும்பு -10 இரயில்வே தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெறும் சகல அங்கத்தவர்களுக்குமான அழைப்பு

**நிறைவேற்றுச் சபை,**
**இரயில்வே விளையாட்டு சங்கம்**


# IPL: பந்துவீச்சாளர்களும் வீரர்களே...



உலகின் செல்வந்த கிரிக்கெட் தொடரான இந்திய பீரிமிய ர் லீக்கில் (ஐ.பி.எல்.) வாணவேடிக்கைக்கு பஞ்சமில்லை. அரங்கில் இருப்பவர்களுக்கு மேலே பறக்கும் பந்தைப் பார்த்துப் பார்த்து கழுத்து சுளுக்கிக் கொள்ளும். போட்டி நடைபெறும் மைதானங்கள் அனைத்திலும் துடுப்பாட்ட வீரர்கள் பாவம் பார்ப்பதே இல்லை. அது ஒரு சிக்ஸர் திருவிழாவாகவே நடக்கிறது. மறுபக்கம் பந்துவீச்சாளர்கள் நாதியற்றுப் போய் விட்டார்கள். கிரிக்கெட் விமர்சகர்கள் மற்றும் ரசிகர்களுக்கோ டி20 விளையாட்டு எங்கே போகிறது என்ற குழப்பம்.

இந்த ஐ.பி.எல். பருவத்தில் முதல் 39 போட்டிகள் முடிவில் பெறப்பட்ட மொத்த பௌண்டரிகள் 1,191 மற்றும் சிக்ஸர்கள் 686. 2023 பருவத்துடன் ஒப்பிடும்போது அந்தப் பருவத்தில் மொத்தமாக 2,174 பௌண்டரிகள் மற்றும் 1,124 சிக்ஸர்கள் பெறப்பட்டன. ஆனால் இந்தப் பருவத்தின் பாதித் தூரத்திலேயே அந்த சாதனை முறியடிக்கப்படும் சமிக்ஞை பெரிதாகத் தெரிகிறது. அதாவது பௌண்டரிகள் மற்றும் சிக்ஸர்கள் செல்லும் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் அணிகளின் மொத்த ஓட்டங்களும் அதிகரித்திருக்கின்றன. ஆரம்ப கால ஐ.பி.எல். போட்டிகளைப் பார்த்தால் 150–160 ஓட்டங்கள் சவாலான இலக்காக இருந்தது. ஆனால் இன்று அந்த இலக்கும் பத்துப் போட்டிகளில் எட்டில் இலகுவாக துரத்தப்பட்டு விடுகிறது.



இது ஓட்டம் குவிக்கும் போக்கில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதையே காட்டுகிறது. 2007 இல் முதலாவது டி20 உலகக் கிண்ணப் போட்டியில் ஸ்டுவட் பிரோட்டின் பந்துக்கு யுவராஜ் சிங் ஆறு பந்துகளிலும் ஆறு சிக்ஸர்களை விளாசினார். அப்போது இந்தியாவின் மொத்த ஓட்டங்கள் 218 ஐ எட்டியது. அது அப்போது இமாலய இலக்கு. என்றாலும் 16 ஆண்டுகளுக்குப் பின்னர் 200 ஓட்டங்கள் என்பது வழக்கமாகி விட்டது. இந்தப் பருவத்தில் முதல் 39 ஐ.பி.எல். போட்டிகள் முடிவில் 200 ஓட்டங்கள் 19 தடவை தாண்டப்பட்டது. போட்டி ஒன்றின் ஒட்டுமொத்த ஓட்டங்கள் 400ஐ தாண்டிய சந்தர்ப்பங்கள் ஒன்பது முறை பதிவாயின. இரு போட்டிகளில் அபரிமிதமாக 500க்கும் மேல் மொத்த ஓட்டங்கள் பெறப்பட்டன. இன்னும் இருக்கிறது. இந்தப் பருவத்தில் சராசரி ஓட்ட வேகம் ஓவருக்கு 10. இந்தப் பருவம் ஆரம்பித்தது தொடக்கம் சன்ரைசஸ் ஹைதராபாத் அணி என்பது ஓட்ட இயந்திரமாகவே இயங்கி வருகிறது. ஓட்டங்கள் குவிப்பதில் சாதனைக்கு மேல் சாதனை படைக்கிறது. வரலாற்றில் முன்னெப்போதும் நிகழாத வகையில் முதல் பவர் பிளேயில் (ஆறு ஓவர்கள்) 125 ஓட்டங்களை அது குவித்தது. டெல்லிக்கு எதிரான அந்தப் போட்டியின் முதல் ஆறு ஓவர்களில் ஹைதராபாத் ஓவர் ஒன்றுக்கு 20.83 ஓட்டங்கள் வீதம் சேர்த்தது. இந்தப் பருவத்தின் முதல் பாதி முடிவின்போது சன்ரைசஸ் அணி மூன்று தடவைகள் இன்னிங்ஸ் ஒன்றில் 250க்கு மேல் ஓட்டங்களை பெற்றது. றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் அது 287 ஓட்டங்களை விளாசியது. அதாவது ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இன்னிங்ஸ் ஒன்றில் சாத்தியம் குறைவு என்று பார்க்கப்பட்ட 300 ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டுவது நெருங்கி விட்டது என்று பார்க்கலாம். ஐ.பி.எல். கிரிக்கெட் என்பது அதிரடிக்கு பஞ்சமில்லாதது. அது தான் அந்த கிரிக்கெட்டின் பாணி. துடுப்பாட்ட வீரர்கள் ஒரு பந்தை வீணடித்தாலும் பெரும் குற்றமாக பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு பந்திலும் உச்சபட்ச ஓட்டங்களை பெறவே அவர்கள் முயல்வார்கள். அதன் விளைவுதான் சிக்ஸர்கள், பௌண்டரிகள் பறக்க இந்தப் பருவத்தில் அனாயாசமாக ஓட்டங்கள் சேர்கின்றன. என்றாலும் இப்படி கணக்கு வழக்கில்லாமல் ஓட்டம் சேர்க்கப்படுவதற்கு என்ன காரணமாக இருக்கும்? மந்தமான ஆடுகளங்கள் இதற்கு ஒரு காரணம். ஒருநாள் மற்றும் டி20 அகிய வெள்ளைப்பந்து கிரிக்கெட்டில் ஆடுகளங்கள் இப்படி இருக்க வேண்டும் என்று அதனை தயார் செய்பவர்கள் எழுதப்படாத சட்டம் ஒன்றை வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் ஓட்டங்கள் விளாசப்பட்டாலேயே விறுவிறுப்பு இருக்கும் என்பது நம்பிக்கை. அதுவும் டி20 கிரிக்கெட்டில் அது ஒரு குருட்டு நம்பிக்கையாகவே மாறிவிட்டது. ரசிகர்கள், ஒளிபரப்பாளர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் இதனையே எதிர்பார்க்கிறார்கள்.

உலகெங்கும் நடக்கும் மற்ற டி20 கிரிக்கெட் லீக்கிகளை விடவும் ஐ.பி.எல். இதனை தீவிரமாகவே பின்பற்றுகிறது. இதனால் ஆடுகளங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இருக்க வேண்டும் என்பது அவர்களின் ஐதீகம். மந்தமான ஆடுகளங்கள் மாத்திரமல்ல பந்து வீச்சாளர்கள் எதிர்கொள்ளும் சவால்! முன்னரை விடவும் துடுப்பாட்ட வீரர்கள் வலுப்பெற்றவர்களாகவும், நிலைமைக்கு பொருந்துபவர்களாகவும் மிக முக்கியமானவர்களாகவும், வீராதி வீரர்களாகவும், குறிப்பாக இளம் வீரர்கள் டி20 கிரிக்கெட்டுக்காகவே வளர்க்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் போட்டிகளை வெல்வதற்கும், அங்கீகாரத்திற்காகவும், வெகுமதிகளை பெறுவதற்கும் சவால்களை தாண்டி இன்னும் கடுமையான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். சில விதி மாற்றங்களும் பந்துவீச்சாளர்களை பலவீனப்படுத்துவதாகவே இருக்கின்றன. குறிப்பாக இந்த ஐ.பி. எல். பருவத்தில் வந்திருக்கும் இம்பாக்ட் மாற்று வீரர் முறை முக்கியமான நேரத்தில் மாற்று வீரர் ஒருவரை களமிறக்குவதற்கான சந்தர்ப்பத்தை பயிற்சியாளர்கள் மற்றும் அணித் தலைவர்களுக்கு வழங்கி இருக்கிறது. இந்த உத்தி பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருப்பதாகத் தெரியவில்லை. இந்த இம்பாக்ட் மாற்று வீரர் முறையில் பந்துவீச்சாளர்கள் பதில் வீரராக அழைக்கப்படுவதில்லை. மாறாக துடுப்பாட்ட வரிசையை மேலும் பலப்படுத்துவதற்கே பயன்படுத்தப்படுகிறது. கிரிக்கெட் என்பது துடுப்பாட்ட வீரர்களின் விளையாட்டு என்பது தொன்று தொட்டு வரும் கூற்றாக இருந்தாலும், துடுப்பாட்டத்திற்கு மற்றும் பந்துவீச்சுக்கு இடையில் அதிகரித்து வரும் சமநிலையற்ற போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருவது ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை. அது டி20 கிரிக்கெட்டிலும் பெரிதாக விவாதத்திற்கு உள்ளாகி இருக்கிறது. இந்தியாவின் முன்னாள் அணித் தலைவரும் துடுப்பாட்ட ஜாம்பவானுமான சுனில் கவாஸ்கர் கூட பந்துவீச்சாளர்கள் பக்கம் இருக்கிறார். 'போட்டிகள் ஒரு பக்கச் சார்பானதாக மாறினால் போட்டித் தன்மையும், சுவாரஸ்யமும் கெட்டுவிடும்' என்கிறார். வழக்கமாக பௌண்டரி தூரம் 75 யார்ட்களாக இருந்த நிலையில் அது 65 அல்லது அதனை விடவும் குறைவான தூரத்துக்கு குறைக்கப்பட்டது பற்றி கவாஸ்கர் கடுமையாகக் கோபப்படுகிறார். 'பந்துவீச்சாளர் துடுப்பாட்ட வீரருக்கு தவறைச் செய்ய வைத்தாலும் பௌண்டரி அருகில் கொண்டுவரப்பட்டதால் தண்டனையை அனுபவிக்கிறார்கள். பிடியெடுக்கும் இடத்தில் சிக்ஸர் போனால் என்ன செய்ய!' என்று கவலைப்படுகிறார் கவாஸ்கர்.நவீன துடுப்புகளின் தயாரிப்பும், அவைகளின் செயல்திறனும் அதிகரித்திருக்கிறது. தவறாக அடிக்கும் பந்து கூட தூரத்துக்குச் சென்றுவிடுகிறது. ஆனால் அதற்கு நிகராக பந்துவீச்சாளர்கள் தமது திறமை மற்றும் உத்வேகத்தை அகதிகரித்துக் கொள்ள வேண்டும் என்பது தென்னாபிரிக்க முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் டெல் ஸ்டைனின் கூற்று. 'நான்கு ஓவர்களுக்குள் பந்துவீச்சாளர்கள் ஹீரோ ஆவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது' என்கிறார். சம்பிரதாய கிரிக்கெட்டில் இருந்து டி20 கிரிக்கெட் புதிய போக்கிற்கு மாறி வருகிறது. அது வீரர்கள் அனைத்துத் துறைகளிலும் திறமை, புதுப் போக்கு, உத்வேகத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கி இருக்கிறது. எப்படி இருந்தபோதும் மைதானத்திலும், அதற்கு வெளியிலும் பந்துவீச்சுக்கும், துடுப்பாட்டத்திற்கும் இடையே சமநிலையை பேணுவது முக்கியமானது. அப்படி இல்லை என்றால் கிரிக்கெட், கிரிக்கெட்டாக இருக்காது.



**எஸ்.பிர்தௌஸ்...**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2024 மே 5 ஞாயிற்றுக்கிழமை



ஒலிபரப்பாளர், கவிஞர், விமர்சகர்

# இளையதம்பி தயானந்தா

# இரண்டரை ஆண்டுகள் நீடித்த விக்கல்



விக்கல் வருவது வழக்கம் தான். அதனைப் போக்க என்னவெல்லாம் செய்வார்கள். மூச்சை அடக்கிப் பிடிப்பது, இடைவிடாது தண்ணீர் குடிப்பது என்ற சாதாரண வைத்தியங்கள் தவிர, திடீரென்று கன்னத்தில் அறைவது போன்ற அதிர்ச்சி வைத்தியங்களும் உண்டு. சிலர் பழைய கோபத்திற்கு அடித்துவிட்டு, ஏன் என்று கோபத்தோடு கேட்டால், 'விக்கல் நின்று விட்டது பார்' என்று கூறி தப்பிக்கொள்வார்கள்.

ஆனால், பிரி;ட்டனின் கிறிஸ் சான்ட்ஸிற்கு இந்த அதிர்ச்சி வைத்தியம் எதுவும் சரிப்பட்டு வரவில்லை. 2010 ஆம் ஆண்டு அவருக்கு வந்த விக்கல் இரண்டரை ஆண்டுகள் இடைவிடாது இருந்தது.

மருத்துவர்களும் எத்தனையோ சிகிச்சை செய்து பார்த்தார்கள் விக்கல் நிற்பதாக இல்லை. கடைசியில் தான் அவரது மூளையில் கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கட்டிக்குத் தான் இந்த விக்கல் இருந்திருக்கிறது. கட்டியை அகற்றியதும் விக்கல் நின்றுவிட்டது. உண்மையில் சான்ட்ஸிற்கு வந்த விக்கல் அவரின் உயிரையே காத்தது.

# சொங் படுகொலை



பிரிட்டிஷ் அடிமைக் கப்பல் சொங்இ 1781 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் கானாவில் இருந்து 442 அடிமைகளுடன் ஜமைக்காவை நோக்கி புறப்பட்டது. அந்தக் கப்பலில் சுமக்க முடியுமான எண்ணிக்கையை விடவும் ஏற்றப்பட்ட அடிமைகள் எண்ணிக்கை இரண்டு மடங்காக இருந்தது. என்றாலும் அது பற்றி கவலையில்லை. அடிமைகளை அதிகரிக்கும் அளவுக்கு லாபமும் அதிகம்.

ஆனால் பயணப் பாதையில் ஏற்பட்ட தவறினால் கப்பல் ஜமைக்காவை அடைய தாமதம் ஏற்பட்டது. கப்பலில் நீர் வேறு தீர்ந்து வந்தது. எனவே, அடிமை வர்த்தகர்கள் கப்பலில் இருந்த 130 அடிமைகளை கடலுக்குள் போட்டுவிட்டார்கள். இது ஒரு பயங்கரப் படுகொலையாக இருந்தாலும் அந்தக் காலத்தில் அது பொருட்டல்ல.

அட்லாண்டின் அடிமை வர்த்தகத்தின் ஓர் அங்கமாக இருந்த இந்தக் கப்பல் லிவர்பூலைத் தளமாகக் கொண்ட அடிமை வர்த்தக அதிகாரி வில்லிம் கிரேக்சனே நிர்வகித்தார். கப்பல் ஜமைக்காவை வந்தடைந்ததும் கடலில் போட்ட



அடிமைகளுக்கு காப்புறுதி கேட்டார். காப்புறுதி நிறுவனமோ அதனைத் தர மறுத்துவிட்டது.

இந்த வழங்கு பிரட்டனில் பிரபலத்தை பெற்றது. அடிமை வர்த்தகத்தை இல்லதொழிக்க போராடும் செயற்பட்டாளர்கள் அதன் கொடூரத்தை காண்பிக்க இந்த சம்பவத்தையே கையில் எடுத்தார்கள். இந்த அடிமை வர்த்தகத்திற்கு எதிரான இவர்கள் கொலை வழக்குத் தொடுத்தபோதும் அதற்கு பிரிட்டிஷ் சட்டத்தில் அப்போது இடம் இருக்கவில்லை. அதாவது அடிமைகளை கொல்வதற்கு சட்டத்திலேயே இடமிருந்தது.

நீண்ட வழக்கு விசாரணையும் அடிமை வர்த்தகர்களுக்கு சாதகமாக முடியவில்லை. காப்புறுதிப் பணத்தையும் இழந்தார்கள்.

இந்த சொங் கப்பல் படுகொலை தான் அடிமை வர்த்தகத்தை ஒழிப்பதற்கான பெரும் தூண்டுதலாக இருந்தது. 1780களில் அதன் செல்வாக்கு அதிகரிக்க 1787 இல் அடிமை வர்த்தகத்தை ஒழிப்பதற்கான சமூகம் என்ற பலம் மிக்க இயக்கம் ஒன்று உருவானது.

அடிமை வர்த்தகத்தை ஒழிக்கும் சட்டம் அடுத்த ஐம்பது ஆண்டுகளில் கொண்டுவரப்பட்டு காலாப் போக்கில் அது உலகில் இருந்து முற்றாக ஒழிக்கப்பட்டது.



# கோளாறுடன் ஆரம்பமான இணையதளம்

இணையதளத்தில் முதல் முறை அனுப்பப்பட்ட செய்தி ஆங்கிலத்தில் 'LO' என்பது தான். சம்பந்தம் இல்லாதது போல் தெரிந்தாலும், இணையதளம் செய்தி அனுப்பும்போது பாதியில் ஏற்பட்ட கோளாறு தான் இந்தக் குழப்பத்திற்குக் காரணம்.

1969 ஒக்டோபர் 29 ஆம் திகதி இரண்டு கணினிகளுக்கு இடையில் முதல் முறையாக மின்னணு செய்தி அனுப்பப்பட்டது. இது தான் இணையதளத்தின் முன்னோடி. ஆனால் அப்போது அதனை ARPANET என்று அழைத்தார்கள். கலிபோர்னிய பல்கலைக் கழக பேராசிரியர் லியோனார்ட் கிளைன்ரொக் மற்றும் அவரது மாணவரும் நிரலாளருமான சார்லி கிளின் தகவல் பரிமாற்ற முறை ஒன்றை உருவாக்கினார்கள்.

அந்த நிகழ்ச்சி மூலம் ஒரு கணினியில் இருந்து மற்றக் கணினிக்கு செய்தி அனுப்ப முயற்சித்தார்கள். அவர்கள் அனுப்ப முயன்ற முதல் செய்தி ' LOGIN'. ஆனால் LO என்று அடித்த பின் கணினி கோளாறு காட்டியதால் போய்ச் சேர்ந்த செய்தியும் பாதியில் நின்றுவிட்டது.

# மரத்தில் வாழ்ந்த ஜூலியா



கலிபோர்னியாவில் இருக்கும் அயிரம் ஆண்டு வயதுடைய 200 அடி உயரம் கொண்ட மரம் ஒன்றை நிறுவனம் ஒன்று வெட்டுவதற்கு முயற்சித்தபோது சுற்றுச்சூழல் ஆர்வலரான ஜூலியா பட்டர்பிளை ஹில் அதனைத் தடுப்பதற்கு இரண்டு ஆண்டுகள் அந்த மரத்திலேயே தங்கினார்.

1997 டிசம்பர் 10 திகதி அந்த மரத்தின் மேல் குடியேறிய அவர் விடாப்பிடியாக 738 நாட்கள் அதாவது 1999 டிசம்பர் 18 ஆம் திகதி வரை மரத்திலேயே தங்கினார். அவரது செயல் பலரது அவதானத்தை பெற மரம் வெட்டும் நிறுவனத்திற்கு ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது.

கடைசியில் மரத்தை வெட்டப் போவதில்லை என்றும் அதனை பாதுகாப்பதாகவும் கூறி ஜூலியாவுடன் அந்த நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொண்டது.



பாஸ்கி : அந்த ஹோட்டல் கோகோ கோலா ஃப்ரீ அப்படீன்னு போட்டிருந்தத பாத்துட்டு ஏமாந்துட்டேன்!
பாக்கி : ஏன்?
பாஸ்கி : ஸ்ட்ராவுக்கு 10 ரூபா சார்ஜ் பண்ணிட்டாங்களே!



ரமனன் : வெயிலுக்கு எங்கேயாவது வெளியூர் போகலாம்னு இருக்கேன்.
வேலு : வெயிலுக்கா... அதுக்கு ஏண்டா வெளியூர் போறே ? சும்மா வெளியிலே போய் நில்லு... போதும்..




Mutuwal Miracle kids pre school teacher's



நண்பர் 1 : அந்த ஊர்ல நிறைய கடன் வாங்கினேன் அதனால இந்த ஊருக்கு வந்தேன். இங்கேயும் கடன் வாங்க றேன்.
நண்பர் 2 : இப்படி கடன் வாங்கறது சரியா சொல்லு?
நண்பர் 1 : நான் கேட்கும்போதெல்லாம் தர்றாங்களே அது மட்டும் சரியா சொல்லு.



முதல் நடிகை : அந்த நடிகர் தயாரிக்கிற படம்னா பணத்தை மொத்தமா கொடுப்பாரே .. .. .. அப்புற மும் ஏன் அலுத்துக்கறே ?
இரண்டாம் நடிகை : எங்கே கொடுத்தார் .. .. ? முத்தமா இல்ல கொடுத்துத் தொலைச்சுட்டார்



வேலு : நம்ப டைப்பிஸ்டை நிமிர்ந்து பார்க் காதவன் புதுசா வந்த கிளார்க்தான்!
முராரி : அதிசயமாயிருக்கே!
வேலு : காரணம். அவன்தான் அவ புருஷன்.



பாக்கி : என் மனைவியோடு ஹோட்டலுக்குச் சாப்பிடப் போனது தப்பாய் போச்சு.. .
ரமனன் : என்னாச்சு ?
பாக்கி : காசு கொடுக்காம என்னை மாவாட்டச் சொல்லிட்டு வந்துட்டா



டாக்டர் சுபைர பார்த்து :
கோலம் : அவர் என்ன தேங்காய் வியாபாரி மகனா ?
பச்ச : ஏன் மச்சி ?
கோலம் : வியாதி முத்தி போச்சான்னு பார்க்கிறதுக்கு , பேஷண்டை தூக்கு குலுக்கி பார்க்கிறாரே ...



நிருபர் : உங்க பேர்ல ரசிகர் மன்றம், நற்பணி மன்றம்னு வைக்கிறாங்களே, அது பத்தி என்ன நினைக்கிறீங்க?
நடிகை : அதைவிட என்பேர்ல நீதி 'மன்றம்' வச்சா ரொம்ப சந்தோசப்படுவேன்.



ரமனன் : "பேண்ட் வாத்தியக் காரங்க ஏன் நடந்துண்டே வாசிக்கறாங்க?"
வேலு : "பேண்ட் சத்தம் பொறுக்க முடியாமத் தான்."




தொண்டன் : தலைவரே...! மக்கள் நம்ம பேச்சு பிடிக்காம, செருப்பு வீசுறாங்க வாங்க ஓடிடலாம்...!
தலைவன் : இருய்யா...! எனக்கு ஒரு செருப்பு தான் கிடைச்சு இருக்கு...!



நண்பர் 1 : இந்திய ஜனத்தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறதே, எதனால் தெரியுமா?
நண்பர் 2 : ஏனாம்?
நண்பர் 1 : தீப கர்ப்பமா இருக்கிறதுனால.



நண்பர் 1 : எதுக்கு எல்லாப் பேஷண்டுகளும் ஜாலியா இருக்காங்க ?
நண்பர் 2 : டாக்டர்கள் ஸ்டிரைக் ஆச்சே, அதான்




பெண் ஆளுமை அறிமுகம் 44

# பெண் எழுத்தாளர் றஸ்மியா வரிப்பத்தான்சேனை

**கே: உங்களைப் பற்றிய அறிமுகம்**

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் இயற்கை அழகும் வளமும் செழிப்புற்று விளங்கும் வரிப்பத்தான் சேனை எனும் அழகிய கிராமத்தை பிறப்பிடமாகவும் வாசிப்பிடமாகவும் கொண்ட நான் கல்வி பொதுத் தராதர உயர்தரம் வரை கல்வி கற்று தற்போது முன் பள்ளி ஆசிரியையாக கடமையாற்றுவதோடு வாசிப்பின் மீதிருந்த ஆர்வத்தினால் இலக்கியப் பாதையிலும் பயணித்து வருகிறேன்.



**கே: உங்கள் இலக்கிய பயணத்தின் ஆரம்பம் பற்றி கூறுங்கள்?**

வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதனாக்கும் என்பர். அவ்வாறு வாசிப்பின் மீதிருந்த ஆர்வமும் வானொலிகளில் ஒலிபரப்பாகும் சஞ்சிகை நிகழ்ச்சிகளை அடிக்கடி கேட்பதனாலும் ஏற்பட்ட தாக்கம்தான் எனக்குள்ளும் எழுத வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது.

**கே: நீங்கள் புனைப் பெயரில் உங்கள் படைப்புக்களை எழுதக் காரணம் என்ன?**

ஆரம்ப காலங்களில் எம். எஸ். எம். றமீஸ், கவித்தென்றல் ஹஸ்னி ஆகிய பெயர்களில் அதிகம் எழுத ஆரம்பித்தேன். அன்றைய வானொலி நிகழ்ச்சிகளில் ஆடவர் அரங்கம், வாலிப வட்டம் போன்ற ஆண்களுக்கான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகையில் அதனைக் கேட்கும் போது எனக்கு எழுத வேண்டும் என்ற ஒரு ஆவல். ஆனால் ஒரு பெண்ணாக இருந்து கொண்டு எழுத முடியாத ஒரு சூழ்நிலை. இதனாலே எனது சகோதரரின் பெயரில் எழுத ஆரம்பித்தேன். பின்னர் சமூக வலைத்தளங்களில் பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் வரலாம் என்ற காரணத்தினால் முகநூலிலும் புலனக் குழுமங்களிலும் புனைப் பெயரில் எழுதி வருகிறேன்.

**கே: உங்கள் கவிதைகளின், சிறுகதைகளின் கருப்பொருள் என்ன?**

அன்றாட நடைமுறை வாழ்வில் கண்கூடாக நாம் காணும் சில சம்பவங்கள் வாழ்வியலோடு ஒன்றித்துப் போன சில உணர்வுகள் சமூகம் சார்ந்த பிரச்சினைகள் மனதை விட்டு அகலாத மெல்லிய காதல் உணர்வுகள் இப்படி பல...

**கே: ஒரு எழுத்தாளர் தனக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகள் எவை என நினைக்கின்றீர்கள் ?**

வாசகர்கள் மனதில் இலகுவில் பதியக் கூடியதாக எமது படைப்புக்கள் இருக்க வேண்டும். அவர்கள் வாசிப்பதோடு நின்றுவிடாமல் எழுதவும் தூண்டுபவையாக அவை அமைய வேண்டும். சக எழுத்தாளர்களையும் மனம் திறந்து பாராட்டும் மனநிலை இருப்பதோடு மற்றவர்களை விட தான் உயர்ந்தவன் என்ற ஆணவ சிந்தனையை விட்டும் முற்றாக தவிர்ந்திருத்தல் வேண்டும்.

**கே: உங்கள் கவிதை மற்றும் புத்தக வெளியீடுகள் பற்றி கூறுங்கள்?**

எனது முதல் வெளியீடு "மௌனத் திரை" கவிதை நூல் கடந்த 2022 இல் இந்தியாவில் புத்தகக் கண்காட்சி வெளியீடாக வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இரண்டாவது நூலாக சிறுகதை தொகுப்பு ஒன்றை வெளியிட ஆயத்தமாக உள்ளேன்.

**கே: உங்கள் முதல் நூலை இந்தியாவில் வெளியிடக் காரணம் என்ன?**

இன்று அதிகமானோர் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினை பொருளாதார சிக்கல். எப்படியாவது ஒரு புத்தகம் வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்த எனக்கு ஒரு அமைப்பினூடாக முதலீடு எதுவும் இன்றி இலவசமாக புத்தக கண்காட்சியில் புத்தகம் வெளியிட்டு வைப்பதாகவும் அதனை அனுப்புவதற்குரிய தபால் செலவு மாத்திரமே அறவிடப்படும் என்றபடியினாலும் அங்கு வெளியிட்டேன்.

**கே:சான்றிதழ்கள் விருதுகள் பற்றி கூறுங்கள்?**

கலாச்சார அலுவல்கள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் இணைந்து நடாத்திய பிரதேச இலக்கியப் போட்டியில் பாடலாக்கம், கவிதை, சிறுகதை , சிறுவர் கதை போன்றவற்றில் கடந்த எட்டு வருடங்களாக வெற்றிச் சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றதுடன் இலங்கை வானொலி முஸ்லிம் சேவை, கிழக்கு இளைஞர் அமைப்பு போன்றவற்றின் பாராட்டு சான்றிதழ்களும் கிடைத்தன. அத்துடன் லக்ஸ்டோ மீடியாவினால் "திறமைக்கான தேடல்" விருது, மலையக கலை கலாச்சார சங்கத்தினால் "கலைத் தீபம்" விருதும் கிடைக்கப்பெற்றதுடன் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் 2016 இல் "கலைஞர் சுவதம்" விருதும் கிடைக்கப்பெற்றுள்ளது.

**கே: நீங்கள் பெண்ணாக இத்துறையில் சந்தித்த சவால்கள் , விமர்சனங்கள் இருப்பின் கூறமுடியுமா?**

போட்டி பொறாமைகள் நிறைந்த இத்துறையில் சாதனைகள் படைப்பது என்பது பெரும் சவால்தான். எந்தவித பலனும் இன்றி இத்துறையில் கால் தடம் பதிக்க வேண்டுமா? என்ற கேள்விகள் எமது வளர்ச்சிப் படிகளுக்கு முட்டுக்கட்டையாகவும் சில ஆணாதிக்க சிந்தனைகளும் இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

**கே: இலக்கியத் துறையில் பெண்கள் பயணிப்பது பற்றி இன்றைய சமுதாயக் கண்ணோட்டம் எப்படி உள்ளது?**

பெண்களுக்கென்று எவ்வளவு திறமை இருந்தாலும் சில நேரங்களில் அவர்களது ஆளுமைகள் முடக்கப்படுகின்றது. அவற்றை தகர்த்தெறிந்து பெண்ணானவள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

**கே: சிறுகதைகள், கவிதைகள் எவ்வாறு எழுதினால் வாசகர்களுக்கு பிடிக்கும் என்பது பற்றிய உங்கள் கருத்து?**

வித்தியாசமான கதைக் களத்தில் புதிய கோணத்தில் சமுதாய அவலங்களை மற்றவர்களுக்கு விழிப்புணர்வூட்டக்கூடியதாக உங்கள் கதை ,சிறுகதைகளை எழுதுங்கள் நயமான வரிகளை சிறந்த கருத்தாழமிக்க கவிதைகளை எழுதுங்கள்.

**கே:இறுதியாக ஏதேனும் கூற விரும்புகின்றீர்களா?**

என்னை நேர்காணல் செய்த இலக்கிய ஆளுமையும் எழுத்தாளரும் கவிஞருமான மஜினா உமறு லெவ்வை க்கும் வாய்ப்பினை வழங்கிய தினகரன் பத்திரிகைக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

# ஐந்து முதல்வர்களுடன் நடித்தவர் மனோரமா



12 வயதில் இருந்து நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய மனோரமா தன் முதல் திரைப்படத்தை சிங்கள மொழியில் நடித்தார். தமிழில் அவர் நடித்த முதல் திரைப்படம் 'மாலையிட்ட மங்கை'. சிறுவயதிலிருந்தே பாடல்கள் மீதும் நடிப்பின் மீதும் பேரார்வம் கொண்டவராக இருந்தவர் மனோரமா. குறிப்பாக எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பாடல்கள் அவருக்கு மிகவும் பிடித்தவை.

சிறுவயதில் குடும்பத்தில் நிலவி வந்த வறுமை காரணமாக திரையரங்குகளில் முறுக்குகளை விற்பனை செய்ய தொடங்கினார் மனோரமா. அப்போது திரைப்படத்தின் இடைவெளி வரும் வரை கதவுகளில் காதை வைத்து பாடல்களை அவர் கேட்பதுண்டு. அப்படி ஒருமுறை பாடல் கேட்பதில் முழுமையாக மூழ்கிப்போன மனோரமாவின் முறுக்குகளை மாடு ஒன்று தின்றுவிட அதற்காக தன் தாயாரிடம் பலமாக அடி வாங்கிய நிகழ்வும் நடந்ததுண்டு.

12 வயதில் இருந்து நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய மனோரமா தன் முதல் திரைப்படத்தை சிங்கள மொழியில் நடித்தார். தமிழில் அவர் நடித்த முதல் திரைப்படம் 'மாலையிட்ட மங்கை'. கவிஞர் கண்ணதாசன் கதை மற்றும் வசனம் எழுதி அவரே தயாரித்த அப்படத்தில் நகைச்சுவை கதாபாத்திரம் ஒன்றை ஏற்று நடித்தார். அப்பாத்திரத்தில் நடிக்க அவர் முதலில் தயங்கவே கண்ணதாசன்தான், "கதாநாயகிகளாக நடிக்க பலரும் உண்டு. ஆனால் நகைச்சுவை நடிகைக்கான வெளியை நீதான் நிரப்ப வேண்டும்" என்று ஊக்கப்படுத்தி நடிக்க வைத்தார்.

ஐந்து முதல்வர்களுடன் நடித்தவர் என்ற பெருமை மனோரமாவிற்கு உண்டு. அறிஞர் அண்ணா எழுதிய நாடங்களில் மட்டுமல்லாமல் அவருடனும் சேர்ந்து நடித்திருக்கிறார் மனோரமா. அதேபோல 'காகிதப்பூ' என்ற நாடகத்தில் கலைஞருடன் சேர்ந்து நடித்திருக்கிறார்.



இவர்களைத் தவிர்த்து எம். ஜி.ஆர், ஜெயலலித்தா, என்.டி. ராமராவ் போன்றவர்களுடன் நடித்துள்ளார் மனோரமா.

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை



மைத்திரன் (20.04.2024),
நாகேந்திரன், சந்திரயோகம்,
பசறை மவுசாகல ( யூரியைச்)

# அபெக்ஸ் கெம்பஸ் பட்டமளிப்பு விழா










அபெக்ஸ் கெம்பஸ் பட்டமளிப்பு விழா திங்கட்கிழமை (29.04.2024) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான அரங்கில் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபத் தலைவர் எம். எஸ்.ஜே. றிசாட் தலைமையில் நடைபெற்றது.

பிரதான காரியாலயம் வெள்ளவத்தையில் அமைந்துள்ளதுடன் இப் பல்கலைக்கழகத்தின் கிளைகள் அநுராதபுரம், கண்டி, புத்தளம், காலி, பதுளை போன்ற பிரதேசங்களில் செயற்பட்டு வருகின்றன. அபெக்ஸ் கெம்பஸ் ஊடாக தொழில் முனைவோர் உட்பட பாடசாலைக் கல்வியை விட்டு விலகிய உயர்தரம் சித்தியெய்திய மாணவர்களும் பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இப் பட்டமளிப்பு விழாவின் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா கலந்து கொண்டதுடன் மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் தென்ஆபிரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் சன்டில் எட்வின் சால்க், பங்களாதேஷ் நாட்டின் உயர் ஸ்தானிகர் தாரிக் ஆரிபுல் இஸ்லாம், மற்றும் மாலைதீவு நாட்டின் பிரதித் தூதுவர் , மற்றும் அரச பல்கலைக்கழகங்களது பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலை, விஞ்ஞானப் பட்டங்கள், கல்வி முதுமாணிப் பட்டம், வர்த்தக முகாமைத்துவம், வர்த்தக முதுமாணி மற்றும் உயர்தேசிய டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் சுமார் 170க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பட்டங்களை பெற்றுக் கொண்டமை விசேட அம்சமாகும். நிகழ்வின் இறுதியில் சிரேஷ்ட ஊடகவியாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு விசேட விருதுகள் வழங்கப்பட்டு அவர்களது ஊடக சேவைக்கான பாராட்டுதல்களும் வழங்கப்பட்டன. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் உதயம் பத்திரிகை ஆசிரியருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன், வசந்தம் தொலைக்காட்சியின் முகாமையாளர் இர்பான் மொஹமட், கொழும்பு டைம்ஸ் வெப்தள பிரதம ஆசிரியரும் முன்னாள் அரப் நியுஸ் ஆசிரியருமான மொஹமட் ரசூல்டீன், ரூபாவாஹினி தொலைக்காட்சியின் தமிழ்ச் செய்தி பணிப்பாளர் காசீம் பாவா மொஹமட் சியாம், லேக் ஹவுஸ் நிறுவன விளம்பரபீட உத்தியோகத்தர் எம்.ஐ. நிசாம்தீன், வசந்தம் பிராந்திய செய்தியாளர் மற்றும் லேக் ஹவுஸ் பத்திரிகைகளின் செய்தியாளர் அஷ்ரப் ஏ சமத், மற்றும் சிங்கள, தமிழ் பத்திரிகைகளின் செய்தி ஆசிரியர்களது ஊடக சேவைகளை கௌரவித்து விருதுகளை வழங்கி வைத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



மண்டேலா எதிர்பார்த்தபடி தென்னாபிரிக்க பல்கலைக்கழகத்தில் தொலைதூர வகுப்பில் இடம் கிடைத்தது. பகல் நேரங்களில் அலுவலக வேலைகளையும் இரவு நேரங்களில் பட்டப்படிப்பை தொடர்வதையும் வழமையாக்கிக் கொண்டு ஓர் இயந்திரன் போன்று தன்னைத் தானே இயக்கினான். தன் முயற்சியில் விடாப்பிடியாக இருந்து தன் இன மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கனவில் அவன் மனம் என்னும் எண்ணப்பறவை வானில் சிறகடித்து சிட்டாக பறந்து கொண்டிருந்தது.

அலுவலகத்தில் மண்டேலாவுக்கு கோர் ரடேபி என்னும் புதிய நண்பனின் நட்பு கிடைத்தது. தோழமையை நேசிக்கும் மண்டேலா கோருடனும் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். கோரும் மண்டேலாவின் சிறந்த குணங்களால் பெரிதும் கவரப்பட்டு மண்டேலாவின் நட்பு எனும் வலை வீச்சில் சிக்கியிருந்தான். கோர் என்பவனும் மண்டேலாவை போலவே கறுப்பின ஆபிரிக்கன் ஆவான். இருவரது எண்ணவோட்டங்களும் குறிக்கோளும்ஒரேஅலைவரிசையில்இருந்ததால் இருவரும் உற்ற தோழர்களாக அலுவலகத்தில் வலம் வந்தனர். இருவரும் ஆபிரிக்கர்களின் அடிமை வாழ்க்கை பற்றி மணிக்கணக்கில் பேசி உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த அனலை வெளிப்படுத்தினார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் மண்டேலா கோரைப் பார்த்து 'நாமிருவரும் ஒரே குளத்தில் ஊறிய மட்டைகள் போல ஒரே குறிக்கோளுடனும் ஒரே எண்ணவோட்டங்களுடனும் ஊறியிருப்பதால் தான் இறைவன் நம்மிருவரையும் இவ் அலுவலகத்திற்கு வரவைத்து நம்மை சந்திக்க வைத்திருக்கிறான் என்று எனக்கு தோன்றுகிறது' என்று கூறியதும் கோரின் கண்கள் பளிச்சிட்டன. 'நண்பா நீ சொல்வது நூற்றுக்கு நூறு உண்மைதானடா. நானும் அப்படியேதான் நினைக்கிறேன். நம்மின மக்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று துடிக்கும் எனக்கு அதே துடிப்புள்ள நீ நண்பனாக கிடைத்திருக்கிறாய் என்றால் அது கடவுளின் கைங்கரியமாகத்தான் இருக்க வேண்டும்' என்று உறுதியாக கூறினான்.

தொடரும்...



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்



# துரோணர்கள் இல்லாத ஏகலைவன்

## சிரேஷ்ட ஒலிபரப்பாளர் இளையதம்பி தயானந்தா

**தொண்ணூறுகளின் நடுப்பகுதி தொடக்கம் இலங்கையின் தமிழ் வானொலி நேயர்களின் வீடுகளில் அதிகம் ஒலித்த, அவர்களின் அபிமானக் குரலுக்குச் சொந்தக்காரர் சிரேஷ்ட ஒலிபரப்பாளர் இளையதம்பி தயானந்தா. 'வாரம் ஒரு வலம்', 'கவிதைக் கலசம்', 'தேன்தமிழ் நாதம்', 'இராம நாடகம்' போன்ற நிகழ்ச்சிகளில் தனது குரலாலும், கனதியான விடயதானத்தாலும் மிகக் குறுகிய காலத்திலேயே பல்லாயிரக்கணக்கான வானொலி அபிமானிகளை வென்றவர். இலங்கை வானொலியிலும் புலத்திலுமான தனது வானொலி அனுபவங்களை அவர் எம்முடன் பகிர்ந்து கொள்கின்றார்.**

**ஒலிபரப்புத்துறைக்குள் இளையோர் பலர் நுழைய ஆதர்சமாய் அமைந்த உங்களுக்கு ஆதர்சமாக யாரைக் குறிப்பிடுவீர்கள்?**

யாருமில்லை. ஒரு ஒலிபரப்பாளனாக அல்லது அறிவிப்பாளனாக வேண்டும் என்ற எண்ணமே இல்லாதிருந்த எனக்கு துரோணர்களைத் தேட வேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனால் வானொலிக்கு வந்த பிறகு எனக்கு சரோஜ் நாராயணசாமியின் செய்தி வாசிப்பில் ஒரு ஈர்ப்பு இருந்தது. அதே பாணியிலான செய்தி வாசிப்புக்கு, வெற்றி பெறாமல், கொஞ்சம் முயற்சித்திருக்கிறேன்.

இன்னுமொருவரைச் சொல்வதானால், தென்கச்சி சுவாமிநாதனையும் அவரின் இன்று ஒரு தகவலையும் சொல்லலாம். அதன் பாதிப்புத்தான், நானும் நண்பர்களும் ஒலிபரப்பாளர்களுமான சிதம்பரப்பிள்ளை சிவகுமார், குமாரதாஸ் ஆகியோரும் இணைந்து ஒலிபரப்பிய ஐந்து நிமிட கால அளவு கொண்ட தேன் தமிழ் நாதம்.



குடும்பத்தாருடன்

**இலங்கை வானொலிக்கான விண்ணப்பத்தை நீங்கள் அல்ல உங்கள் மனைவி தான் அனுப்பியதாகச் சொன்ன ஞாபகம். அப்படியானால் உங்கள் இத்துணை புகழுக்கும் காரணகர்த்தா சாரதா தயானந்தா தான் என்று கூறலாமா?**

எல்லா புகழும் கட்டிய மனைவிக்கே என்று சொல்ல வருகிறீர்கள், தாராளமாகச் சொல்லிக் கொள்ளுங்கள். எதற்கும் நான் காரணமல்ல என்பதை உணரும் வயது இப்போது வந்துவிட்டது. பிறப்பும் இறப்பும் இருப்பும் எங்கள் கைகளில் இல்லை.

பல சந்தர்ப்பங்களில், புகழும், இகழும் கூட மற்றவர்களால்தான் ஏற்படுத்தப்படுகின்றன. எல்லா மனிதர்களின் புகழுக்கு மட்டுமல்ல இருப்புக்கே கூட காரணமாக இருப்பது தாயோ தாரமோதான் என்று நான் நினைக்கிறேன்.

மனைவியின் நிரந்தர தொழில் தலைநகரின் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இருந்தது, நான் ஆசிரியராக அங்கும் இங்கும் இடம் மாறாமல் இருக்க தலைநகரில் எனக்கொரு வேலை தேடிய போது, இலங்கை வானொலி சிக்கியது. எனக்கு 90 களில் இலங்கை வானொலியில் நிரந்தர வேலை கிடைத்தது, அந்நாட்களில் பெரும் புகழ் பூத்ததும், ஏக வானொலியாகவும் இருந்த அந்த நிறுவனத்தின் தலைவிதி அதுவாக இருந்திருக்கிறது.. வேறென்ன சொல்ல.

**ஒலிபரப்புத் துறைக்குள் நீங்கள் நுழைந்தது ஓர் எதிர்பாராத நிகழ்வு என்றால் மிகக் குறுகிய காலத்தில் ராம நாடகம், கவிதைக் கலசம், தேன் தமிழ்நாதம் போன்ற முத்திரை பதித்த நிகழ்ச்சிகளை வழங்குவது எவ்வாறு சாத்தியமாகியது?**

நீங்கள் குறிப்பிடும் மேற்சொன்ன நிகழ்ச்சிகள் வானொலியில் நான் இணைந்து ஐந்து, ஆறு ஆண்டுகளின் பின்னர் தொடங்கப்பட்டவை என நினைக்கிறேன். தவிரவும் எந்த ஒரு படைப்பும் தன்னந்தனியனாக ஒருவனால் உருவாக்கப் படுபவை அல்ல. குறிப்பிடப் பட்டவற்றுள் இராம நாடகம் நான் பெருமைப்படக் கூடிய ஒன்று என மகிழ்ச்சியோடு சொல்லுவேன்.

54 அல்லடு 56 அங்கங்களைக் கொண்டதும், அருணாசலக் கவிராயரின் கீர்த்தனைகளை பயன்படுத்தியதுமான தொடர் அது. என்னைப் போன்ற ஒரு சோம்பேறியைக் கொண்டு அதனை செய்வித்த சகோதரி ராதை குமாரதாசைத்தான் அதற்குப் பாராட்ட வேண்டும்.

கவிதைக் கலசம் இன்று புகழ் பெற்றிருக்கும் அன்றைய இளம் கவிஞர்களுக்கு வாய்ப்பளித்த பெருமைக்குரியது. தேன்தமிழ் நாதத்தை என்னை விட சிறப்பாக சிதம்பரப்பிள்ளை சிவகுமாரும், குமாரதாசும் செய்திருந்தார்கள் என்று சொல்லுவேன்.

**நீண்ட கால இலக்கிய வாசிப்பின் சேகரம்தான் உங்கள் ஊடக சாதனைகளை சாத்தியப்படுத்தியது எனச் சொல்லலாமா?**

முதலாவதாகவும் அழுத்தமாகவும் ஒரு விடயம். ஊடகத்தில் நான் எதையும் சாதிக்கவில்லை, இது ஒன்றும் அவையடக்கமல்ல, இதுதான் சத்தியம்.



அதேவேளை ஊடகத்தில் சாதிக்க மட்டுமல்ல, இயல்பாக மற்றவர்கள் சொல்லிக் கொள்ளும்படி செயற்பட யாராவது விரும்பினால், தயவு செய்து வாசியுங்கள். எதையும் கூர்மையோடு கேளுங்கள். எதையும் முடிந்த வரை தெரிந்து கொள்ள முயலுங்கள்.

ஊடகத்தில் நீங்கள் செய்ய விரும்பும் எதுவாக இருந்தாலும், அதை கேட்கிற அல்லது வாசிக்கிற சிலரோ அல்லது யாரோ ஒருவனோ, நீங்கள் செய்ய முயல்வதில் கரை கண்ட ஒருவனாக இருப்பான் என்பதை எப்போதும் மறந்து விடாதீர்கள்.

**நீங்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய காலம், உள்நாட்டுப் போர் நிகழ்ந்த சவால் மிகுந்ததொரு காலகட்டம். அக்காலத்தில் நீங்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள்?**

போர்க் காலத்தில் பணியாற்றிய எல்லா ஊடகக்காரர்களுக்குமே அது ஒரு சவால் மிகுந்த காலகட்டம்தான். சவால் அல்லது நெருக்கடி எங்கிருந்து வருகிறது என்பதில் மட்டுமே வேறுபாடு இருந்தது.

அன்றைய வானொலியைப் பொறுத்த வரை நீங்கள் கேட்ட நெருக்கடி செய்தித் துறைக்கும் தேசிய சேவைக்குமே அதிகமாக இருந்தது. நான் வாசிக்கிறேன், எழுதியவன் இன்னொருவன் என்று செய்தி ஆசிரியனைக் காட்டிக் கொடுத்து, செய்தி வாசிப்பாளன் தான் தப்பித்த, பொறுப்பு துறந்த ஒரு நிலை இருந்தது.

அரசியல் பேட்டிகளில் என்ன கேட்கிறோம், அல்லது பேட்டி காணப்படுபவரை எதைச் சொல்லச் வைக்கிறோம் என்பதில் அவதானம் தேவைப்பட்டது. யாரைப் பேட்டி காண்கிறோம் என்பது கூட இருதரப்பாலும் உற்று நோக்கப்பட்டது.

7ஆம் பக்கம் பார்க்க...

# துரோணர்கள் இல்லாத ஏகலைவன்

6ஆம் பக்கத் தொடர்ச்சி...

எனது இரண்டு பேட்டிகள் எனக்கு சிக்கல்களைத் தந்தன, ஒன்று மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானுடனான வானொலிப் பேட்டி. அடுத்தது மறைந்த தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்களுடனான தொலைக்காட்சிப் பேட்டி. வர்த்தக சேவைக்குக் கூட சில பாடல்கள் தடை செய்யப்பட்டிருந்தன என்பது பலருக்கும் தெரியும். ஆனால் சமயப் பிரிவுத் தயாரிப்பாளர்கள் சுந்தரமூர்த்தி நாயனாரின் பொன்னார் மேனியனே தேவாரத்தை பயன்படுத்தவே பயந்த காலம் அது. இலங்கை உள்நாட்டுப் போருக்கு முன்னரே சிவன் புலித்தோலை அரைக்கசைத்ததை யாரும் நிர்வாகத்துக்கு எடுத்துச் சொல்லவில்லை என நினைக்கிறேன்.

**நேரலையாக நடைபெறும் பேட்டிகளாகட்டும் வேறு நிகழ்ச்சிகளான, விவாதங்கள், கவியரங்கம் எதுவானாலும், தொய்வின்றி நகைச்சுவை ததும்ப தொகுத்தளிக்கும் உங்கள் பாங்கு பற்றி சொல்வீர்களா?**



மறைந்த ஒலிபரப்பாளர் ராஜேஸ்வரி சண்முகத்துடன்

நகைச்சுவை, நக்கல் அல்லது எள்ளல் இவை எல்லாம் எங்கும் செல்லுபடியாகும் சரக்கு. பூடகமாக சில விசயங்களை போட்டுடைப்பதற்கு அதைவிடச் சிறந்த உத்தி வேறெதுவும் கிடையாது. நீங்கள் ஏற்கனவே கேட்டது போல, இன்னல்களுக்குள்ளும் இடர்பாடுகளுக்குள்ளும் சிக்கி நிற்கிறபோது சிரிப்பதே சிறந்தது. அச்சமின்மை என்பதுவே ஒரு வித பண்டாரத்தனம் தான். அச்சமில்லை அச்சமில்லை என்ற பாரதியின் பாடல் கூட ஒரு பண்டாரப் பாட்டுத் தான். ஆண்டியால் மட்டும்தான் பறப்பது சாம்பல் என்ற துணிவில் எதையும் தட்டிவிடும் துணிச்சல் பிறக்கிறது. நீங்கள் கேட்கும் அந்த நகைச்சுவையே கூட ஒரு ஆண்டியின் தட்டல்தான்.

**புலம்பெயர்வும் சர்வதேச வானொலிகளுடனான உங்கள் இணைவும் சர்வதேச இரசிகர்களை உங்கள் பால் ஈர்த்திருக்கலாம் ஆனால் அது உங்கள் அபிமான இலங்கை இரசிகர்களிடமிருந்து உங்களைத் தூரமாக்கியிருக்கிறது என்பதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

வாழ்க்கை என்பதே அந்தந்த நேரத்து நியாயம் தான். தவிரவும் யாருக்கும் எதற்கும் காத்திராமல் ஓடிக் கொண்டே இருக்கும் காலத்தையும் நாம் பார்க்க வேண்டும். காலம் எல்லாவற்றையும் தூரமாக்கும். 20 ஆண்டுகளுக்கு முன்னர், 2004 இல் இலங்கை வானொலியிலிருந்து நான் விலகினேன். 2006 வரை வெக்டோன் என்ற ஐரோப்பிய தொலைக்காட்சியிலும், 2006 இலிருந்து 2008 வரை இருக்கிறம் என்ற சஞ்சிகையிலும் செயற்பட்டேன். 2008 இல் நாட்டை விட்டு போக வேண்டிய சூழல் இருந்தது. பின்னர் இருப்புக்கும் வாழ்வுக்குமாக ஓட வேண்டி இருந்தது. GTV, ஆதவன், கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், BBC இன் தமிழோசை என ஊடகவியலாளனாக மிகச் சிறிது காலமே வெளி நாட்டில் செயற்பட்டேன். ஊடகத்தில் நான் இப்போது அறியப்படாத ஒருவனாக இருக்கிறேன் என்பதே கசப்பாக எனக்கு இருந்தாலும் அதுவே உண்மையானது. மாயையாய் மயக்கமாய் என்றோ கண்டதொரு கனவாய் எதையும் ஆக்கவல்லது காலம். அதையே தலைகீழாக மாற்ற வல்லதும் காலம்தான். காத்திருக்கலாம்.

**ஒருகாலகட்டத்தில் தேன் தமிழ் நாதம், கவிதைக் கலசம், வாரம் ஒரு வலம் என்று இலங்கை வானொலியின் தேசிய சேவையில் ஒலிபரப்பான அனேக நிகழ்ச்சிகள் உங்கள் தொகுப்பிலும் உங்கள் குரலிலும்தான் ஒலிபரப்பாகின. தற்போது அவற்றில் ஏதாவதொன்று மீள் தயாரிப்புச் செய்யப்படுமாக இருந்தால் அது எதுவாக இருக்க முடியும்?**

வாரம் ஒரு வலத்தை நேரலையாக இப்போதும் வெற்றிகரமாக செய்ய முடியும் என்றே நினைக்கிறேன். வானொலியை தோற்கடிக்கும் சமூக வலைத் தளத்தையும் இது வெற்றி கொள்ளும். எங்களிடம் தனித்த Talk show வானொலிகளோ Podcast ஓ இல்லை ஆனால் அதற்கான தேவை இருக்கிறது.

**அவ்வாறு மீள் தயாரிக்கப்படும் நிகழ்ச்சி என்னென்ன மாற்றங்களுக்கு உள்ளாக நேரிடும்?**

இலங்கை என்ற எல்லையை தாண்டி புலம்பெயர் மக்களையும் வளவாளர்களையும் உள்ளடக்கியதாக அது மாற வேண்டும்.

**அந்தக் காலம் போல இப்போது இல்லை என்பது பொதுவாகவே பெரியோர்கள் சொல்வது. இது ஊடகத்துறைக்கும் குறிப்பாகவே இலங்கையின் வானொலித் துறைக்கும் பொருத்தமானது என்று சொல்லலாமா?**

தாராளமாகச் சொல்லலாம். சொல்லுகிறவர்களுக்கு சரியானதாயும், இன்றைய தலைமுறையினருக்கு எரிச்சலானதாயும் அது இருக்கும். நான் வானொலிக்கு வந்த புதிதில் மூத்தவர்கள் அப்படிச் சொன்னபோது எனக்கு எரிச்சலாய் இருந்தது என்ற அடிப்படையில் இதைச் சொல்கிறேன்.

**தற்போதைய சூழ்நிலையில் தமிழ் ஒலிபரப்புத் துறையில் வெற்றிபெற தமிழ் மொழியுடனான சமரசம் தேவை என்று நினைக்கின்றீர்களா?**

தமிழைக் கைகழுவி விடுவதுதான் சமரசம் என்று யாராவது கருதினால், அது அநியாயமானதும், ஒரு மொழியினம் தன் மொழி வழியிலான சுய அடையாளத்தை தாழ்விறக்கும் செய்யும் துரோகமானதுமாகவே நான் கருதுவேன். Rhetoric என்பதான சொல்லாட்சிக் கலை தெரியாமலே ஒருவர் அறிவிப்பாளராக இருப்பதும் கூட வானொலிகள் செல்வாக்கிழந்து போவதற்கான காரணிகளுள் ஒன்று. தெளிவாகவும் லகர, ளகர பேதமறிந்தும் சுருக்கமாகவும் பேசத் தெரியாதவர்களை வானொலிகளில் அதிகம் கேட்க கூடியதாக இருப்பது மிகுந்த கவலை தருகிறது.

**எழுத்தாளர் தயானந்தா 'வானலையின் வரிக'ளோடு மாத்திரம் தன்னை மட்டுப்படுத்தியதேன்?**

அது கூட நான் எழுதியதல்ல பேசியது. வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஒலி, ஒளியாக வந்த பேட்டிகளின் வரி வடிவம் அந்த நூல். உண்மையில் எனக்கு எழுதப் பயமாய் இருக்கிறது. மிக அற்புதமாக எழுதிய எழுத்தாளர்களை தேவை இல்லாமல் படித்ததால் வந்த பயமும், அதி அற்புதமான கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் கொண்டிருந்த இலங்கை வானொலியில் இருந்ததும் அதற்குக் காரணம்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கலையகத்தில்

**நீங்கள் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பை வானலையின் வரிகள் என்ற நூலாக வெளியிட்டீர்கள். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன அனுபவத்தை மற்றும் சர்வதேச வானொலிகளில் பணியாற்றிய அனுபவத்தை எல்லாம் ஏன் நூலுருப் படுத்தவில்லை? இளைய ஒலிபரப்பாளர்களுக்கு அது உதவுமல்லவா?**

இலங்கை வானொலியிலிருந்து அத்தகைய பல நூல்கள் வெளியாகி இருக்கின்றன. தத்தமது பார்வையில், தமது பணிக் காலத்தின் அனுபவங்களை பல மூத்த ஒலிபரப்பாளர்கள் இலங்கை வானொலி குறித்துத் தந்திருக்கிறார்கள். ஒரு நூலாக எழுதும் அளவிற்கு நான் சர்வதேச வானொலிகளில் நீண்ட காலமாக பணியாற்றி இருக்கவில்லை. ஒருமுறை எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்கள் கூறிய ஒரு விடயத்தை இங்கு பகிர வேண்டும். தயானந்தா, நீங்கள் செய்த பேட்டிகளின் தொகுப்பைப் போல, பேட்டி காணப்படுபவரோடு பேட்டிக்கு முன்னும் பின்னுமான Off the mic பேச்சுக்களையும் கலந்த ஒரு அனுபவ பதிவை எழுதலாம் என்று குறிப்பிட்டார்.

எனக்கு அது பிடித்திருந்தது, ஆனால் அத்தகைய எழுத்து வல்லமை என்னிடம் இல்லை. நடிகை பத்மினியுடன் ஒரு சந்திப்பு என்ற பதிவில் தான் எதை சொல்ல வந்தாரோ அதையே அவர் எழுதி இருக்கிறார். அது அ. முத்துலிங்கத்தால்தான் முடியும்.



துக்ளக் ஆசிரியர் சோ ராமசாமியுடனான நேர்காணலின் போது....



தமிழக எழுத்தாளர் ஜெயகாந்தனுடன்

**காரைநகர் தந்த ஒலிபரப்பாளர்களான விவியன் நமசிவாயம், கே.எஸ். ராஜா, இளையதம்பி தயானந்தா வரிசையில், அடுத்த தலைமுறை காரைநகர் ஒலிபரப்பாளர் யார்?**

நீங்கள் குறிப்பிட்டிருக்கும் எண்ணிக்கையே மிகக் குறைவானது. எனது ஊரான காரை நகருக்கும் ஊடக மற்றும் எழுத்துழியத்துக்குமான தொடர்பை மிக நீளமாக சொல்லிச் செல்லமுடியும். அண்மையில் கனடாவிலிருந்து வெளியான காரை வசந்தம் நூலில் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் எழுதிய காரை மண் தந்த இலத்திரனியல் ஊடகச் செயற்பாட்டாளர்கள் என்ற கட்டுரையில் 26 பேரை வரிசை இட்டுள்ளார். அவர்களில் அதிகமானோர் புலம்பெயர் ஊடகத்தில் பணியாற்றுகிறவர்கள்.

இலங்கை வானொலியில் விவியன் நமசிவாயம், வி.பி.தியாகராஜா, கே.எஸ்.ராஜா, மனோகரி சதாசிவம், சோ.க.தம்பிப்பிள்ளை, சரசுவதி தம்பிப்பிள்ளை, தற்போது இலங்கை வானொலியின் யாழ் சேவை கட்டுப்பாட்டாளர் முருகேசு ரவீந்திரன் ஆகியோரைச் சொல்லலாம். புலம்பெயர் ஊடகத்தில் அன்றைய IBC இல் பத்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றி புகழீட்டி மறைந்த ரூபி குமார் (இராஜாம்பிகை நடராஜா), கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது 24 மணி நேர தமிழ் வானொலியான கனடிய தமிழ் ஒலிபரப்பை தொடங்கிய இளையபாரதி ஆகியோரைச் சொல்ல வேண்டும். இன்றும் இனியும் செயற்படப் போகிற பல இளைய சமூகம் ஊரின் புகழை மேம்படுத்தும் என நம்புகிறேன்.

**ஒலிபரப்பாளராக நீங்கள் பல பேராசிரியர்களுடன் பழகியிருக்கிறீர்கள். பேராசிரியர் சிவத்தம்பியுடனான உங்கள் நட்புறவு பற்றி குறிப்பிடுங்கள்?**

பல பேராசிரியர்களுக்கும் இலங்கை வானொலிக்கும் தொடர்புகள் இருந்த காலம் ஒன்றிருந்தது. பேராசிரியர்களான வித்தியானந்தன், இந்திரபாலா, கைலாசபதி, நா.சண்முகலிங்கன், சண்முகதாஸ், மௌனகுரு இவர்களில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களுடன் ஊடாடும் வாய்ப்பினை நான் அதிகம் பெற்றிருந்தேன். வானொலியோடு மிக நீண்ட கால உறவைக் கொண்டவராக அவர் இருந்தார். வானொலிக்கான ஆலோசகராக, படைப்பாளியாக நடிகனாக எல்லாம் அவர் செயற்பட்டவர்.

அன்றைய வானொலி குறித்தும் அன்றைய ஒலிபரப்பாளர்கள் கலைஞர்கள் குறித்தும் அவர் உரையாடுகிறபோது பழைய ஞாபகங்களும் எதையோ பிரிந்த ஏக்கமும் கலந்த ஒரு நினைவேக்கத்தை அதில் காண முடியும். அவரோடு உரையாடிய எல்லாமே பதிவு செய்யப்படாமல் போய் விட்ட ஏக்கம் இன்று என்னிடம் உள்ளது. நடிகர் திலகம் மறைந்த வேளையிலான அவரின் உரையாடலை மட்டும் நண்பன் துலபனின் மூலம் ஒளிப்பதிவாக்கி சிவாஜி என்ற பெயரில் ஆவணமாக்கினோம். அவரை நான் நேர்கண்டதில்லை. ஆனால் எனது நேர்காணல் தொகுப்பான வானலையின் வரிகளுக்கு அவர் அணிந்துரை தந்திருந்தார்.

தந்தையைப் போல என்மேல் அன்பு கொண்ட அவரின் நினைவுகள் என்றுமே மாளாதவை. அவருக்காக என்னால் செய்ய முடிந்தது, அவரது இறுதிக் கிரியை நாளன்று இலண்டனில் இருந்து அன்றைய IBC வானொலி ஊடாகச் செய்த நினைவேந்தல் நிகழ்வு மட்டுமே.

**புதிதாக ஒலிபரப்புத் துறையை நாடுவோருக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

அறிவுரை கூறாமல் அவர்கள் தாமாகவே மேம்பட வேண்டும் என்பது மட்டுமே.

வாசுகி சிவகுமார்

செந்தூரம் Senthooram





# பார்வையால் கொல்லும் ரம்யா பாண்டியன்

நடிகை ரம்யா பாண்டியன் பார்வையால் கொல்லும் வீடியோவை சற்றுமுன் வெளியிட்டுள்ள நிலையில் அந்த வீடியோவை பார்த்து ரசிகர்கள் இன்ப அதிர்ச்சியாக உள்ளனர்.விஜய் டிவியில் ஒளிபரப்பான 'குக் வித் கோமாளி' என்ற நிகழ்ச்சியின் போட்டியாளராக கலந்து கொண்ட ரம்யா பாண்டியன், அதன்பின் பிக் பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடினார் என்பதும் இந்த இரு நிகழ்ச்சிகளால் பிரபலமான அவர் சில திரைப்படங்களில் நடித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவ்வாக இருக்கும் ரம்யா பாண்டியனுக்கு சுமார் மூன்று மில்லியன் ஃபாலோயர்கள் உள்ள நிலையில் தனது ஃபாலோயர்களுக்காக அவ்வப்போது கிளாமர் புகைப்படங்கள், வீடியோக்கள், சுற்றுப்பயணம் செய்த புகைப்படங்கள் ஆகியவற்றை பதிவு செய்து வருகிறார். அந்த வகையில் சற்றுமுன் ரம்யா பாண்டியன் வீடியோ ஒன்றை அவர் பதிவு செய்த நிலையில் அந்த பதிவில் அவர் கூறிய வசனம் இதுதான்:

மெல்லிய சிமிட்டல்கள் போதும்
சிறுசிறு அசைவுகள் போதும்
இமை மூடி திறந்தால் போதும்
கண்பாவையின் விழி மொழியில்
ஆடிப்பாவை அசந்தே போகும்

மேலும் 'சுப்ரமணியபுரம்' படத்தில் இடம்பெற்ற 'கண்கள் இரண்டால்' என்ற பாடலின் பின்னணியில் ரம்யா பாண்டியன் கொடுத்துள்ள போஸ் பார்க்கும்போது கண்களாலேயே அவர் ரசிகர்களை கொல்லுகிறார் போன்ற கமெண்ட்ஸ்கள் பதிவாகி வருகிறது.

# கணவருக்கு 15 வயது மகளா? மனம் திறக்கிறார் வரலட்சுமி

தென்னிந்திய சினிமாவில் பிரபலமான நடிகையாக திகழ்பவர் வரலட்சுமி சரத்குமார். இவருக்கும் நிக்கோலாய் சச்தேவ் என்பவருக்கும் கடந்த மார்ச் மாதம் நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இந்நிலையில் நேர்காணல் ஒன்றில் நிக்கோலாய் குறித்து வரலட்சுமி சரத்குமார் பேசியுள்ளது இணையத்தில் வைரலாகி வருகிறது.தமிழ், தெலுங்கு மொழிகளில் பல படங்களில் நடித்து வருபவர் வரலட்சுமி சரத்குமார். இமேஜ் பற்றியெல்லாம் கவலைப்படாமல் ஹீரோயின், வில்லி என கதாபாத்திரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் கதைக்களங்களை எல்லாம் தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். அண்மையில் இவருக்கு நிக்கோலாய் என்பவருடன் நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இந்நிலையில் தனது வருங்கால கணவர் குறித்து சமீபத்திய நேர்காணல் ஒன்றில் வரலட்சுமி பேசியுள்ளது இணையத்தில் வைரலாகி வருகிறது.

கடந்த 2012 ஆம் ஆண்டு விக்னேஷ் சிவன் இயக்கத்தில் வெளியான 'போடா போடி' படத்தின் வாயிலாக தமிழ் சினிமாவில் நடிகையாக அறிமுகம் ஆனார் வரலட்சுமி சரத்குமார். இதனையடுத்து பல படங்களில் நடித்தவர் தற்போது வில்லி, குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடித்து கொண்டிருக்கிறார்.

கடந்த மார்ச் 1 ஆம் தேதி வரலட்சுமிக்கும், தொழில் அதிபரான நிக்கோலாய் சச்தேவ் என்பவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்து முடிந்தது.இதனையடுத்து நிக்கோலாய் ஏற்கனவே திருமணமாவர். அவருக்கு 15 வயதில் மகள் இருக்கிறார் என்றெல்லாம் இணையத்தில் பல தகவல்கல் பரவின. இந்நிலையில் நிக்கோலாய் குறித்தும், தங்களின் காதல் பற்றியும் தற்போது நேர்காணல் ஒன்றில் பேசியுள்ளார் வரலட்சுமி சரத்குமார்.

அதில், 14 வருடங்களுக்கு முன்பே நானும், நிக்கோலும் ரெசார்ட் ஒன்றில் எதார்த்தமாக சந்தித்தோம். அப்போது எங்களுக்குள் நட்பு மட்டுமே இருந்தது.அதன்பின்னர் சில மாதங்களுக்கு முன்பாக மறுபடியும் சந்தித்த போது தான் இருவருக்குள்ளும் புரிதல் ஏற்பட்டது. அப்போது நிக்கோலாய் தனியாகத்தான் இருந்தார். யாரோட வாழ்க்கையையும் நான் கெடுக்கவில்லை. நிக்கோலாய் மகள் மிகவும் திறமைசாலி. அவருக்கு 15 வயது ஆகிறது. இந்த வயதிலே மூன்று நாடுகளில் பல பதக்கங்களை வென்றுள்ளார்.

என்னிடம் அவர் நன்றாகவே பழகி வருகிறார். நிக்கோலாய் 16 வயது இருக்கும் போது, அவருடைய அப்பாவிற்கு உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் அப்பாவின் பிசினஸை கவனிங்க துவங்கியுள்ளார். உடற்பயிற்சி செய்வதிலும் அதிக ஆர்வம் கொண்டவர். என்னுடைய அப்பாவிடம் நேரடியாக பேசி திருமணத்திற்கு சம்மதம் வாங்கி விட்டார் நிக்கோலாய். நோர்வேவிற்கு சுற்றுலா சென்ற சமயத்தில் குடும்பத்தினர் எல்லார் முன்பாகவும் நிக்கோலாய் எனக்கு ப்ரோபோஸ் செய்தார். இவ்வாறு அந்த பேட்டியில் நிக்கோலாய் குறித்து மனம் திறந்து பேசியுள்ளார். வரலட்சுமியின் இந்த நேர்காணல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.



# ஒரு நிமிடத்திற்கு ஒரு கோடிக்கும் மேல் சம்பளம்

உலகநாயகன் கமல்ஹாசன் ஒரு திரைப்படத்தில் வெறும் 15 நிமிடங்கள் மட்டும் தோன்றுவதாகவும் அதற்காக அவர் 20 கோடி ரூபாய் சம்பளம் வாங்கி இருப்பதாகவும் கூறப்படுவதை அடுத்து ஒரு நிமிடத்திற்கு ஒரு கோடிக்கும் அதிகமா? என்று திரையுலகினர் ஆச்சரியத்துடன் பார்த்து வருகின்றனர்.

உலகநாயகன் கமல்ஹாசன் நடித்த 'விக்ரம்' திரைப்படம் கடந்த 2022 ஆம் ஆண்டு வெளியான நிலையில் இரண்டு வருடங்களாக அவர் நடித்த எந்த படமும் வெளியாகாமல் இருந்தாலும் இந்த ஆண்டு அவர் நடிக்கும் மூன்று படங்கள் அடுத்தடுத்து வெளியாகவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் கட்டமாக 'இந்தியன் 2' அதனை அடுத்து 'கல்கி 2898 ஏடி' ஆகிய படங்கள் ரிலீஸ் ஆகும் என்றும் இந்த ஆண்டு இறுதியில் மணிரத்னம் இயக்கத்தில் உருவாகி வரும் 'தக்லைஃப்' வெளியாக வாய்ப்பிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் கமல்ஹாசன் நடித்து வரும் படங்களில் ஒன்றான 'கல்கி 2898 ஏடி'படத்தில் அவரது கேரக்டர் வெறும் 15 நிமிடங்கள் மட்டுமே வருவதாகவும் இதற்காக அவருக்கு 20 கோடி ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது. சம்பளம் குறித்த தகவல் உறுதி செய்யப்படவில்லை என்றாலும் திரை உலகில் இந்த தகவல் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

'நடிகையர் திலகம்' உட்பட சில படங்களை இயக்கிய இயக்குனர் நாக் அஸ்வின் இயக்கத்தில் உருவாகி வரும் 'கல்கி 2898 ஏடி' படத்தில் பிரபாஸ், கமல்ஹாசன், அமிதாப் பச்சன், தீபிகா படுகோன், திஷா பதானி உள்ளிட்ட பலர் நடித்து வருகின்றனர். சந்தோஷ் நாராயணன் இசையில் உருவாகி வரும் இந்த படத்தின் பட்ஜெட் ரூ.600 கோடி என கூறப்படுகிறது.



# மீண்டும் Breakup

நடிகை ஸ்ருதிஹாசன் ஏற்கனவே லண்டனை சேர்ந்த மைக்கேல் என்பவரை காதலித்து அதன் பின் பிரேக்கப் ஆன நிலையில் தற்போது மும்பையை சேர்ந்த டூடுல் கலைஞர் சாந்தனு என்பவரை காதலித்து வருவதாக கூறப்பட்டது. இந்த நிலையில் திடீரென சாந்தனுவை சமூக வலைதளத்தில் ஸ்ருதிஹாசன் அன்ஃபாலோ செய்துவிட்டதால் இருவரும் பிரேக் அப் ஆகி பிரிந்து விட்டார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

உலகநாயகன் கமல்ஹாசனின் மூத்த மகள் ஸ்ருதிஹாசன் நடிகை மட்டுமின்றி பாடகி, இசையமைப்பாளர் என பல அவதாரங்களில் ஜொலித்து வருகிறார் என்பதும் சமீப காலமாக அவர் தெலுங்கு திரைப்படங்களில் பிஸியாக உள்ளார் என்பது தெரிந்தது.இந்த நிலையில் சமீபத்தில் லோகேஷ் கனகராஜ் உடன் இணைந்து 'இனிமேல்' என்ற மியூசிக் ஆல்பத்தில் ஸ்ருதிஹாசன் நடித்திருந்தார் என்பதும் ராஜ்கமல் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிப்பில் கமல்ஹாசன் பாடல் வரிகளில் உருவான இந்த ஆல்பம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது என்பது தெரிந்தது.

இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் லண்டனை சேர்ந்த மைக்கேல் என்பவரை ஸ்ருதிஹாசன் காதலித்து வந்ததாக கூறப்பட்ட நிலையில் பின்னர் இருவரும் பிரேக்கப் ஆகி பிரிந்து விட்டதாக கூறப்பட்டது. இதையடுத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக ஸ்ருதிஹாசன் மும்பையை சேர்ந்த டூடுல் கலைஞர் சாந்தனு என்பவரை காதலித்து வருவதாகவும் இருவரும் ஒன்றாக இருக்கும் புகைப்படங்கள் வீடியோக்கள் இணையத்தில் வைரலானது என்றும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தற்போது திடீரென ஸ்ருதிஹாசன், சாந்தனு சம்பந்தப்பட்ட புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் இருந்து நீக்கிவிட்டதாகவும் அவரை அன்ஃபாலோ செய்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் ஸ்ருதிஹாசன் மீண்டும் காதலரை பிரேக்கப் செய்துவிட்டாரா என்று கூறப்படும் நிலையில் இது குறித்து அவரே விரைவில் விளக்கம் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மமிதாவுக்கு அதிர்ச்சி



கேரளா பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 26ஆம் திகதி காலை 7 மணி முதல் விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. அதனைத் தொடர்ந்து பல திரையுலக பிரபலங்கள் வாக்களித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரல் ஆகி வந்தன. அந்த வகையில் வாக்களிக்க சென்ற 'பிரேமலு' நடிகைக்கு மிகப்பெரிய ஏமாற்றம் நிகழ்ந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்தியாவில் ஏழு கட்டங்களாக பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று வரும் நிலையில் முதல் கட்ட தேர்தல் தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களில் ஏப்ரல் 19ஆம் திகதி நடந்தது. இதையடுத்து கேரளா உட்பட சில மாநிலங்களில் கடந்த 26ஆம் திகதி தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்று வந்த நிலையில் நடிகர் சுரேஷ் கோபி உள்ளிட்ட நட்சத்திர வேட்பாளர்கள் அங்கு போட்டியிடுகின்றனர்.

இந்த நிலையில் அன்று பகத் பாசில், டொவினோ தாமஸ் உட்பட பல திரையுலக பிரபலங்கள் வாக்களித்து வந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலான நிலையில் 'பிரேமலு' நாயகி மமிதா பாஜு வாக்களிக்க வாக்கு சாவடிக்கு சென்றார். அப்போது அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லை என்றும் அவர் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிந்த தகவல் அவரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

நடிகை மமிதா பாஜு கடந்த சில மாதங்களாக சினிமாவில் பிஸியாக இருப்பதால் வாக்காளர் பட்டியலில் தன்னுடைய பெயர் இருக்கிறதா என்பதை சரி பார்க்கவில்லை என அவரது தந்தை கூறினார். அதுமட்டுமின்றி கேரளாவில் 100% வாக்குப்பதிவு நடைபெற வேண்டும் என்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தில் தேர்தல் ஆணையம் மமிதாவை பயன்படுத்தியது என்றும் ஆனால் அவருக்கே வாக்காளர் பட்டியலில் இடமில்லை என்பது மிகப்பெரிய ஏமாற்றமாக உள்ளது என்றும் அவரது தந்தை கூறியுள்ளார்.

# அன்பு நடமாடும் கலைகூடமே!

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்.**

பொருள் : அன்பிற்கும் கூடப் பிறர் அறியாமல் தன்னை மூடி வைக்கும் கதவு உண்டோ? இல்லை. தம்மால் அன்பு செய்யப்பட்டவரின் துன்பத்தைக் காணும்போது வடியும் கண்ணீரே அன்பு உள்ளத்தைக் காட்டிவிடும். மனிதநேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றை குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு. மேலும், மற்றொருவரின் நன்மைக்காக பரிபூரணமான அக்கறையும் தன்னலமற்ற விசுவாசம் கொண்ட ஒரு ஒழுக்கமான மனநிலையையும் அன்பில் அடங்கும். உயிர்கள் அனைத்தும் அன்பின் காரணமாய் இயங்குவதால் அன்பு என்கிற விடயம் ஒன்று இல்லாவிட்டால் இந்த பிரபஞ்சத்தின் இயக்கம் இருக்குமோ தெரியாது. அன்பின் வேர்களின் உறுதியைப் பொறுத்தே உறவுகளில் நீடிப்பு இடம் பெறுகிறது. மனிதனாய் பிறந்து விட்ட அனைவரும் அன்பிற்கு ஏங்கியே வாழுகின்றனர். தாய் பிள்ளையிடம் கொள்ளும் அன்பு, காதலன் காதலியிடம் கொள்ளும் அன்பு, குழந்தைகள் விளையாட்டின் மீது கொள்ளும் அன்பு, மனிதன் ஏதோ ஒரு பொருளின் மீதோ அல்லது ஒரு விடயத்தின் மீதோ கொள்ளும் அன்பு என்று அன்பு பலதரப்பட்டு வகையில் செலுத்தப் படுகின்றன. என்னுடைக் கருத்து அன்பு இரு வகைப் படுகிறது.



**01.எதிர்பார்ப்பில்லா அன்பு**
**02.எதிர்பார்ப்பு நிறைந்த அன்பு**

முதலில் எதிர்பார்ப்பில்லா அன்பினை பார்க்கும் போது இந்த வகையினர் அன்பு செலுத்தும் நபரால் துக்கப்படுவார். எதிர்பார்ப்பில்லா மனிதர் அன்பு செலுத்தும் போது பலனை எதிர்பார்ப்பதில்லை. அதே வேலை அவரின் குறைகள் கண்டுகொள்ளாமல் கடந்து விடுவதுடன் சில தவறுகளையும் சுட்டி காட்டுவது இல்லை. காரணம் எவ்வித எதிர் பார்ப்பும் அந்த அன்பில் இல்லாததால் யாரிடம் அன்பு செலுத்துகிறாரோ அவரை இழக்க விரும்பாதக் காரணத்தால் அவரின் அன்பு மட்டும் போதும் என்கிற மனநிலையில் குறை நிறைகளை சுட்டிக் காட்டுவதில்லை. சுட்டிக் காட்டினால் எங்கே சம்பந்தப் பட்ட நபரை இழக்க வேண்டி வருமோ! என்கிற பயம் அவரின் குறைகளை நிறைவாய் ஏற்று சுமக்கமாய் பயணிக்க வைக்கிறது .

அடுத்ததாக எதிர் பார்ப்பு கொண்ட அன்பு : இந்த அன்பில் அன்பை பெருபவர் துன்பப்படுகிறார். முதலில் மகிழ்ச்சியை கொடுக்கும் இந்த எதிர் பார்ப்பின் அன்பு போகப் போக எதிர்பார்ப்பு நிறைவேறாதப் பட்சத்தில் பல பிரச்சினைகளைக் கொடுக்கும். எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து கொள்ள பல கட்டளைகள், கட்டுப்பாடுகள், விதிமுறைகள் என்று ஒரு வட்டத்திற்குள் அன்பை கொடுப்பவர் எதிர் நபருக்கும் கடிவாளம் இடுவார். மனப் பிரச்சினைகள் ஆரம்பமாகும். நாளாக நாளாக அன்பில் மாற்றம் ஏற்பட்டு அதிகாரமாய் மாறிவரும். ஆரம்பத்தில் அன்பு செலுத்தும் நபரின் ஏக்கம் எதிர்வாதியை அன்பெனும் ஏக்கம் கொள்ள வைக்கும். பின் மாயை என்று உணரும் தருணம் மாயைக் காட்டும் நபரை இனம் காண விட்டு விட்டு மனம் தவிக்கும். இவர்களின் அன்பினை நம்பி வாழ்கின்றவர் நிராகரிக்க முடியாமல் தவிப்பார். உண்மையான அன்புடன் வாழும் நபர்களின் வீதம் குறைவாகவே உள்ளது. ஏதோவோர் தேவையின் நிமித்தம் யாரோ காட்டும் அன்பு பல வேளைகளில் நம்மை சுயமாக இயங்க விட மறுக்கிறது. அன்பு என்பது அதிகாரம் செய்யவோ ஆணவம் காட்டவோ பயன் படுத்தும் உணர்வல்ல.

அது தெய்வீகம் கொண்டச் செயல். அன்பினால் இறக்க இருக்கும் உயிரை காப்பாற்ற முடியும். நன்றாக இருக்கும் உயிரைக் கொள்ளவும் முடியும். எல்லோரிடமும் அன்பாய் இருங்கள், அன்பு செலுத்துங்கள். அன்புக்கு மட்டுமே உயிர்கள் கட்டுப்படும் வசியத்தைக் கொண்டுள்ளன. மனிதன் மட்டுமல்ல விலங்குகள் கூட அன்பிற்கு அடங்கி வாழுகின்றன.

இன்று காதல் என்கிறப் பெயரில் நடக்கும் காமக்கூத்துகளுக்கும் அன்பையே ஆயுதமாக பயன்படுத்தி வருகிறனர் பலர். வேதனையான விடயம் எனவே உண்மையான அன்பை உணருங்கள். அனைவரிடமும் அன்பாய் இருங்கள். அன்பு மட்டுமே அழகான நிசம்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# உடலின் உள் ஆரோக்கியத்தை பிரதிபலிக்கும் நகங்கள்

அகத்தின் அழகு முகத்தில் தெரிவது போல, உடல் நல குறைவுகள், நோய்க்கான அறிகுறிகள் நம்முடைய நகங்களில் தெரியும். நகங்கள் நம் உடலின் உள் ஆரோக்கியத்தை பிரதிபலிக்கின்றது. பொதுவாக அனைவருக்கும் நகங்களில், சாதாரண பூஞ்சை (fungal infection) தொற்று ஏற்படும், ஆனால் தண்ணீர் உள்ள இடத்தில் வேலை செய்பவர்களுக்கு அடிக்கடி பூஞ்சை தொற்று, மற்றும் நகசுத்தி ஏற்படும். நகங்களில் நிறமாற்றம், (zinc, nutrition & minerals deficeincy) துத்தநாகக், ஊட்டச்சத்து மற்றும் கனிம பற்றாக்குறைகளினால் ஏற்படக்கூடியவை, 95% நகங்களின் நிறமாற்றம் சில நோய்களுக்கான அறிகுறிகளாகும், இதனை வைத்து உள்ளிருக்கும் வியாதிகளை கண்டறியலாம்.

நகங்களில் நிறம் மாறுவதற்கான மற்றொரு காரணம் ரசாயனம் பயன்படுத்தப்படும் நெயில் பாலிஷை அடிக்கடி பயன்படுத்துவது, சலவை சோப்பு பயன்படுத்துதல், கை கழுவுவதற்கு இரசாயன சோப்புகளைப் பயன்படுத்துவது, புகைபிடிப்பவரின் நகங்கள், புகையிலையில் உள்ள நிகோடினால் நகத்தை மட்டுமே பாதிக்கும்.





ஒரு சிலருக்கு தோல் பிரச்சினைகளால் நகத்தில் நிறமாற்றங்கள் வரும். பொதுவாக ஆரோக்கியமான நபருக்கு, நகங்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். நகத்தின் கீழே ஒரு பிறை நிலா வெள்ளை வளைவு இருந்தால், அது லுனுலா (Lunula) என்று அழைக்கப்படுகிறது. பெரும்பாலானவர்களுக்கு இந்த வெளிர் வெள்ளை நிறம் கட்டை விரலில் தான் இருக்கும். சிலருக்கு நகங்கள் வெளிர் வெள்ளை நிறத்தில் இருக்கும், மேலே மட்டும் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும் எதற்கு பெயர் (Terry's Nail). இவைகள் கல்லீரல், நீரிழிவு நோய், இதய சம்பந்தமான பிரச்சனை, சிறுநீரக நோய், hyperthyroidism காரணங்கள் இருக்கும். சிலருக்கு அடிக்கடி நகங்கள் உடைந்து, உடல் ஆரோக்கிய குறைவை குறிக்கிறது. பாதி வெள்ளை பாதி இளஞ் நிறத்தில் இருந்தால் சிவப்பு (Lindsay's Nail) என்று அழைக்கப்படும், உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நபருக்கு இருக்கும். வேறு சிலருக்கு நகம் முழுவதும் வெள்ளையாக இருக்கும் (White Nails), புரதச்சத்து குறைபாடு அல்லது கல்லீரல் பிரச்சனை இருக்கும். வயதானவர்களுக்கு கல்சியம் குறைபாடு காரணமாக மூட்டு தேய்மானம் ஏற்படும்போது, நகத்தின் மேற்புறத்தில் புள்ளி புள்ளியாக வரலாம்.

வெளிறிய (Pale White) நகங்கள் இருப்பவர்களுக்கு இரத்த சோகை இருக்கும். வெள்ளை புள்ளிகள் உள்ள நகங்கள் சிறு குழந்தைகளுக்கு காணப்படும், இவை துத்தநாக (Protein) குறைபாடு மற்றும் நோய்த் தொற்றின் அறிகுறியாக காணப்படுகிறது.

மஞ்சள் நிறத்தில் இருந்தால் தைராய்டு, மஞ்சள் காமாலை, பூஞ்சை தொற்று ஆகியவற்றைக் குறிக்கிறது. பச்சை நகங்கள் ஒரு பாக்டீரியா தொற்று, ஈரமான இடத்தில் வேலை செய்யும் போது வரும். நகங்களின் மையத்தில் உள்ள கருப்பு கோடுகள் தோல் புற்றுநோயைக் குறிக்கிறது. எனவே இந்த அறிகுறிகள் காணப்படுமானால் மருத்துவரை அணுகி சரியான முறையில் சிகிச்சை பெற வேண்டும்.

# சிலர் முகநூல்களில் எழுதி விட்டு பிரபல எழுத்தாளர்களாக நினைக்கிறார்கள்



## எழுத்தாளரும் ஊடகவியலாளருமான பாரா தாஹிராவின் உள்ளக்குமுறல்

"எழுதுகோல் பிடித்தவர்கள் எல்லோரும் சாதனையாளர்கள் என்ற நினைப்பு. ஆங்காங்கே முகநூல்களில் சிலர் எழுதி விட்டு பிரபல எழுத்தாளர்களாக நினைக்கிறார்கள். இவர்களுக்கு சாதனை விருதுகள் வேற" என்று தன் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தியுள்ளார் பிரபல எழுத்தாளரும் ஊடகவியலாளருமான பாரா தாஹிர்.

எழில் கொஞ்சும் மலையகத்தில் என் தாயாரின் பிறப்பிடமான பதுளையை என் பிறப்பிடமாகவும், தந்தையின் பிறப்பிடமான மாவனல்லையை வளர்ப்பிடமாகவும், கணவரின் பிறப்பிடமான அரநாயக்க வில்பொலயை வசிப்பிடமாகவும் கொண்டவள் நான். அறிவு பொக்கிஷத்தை அள்ளி வழங்கிய மாவனல்லை பதுரியா மகளிர் கல்லூரியில் (தற்போது பதுரியா மத்திய கல்லூரி) ஆரம்பம் முதல் உயர் தரம் வரை கல்வி கற்றேன். அண்மையில் காலஞ்சென்ற எனது தந்தையார் ஏ.எச் .எம். தாஹீர் ஹாஜியார் மாவனல்லையில் பிரபலமான ஒரு சமூக சேவையாளர் ஆவார். தாயார் ரம்ஜான் பீ எழுத்தாளர், நாடக கலைஞர், மேடைப் பேச்சாளர், முன்னர் மாலைதீவு தூதரகத்தில் இலிகிதராக பணியாற்றியவர். கணவர் எம். எப் .எம். ஒமர் சமூகத்தில் சிறந்து விளங்கிய சமூக அந்தஸ்துள்ள நற்பிரஜை ஆவார் .





எனக்கு ஒரே மகன் சுரைப் ஒமர். மருமகள் இஸ்ரா இனாயதுல்லா. பேத்தி zoha. எனது மூத்த சகோதரி மரியம் ஷகீலா. மூத்த சகோதரர் முகம்மது ராபி. இளைய சகோதரி மரியம் நௌபா. இளைய சகோதரர் முகம்மது ரிஸ்வான் ஆகியோர் ஆவார்.

2. கலையுலக பிரவேசம் எதேச்சையானாலும், தாய் வழி முறையோ என எண்ணத் தோன்றுகிறது. தந்தையார் தினசரி நாளிதழ்களை வாங்கிக் கொண்டு வந்து வைத்து விட்டு எம்மை வாசிக்குமாறு பணிப்பார். 1983 ஆவது ஆண்டு நான் சிறுமியாக இருக்கும் போது "த ஐலன்ட் "எனும் பத்திரிகைக்கு "மை பிரன்ட் "எனும் தலைப்பில் எனது நண்பியைப் பற்றி ஐந்து வரிகளில் ஆக்கமொன்றை எழுதி பத்திரிகையின் சிறுவர் பகுதிக்கு அனுப்பினேன். அவ்வாக்கம் அப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்த ஆர்வத்தில்" மை கிலாஸ் டீச்சர்" என்ற தலைப்பில் தனது வகுப்பாசிரியையான காலஞ்சென்ற ஹைறியா ஆசிரியர் அவர்களைப் பற்றிய அடுத்த ஆக்கத்தை அனுப்பி வைத்து விட்டு அதைப்பற்றி மறந்தும் விட்டேன். இந்த நிலையில் ஒரு நாள் வகுப்பாசிரியை வகுப்பிற்கு வந்து வகுப்பு மாணவியர் ஒருவர் பத்திரிகைக்கு ஆக்கம் எழுதி அனுப்பியிருந்தார் என்றும், நல்ல முயற்சி. பாராட்டப்பட வேண்டும். மற்றவர்களும் இப்படி எழுதுவதற்கு முயற்சிக்கலாம் என ஊக்கப் படுத்தியதோடு அது யாரென்று கூறாமல் சென்றுவிட்டார். வீட்டுக்கு சென்று ஓய்வாக இருக்கும் போது பத்திரிகை வாசித்த போது தான் தெரிந்தது அது எனது ஆக்கமே என்று. இப்படியாக ஆரம்பித்த என எழுத்து பிரவேசம் காலப் போக்கில் தினகரன், தினபதி, சிந்தாமணி, சஞ்சிகைகள் என தொடர்ந்தன. இவற்றுக்கு கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் , விமர்சனங்கள், துணுக்குகள் என ஆக்கங்களை எழுதினேன். எனது எட்டாவது வயதில் வானொலியில் அஹமட் முனவ்வர் வழங்கி கொண்டிருந்த "பிஞ்சு மனம் "நிகழ்ச்சியில் கலந்துகொண்டு குட்டிக் கதையொன்றை வாசிக்கும் சந்தர்ப்பத்தை மௌலவி எம். எஸ். எம். இஸ்மாயில் ஏற்படுத்தித் தந்தார்.

அதன் பிறகு வானொலி மாதர் மஜ்லிஸ், விசேட கவியரங்கம், இஸ்லாமிய நற்சிந்தனை என்பவற்றில் பங்குபற்றினேன்.

மாதர் மஜ்லிஸ் புகழ் புர்கான் பீ இப்திகார் ஊர் ஊராக சென்று நடத்திய மாதர் மஜ்லிஸ் நேரடி நிகழ்ச்சியை இதனால் அரநாயக்க திப்பிட்டி யவில் நடாத்த முடிந்தது.

அதில்லாமல் வானொலி இளைஞர் இதயம், பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி, இன்றைய நேயர், வாலிப வட்டம் போன்றவற்றுக்கும் ஆக்கங்களை எழுதி அனுப்பியுள்ளேன்.

இலக்கிய நிகழ்வுகளில் பங்கு பற்றி கவிதைகள் வாசித்துள்ளேன். பாடசாலையிலும் பல கலை நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளேன்.

3. ஆம் மனித உரிமைக்கான சமாதான அமைப்பின் ஆஸாத் மற்றும் HROP அங்கத்தவராக இருப்பதோடு அதன் ஊடகப் பொறுப்பாளராகவும் இருக்கிறேன். இதன் மூலம் சுய தொழில் பயிற்சி வழிகாட்டல்கள், இளையோருக்கான தொழிநுட்ப பாட நெறிகள், விவசாய ஊக்குவிப்பு முறைகள், வீட்டுத்தோட்டச் செய்கைகள், மரநடுகை, சுகாதார திட்டமிடல்கள் மற்றும் நீர் வசதியற்ற பகுதிகளுக்கு கிணறுகள் அமைத்து கொடுத்தல் போன்றவற்றுக்கு பங்களிப்பு செய்துள்ளேன். அண்மை காலங்களில் எமது மனித உரிமைக்கான ஆஸாத் பவுன்டேஷனும் ஸன் பி எப் நிறுவனமும் ஜனாதிபதியின் செயலணி ஆகியன UNICEF உடன் இணைந்து தேசிய மட்டத்தில் பத்து வருடகால வேலைத் திட்டம் ஒன்றை அமுல் படுத்தி வருகிறது. இதில் போஷாக்கான உணவின்மை, சிசுக்கள், குழந்தைகள், இளம் தாய்மார்களின் உடல் ஆரோக்கியம், உளநல குறைப்பாடுகள் பற்றி ஆராய்ந்து அதற்கு தீர்வு காணும் முயற்சியை மேற்கொண்டுள்ளோம். இதற்காக பாதுகாப்பான உணவு, சுகாதார முறைகளைப் பின்பற்றுதல், போஷாக்கான உணவு வழங்குதல், உணவு உற்பத்தி, பயிர் செய்கை போன்ற விடயங்களை அமுல் படுத்தல், உணவு உற்பத்தி வீழ்ச்சி, வறுமை போன்றவற்றுக்கான நிவாரணம் போன்றவை நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது.

4. இன்று பல துறைகளில் பெண்கள் முன்னேறினாலும் தைரியமாக நடமாட முடியாத நிலையே உள்ளது. பெண்கள் துஷ்பிரயோகம் பற்றிய செய்திகள் அடிக்கடி வருவதுண்டு. பெண் உரிமைகளில் ஊழல்கள். உழைப்பு பங்குக்கேற்ப ஊதியமின்மை இப்படியாக ஆங்காங்கே நிகழ்வதற்குரிய தீர்வும் எட்டப்பட வேண்டும்.

5. இன்றைய இலங்கையின் நிலவரத்தைப் பொருத்தவரையில் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் பற்றி நோக்கப்பட வேண்டும். அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதிலே சிரமப்பாடுள்ளது. வறியோர் ஒரு புறம் இருக்க நடுத்தர வர்க்கத்தினரும் சேர்ந்தே பாதிக்கப்பட்டுள்ளனர்.

6. எழுதிக் கொண்டு தான் இருக்கிறேன். ஆனால் முழு மூச்சாக இல்லை. ஊடகவியலாளர் என்ற ரீதியில் தொடராக பத்திரிகைகளுக்கும் வானொலிக்கும் இணையத்தளங்களுக்கும் செய்திகளை அனுப்பிக் கொண்டு இருக்கிறேன். நேரம் கிடைக்கும் போது ஆக்கங்களும் எழுதுகிறேன்.

7. நான் கல்வி கற்கும் காலங்களில் எனது பெற்றோர் எனக்கு ஊக்கம் தந்தனர். எங்கிருந்தாலும், இலக்கிய விழாக்கள், கவியரங்கம் என்பவற்றுக்கு அழைத்துச் சென்று வருவார்கள்.

நான் கல்வி கற்கும் காலத்தில் காலஞ்சென்ற உயன்வத்த ரம்ஜானின் "ப்ரியா நிலா "சஞ்சிகை வெளியீட்டு விழா விமர்சையாக நடைபெற்றது.

நாட்டில் எல்லா இடங்களிலும் இருந்து எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் சமூகமளித்தனர். அதற்கு நீங்களும் உங்கள் கணவர் சித்தீக் காரியப்பரும் சமூகமளித்து இருந்தமை என் ஞாபகத்துக்கு வருகிறது. அப்போது நீங்கள் மாணவியாக இருந்திருப்பீர்கள் என நினைக்கிறேன். அந்த நிகழ்வில் எனக்கு கவிதை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் கவிதையை வாசித்து விட்டு இறங்கியதும் முன் வரிசையில் அமர்ந்து இருந்த ஒருவர் என் கவிதையை வேண்டிக் கொண்டார். விழா முடிந்ததும் அக்கவிதையை திருப்பி தந்தார். அதில் பாரதியாரின் கவிதை களை படியுங்கள் உங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என எழுதப்பட்டிருந்தது. அவர் தான் காலஞ்சென்ற பிரபல எழுத்தாளர் கலைவாதி கலீல் சேர் என அறிந்து கொண்டேன். பிற்காலத்தில் எனது எழுத்துத் துறைக்கு அன்னாரது ஒத்துழைப்பு கிடைத்தது. அத்தோடு கணவரும் எனது எழுத்துத் துறைக்கு ஊக்கமளித்ததால் ஊடகவியலாளர் ஆகும் நிலைக்கு ஆகினேன் .

8. அக்காலத்தில் எழுத்தாளர்களிடையே புரிந்துணர்வு இருந்தது. போட்டி பொறாமைகள் குறைவு. தரமான ஆக்கங்களுக்கு இடம் கிடைத்தது. கலையுலக அங்கத்தவர்கள் ஒரு குடும்பமாக செயல்பட்டனர். இப்போது எழுதுகோல் பிடித்தவர்கள் எல்லோரும் சாதனையாளர்கள் என்ற நினைப்பு. ஆங்காங்கே முகநூல்களில் சிலர் எழுதி விட்டு பிரபல எழுத்தாளர்களாக நினைக்கிறார்கள். இவர்களுக்கு சாதனை விருதுகள் வேறு வழங்கப்படுவது நகைப்பாகவுள்ளது. இக்கால கட்டத்தில் தரமான எழுத்தாளர்கள் இல்லாமல் இல்லை. சாதிக்கக் கூடியவர்களும் உள்ளனர். என்றாலும் போட்டியோடு பொறாமை கொள்ளக் கூடாது.


9. மனித உரிமைக்கான அமைப்பின் அங்கத்தவராக இருப்பதோடு, அரநாயக்க வில்பொல "பிரகதி " மகளிர் அமைப்பின் தலைவியாகவும், இளம் மகளிர் அமைப்பின் (YWMA) நிர்வாக குழு அங்கத்தவராகவும், அகில இலங்கை ஆற்றல் உள்ள பெண்களின் அமைப்பான ஸ்ரீலங்கா பென் கிளப்பின் நிர்வாக அங்கத்தவராகவும், பதுரியா மத்திய கல்லூரியின் பழைய மாணவியர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும், "பீட்"அமைப்பின் மகளிர் அமைப்பின் உறுப்பினராகவும், திப்பிட்டிய கல்வி நிறுவனமான "பிரிஜ் "இன் மகளிர் அமைப்பின் உறுப்பினராகவும், முஸ்லிம் மீடியா போரத்தின் அங்கத்தவராகவும், அரநாயக்க விவசாய சங்கத்தின் தலைவியாகவும் இருக்கிறேன்.

10. பாடசாலை காலத்தில் அதிபர் ஹாஜா மொஹிடீன் அதிபராக இருக்கும் போது சிரேஷ்ட மாணவத் தலைவியாக இருக்கும் காலத்தில் "உதய தாரகை "எனும் ரோணியோ சஞ்சிகையை சக தோழி நஸீமா ஏ காதரோடு சேர்ந்து வெளியிட்டேன்.

தற்போது பென் கிளப்பின் அவரி பத்தாவது இதழைத் தயாரிக்கும் பணியில் உள்ளேன். எதிர் காலத்தில் நூல் வெளியிடும் எண்ணத்தின் உள்ளேன்.

11. உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு பொன்விழா மகா நாட்டில் 2016 இல் விருது சான்றிதழ் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதோடு, 2018 இல் அரநாயக்க மனாருல் உலூம் அஹதிய்யாவினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு 2021 இல் மனித உரிமை க்கான சமாதான அமைப்பினால் தேச மான்ய கீர்த்தி ஸ்ரீ கலா விபூசன திரிய கான்த்தா விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டேன். அத்தோடு பல சமூக சேவை அமைப்புகளால் கௌரவிக்கப்பட்டுள்ளேன்.





பாத்திமா நளீரா

# 20 வருடங்களாக சிறப்பாக இயங்கும் Intelligent Abacus Education நிலையம்

இலங்கையில் கடந்த 20 வருடங்களாக Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் மூலம் அளப்பரிய சேவையாற்றி வருபவர் Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் பணிப்பாளரும், பிரதம பயிற்றுவிப்பாளருமான திருமதி V.அரசிலங்குமாரி கிருஷ்ணதாசன். இவர் மேல் மாகாண தேசிய அபாகஸ் போட்டியை கடந்த சனிக்கிழமை வத்தளை OKI ஜுனியர் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடத்தினார். இவரது தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வத்தளை OKI ஜுனியர் பாடசாலையின் அதிபர் திருமதி நிஷானி ரத்நாயக்க பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

வத்தளை, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் டீ. செந்துாரன், வினாத்தாள் திருத்தும் பணிக்குழாமின் தலைவி, வத்தளை, பிரதேச செயலகத்தின் ஆரம்ப நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கங்கா ஹேமந்த்தி ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டார்கள். இவர்களது முன்னிலையில் 10 நிமிடங்களைக் கொண்ட எழுத்து மூல பரீட்சைகள் அனைத்தும் மிகவும் நேர்த்தியாகவும் சீராகவும் ஒழுங்காகவும் நடத்தப்பட்டன. இந்தப் பரீட்சையில் 70 மாணவ, மாணவிகள் தோற்றினார்கள். இதில் இம்முறை கல்விப் பொதுத் தராதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவ மாணவிகளும் அடங்கி இருந்தார்கள்.

ஒரு சில மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே வினாக்களுக்கான விடைகளை எழுதிவிட்டு கையை உயர்த்தி காட்டினார்கள். இந்தப் பரீட்சை பெறுபேறுகளை வைத்து இதில் சித்திபெற்ற மாணவ மாணவிகளுக்கும் இதில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவ மாணவிகளும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட வுள்ளனர். இந்த விழா 2024.05.04 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு 07 யிலுள்ள நுாதனசாலை மண்டபத்தில் நடைபெற்றது.




இதேவேளை, Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் தேசிய அபாகஸ் பரீட்சை மஹ்மூத் தேசிய மகளிர் கல்லூரியிலும் பரிசளிப்பு விழா கடந்த மாதம் சாய்ந்தமருது J&J Academy யின் ஏற்பாட்டில் மாளிகைக்காடு வாவா றோயலி வரவேற்பு மண்டபத்திலும் சிறப்பாக நடைபெற்றன.



Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் பணிப்பாளரும், பிரதம பயிற்றுவிப்பாளருமான திருமதி V.அரசினங்குமாரி கிருஷ்ணதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வுக்கு நளீர் பவுண்டேசனின் ஸ்தாபகரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான எம்.ஏ.நளீர் கௌரவ அதிதியாகவும், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி ஏ.பீ.நஸ்மியா சனூஸ், சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளரும், சிலோன் மீடியா போரத்தின் தலைவருமான நியாத் .ஏ. மஜீட் ஆகியார் விசேட அதிதியாகவும், வேப்பையடி கலைமகள் மகா வித்தியால அதிபர் கே.தியாகராஜா, கல்முனை பிரதேச செயலக நிதி உதவியாளரும், சிலோன் மீடியா போரத்தின் பொதுச் செயலாளருமான ஏ.எஸ்.எம். முஜாஹித் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகவும் J & J அகடமியின் பணிப்பாளர் எம்.எம்.ஜபீர், இம்போட் மிரர் ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் எம்.வை.அமீர், அபாகஸ் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





கொழும்பில் நடைபெற்ற இந்த விழாவைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் பரீட்சைகளும் போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன. நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்படும் Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் கிளைகள் விரைவில் கண்டியிலும் நுவரெலியாவிலும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாடு முழுவதிலும் உள்ள சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்று வரும் மாணவ மாணவிகள் இந்த நிலையத்தில் சேர்ந்து இந்த அபகஸ் கல்வியை கற்க ஆர்வத்துடன் இருப்பதாலும் சர்வதேச பாடசாலைகள் தங்களுடைய பாடசாலைகளில் இந்த கல்வியை கற்றுக் கொடுத்து போதிக்க ஆவலுடன் இருப்பதாலும் இந்தத் துறையில் ஆசிரியர்களை ஈடுபடுத்தி கற்றுக் கொடுக்க அவர் மிகவும் ஆவலுடனும் எதிர்பார்ப்புடனும் இருக்கின்றார்.



இந்தக் கல்வியானது ஒருவரது அறிவை விருத்தி செய்கின்ற அதேவேளை ஒரு தொழிலை அமைத்துக் கொள்ளவும் வழி வகை செய்கிறது.

தற்போது மேல் மாகாணத்தில் சர்வதேச பாடசாலைகளில் கற்கும் மாணவர்களிடத்தில் மட்டும் தான் இந்தப் பாட திட்டமானது பிரபல்யமாகியுள்ளது. இது விரைவில் அரசாங்க தேசிய கல்லுாரிகளையும் அரசாங்க பாடசாலைகளையும் சென்றடையும் என நம்பிக்கை தெரிவித்தார்.



# உயரம் போல் உயர்ந்தது உயரமானவரின் துயரம்

## முல்லை குணசிங்கம் கஜேந்திரனின் கவலை

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் உயர என்னென்னவோ செய்கிறான். உழைக்கிறான் . அர்ப்பணிப்புகள் செய்கிறான். சிலர் உடல் ரீதியாக வளர்ந்து பிரமிப்பூட்டுவதுண்டு. ஆனால் சாதாரணமாக மனிதன் ஒருவர் 6 அடிவரை தான் வளரலாம். அசாதாரணமாக வளர்ந்தவர்களைக் கூட உலகம் திரும்பிப் பார்க்கும். .துருக்கியைச் சேர்ந்த சுல்தான் கோசென் என்பவர் 8 அடி நீளமும் 3 அடி அங்குலமும் கொண்டவர். இவரின் இந்த உயரத்துக்காக கடந்த 2009ஆம் ஆண்டில் உலகின் உயரமான மனிதர் என்ற பட்டத்துக்கும் சொந்தக்காரர் ஆனார்.

உலகின் உயரமான மனிதராக வடக்கு கானாவை சேர்ந்த ஒருவர் அண்மையில் அடையாளம் காணப்பட்டுள்ளார். சுலேமனா அப்துல் சமேட் என்ற நபரின் உயரம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வடக்கு கானாவில் உள்ள ஒரு உள்ளூர் மருத்துவமனைக்கு சமீபத்தில் வழக்கமான பரிசோதனைக்கு சென்று இருந்தார் 29 வயதான சுலைமானா அப்துல் சமத்.


மருத்துவ பரிசோதனையின் போது, இவரின் உயரம் 9 அடி 6 அங்குலம் (2.89 மீட்டர்) இருந்ததாக கண்டறியப்பட்டது. இதன் மூலம் உலகிலேயே உயரமான மனிதராக இவர் அறியப்படுகிறார். ஆனால் இவர் தான் உலகில் உயரமான மனிதர் என கின்னஸினால் உறுதிப்படுத்தப்படவில்லை. நாம் சொல்ல வருவது அவரைப் பற்றியல்ல. நம்நாட்டில் மிக உயரமான மனிதரைப்பற்றி..

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இலங்கையில் மிகவும் உயரமான மனிதனாக குணசிங்கம் கஜேந்திரன் வசித்து வருகின்றார். முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியிலேயே இவர் வசித்து வருகின்றார்.

இவர் 7 அடி 2 அங்குலம் உயரத்தினை கொண்டிருப்பதனாலேயே இலங்கையில் தற்போது உயரமான மனிதனாக இடம் பிடித்துள்ளார். இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையான 45 வயதுடைய இவர் முச்சக்கர வண்டி ஓட்டுநராக செயற்பட்டு வருகிறார்.

தனது அசாதாரண உயரத்தால் எண்ணற்ற பிரச்சினைகளை சந்திக்க நேரிடுவதாகவும் இலங்கையில் தனது கால்களின் நீளத்திற்கு ஏற்ற பாதணிகளை கொள்வனவு செய்ய முடிவதில்லை எனவும் அவற்றை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் கவலையோடு சொல்கிறார் குணசிங்கம்.





பஸ்களில் இருக்கைகள் கிடைக்காவிட்டால் பயணிப்பது சிரமமானது எனவும் நீண்ட தூரம் பஸ்களில் பயணிப்பதாக இருந்தால் இருக்கைக்கு முன்பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இவருக்கு பின்ஆசனத்தில் தான் அமர்ந்து செல்ல முடிவதோடு ஏனைய ஆசனங்களில் காலை மடக்கி அமர முடிவதில்லை.

வங்கிகளிலோ ஆஸ்பத்திரிகளிலோ வரிசையில் நிற்பதும் இவருக்கு சிரமமான விடயம். ஊரில் தெரிந்தவர்கள் இருப்பதால் முன்னுரிமை கொடுத்து பணியை முடித்துக் கொண்டு செல்ல முடிவதாக தெரிவிக்கும் இவர் வேறு இடங்களில் அவ்வாறு முன்னுரிமை கிடைப்பதில்லை என்கிறார்.

கண்டி, கொழும்பு, காலி போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய தேவை எழுவதாகத் தெரிவிக்கும் குணசிங்கம், சிங்கள மக்கள் மத்தியில் தனக்கு தனி மரியாதை இருப்பதாக பெருமையுடன் சொல்கிறார்.

வாழ்வாதாரத்திற்காக ஆட்டோ ஓட்டினாலும் அது குடும்பச் செலவுக்குப் போதுமாக இருப்பதில்லை.

இவர் அதிக உயரமாக இருப்பதனால் ஆட்டோவில் அதிக நேரம் அமர்ந்திருப்பது கூட கடினமானதாகும். இதனால் வாழ்வாதாரத்திற்கு வேறு மாற்றுவழிகள் குறித்து ஆலோசித்து வருகிறார் குணசிங்கம்.

வீட்டிலுள்ள மாங்காய் மரம்,தென்னை மரம் என்பவற்றில் கையால் எட்டி அவற்றை சர்வ சாதாரணமாக பறிக்கிறார் இவர்.

இருபிள்ளைகளின் தந்தையான குணசிங்கம் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற கனவுடன் இருக்கிறார். அசாதாரண உயரம் காரணமாக வெளியில் செல்வதை முன்பெல்லாம் தவிர்த்து வந்த அவர் தற்பொழுது சாதாரணமாக எங்கும் சென்று வருகிறார். சிலர் கிண்டலடிப்பதாலும் ஏதோ குறைபாடுள்ளவரை போன்று பார்ப்பதாலும் சங்கடப்பட்டிருக்கிறார் குணசிங்கம். ஆனால் தற்பொழுது நிலைமை மாறியுள்ளது. அவரை பற்றி ஊடகங்கள் செய்தி வெளியிட்டு ஓரளவு பிரபலமான நிலையில் அவருடன் பேசவும் செல்பி எடுக்கவும் மக்கள் வர ஆரம்பித்துள்ளனர்.

எவ்வாறு இப்படி உயரமாக வளர்ந்தீர்கள் என ஆச்சரியமாக கேள்வி கேட்பவர்களும் இல்லாமலில்லை.



ஏனைய நாடுகளில் இவ்வாறு வித்தியாசமானவர்களை மதித்து முன்னுரிமை அளிப்பதோடு உரிய கௌரவமும் வழங்கப்படுகிறது. குணசிங்கம் கஜேந்திரனுக்கும் உரிய இடம் வழங்கி அவரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com

Whatsap: 0714901181

# காஸாவின் துயர்

துயர் மி குந்த வாழ்வு கொற்றவைக் கும் உ ணர்வு துயரங்களிலும் சோகமா னது. உ லகு நெடுகிலும் இத்தகைய துய ரத்தமும்புகளில் மனம் வேகுகி றோ ம் . காஸாவின் வாழ்தல் நிமித்த மான துயர் அத்தகையது.

'கா ஸாவில் திருமணங்கள்' குறித்த Master pieces of translation by Dr pmm Irfan நன்றியோடு மறு சொல் மறுபதி வி டுகிறது. ஒரு நூற்றாண்டுத் துயரத் தையும் இழப்பையும் வலியையும் நிச் சய மற்ற கணங்களையும் துயர்கவியும் குறியீட்டு மொழியில் பேசுகிற ஆவ ணமிது.

**நீங்களும் வாசியுங்கள்**

“சில நேரங்களில் மயானத்துக்கு வந்து குழி தோண்டும் வேலையைத் தொடங்க முன்னர் ஒருமுறை பார்வையை வீசி எத்தனை வெற்றுப் புதைகுழிகள் தயாராக உள்ளன என்று பார்ப்பான்.

அவன் சொல்லாமலே அது எனக் குப் புரிந்து விடும்.

ஒரு தடவை வெற்றுக்குழி ஒன்று கூட இல்லாததைக் கண்டு சின்னக் குழந்தை போல் அழத் தொடங்கி விட்டான்.

நானே அவனை சமாதானப்படுத்த வேண்டியதாயிற்று.

கைகளால் கண்களை மூடிக் கொண்டு அழுதான்.




அந்தக் கண்ணீர் தூரமான இடத்தி லிருந்து... மிகத் தூரமான இடத்திலி ருந்து வருவது போல் உணர்ந்தேன்.

ஒருவேளை இந்தப் பூமியில் விழுந்த முதலாவது வீரத் தியாகியின் இறுதிச் சடங்கிலிருந்து வந்திருக்கலாம்... இயேசுவின் இறுதி ஊர்வலத்திலிருந் தும் வந்திருக்கலாம்.

அந்தக் கண்ணீரும் நம்மைப் போன்றே சோர்வடைந்திருந்ததாக எனக்குத் தோன்றியது.

அவனது தலையை என் தோளில் தாங்கியிருந்த போது உண்மையில் தலையைத்தான் தாங்கியிருந்தேனா அல்லது நம்மைப் போலவே தலைசாய்க்கத் தோள் தேடிக் கொண்டிருக்கும் கண்ணீர்த் துளிகளைத்தான் தாங்கியி ருந்தேனா என்று தெரிய வில்லை.

‘இறைவா.. நான் சோர் வடைந்து விட்டேன்!’ என்றான்.

அப்போது அவனுக்கு வயது ஆயிரம் வருடங்க ளாக இருக்கும் என்பதாய் தோன்றியது.

‘ஆமினா மாமி... இந்த ஆக்கிரமிப்பு நம் நிலத்தை விட்டு அகன்று விட்டால் அதன் பிறகு பூச்செடி நடுவதற்குக் கூட மண் வெட்டி தொட மாட்டேன் தெரியுமா!’ என்றான்.

அதற்கு நான் ‘அப்படிச் சொல்லாதே; நாம் அழகாக இருக்கும் கூடாதென்றுதான் அவர்களும் விரும்புகிறார் கள். அந்தச் சந்தோஷத்தை அவர்களுக் குக் கொடுத்து விடாதே!’ என்றேன்”.

மழலை

# கூத்து மலர்ச்சியும் கூத்தறிஞர் மௌனகுருவும்

கூத்துக்கலையை அறியவும் பகி ரவுமான ஒரு களச்செயற்பாடு; 52 வாரம் தொடருது கூத்து மகிழ்ச்சி; இளையோரை இணைக்கும்

**ஒரு வருட நெடும் பயணம்;**
**செல்வோம் வாருங்கள்**

என அழைக்கும் மாணவர்களோடு செயல் வடிவம் காண்கிறார் ஈழத்தின் கூத்துக்கலை ஆளுமை பேராசான் மௌனகுரு.

ஓய்வு நிலையிலும் ஓயாமல் இயங்கும் கலை இயக்கம் அவர். ஈழத்து நாடகப்



பாரம்பரியத்திலும், வரலாற்றிலும் உள் ளெடுப்பது நிற்கும் மௌனகுரு இளந் தலைமுறைக்கு கலை மாற்றம் செய்யும் கைங்கரியத்தில் ஈடுபாடு காட்டி நிற்கி றார். "அசையாமல் இருப்பேன் என மரம் நினைத்தாலும் சுற்றி வீசும் காற்றுகள் மரத்தை அசைய வைக்கின்றனவே. ஆறு தலாக அமர்ந்து பழைய நினைவுகளில் பொழுதை கழிப்போம் என நினைத்தா லும்

**சூழ உள்ள மாணவர்கள்**

நிஜ உலகிற்கு இழுத்து வந்து விடுகிறார் களே ' என இந்தக் கூத்து மலர்ச்சி ஈடுபாடு குறித்து அவர் கூறுகிறார்.

கூத்துக்கலையை ஆய்வறிவு நிலையில் நோக்குவதனூடாக வயலாற்றொழுங் கையும் மீறியெழும் புதுமையையும் முறைசார் கற்றலொழுங்குக்கு உட்படுத்தி புதியதலைமுறையை செப்பம் செய்ய வல்ல இத்தகைய ஏற்பாட்டில் தன்னை யும் இணைத்துக்கொள்கிறார் கூத்தறிஞர் மௌனகுரு.

52 வாரங்கள் தொடரவுள்ள உரையும் பயிற்சியுமான கூத்து மலர்ச்சி செயல ருக்கு கூத்துக்கலை நாடிகளுக்கு நல்ல தொரு வாய்ப்பாகும்.

அரங்க ஆய்வுகூடமும் ஒபேராவும் இணைந்து ஒழுங்கமைக்கவும் கூத்து மலர்ச்சி பாரம்பரிய, மரபுநிலைக் கூத்துக் கலையாற்றுகையையும், அதன் பரிமா ணங்களையும், நவீன காலத்துக்கான மாற் றங்களையும் பயிலவும் அரங்காற்றவும் வழிசெய்யும் என நம்பலாம்.

மௌனகுரு பேராசானுக்கு வாழ்த்துக் கள்கூத்து மலர்ச்சியும் கூத்தறிஞர் மௌன குருவும்

# அரபி எனும் கவிதை எழுத்து

அரபி தமிழகப்பின்புலத் தில் கவிதைக்காரனாகி ஈழத் திலும் நின்று கவிதை பாடிய வர்.

எழுபதுகளில் தோன்றிய வானம்பாடிகளின் வாரிசு இவர்.கவிக்கோவின் கவிச் சீடன்.வானம்பாடிக் கருத்தி யலை கவிதைகளில் காவிய வர் அரபி என்கிற சுல்பிகார்.

அண்மையில் இறைய ழைப்பை ஏற்றுக் கொண்ட அரபி கவிதைகள் ஈழத் துச் சிறுசஞ்சிகைகளிலும் வந்துள்ளன.அவற்றினூடு அவரது கவிதைச்செல்நெ றியை அடையாளம் காணமு டிகிறது.

அரபியின் கவியடையா ளம் இது 'தாயிடம் மட்டுமே தொட்டிலில் வாழ்கிறது பாசம் அழகான தமிழ்ச் சொல் சொல்லில் மட்டுப் தான்' அரபியின் சமூக விமர்சனம் அவரை மானு டம்பாடியாக மேலெழுப்பு கிறது.மேமன்கவி சொல்வது போல் அரபியை இலக்கிய ஆவணமாக்குவோமா யின் அரபி கவிதைகளின் கனதியை மேலும் கண்ட டையலாம்.




நான்காம் பக்க அடிக்கு றிப்பு
(அ)
நான் மூன்று தளங்க ளின் ஆசான்
ஒன்று
ஆசிரியரான என்னூர்ப் பாடசாலையில் நான்
படித்த வகுப்பறையில்
எனக்கும் படிப்பித்த ஆசி ரியர்களோடிணைந்து
நான் படித்த குதிரையில்
மேசையில் கரும் பலகையில்
அதே ஆலமரவிழுதுக ளில்
அதே ஊர்க்காற்றில்
அதே காகங்களின்
கத்தலில் கற்பாத்தேன்....
மற்றொன்று
அகதித்தெருவில்
அலைவின் உழல்வில்
அநாதரவான சூழலில்
புத்தளமெங்கும்
குடிலான முகாம்
காலத்தின்
பாடசாலைகளில்
தேடலும் ஆவலும் பூத்த
காலத்தின் குறியீடாக
எதிர்காலம்
என்னவென்றேங்கிய
மாணாக்கருக்கொரு
தொலைக்கதிர் காட்டியாக
நின்றிலங்கிய காலத்தின்
கற்பிப்பாளனாக....
மூன்றாவதாக
தலைநகரத்துப்
பாடசாலைகளில்
கால் வைத்தேன்
ஒருக்கால் கற்றலை
அவாவுறுத்த
முனைந்தேன்
சிதறிய வாழ்வின் இடுக் குகளில் கற்றலின் வார்த்
தைப் பூசி வைக்க
ஆசையுற்றேன்
படிப்பெங்கே
படிப்பிங்கே
நாளைய
காலத்தின் வேரென
விதைக்க விழுதெடுக்க
விரைந்து யார்
வேண்டுமென்ற
எண்ணப்பாடுடையோ ரோடு
என்னை
இணைத்த காலமது
மூவிடத்திலும்
மூவேறு தோற்றம்
காட்டிற்று
பாடசாலையெனும்
தர்மவிதிப்புத்தகம்
வெவ்வேறு நிறங்களில்
வெவ்வேறு
முகங்களும் அகங்களும்
வெவ்வேறு
அவாக்களுமான
கலவை அனுபவத்தைக்
கடந்திருக்கிறேன்.
கற்றதனாலாய பயன்
அறியாதோரிடை
கற்பித்தலாலாய
பயனற்றேனோவெனத்
துயர் கவிய
நின்றதுண்டு.
எனினுமென்ன
கற்றலை
நேசித்தலெனும்
சிறு கூட்டமுண்டு
கற்பித்தலை
பூசிக்குமொரு
கூட்டமுண்டு
நான்
என் காலத்தின் மீது எழு
திக்குவித்த
உணர்வுகளின்
வனத்துக்குள்
நுழைகிறேன்
நுகர்கிறேன்
மகிழ்கிறேன்
அலைகிறேன்
அவிகிறேன்
அழுகிறேன்
அகமகிழ்வின்
காரணங்களும்
அதிதுயரின்
காரணங்களுமாக
எனைப் பிணைக்கின்றன
பாடசாலை என்பதொரு
தர்மவிதிப்புத்தகம்
மாணவர்
பெற்றோர்
ஆசிரியர்
அதிகாரி
சமூகமென
ஒரு கூட்டத்தின்
திரட்சி பாடசாலை
சமூகம்
கலாசாரம்
பண்பாடு
இனம்
மதம்
மொழியியல்
பொருளியல்
அரசியல்
இன்னபின
காரணிகளின்
தொகுப்பாக்கமானது
பாடசாலையெனும்
பக்குவமுடைந்த தளம்
பாடசாலை
தர்மவிதிப்புத்தகத்தின்
பக்கங்களில்
நான்
தொலைகிறேன்
அலைகிறேன்
மீள்கிறேன்
மீள மீளநான்காம்
பக்க அடிக்குறிப்பு

# கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீனின் சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் நூலின் அறிமுக நிகழ்வு












கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன் எழுதிய சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் கவிதை நூலின் அறிமுக நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (28.04.2024) தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி நளீம் ஹாஜியார் மண்டபத்தில், பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு ஒன்றியத்தின் பொருளாளர் கவிஞர் தர்கா நகர் ஸபா தலைமை தாங்கினார். தலைமையுரையைத் தொடர்ந்து, பே,பி,எ, ஒன்றியத்தின் தலைவரும் தர்ஹா நகர் ரூமீ ஹாசிம் கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பாளருமான றபிஸ் ஹம்ஸா வரவேற்பு பையுடன் வாழ்த்துரையையும் வழங்கினார். விஸ்டம் சர்வதேச பாடசாலையின் ஸ்தாபகர் எம். எம். பௌஸர் நளீமி வாழ்த்துக் கவிதை வழங்கினார். தொடர்ந்து சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் நூலின் முதல் இரு பிரதிகள் வெளியிட்டு வைக்கப்பட்டன. பிரதிகளை எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், ஓய்வுபெற்ற கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் ஹாபிஸ் இஸ்ஸதீன் வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை ரூமி ஹாஷிம் பவுண்டேசன் நிறுவுநர்/ தலைவர் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி ரூமி ஹாஷிம் பெற்றுக் கொண்டார். இரண்டாவது பிரதியை fine cure pharmaceuticals முகாமைத்துவப் பணிப்பாளரும் ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தின் செயலாளருமான அல் ஹாஜ் ஜஸ்ீக் அஹமட் பெற்றுக்கொண்டார்.

கலாநிதி ரூமி ஹாஷிம் விசேட உரை நிகழ்த்தியதுடன், ஜாமியா நளீமியா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அரபாத் கரீம் சிறப்புரை நிகழ்த்தினார். அதன்பின்னர் இலங்கைத் திறந்த பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் திருமதி ஸுமையா ஷரிப்தீன், பஸ்லி ஹமீட் ஆகியோர் நூல் விமர்சனம் செய்தனர். பின்னர் கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீனின் ஏற்புரையைத் தொடர்ந்து பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் உப செயலாளர் திருமதி ஷஹாமா ஸனீர் நன்றியுரை ஆற்றினார். வைபவத்தில் பங்கேற்ற பிரமுகர்களுக்கு சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் பிராந்தியத்தில் உள்ள நான்கு பாடசாலைகளின் நூலகங்களுக்கு அஷ்ரஃப் சிஹாப்தீனின் ஒரு தொகைப் புத்தகங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. நிகழ்ச்சியை மக்கொனையைச் சேர்ந்த செல்வி அஸ்ஹா லாபிர் திறம்பத் தொகுத்து வழங்கினார்.

(பீ.எம். முக்தார்)

# சவூதி அரேபியாவில் பிரபலமாகி வரும் யோகா







சவூதி அரேபியாவில் சமீப காலமாக யோகா பயிற்சிகள் பிரபலமடைந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக சவூதி யோகா கமிட்டி மற்றும் சவூதி அரேபிய விளையாட்டுத்துறை அமைச்சு ஆகியவை இணைந்து பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான யோகா சாம்பியன் போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தது. சவூதி அரேபியாவைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் யோகா போட்டியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரிகள் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களை வழங்கி கௌரவித்தனர். இந்த நிகழ்ச்சியில் இந்திய கொன்சல் ஜெனரல் சஹீத் உள்ளிட்ட பலர் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.





# கட்டாரில் சித்திரை திருநாள் கொண்டாட்டம்













கட்டார் தமிழர் சங்கம் பெருமையுடன் வழங்கிய சித்திரை திருநாள் இசை மேடைக் கொண்டாட்ட நிகழ்வுகள் கட்டார் தேசிய மாநாட்டு மையத்தில் மிகச் சிறப்பாக அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கட்டாருக்கான இந்திய தூதுவர் விபுல் , சிறப்பு அதிதிகளாக கட்டார் நாட்டின் உயர் அதிகாரிகள், கட்டாரில் உள்ள முக்கியஸ்தர்கள், கட்டாரில் உள்ள தமிழ் அமைப்புகளின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் இந்திய நாட்டின் பிரபல கலைஞர்களான விஜய் டிவி சூப்பர் சிங்கர்ஸ் ஸ்ரீ நிஷா, பிரியா ஜெர்சன், திவாகர், ஸ்ரீதர் சேனா, மணி அண்ட் பேண்ட் குழுவினர், கலக்கப் போவது யாரு பாலா, கார்த்திக் தேவராஜன், வினோத், விக்னேஷ் நிகழ்ச்சி தொகுப்பாளராக பல் குரல் கலைஞர் ஆதவன் ஆகியோர் கலந்து கொண்டு சித்திரை திருநாள் கொண்டாட்டத்தினை வழங்கினர். இந்நிகழ்ச்சியை பார்வையிட ஏராளமான இந்திய மற்றும் இலங்கை தமிழ் மக்கள் என 2500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஜே.எம்.பாஸித் கட்டார்

## கட்டார் வாழ் புத்தளம் சாஹிரா பாடசாலையின் பழைய மாணவர்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டி






கட்டார் வாழ் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து ஸோன் கட்டார் ஏற்பாடு செய்த கரப்பந்தாட்ட போட்டியானது (26) தோஹா கேம்பிரிட்ஜ் பாடசாலையில் 10 அணிகளாக பிரிக்கப்பட்டு நடைபெற்றது. இதில் Z12 அணியினை வீழ்த்தி Z Force அணியினர் சம்பியன் பட்டத்தினை தமதாக்கிக் கொண்டது. இந்நிகழ்வில் அதிதியாக AddonIT நிறுவனத்தின் தலைவர்களான ஷாஹித் சராபத், இம்ரான் காசிம், ஸ்கை தமிழ் ஊடகத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான ஜே.எம் பாஸித் மற்றும் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் முஹம்மட் ஷரஃப் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



## T. M. சௌந்தரராஜன் இன்னிசை விருந்து

இலங்கையிலிருக்கும்போது இந்துமத குருவாக இருந்து கொண்டு ஆலய தொண்டுகளையும் திருப்பணிகளையும் கலைச் சேவைகளையும் சமூக சேவைகளையும் ஆற்றிக் கொண்டு வாழ்ந்தவர் டாக்டர் சாம்பசிவ மணி குருக்கள்.

இலங்கையை விட்டு தமிழகத்திற்கு சென்றாலும் தான் இலங்கையில் ஆற்றி வந்த அனைத்து பணிகளையும் விடாது தொடர்ந்து ஆற்றி வருபவர் இவர்.

ஆலய சமய கிரியைகளை எவ்வளவு சிறப்பாக செய்கிறாரோ அது போல பாடல்கள் பாடுவதிலும் தனது கலைத்திறனை வெளிப்படுத்தி வருபவர் இவர்.

இவர் வருடாந்தம் இலங்கையில் நடாத்தி வரும் T. M. சௌந்தராஜனின் 102ஆவது பிறந்த நாள் விழாவையும் 11ஆவது ஆண்டு விழாவையும் கொழும்பு 13, மேட்டுத்தெருவிலுள்ள கமலாமோடி மண்டபத்தில் எதிர்வரும் 09.06.2024 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடத்தவுள்ளார்.

இவருக்கு இந்த விழாவை நடாத்த இலங்கையில் உறுதுணையாக இருந்து அனைத்து பணிகளையும் செய்து வருபவர் விழா ஒருங்கிணைப்பாளர் கலாநிதி அழகையர் சசாங்கன் சர்மா.

இவ்விழாவில் இவர் 50 பெருமைக்குரிய தலைமையாளர்களையும் கௌரவிக்கவுள்ளார். "T. M. . சௌந்தராஜன் இன்னிசை விருந்து" என்ற இந் நிகழ்வில், பிரபல தென்னிந்திய கலைஞரும் பாடகருமான கலைமோகன், சீர்காழி கோவிந்தராஜனின் மகன் சிதம்பரம் தியாகராஜன் ஆகியோருடன் இவ்விழா அமைப்பாளர் பெரும் பாடகர் திரையிசைத் திலகம் மணிப்பாடகர் டாக்டர் சாம்பசிவ மணி குருக்களும் பாடல்களைப் பாடி பரவசப்படுத்தவுள்ளார்.

இது சம்பந்தமாக மேலதிக தகவல்கள் அறிய விரும்பின் விழா ஒருங்கிணைப்பாளர் கலாநிதி அழகையர் சசாங்கன் சர்மாவின் 0750239976 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.